

மலரே,
உன்னை
நேசித்தேன்!
எஸ்.உஷாராணி

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர் : மலரே, உன்னை நேசித்தேன்!
ஆசிரியர் : எஸ். உஷாராணி
உரிமை : ஆசிரியருக்கு
முதற் பதிப்பு : மார்ச், 2014
மொழி : தமிழ்
நூலின் அளவு : 1 x 8 கிரவுன்
மொத்தப் பக்கங்கள் : 352
பைண்டிங் : சாதா அட்டை பைண்டிங்
தாள் : 11.6 kg வெள்ளைத் தாள்
அச்சு எழுத்து : 11 புள்ளி
நூல் வெளியிடுவோர் : தேவி வெளியீடு
தபால் பெட்டி எண்: 668
A-9 இரண்டாவது மாடி,
ரோஹிஸ் அஸ்வத் பிளாட்ஸ்,
61, முத்து தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14

**விலை ரூ.150.00**

ஒளி அச்சு : 'சிவம்'ஸ், போன்: 9444232005
அச்சிட்டோர் : கே.வி.எஸ். ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 014


# மலரே, உன்னை நேசித்தேன்!

## 1



நிருபா சாப்பிட அடம் பிடித்தாள். அவள் அம்மா அமுதா திட்டினார். "என்ன பெண் நீ. இத்தனை வயதாகியும் இப்படி சாப்பிட அடம் பண்றே.. போற இடத்திலும் இது மாதிரி இருக்க முடியுமா..? என்ன பெண் வளர்த்திருக்காங்க... என்று என்னைத்தான் திட்டுவார்கள்," என்றாள்.

நிருபா பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் அப்பா சங்கரனைப் பார்த்துக் கண்ணடித்தாள். பாருங்கப்பா, அம்மா பேசுவதை என்று கண்ணால் சாடை காட்டி முத்துப் பல் வரிசை தெரிய, கன்னங்குழியச் சிரித்தாள்.

அவள் அப்பா சிரித்துக் கொண்டே, "என் பெண் இன்னொருத்தர் வீட்டுக்குப் போனால்தானே... இதுமாதிரி இருக்க முடியாது.."

"அப்படீன்னா... உங்க பொண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்க மாட்டீங்களா..?" என்றாள் அமுதா.

"பேஷா.. ஏன் செய்ய மாட்டேன்? கல்யாணம் செய்து அடுத்த வீட்டிற்குத்தான் அனுப்ப மாட்டேன் என்றேனே தவிர, வீட்டோட மாப்பிள்ளை பார்த்து வைத்துக் கொள்ள மாட்டேன் என்றா சொன்னேன்?" என்று சிரித்தார்.

"அப்போ உங்க பையன் மாதேசையும் இதுமாதிரிதான் மாமியார் வீட்டுக்கு அனுப்பி வைப்பீங்களா..?" என்றாள் ஏளனமாக.

''என் பையன் எதுக்குடி மாமியார் வீட்டுக்குப் போகணும்.. நான் என்ன கையாலாகாதவனா? என் மருமகளுக்குச் சோறு போட வக்கில்லையா..? என் பையனை அனுப்பி வைக்க!'' என்றார் கோபமாக.

''அதே மாதிரிதானே.. உங்க பெண்ணை எடுப்பவரும் நினைப்பாங்க,'' என்றாள், அமுதா நிதானமாக.

''அது மாதிரி இடத்தில் நான் எதுக்கு பெண் கொடுக்கணும். என் பேச்சை எவன் கேட்டு என் காலடியில் கிடக்கிறானோ... அவனுக்குத்தான் என் பெண்ணைக் கொடுப்பேன்,'' என்றார் கோபமாக.

''அப்போ உங்க பொண்ணோட சந்தோஷம், வாழ்க்கை பெரிதில்லை. உங்களுக்கு மட்டும் அடங்கியிருந்தால் போதும். அப்படித்தானே..'' என்றாள் அவளும் கோபமாக.

''உனக்கு இன்று என்னடி ஆச்சு? இப்படி ஏட்டிக்குப் போட்டியா பேசிக்கிட்டு இருக்கே?' என்றார்.

''எனக்கு ஒண்ணும் ஆகலேங்க. என்னதான் ஒரு பொண்ணைச் செல்லமா வளர்த்தாலும் நாம் நல்லதைத்தான் சொல்லி வைக்கணும். நீங்க பேசுவது சரியில்லை. எப்பப் பார் பணம்... பணம்.. வசதி, கவுரவம் என்று பேசியே பிள்ளைகளிடமும் மற்றவர்களிடமும் மரியாதை இல்லாமல் பண்ணி விடுறீங்க..''

''இது தப்புங்க... பணம், வசதி எல்லாம் மீறி வாழ்க்கைனு ஒன்று இருக்கு. அது எப்படி இருக்குமோ... அதன்படி நாம் நெளிவு, சுளிவா வாழக் கத்துக்கணும் என்று நாம் சொல்லிக் கொடுக்கணும்..

''பணம் என்றும் நிரந்தரம் இல்லை. அன்பு, பாசம், நேசம், இது எல்லாம் கலந்த வாழ்க்கைதான் நிரந்தரம். அதுக்காகப் பணம் வாழ்க்கைக்குத் தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. பணம் மட்டுமே வாழ்க்கையில்லை என்றுதான் சொல்ல வருகிறேன்.''

''.....''

''பிள்ளைகளின் மனதில் அன்பைச் செலுத்தாமல் ஏன் பணம் மட்டுந்தான் வாழ்க்கை என்று கத்துக் கொடுக்கிறீங்க... நமக்கு நாலு மனுசாளும் வேணும்..'' என்றாள்.

''நீங்க பணம், கவுரவம், அந்தஸ்து என்று பார்ப்பதால் நம் வீட்டுக்கு எந்த சொந்த பந்தங்களும் வருவதில்லை! நம் பிள்ளைகளை இப்படி வளர்ப்பது தப்பு. நாலு சொந்த பந்தங்களோட பழகினால்தான் நல்லது, கெட்டது தெரியும், வாழ்க்கையில்..''

''போதும், நிறுத்துடி... உன் பிச்சைக்காரப் புத்தியைக் காட்டிட்டியே... மாடு மேய்ப்பவனின் மகள்தானே நீ... உனக்குப் புத்தி எப்படிப் போகும்?'' என்று ஏளனம் பேசினார்.

அமுதாவுக்கு வந்த கோபத்தை அடக்க முடியவில்லை. எங்கே வாய் திறந்தால் வார்த்தைகள் வந்து வெளியே விழுந்து விடுமோ.. என்று வாயை மூடிக் கொண்டாள்.

வாய்க்கு என்னதான் கடிவாளம் போட்டாலும், மனதுக்கு ஒன்றும் தடை செய்ய முடியவில்லை.

நானா மாடு மேய்ப்பவன் பெண். நீங்கள் இருந்த நிலைமையைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். என் அப்பாவிடம் இருந்த கொஞ்ச நிலத்தையும் எழுதி வாங்கிக் கொண்டு என் தம்பி சின்னப் பையனை அடித்து மிரட்டி கையெழுத்து வாங்கி நிலத்தை விற்று இங்கு வந்து சின்னக் கடை வைத்து.. இப்படித்தான் இவர்கள் வாழ்க்கை ஆரம்பமாகியது.

ஆனால் சங்கரன் கடும் உழைப்பாளி. தானும் சமுதாயத்தில் மிக உயர்ந்த இடத்தில் இருக்கேன் என்று மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்ளணும் என்று நினைப்பவர்.

தகுதிக்கு மீறிய பெரிய குடும்பங்களில் பழக்கம். கிளப் நண்பர்கள், பார்ட்டி, ஹோட்டல் என்று தன்னைத் தானே வளர்த்துக் கொண்டவர். அதுபோலவே பிள்ளைகளையும் பெரிய ஸ்கூலில் படிக்க வைத்தார்.

பிள்ளைகளையும் மேல் மட்டத்தில் பழக விட்டார். அவர்கள் ஏழைகளின் வலி என்னவென்று தெரியாமல் எடுத்தெறிந்து பேசினார்கள். இதனால் இவர்களின் பிற்கால வாழ்வு பாதிக்கப் போகுது என்று தெரியாமல்.

இவர் அப்படியொன்றும் பெரிய பணக்காரர் இல்லை. நகரின் மத்தியில் ஒரு நகைக் கடை வைத்திருந்தார். போக வர இரு கார்கள். பெரிய வீடு. ஓரளவு வசதிதான்.

கிராமத்தில் இருந்து மாமனாரோ.. மச்சினரோ.. வந்தால் முகம் சுழித்தார்.

''இவர்களை எதுக்கு முன் ஹால் பக்கம் வரச் சொல்றே.. நான் என் ஃபிரண்ட்களோட பேசிக் கொண்டிருக்கும்போது, இவர்கள், அவர்கள் யார் என்று கேட்கிறார்கள். நான் என்ன சொல்ல முடியும்? இவர்களும் இவர்கள் ட்ரெசும், பார்க்கச் சகிக்கலை. இனிமேல் வந்தால் பின் பக்கமாகவே வந்துவிட்டு, பின் பக்கமாகவே போகச் சொல்லு.'' என்றார் அவர்கள் காதில் விழுமாறு.

பிறகு ஏன் அவர்கள் இங்கு வரப் போகிறார்கள்? அதில் இருந்து எந்தச் சொந்த பந்தங்களும் வருவதில்லை. பிள்ளைகளுக்கும் சொந்தம் யார் என்றே தெரியாமல் போயிற்று.

அமுதாவுக்கு அடக்க முடியாத கோபம் வரும் சில சமயம். இந்த கவுரவம், அந்தஸ்து எங்கிருந்து வந்தது? யார் கொடுத்த



பணம்?' என்று மனம் நினைக்கும். இருந்தாலும் வாய்விட்டுக் கேட்க மாட்டாள்.

அமுதா மகளுக்கு எவ்வளவோ எடுத்துச் சொன்னாள். அவள் காது கொடுத்துக் கேட்காமல் அலட்சியமாகப் பேசுவாள். உனக்கு என்னம்மா தெரியும், படிக்காத பட்டிக்காடு என்பாள்.

மகனுக்கும், மகளுக்கும் கை நிறையப் பணத்தைக் கொடுத்தார். பணம் சம்பாதிப்பது பெரிய விசயமில்லை. அதை எப்படிச் செலவு செய்கிறோம் என்பதுதான் ஓர் பெரிய கலை. பணம் சேர்க்கும் போது சிறுக.. சிறுக... ஒவ்வொரு பைசாவாகச் சேர்ப்போம். ஆனால் செலவு செய்யும்போது ஒரே நேரத்தில் மொத்தமாகச் செலவு செய்து விடுவோம். அதைப் பற்றிச் சிந்திப்பதில்லை.

மகன், மகள் பற்றிய கவலை அமுதாவுக்கு அதிகமாக இருந்தது.

## 2



கடையில் ஆட்கள் சுறுசுறுப்பாக வேலை பார்த்தனர். அதுவும் புதிதாக வேலைக்குச் சேர்ந்த திவாகர் என்பவன் அத்தனை சுறுசுறுப்பு. ஒன்று சொன்னால் போதும், அப்படியே பிடித்துக் கொள்வான். மறுபடி ஒரு தரம் சொல்லும்படி வைக்க மாட்டான்.

கிராமத்தில் இருந்து வந்தவன். ஆள் பார்க்க நல்ல வாட்டசாட்டமாக கம்பீரமாக இருந்தான். அவன் கண்கள் வசீகரமாக இருந்தன. பார்ப்போரை மீண்டும் ஒரு தரம் திரும்பிப் பார்க்க வைக்கும் முகம். மாநிறம்தான். இருந்தாலும் அத்தனை கவர்ச்சி.

ஒரு இடத்தில் நிற்க மாட்டான். எவ்வளவு பெரிய மூட்டையாக இருந்தாலும் ஒரே ஆளாகத் தூக்கிக் கொண்டு மாடி

ஏறி விடுவான். எல்லோரும் அவனைத்தான் கூப்பிடுவார்கள். முகம் சுழிக்காமல் சிரித்த முகமாக யார் சொன்னாலும் தட்டாமல் செய்வான்.

+2 வரை படித்திருக்கான். மேலும் மேற்படிப்பை இப்படி வேலை பார்த்துக் கொண்டே படிக்கிறான். படிப்பிலும் கெட்டி. அவன் அப்பா வேலு கிராமத்தில் வீடு. நிலம் வாங்க, விற்க, ஆடு, மாடு வாங்க விற்க என்று தொழில் பண்ணுபவர்.

மகனும் தன்னோடு இந்தக் கிராமத்தில் இருந்தால் இந்த வேலைதான் பார்க்க முடியும் என்று சென்னைக்கு அனுப்பி நகைக் கடையில் வேலை பார்க்க வைத்தார். அவனும் ஆர்வமாக வியாபாரத்தைக் கவனித்தான்.

மாலையில் தினமும் நிருபா கடைக்கு வருவாள். அது போலவே அன்றும் வந்தாள். வந்தவள் திவாகரைக் கவனித்தாள். மீண்டும் ஒருமுறை அவனைப் பார்த்தாள்.

அவன் பக்கத்தில் இருந்தவர்களிடம் எதையோ சொல்லிச் சிரித்தான். அவன் வரிசைப் பல் பளீரென ஒளிவீசியது.

அந்தச் சிரிப்பு அவன் முகத்திற்குத் தனி அழகைக் கொடுத்தது. மீண்டும் கண்கள் அவன் புறம் போயிற்று.

தினமும் இதுவே தொடர்ந்தது. தினமும் நிருபா கடைக்கு வந்து திவாகரிடம் பேச்சுக் கொடுத்தாள். அவனும் இவளிடம் முதலாளி மகள் என்ற முறையில் மரியாதையாகத்தான் நடந்தான்.

நாளடைவில் நிருபா வெளியில் போவதற்குத் துணைக்குத் திவாகரைக் கூட அனுப்பும்படி அவள் அப்பாவிடம் கேட்டாள். அவரும், 'கூடப் போயிட்டு வா!' என்று அனுப்பி வைத்தார்.

திவாகர் சாதாரணமாகத்தான் மனதில் களங்கமில்லாமல் பழகினான். ஆனால் நிருபா, பேச்சில், நடத்தையில் மாற்றம் தெரிந்தது. இதைத் திவாகர் உணர்ந்தான்.

இருந்தும் விலகி இருந்தான். நிருபா நெருங்கிப் பழகினாள். திவாகரும் இளம் வயதுதானே.. அவளின் நெருக்கமும், பேச்சின் மயக்கமும் அவன் மனதைத் தடுமாற வைத்தது.

அவனும் சின்ன வயதுதானே.. எதையும் பிரித்துப் பார்க்கும் வயதில்லை. அவளின் கள்ளச் சிரிப்பில் விழுந்து விட்டான்.

இப்படியே நாளும் தொடர்ந்தது. இதை யாரும் கவனிக்க வில்லை. ஒருநாள் நகைக் கடையின் உள் அறையில் அமர்ந்து கொண்டு நிருபா திவாகரை ஜூஸ் கொண்டு வரும்படி சொன்னாள்.

அவனும் கொண்டு வந்தான். அவள் ஜூஸை வாங்கிக் கொண்டு அவன் கையைப் பிடித்தாள். அதை அவள் அப்பா பார்த்துவிட்டார். அதை நிருபாவும் கவனித்து விட்டாள்.

உடனே பதறி, ''அப்பா, இவன் என் கையைப் பிடித்து இழுத்து விட்டான்!'' என்று அலறினாள்.

அவர் அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

இதைத் திவாகர் எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியில் அப்படியே உறைந்து நின்றான்.

''ஏன்டா, தெருப் பொறுக்கி நாயே.. உனக்கு என்ன தைரியம் இருந்தால் என் பொண்ணு கையைப் பிடித்து இழுப்பே!'' என்று மீண்டும் அறைந்தார்.

நிருபாவும், ''என் கையைப் பிடிக்க உனக்கு என்ன தகுதி இருக்கு. ஒரு படிக்காத முட்டாள் நீ. சரியான நாட்டுப்புறத்தான். உனக்குப் படித்த அழகான பொண்ணு கேட்குதா?''

''உனக்குப் பணம்னா என்னனு தெரியுமாடா..? முழுசா ஆயிரம் ரூபாய் நோட்டைப் பார்த்திருக்கியா..? நூறு ரூபாய்க்கு மாசம் பூராவும் என் கடையைப் பெருக்கிறவனுக்கு என் மகள் மீது ஆசையா?''

திவாகரின் கண்கள் நெருப்பைக் கக்கின. ஆனால் பதில் எதுவும் பேசலை. பேச முடியாத சூழ்நிலை. இப்படி இவளே.. என் கையைப் பிடித்து விட்டு, தன் அப்பா பார்த்தவுடன் இப்படி மாறுவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

திவாகர் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். இது மாதிரி சூழ்ச்சியெல்லாம் இவனுக்குத் தெரியாது. பெண்கள் இதுமாதிரி ஆணவமாகப் பேசியே பார்த்தறியாதவன். அவள் பழகவும்தான் இவனும் பழகினான்.

இது மாதிரியெல்லாம் நடக்கும் என்று அவன் நினைத்துப் பார்க்கவில்லை. அவன் அதிர்ச்சியில் கல் சிலை போல் நின்றான். மூளை வேலை செய்ய மறுத்தது.

நிருபா அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தாள்.

''உன் மூஞ்சிக்குப் பொண்ணு கேட்குதா..? என்னைக் கல்யாணம் பண்ணி இந்தக் கடைக்கு முதலாளி ஆகிவிடலாம் என்ற நினைப்பா... என் வீட்டில் கால் வைக்க உனக்குத் தகுதி இருக்கா..? என் வீட்டு நாய்க் குட்டி கூட பெட்டில்தான் படுக்கும். நீ ஒரு அறையில் பத்துப் பேரோட படுப்பவனுக்கு ஏ.சி. அறையில் படுக்க ஆசை வந்துவிட்டதா?'' என்றாள் கர்வமாக.

திவாகர் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டு நின்றான். கடையில் வேலை பார்த்த அத்தனை பேரும் அவனைப் பார்த்துச் சிரித்தனர்.

''வந்தவன் ஏதோவேலை பார்த்து வயித்தைக் கழுவினோம் என்று இல்லாமல் படுக்கையைப் பத்தி நினைத்தால் நீயா உருப்படப் போகிறாய்?'' என்று சிலர் திட்டினர்.

''உன் அப்பா ஒரு புரோக்கர். அதுவும் என்ன புரோக்கர்? ஆடு, மாடு, குடிசை வீடு, அது மட்டுந்தானா.. இல்லை பொண்ணு களையும் விற்கும் புரோக்கரா?'' என்று எள்ளி நகையாடினாள்.



திவாகர் கண்களை இறுக மூடி கை முஷ்டியை இறுக்கினான். அவன் நாடி நரம்பெல்லாம் துடித்தது. அத்தனையும் அடக்கினான். இப்போ எது பேசினாலும் எடுபடாது. ஏன்னா இருக்கும் இடம் அப்படி.

''ஒரு நாளைக்கு மூணு வேளை நீ சாப்பிட்டிருப்பியா? பழங் கஞ்சியைத் தவிர நீ எதையாவது சாப்பிட்டிருப்பியா..? நான் வகை வகையாகச் சாப்பிடுவேன். நேரத்திற்கு ஒரு காரில் வருவேன். தினமும் மாடல் மாடலாக நகை போடுவேன். இதெல்லாம் உன்னால் முடியுமா..? இதை யெல்லாம் நீ முதலில் பார்த்திருக்கியா?''

'......'

''நீ என் கையைப் பிடித்தது எனக்கு அருவருப்பா இருக்கு. அப்பா! நான் முதலில் குளிக்க வேண்டும். இவனைப் பார்த்தாலே எனக்குக் குமட்டுது..''

## 3



''என் முன் நிற்க வேண்டாம்... இவனை அடித்து விரட்டுங்கப்பா... இனி இவன் கடைக்கு வேண்டாம்!'' என்றாள் முகத்தைச் சுழித்துக் கொண்டே...

கோபத்தில் அவன் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்தன. அவளை உறுத்து விழித்தான்.

''அப்பா! இவன் என்னை முறைக்கிறான்!'' என்று கத்தினாள்.

அவர் அவனை அடித்து வெளியே பிடித்துத் தள்ளினார். ''இனி கடைக்குள் வந்தே.. உன் காலை வெட்டி விடுவேன்... நீயும் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டு அந்தக் காட்டில் புரோக்கர் தொழில் செய். அஞ்சுக்கோ, பத்துக்கோ, நீ மாரடித்தால்தான்

உனக்குப் புத்தி வரும். இனி இது போல் தப்புப் பண்ண மாட்டே..'' என்று எட்டி உதைத்தார்.

திவாகர் எழுந்து சென்றான். அவன் கால்கள் தள்ளாடின. அழுகை வந்தது. சே.. சே.. இது அழும் நேரமில்லை. நான் மனதைத் திடப்படுத்திக் கொண்டு மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று ஆலோசித்துச் செயல்படும் நேரமிது.

அவனுக்கு இப்போ சிந்திக்கவும் முடியவில்லை. பேசாமல் இரயில் ஏறி உட்கார்ந்தான். உட்கார்ந்தவுடன் கண்களை இறுக மூடியவன்தான். அவன் ஊர் வந்துதான் கண் திறந்தான்.

அவன் அம்மா, ''என்ன திடீர்னு ஊருக்கு வந்திருக்கே.. தீபாவளிக்குத்தான் லீவு விடுவாங்க. இப்போ எல்லாம் லீவு இல்லை. அதனால் இப்போ நான் வர முடியாது என்று கடிதாசி போட்டிருந்தே... இப்போ திடீர்னு வந்து நிக்கிறே..'' என்று வெள்ளை மனதாகக் கேட்டாள்.

அவன் சிரித்துக் கொண்டே தாயின் கைகளைப் பிடித்தான். உள்ளங்கை காப்புக் காய்த்திருந்தது. வேலைக்குப் போய், அவளின் கை மென்மையை உணர்ந்தான். கண்களை இறுக மூடிக் கொண்டான். காணக் கூடாத காட்சியைக் கண்டதைப் போல்.

''என்ன ராசா... என்ன செய்யுது.. உடம்புக்கு. ஏன் ஒரு மாதிரி இருக்கே. இது மாதிரி இருக்க மாட்டியே...'' என்ற நெற்றியைத் தொட்டு மேனியை தடவிக் கொடுத்தாள் தாய்.

அவன் தாயின் மடியில் சாய்ந்தான்.

இந்த சுகத்திற்கு உலகில் இணை எதுவுமில்லை. அவன் தலையைத் தடவிக் கொடுத்தார்.

அவன் நேற்றுப்பட்ட அவமானத்திற்கு இன்று மருந்தாக இருந்தது இந்த ஆறுதல். இவங்களும் ஒரு பெண்தான். அவளும் ஒரு பெண்தான். இதில் எத்தனை வித்தியாசம்!



''ஏம்பா ராசா... உனக்கு அங்கிருக்கப் பிடிக்கவில்லையா..? பிடிக்கலை என்றால் இங்கேயே இருந்துவிடு. இதுக்குப் போய் மனதைப் போட்டு வருத்திக்காதே..''

அவன் அதிர்ந்தான். எத்தனை துல்லியமாக ஒரு தாய் மகனின் எண்ணத்தைக் கணிக்கிறாள். இந்த முகத்தில் தான் எத்தனை சுருக்கங்கள். இந்தத் தாயை இனியும் வெயிலில் வேலை பார்க்க விடலாமா? எவ்வளவு பெரிய விசயத்துக்கு எப்படி ஒரு தீர்ப்பு!

நான் இங்கிருந்து என்ன செய்வது? ஏன் நம் அப்பா பார்க்கும் தொழிலையே நான் பார்க்கக் கூடாது. இங்கிருந்து பார்த்தால் தானே... வருமானம் கம்மியாக வரும். இதையே நகரத்தில் பண்ணினால் நிறைய வருமானம் வரும்.

அவள் தான் எத்தனை ஏளனமாகப் பேசினாள். புரோக்கர், தரகர் என்று. ஏன் இந்தத் தொழிலை நான் கையில் எடுக்கக் கூடாது. முதல் இல்லாத தொழில். பேச்சில் நாணயம் மட்டும் இருந்தால் போதும்.

என்னிடம் திறமை இருக்கு. அதை விடத் தன்னம்பிக்கை அதிகமாக இருக்கு. எத்தனை பேர் ரியல் எஸ்டேட் தொழிலில் கொடி கட்டிப் பறக்கிறார்கள். இது எனக்கு ஒரு சவால். இது என் அப்பாவோடு முடிந்து விடக் கூடாது. நானும் இதில் உயர்ந்து காட்டணும். அவனுள் ஒரு தீப்பொறி பற்றி எரிந்தது. இப்போது இன்னும் கொழுந்து விட்டு எரிந்து ஜுவாலையாக வீசியது.

''அம்மா, நான் இங்கேயே இருந்து அப்பா தொழிலையே.. கத்துக்கிறேம்மா.. உங்களை விட்டு என்னால் இருக்க முடியலைம்மா!'' என்றான்.

''அப்பா தொழிலையா... இதில் என்னப்பா வருமானம் வரும். நீயும் எங்களை மாதிரி கஷ்டப்படக் கூடாது என்றுதானே உன்னை டவுனுக்கு அனுப்பி வைத்தோம். உனக்குக் கல்யாணம் ஆனா இப்படி இந்தக் கிராமத்தில் வந்து கஷ்டப்படுவாளா...

என்னை மாதிரியே... இப்போ இப்படிச் சொல்றே?'' என்றாள் கவலையாக.

''பயப்படாதீங்கம்மா.. நகைக் கடையில் வேலை பார்த்து நாம் என்ன நகைக் கடையா வைக்கப் போறோம்... அப்பா தொழிலை நான் கற்றுக் கொண்டால், டவுனில் போய் நான் தனியாக, சொந்தமாகத் தொழில் பண்ணலாம். யாரிடமும் கையேந்த வேண்டாம். என் மீது உங்களுக்கு நம்பிக்கையில்லையா?''

''இருக்குடா.. என் தங்கமே.. இந்த அம்மாவுக்கு என்ன தெரியும். நீ படிச்ச புள்ள. நீ எதையும் விவரமாகத்தான் செய்வே. நான் அப்பாவிடம் சொல்றேன். நீ எழுந்திரு.. போய்க் குளிச்சிட்டு வா... நான் சோறு பொங்குறேன்,'' என்று எழுந்து சென்றாள்.

திவாகர் கேணியில் போய் நீச்சல் அடித்துக் குளித்துவிட்டு, வந்தான். அவன் அம்மா சோறு வடித்து அப்பத்தான் பிடுங்கிய சுரைக்கா போட்டுக் குழம்பு வைத்திருந்தாள். பயத்தம் பருப்புக்கும், சுரைக்காய்க்கும் குழம்பின் மணம் ஆளை இழுத்தது.

திவாகர் சோற்றில் கை வைத்தான். அவள் கேட்ட கேள்வி நெஞ்சில் நெருஞ்சியாய்க் குத்திற்று.

''நீ மூணு வேளை சோறு சாப்பிட்டிருக்கியா?'' என்று. சட்டெனக் கையை உதறினான்.

''என்னப்பா குழம்பு சூடா இருக்கா... கையை எடுத்து விட்டாயே.. நீ என்ன சின்னப் பிள்ளையா.. சுடும் என்று தெரியாமல் வைக்க!'' என்றாள்.

அவன் மனதில், 'நான் சின்னப் பிள்ளைதானம்மா. சுடும் என்று தெரியாமல்தான் தொட்டு விட்டேன்!' என்று எதையோ நினைத்துக் கொண்டான்.



சாப்பிட்டவுடன் அவன் அப்பா வெளியில் ஒரு கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருந்தார்.

அந்தக் கயிற்றுக் கட்டில் எனக்கும் வயதாகி விட்டது என்று சொல்வது போல் நடுவில் தொய்ந்து தொங்கியது.

திவாகர் கட்டிலின் ஓரமாக உட்கார்ந்தான். அவன் அம்மா கட்டிலின் கீழ் கால் நீட்டி உட்கார்ந்து வெற்றிலை போட்டாள்.

மகன் சொன்னதைக் கணவரிடம் எடுத்துச் சொன்னாள். அவர் யோசனையுடன் மகனைப் பார்த்தார்.

''ஆமாம் அப்பா, நான் உங்க தொழிலையே செய்கிறேன். இதற்கு டவுனில் நல்ல பணம் கிடைக்கும்,'' என்றான்.

''சரி. நாளையில் இருந்து என்னுடன் வா,'' என்றார்.

## 4



ஒரு ஆறு மாதம் அவன் அப்பாவுடன் சென்று தொழிலின் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டான்.

அந்தக் கிராமத்தில் தொழிற்சாலைக்காக ஒரு பெரிய புள்ளி நிலம் வேண்டும் என்று வந்தார். திவாகர் அவரைக் கூட்டிப் போய்ப் பரந்த நிலப்பரப்பைக் காண்பித்தான்.

அவருக்கு அந்த இடம் பிடித்து விட்டது. ரோட்டோரத்தில் இருந்தது. நல்ல வசதி. ''இந்த இடத்தையே முடித்துக் கொடுப்பா,'' என்றார்.

திவாகர் நிலத்துக்காரரைப் போய்ப் பார்த்தான். அந்த ஊரில் வாங்க ஆளில்லை. அப்படியே வாங்கினாலும் இவ்வளவு விலை கொடுத்து யாரும் வாங்க மாட்டார்கள். பணத்தையும் முழுதாகக் கொடுக்க மாட்டார்கள்.

திவாகர் நல்ல விலைக்குப் பேசி முழுப் பணத்தையும் வாங்கிக் கொடுத்தான். இரண்டு பக்கமும் கணிசமான தொகை கிடைத்தது.

அந்த இடத்தை வாங்கிய அதிபர் ராகவன், "ஒரு பெரிய தொழிற்சாலை கட்டணும். இதை நீயே இருந்து கட்டிக் கொடுக்க முடியுமா? எல்லாப் பொறுப்பும் உன்னுடையதே. ஒரு கொட்டேசன் தயார்ப் பண்ணு. எவ்வளவு பணம் வருது என்று சொல். எனக்குச் சரி என்றால் நீயே இதை முடித்துக் கொடு," என்றார்.

திவாகர் வந்த வாய்ப்பை விடவில்லை. இந்தத் தொழிலில் அவனுக்கு அனுபவமும் இல்லை. எல்லா இடங்களிலும் விசாரித்தான். சிமெண்ட், இரும்பு, கம்பி, ஜல்லி என்று தேவையான பொருட்களின் விலை விபரத்தைப் பட்டிய லிட்டான். மர வேலைக்குத் தச்சு காண்ட்ராக்டர் ஒருவரிடம் விசாரித்தான். எல்லாவற்றையும் எழுதி மேஸ்திரி, கூலியாள் என்று கணக்கிட்டு ஒரு கொட்டேசன் தயார் பண்ணினான்.

எதிலும் தயக்கம் இல்லாமல் அடுத்த அடி எடுத்து வைத்தான். லாபம் கிடைக்கவில்லை யென்றாலும் அனுபவம் கிடைக்கு மில்லையா?

ராகவனிடம் அந்தக் கொட்டேசனைக் கொடுத்தான்.

அவர் வாங்கிப் பார்த்து விட்டுச் சில கேள்விகளைக் கேட்டுவிட்டு, அதை அவனிடம் முழுமையாக ஒப்படைத்தார்.

திவாகரே முன்நின்று எல்லாவற்றையும் கவனித்தான். அந்தக் கிராமத்து ஆட்களையே சித்தாள் வேலைக்கு வைத்துக் கொண்டான்.

அவன் நண்பன் ஒருவனை மேஸ்திரியாகப் போட்டு வேலையைக் கவனிக்கச் சொன்னான்.



மளமளவென வேலையானது. ராகவன் கொடுத்த பிளான்படி கட்டி முடிக்க ஒரு வருடமானது. எல்லோரிடமும் பாராட்டுக் கிடைக்கும் வண்ணம் கட்டி முடித்தான்.

திவாகர் கட்டடக் கலையைப் பற்றிப் படித்தான்.

ராகவன் சென்னையில் ஒரு அடுக்கு மாடிக் கட்டடம் கட்ட வேணும் என்று சென்னைக்குக் கூட்டிச் சென்றார்.

இப்போ எல்லாம் அவனே பிளான் போட்டான். அதைப் பார்த்த ராகவனோட நண்பர்களும் இவனிடம் வீடுகள், பல அடுக்குமாடிக் கட்டடங்கள், காலி மனைகள், பண்ணைகள் என்று வந்தனர்.

இப்படியே இவன் பிரபலமானான்.

சென்னை நகரத்தை விட்டு, அமைதியான இடத்தில் ஒரு பெரிய மாளிகை கட்டினான். வீட்டைச் சுற்றிலும் பெரிய தோட்டம் அமைத்தான். புல்வெளிகளும், செயற்கை நீரூற்றுகளும் குளத்தில் தாமரைகளும் என்று வண்ண வண்ண மலர்களுமாக உருவாக்கினான்.

அவன் அம்மா, அப்பாவைச் சென்னைக்குக் கூட்டி வந்தான். வீட்டு வேலைக்கும், தோட்ட வேலைக்கும் ஆட்கள் வைத்தான்.

சென்னை மத்தியில் ஐந்தடுக்கு மாடி கட்டினான்.

கீழே இவன் ஆபீசுக்குப் பயன்படுத்தினான். மீதி நான்கையும் வாடகைக்கு விட்டான்.

இப்போதெல்லாம் வெளியூர்களிலும் போய்க் கட்டடங்கள் கட்டிக் கொடுத்தான். நான்கே வருடத்தில் இவனும் ஒரு பெரிய தொழிலதிபர் ஆகிவிட்டான்.

என்னதான் உழைப்பு, பணம், வசதி என்று வந்துவிட்டாலும் அவன் மனதில் கொழுந்து விட்டு எரிந்த தீ... இன்னும் அணையவில்லை. அது நீறு பூத்த நெருப்பாக இருந்தது.

கண்களை இறுக மூடிக் கொண்டான். எத்தனை பேச்சுகள், எத்தனை அவமானங்கள், அடிகள், புரோக்கர், தரகர் என்று எத்தனை ஏளனங்கள்... இந்த தரகர் தொழிலில்தான்டி நான் இன்று இந்த உயர்ந்த நிலையில் இருக்கிறேன்...

நிருபா கல்லூரிப் படிப்பை முடித்தாள். அவள் அண்ணன் படிக்காமல் ஃபிரண்ட்சுகளோடு ஊர் சுற்றினான். இப்படியே விட்டால் கெட்டு விடுவான் என்று கல்யாணம் பண்ணி வைத்தார். அதன் பின் இன்னும் கெட்டுப் போனான்.

ரொம்ப பெரிய இடத்தில் பெண் எடுத்து ஆடம்பரக் கல்யாணம் செய்தார். இப்போ எல்லாம் பவுன் ரேட் கூடக் கூட ரொம்ப வியாபாரம் குறைந்து விட்டது.

பெரிய இடத்தில் பெண் எடுத்தால் தன்னைக் கைதூக்கி விடுவார்கள் என்று நம்பி வெளியில் கடன் வாங்கிச் செலவு செய்தார்.

பெண் வீட்டில் இவர்களைக் கண்டுக்கவேயில்லை. மேலும் செலவு தான் ஆனது.. மருமகள் கீதா.. அவளும் தினமும் ஒரு பார்ட்டி, ஹோட்டல் என்று சுற்ற ஆரம்பித்து விட்டாள்.

கடையில் சரக்குகள் குறைந்தன. பேங்க் கடன்காரர்களும் வெளியில் வட்டிக்குக் கொடுத்தவர்களும் நெருக்கினர். என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தார் சங்கரன். இது வெளியில் பரவி விட்டது. சங்கரன் கடன்காரன் ஆகி விட்டான் என்று அவருக்குக் கொடுப்பவர்களும் நிறுத்தி விட்டனர்.

வீட்டில் ஒரே பிரச்சனை. அப்பாவுக்கும், மகனுக்கும். கடையில் முதல் ஒன்றுமில்லை. ''கடன்காரர்கள் கடையை எடுத்துக் கொண்டால், நான் என்ன செய்வது. என்னால் வெளியில் தலைகாட்ட முடியாது. என் மாமனார் வீட்டில் என்னை மதிப்பார்களா..? நான் எப்படி அந்த வீட்டிற்குப் போவது? எனக்கு என்ன மரியாதை இருக்கும்?'' என்று குதித்தான்.



ஒரு பெரிய பைனான்சியரிடம் மொத்தமாகப் பணத்தை வாங்கி மற்றக் கடன்களை எல்லாம் அடைத்தார். அதுவே கோடியைத் தாண்டி விட்டது.

ஒரு ஆறு மாதம் பொறுத்திருந்த பைனான்சியர், 'நான் கொடுத்த பணத்திற்குக் கடையையும், வீட்டையும் எழுதிக் கொடுங்கள்,' என்று வற்புறுத்தினார்.

மாதேஷ், ''கடையை எழுதிக் கொடுத்தீங்கன்னா.. நான் தற்கொலை பண்ணிக்குவேன்!'' என்று சொன்னான்.

''பிறகு இதற்கு என்னதான்டா வழி? உன் மாமனாரை இந்தப் பணத்தைக் கட்டச் சொல்லு. கடையை அவர் எடுத்துக்கட்டும். நீ நடத்து,'' என்றார்.

கீதா சண்டைக்கு வந்து விட்டாள். ''நீங்கள் வாங்கிய கடனுக்கு என் அப்பா ஏன் கடன் கட்டணும்? உங்களை நம்பிப் பெண் கொடுத்ததே தப்புனு என் அப்பா புலம்புகிறார். அங்கெல்லாம் போய்ப் பணம் கேட்காதீர்கள்,'' என்றாள் கண்டிப்பாக.

## 5



சங்கரன் பைனான்சியரிடம் போய்க் கெஞ்சினார். அவர், ''பணம் என்னுடையது இல்லை. பணம் கொடுத்தவர் வேறு ஒருவர். அவர் என்னை நெருக்கும்போது நான் என்ன பண்ண முடியும்?'' என்றார்.

''அவரை நான் நேரில் பார்க்க முடியுமா?''

''தெரியலேயே... இதை நான் அவரிடம் கேட்டுத்தான் சொல்லணும்.''

''கொஞ்சம் கேட்டுச் சொல்லுங்கள்.''

பைனான்சியருக்கு ஃபோன் போட்டுக் கேட்டார். அடுத்த வாரத்தில் ஒரு நாள் மாலை சந்திக்குமாறு நேரம் சொன்னார்.

இந்தக் கவலையில் அமுதாவுக்கு நெஞ்சு வலி வந்தது. அவளை ஹாஸ்பிட்டலில் சேர்த்தனர். அவளுக்கு ஒரு கையும், காலும் வரவில்லை. நிருபா பயந்து அழுதாள். சங்கரன் மனம் ஒடிந்து போனார்.

ஆனால் கடையை விட்டுக் கொடுக்க மனமில்லை. கடையைக் கொடுத்து விட்டால் தன் கவுரவம் போய்விடும் என்று தவித்தார். பெரிய மனிதராகவே நினைத்து வாழ்ந்து விட்டார். அவரால் கீழே இறங்கி வர முடியவில்லை.

அந்த ஞாயிறு மாலை சங்கரன் பைனான்சியரைச் சந்திக்க அவன் சொன்ன இடத்துக்குப் போனார்.

பெரிய நட்சத்திர ஹோட்டல். முன்னாடியே போய் விட்டார். அவரைப் பார்க்க இன்னும் அரை மணி நேரம் இருந்தது.

ஹோட்டலின் முன் ரிசப்சன் ஹாலில் உட்கார்ந்திருந்தார். அவருடைய நண்பராக இருந்தவர், அப்படித்தான் சொல்ல வேண்டும். இப்போ எல்லாம் இவர் நண்பர்கள் இவரைக் கண்டாலே.. ஒதுங்கிப் போய் விடுகிறார்கள்.

இந்த நண்பரும் அப்படித்தான். இவரைப் பார்த்து விட்டும் பார்க்காதவர் போல் செல்லுமுன் சங்கரனே எழுந்து பின் வாயில் புறம் சென்று தோட்டத்தில் இறங்கினார். இவருக்கு எத்தனையோ தடவை பண உதவி பண்ணியிருக்கார். எங்கே இவரிடம் பேசினால் பணம் எதுவும் கேட்டு விடுவாரோ என்று ஒதுங்கினார்.

இந்த பைனாசியரிடம் என்ன கேட்பது, எப்படிக் கேட்பது என்று யோசித்தார்.

நேரம் கடந்ததும் அறைக் கதவைத் தட்டி விட்டு உள்ளே போனார். நிமிர்ந்து வணக்கம் சொன்னார். சேரில்



உட்கார்ந்திருந்தவனைப் பார்த்து மனம் துணுக்கென்றது. இத்தனை சின்ன வயதை அவர் எதிர்பார்க்கவில்லை.

வயதில் பெரியவர், தன் பிரச்சனையைச் சொன்னால் புரிந்து கொள்ளக் கூடியவர், தன் வயதுக்கேத்தபடி இருப்பார், அவரிடம் சொல்லலாம் என்று நினைத்துத்தான் வந்தார்.

ஆனால் இங்கே.. 'இத்தனை சின்ன வயதுக்காரனிடம் எப்படி என் நிலைமையை எடுத்துச் சொல்வது? இது எனக்கு, என் வயது, இத்தனை நாள் வாழ்ந்த கவுரவத்துக்கு இழுக்கு அல்லவா? இவனிடம் நான் கெஞ்சலாமா?' அவருக்குத் தன்மானம் இடம் கொடுக்கவில்லை.

ஆனால் கேட்காமல் முடியாதே. கடன் வாங்கியாச்சு. பேசித்தான் ஆக வேண்டும். பேசாமல் முடியாது. இந்த நேரத்தில் தன்மானம், கவுரவம் என்று பார்த்தால், வெளியில் தலைகாட்ட முடியாது. கடையும் போய்விட்டால் உயிரை விடுவதைத் தவிர வேறு வழியில்லை.

மகனும் நான் உயிரோடு இருக்க மாட்டேன் என்கிறான். பேசாமல் போனால் அவனும் சும்மா விட மாட்டான். வேற வழியில்லை. கேட்டுத்தான் ஆக வேண்டும். அவன் நீட்டிய இடத்தில் எல்லாம் கையெழுத்துப் போட்டுப் பணத்தை வாங்கி விட்டேன். பேசிப் பார்க்கலாம். நடப்பது நடக்கட்டும் என்று நினைத்தார்.

இவ.. இவரை எங்கோ.. பார்த்த மாதிரி இருக்கே... என்று யோசித்தார். அவன் முகத்தை ஆழ்ந்து நோக்கினார். இந்தக் கண்.. நினைவு வந்து விட்டது.. ஆம், இவன் திவாகர் இல்லே...! என் கடையில் எடுப்பு வேலை பார்த்தவன்.

சே.. சே.. போயும்.. போயும்.. இவனிடமா வந்து நிற்க வேண்டும். இவன் எப்படி இங்கே... இத மாதிரி பைவ் ஸ்டார் ஹோட்டலில் எல்லாம். இல்லை, நான் தான் அவன் சாயலில்

இருக்கும் வேறொருவனைப் பார்த்துக் குழம்புகிறேனா... அவன் எப்படி இப்படி...

அவன் ஒரு கிராமத்தில் இருப்பவன். இந்த மாதிரி இடத்துக்கெல்லாம் அவன் வரக் கூட மாட்டான். அதுவும் இத்தனை தோரணையாக, பரம்பரைப் பணக்காரன்தான் இப்படி மிடுக்கான தோற்றத்துடன் இருக்க முடியும்.

இந்தத் தோற்றத்துக்கும் வசதிக்கும் இந்த ஏ.சி. அறைக்கும் கொஞ்சங் கூட சம்பந்தம் இல்லையே... என்னிடம் கூலி வேலை பார்த்த இவன்.. என் பெண்ணிடம் வாலாட்டினான் என்று அடித்து விரட்டப்பட்டவன் . இவன் எப்படி..?

இந்தக் கேள்விக்கு அவனே பதில் சொன்னான்.

''ஆம். நீங்கள் நினைப்பது சரிதான். உங்களால்.. உங்கள் பெண்ணால் அடித்து விரட்டப்பட்டவன்தான் நான். சந்தேகமில்லாமல் அந்தக் கிராமத்துத் திவாகர்தான்!'' என்றான்.

ஒரு கண நேரம் அமைதி நிலவியது. பிறகு சங்கரன்.. ''நீ.. நீ.. நீங்கள் எப்படி இங்கே.?'' அவர் முடிக்கு முன்..

''நாம் அதைப் பற்றிப் பேச இங்கே வரலை என்று நினைக்கிறேன்.''

''ஆமாம்.. ஆமாம்..'' என்று தலையாட்டினார்.

''உங்கள் முதலாளியைப் பார்க்க வந்தேன். அவரை வரச் சொன்னால் நான் பேச வேண்டியதை அவரிடமே பேசுவேன்,'' என்றார்.

''ஏன்..? என்னைப் பார்த்தால் முதலாளி மாதிரித் தெரியலையா..? இல்லே, நம்ப முடியலையா?'' வார்த்தையில் ஏளனம் தெறித்தோடியது.

''நீ.. ங்...க. முதலாளியா?'' என்றார் வாய் பிளந்து.



இவன் எப்படி கோடிகளுக்கு அதிபதியானான்? இவனுக்கு யார் பின்னாடி இருக்காங்க... எந்தத் தைரியத்தில் இவன் முதலாளி என்கிறான் என்று நினைத்ததை வாய்விட்டுக் கேட்டார்.

''உழைத்துத்தான்.. என் இரத்தத்தை வியர்வையாகச் சிந்தித்தான்.. உங்களைப்போல, உங்கள் மகன் போல் இருந்தால், நான் இத்தனை உயர்ந்த இடத்துக்கு வந்திருக்க முடியாது.

''நாம் இந்தப் பேச்சை இத்துடன் முடித்துக் கொள்வோம். உங்களுக்குக் கொடுத்த அரை மணி நேரத்தில் பதினைந்து நிமிடம் முடிந்து விட்டது. இன்னும் பதினைந்து நிமிடந்தான் இருக்கு. இப்படியே பேசி நேரத்தைக் கழித்து விடுகிறீங்களா..?'' என்றான்.

''எனக்கு எவ்வளவோ வேலை இருக்கு. நான் நேரத்தை வீணாக்க முடியாது!'' என்றான் கறாரக் குரலில்.

## 6



''என்னிடம் என்ன பேச வேண்டும்?'' என்றான் மிடுக்காக.

''நான் வாங்கிய பணத்துக்கு நீங்கள் கடையையும், வீட்டையும் எடுத்துக் கொள்ளப் போவதாகச் சொன்னீங்களாம்.. அதைப் பற்றிப் பேசத்தான் வந்தேன்.''

பேசு என்பது போல் கைகளைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தான்.

''என் கடையும், வீடும் தர முடியாது. நான் பணத்தைத் தந்து விடுகிறேன்,'' என்றார்.

''எப்படி?''

''எப்படி...?'' அவரும் திகைத்தார். எப்படித் தர முடியும்? ஹாஸ்பிட்டலில் இருக்கும் மனைவியை வீட்டுக்குக் கூட்டி வரவே பணமில்லை. இத்தனை பணத்தையும் எப்படி நான் தர முடியும்? நினைக்கும் போதே சாதாரணமாக இருந்த விசயம் இப்போ பூதாகரமாகக் கண் முன் தெரிந்தது.

''நான் கொடுத்திருக்கும் பணம், வட்டியும் முதலுமாகக் கடை, வீடு இரண்டையும் கொடுத்தால் கூட நீங்கள் இன்னும் எனக்குப் பணம் தர வேண்டி வரும். தெரியுமில்லே..'' என்றான்.

''தெரியும்.''

''அப்போ நாம் வியாபாரம் பேசலாமா?''

''எ.. ன்.. ன... வியாபாரம் பேச இருக்கு?''

''இருக்கு. அதைத்தான் சொல்லப் போறேன். உங்களுக்குச் சம்மதம் என்றால் சரி என்று சொல்லுங்கள். சம்மதம் என்றாலும் கடையும், வீடும் என் பெயரில் இருந்தாலும் நீங்கள் வீட்டில் இருந்து கொள்ளலாம். கடையையும் நடத்தலாம். உங்களுக்கு சப்ளை செய்தவர்கள் மீண்டும் செய்வார்கள். இல்லை, முடியாது என்று சொன்னால், வீட்டையும், கடையையும் விட்டு விட்டு வெளியே போகலாம்.. இது என் இறுதியான முடிவு.''

''நீங்கள் இன்னும் என்னவென்றே சொல்லவில்லையே விசயத்தை. அதன் பிறகுதானே நான் முடிவெடுக்க முடியும்.''

''சொல்கிறேன். எனக்கு உங்கள் பெண் வேண்டும்.''

அவர் அதிர்ந்தார். ''என் பெண்ணா.. எதுக்கு?''

''என் படுக்கைக்கு..'' தயங்காமல் பதில் வந்தது அவனிடம் இருந்து.

''வேண்டுமானால்..'' அவன் கையை உயர்த்தினான்.



''உங்கள் நேரம் முடிந்து விட்டது. நான் என் வியாபாரத்தைச் சொல்லி விட்டேன். அதை முடிப்பதும், விடுவதும் உங்கள் விருப்பம். இனி நாம் இதைப் பற்றிப் பேச வேண்டாம். பேச வேண்டும் என்றால், உங்கள் பெண்ணை அனுப்புங்கள். நான் பேசிக் கொள்கிறேன்..

''நீங்கள் இனி என்னைச் சந்திக்க வேண்டாம்.. எனக்கு நாளை மாலை ஐந்து மணிக்குள் தெரியப்படுத்துங்கள். இந்த நம்பருக்கு. இல்லையென்றால், மறுநாள் காலை கண்டிப்பாகக் கடையும், வீடும் பூட்டப்படும்!'' என்றான் உறுதியான குரலில்.

''இப்போ நீங்கள் போகலாம்!'' என்றான்.

சங்கரன் செய்வதறியாதவாறு வெளியே வந்தார். என்ன பண்ண முடியும்? பெண்ணா, கவுரவமா.. இப்போ எதை விடுவது? எதைக் காப்பது?

மகனிடம் இதைச் சொல்லலாம். அவன் என்ன சொல்கிறான் என்று பார்ப்போம். இது அமுதாவுக்குத் தெரிந்தால் உயிரை விட்டு விடுவாள். தெரியாமல்தான் இதை முடிக்கணும்.

வீட்டுக்குப் போகாமல், மகனை ஃபோன் பண்ணி பார்க்குக்கு வரச் சொன்னார். வந்த அவனிடம் விபரத்தைச் சொன்னார். அவன் தயங்காமல், ''இதில் யோசிக்க என்னப்பா இருக்கு? நாம நிருபாவை அனுப்பி வைப்பதைத் தவிர வேறு வழியில்லை!'' என்றான்,

சங்கரனின் மனதைக் கவுரவமும், அந்தஸ்தும் பேயாய்ப் பிடித்து ஆட்டின. மீண்டும் பழைய மாதிரி காரில் வலைய வரவேண்டும். போன அந்தஸ்தை மீண்டும் பெற வேண்டும் என்று நினைத்தாரே தவிர... தன் பெண் வாழ்வு வீணாகப் போகுது என்று நினைக்கவில்லை.

மகனும் அதற்குத் தகுந்தாற்போல் பேசினான். அவர் சிந்திக்கவேயில்லை. மகளை அனுப்புவதென்று [illegible]

வந்து விட்டார். இதை மகளிடம் சொல்ல வேண்டும். எப்படிச் சொல்வது?

இரவு மகளிடம் வேறு எதுவும் சொல்லாமல், ''நான் அந்த பைனான்சியரைப் பார்க்கப் போனேன். அவர் உன்னிடம் ஏதோ பேச வேண்டுமாம்.. உன்னை வரச் சொன்னார்,'' என்றார்.

அவள் வியந்தாள். ''என்.. னை.. எதுக்குப்பா அவர் பார்க்கணும்?'' என்றாள்.

''தெரியலேம்மா... போய்ப் பார்த்தால் தான் தெரியும். நாளை மாலை ஐந்து மணிக்கு இந்த ஹோட்டலுக்குப் போய் நீ பார்,'' என்றார்.

''என்னப்பா.. நீங்க. அவர் சொன்னார் என்று என்னைப் போய்ப் பார்க்கச் சொல்றீங்க.. நான் போகலைப்பா,'' என்றாள்.

''நீ போனால்தம்மா அவர் என்ன சொல்கிறார் என்று தெரியும். போகாமலே எப்படி பிரச்சனையை முடிப்பது?''

''உங்களிடம் என்ன சொன்னார்?''

''பணத்தைப் பற்றித்தான் பேசினோம். பிறகு உன்னிடம் நான் பேசிக் கொள்கிறேன். நீ போகலாம் என்று சொல்லிவிட்டார். அதான் நீ போய்ப் பார். என்னதான் சொல்கிறார் என்று பார்ப்போம்..'' நயமாகப் பேசினார்.

நிருபாவும் வேறு எதுவும் யோசிக்காமல், ''சரிப்பா. நான் நாளை போய்ப் பார்க்கிறேன்,'' என்றாள். விதி அவளை வீதி வரை இழுத்துப் போவது தெரியாமல்.

மறுநாள் மாலை அம்மாவுக்கு வேண்டியதை எல்லாம் செய்து விட்டு அப்பாவைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு இவள் ஒரு ஆட்டோ பிடித்து ஹோட்டல் முன் வந்து இறங்கினாள்.



ரிசப்சனில் கேட்டதுக்கு இரண்டாவது தளம் என்று சொன்னார்கள். இவள் லிப்ட்டில் ஏறி இரண்டாவது தளத்தை அடைந்து அறை எண்ணைச் சரி பார்த்து பெல்லை அழுத்தினாள்.

''உள்ளே வரலாம்,'' என்று குரல் வந்தது.

இவள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள். அது ஒரு பெரிய சூட். முன் ஹாலில் ஒருவரும் இல்லை. இடப் பக்கம் இருந்த அறையை பார்த்தாள்.

உள்ளே கால் வைத்தவள், 'வாங்க மேடம்!' என்ற குரலில் தூக்கி வாரிப் போட்டு நிமிர்ந்தாள். 'புலி குகைக்குள் புள்ளி மான் வருகிறது. நீ எப்படியும் வருவாய் என்று தெரியும்!'

இ..வ..ன்... திவாகர் இல்லே... இந்த குரலில் மேலும் அதிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள்.

'சாட்சாத் நானேதான்.. இதில் அதிர்வதுக்கு என்ன இருக்கு? எல்லாம் தெரிந்த்;தானே வந்திருப்பே..' என்றான் ஏளனமாக.

''எல்லாம் தெரிந்தா...?'' அவள் மீண்டும் அதிர்வது துல்லியமாகக் கண்ணில் தெரிந்தது.

## 7



''என்ன உன் அப்பா சொல்லிச் சம்மதித்துத் தானே நீ இங்கு வந்திருக்கே? இதில் இத்தனை அதிர்வதற்கு என்ன இருக்கு?''

''ஆமாம்.. என் அப்பா சொல்லிச் சம்மதித்துத் தான் இங்கு வந்தேன். ஆனால் நீங்கள் என்று என்னிடம் சொல்ல வில்லையே?''

அவன் கண்கள் இடுங்கின. ''அப்போ வேறு யாரோ இருந்தாலும் நீ சம்மதித்துத்தானே வந்தே. அப்படித்தானே?'' என்றான், குரலில் கடுமை காட்டி.

இதில் இத்தனை கடுமை காட்ட என்ன இருக்கு என்று நினைத்து, 'ஆமாம்,'' என்றாள்.

அவன் கண்கள் நெருப்பைக் கக்கின.

''அப்போ நமக்குள் பேச ஒன்றுமில்லை. எல்லாம் உன் அப்பாவே உன்னிடம் சொல்லியிருப்பார். சரி, வா. போகலாம்,'' என்றான்.

''என் அப்பா என்னைப் பார்க்கணும், என்னிடம் ஏதோ பேசணும் என்று சொன்னதாகத்தான் சொல்லி அனுப்பினார். வேறொன்றும் சொல்லவில்லை.''

அவன் புருவங்கள் மேலேறின. ''உன் அப்பா சாமர்த்தியமாகத் தன் சம்மதத்தை எனக்குத் தெரிவித்து விட்டு, விசயத்தை நானே உன்னிடம் சொல்லட்டும் என்று காயை நகர்த்தியிருக்கிறார்.''

''என்ன சம்மதம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?''

''புரிய வைக்கத்தானே போறேன். ஏன் இந்த அவசரம்?'' என்று உதடு கன்லயாமல் ரகசியமாகச் சிரித்தான்.

''நீ.. எங்கே.. இங்கே. என்ன பண்றே..?'' என்றாள் ஒருமையில் சாதாரணமாக.

ஓங்கி ஒரு அறை விட்டான்.

''என்னடி நீ.. உன் வீட்டு வேலைக்காரனா நான்? மரியாதை இருக்கட்டும்,''' என்றான் கொதிக்கும் குரலில்.

ஆடி விட்டாள் நிருபா.

கன்னத்தைப் பிடித்துக் கொண்டு, அசையாமல் அவனையே முறைத்துப் பார்த்தாள்.

''இப்ப நீ இங்கு எதுக்கு வந்தே?''

''நீ.. நீங்க என்னைப் பார்க்க வரச் சொன்னதாக.. என் அப்..''



''நீ என்ன பெரிய இவளா.. இல்லை. உலக மகா அழகியா... உன்னை நான் பார்க்க.. இல்லே, இதுக்கு முன்னாடிதான் உன்னைப் பார்த்ததில்லையா? உன் சுயரூபம் தான் எனக்குத் தெரியுமே!'' குத்தினான்.

அவளுக்குக் கோபம் வந்தது. இவன் எதற்காக என்னை வரச் சொல்லி இப்படிப் பேசுகிறான்? அப்பா யாரைப் பார்க்கப் போகச் சொன்னார்?

''எதுக்காக என்னை வரச் சொன்னீங்க...?'' என்றாள் ஆத்திரமாக.

''என் படுக்கைக்கு வரச் சொல்லத்தான்!'' என்றான் கூலாக.

அவளையறியாமல் அவள் கை அவன் கன்னத்தைப் பார்த்து இறங்கியது. அது இறங்கு முன் சட்டெனப் பிடித்தான்.

''என்னடி பழைய நினைப்பா..? நான் உன்னிடம் கன்னத்தைக் காட்டிக் கொண்டு நிற்க..''

அவள் விழிகள் வியப்பால் விரிந்தன. அவன் சொல்வதை நம்ப மாட்டாமல்.

அவள் அப்பாவிடம் சொன்ன அத்தனையும் அவளிடம் சொன்னான்.

அவள் நம்ப மாட்டாமல், 'நோ...' என்று அலறினாள்.

''நீ பொய் சொல்றே... என் அப்பா அப்படியில்லை. நான் உன்னை நம்ப மாட்டேன்!'' என்றாள்.

அவள் கையை இறுகப் பிடித்தான். அதுவே வலி உயிர் போயிற்று.

''என்னடி மறுபடியும் மரியாதையில்லாமல் பேசுறே..''

''உனக்கென்னடா மரியாதை. நீ மட்டும் என்னை டீ போட்டு பேசலாமா? இது மட்டும் மரியாதையா..? யார் கொடுத்தா இந்த உரிமை?''

"நானா எடுத்துக்கிட்டேன்டி.. உனக்கெதுக்குடி மரியாதை? என்னிடம் கை நீட்டிப் பணம் வாங்கிய கடன்காரனின் மகள் நீ. வாங்கிய பணத்தைக் கொடுக்க முடியாமல் பெத்த பெண்ணையே என்னிடம் படுக்க அனுப்பி வைத்திருக்கும் அப்பனின் மகள் நீ. உனக்கெதுக்குடி மரியாதை?" என்று நறுக்கெனத் தலையில் குட்டினான்.

அவன் பேசுவது அவளுக்குச் சரியாகப் புரியவில்லை. இவன் கடன் கொடுத்தானா? என் அப்பா இவனிடமா பணம் வாங்கினார்? இதை என்னிடம் சொல்லவேயில்லை... இவன் எப்படி இவ்வளவு பணத்தைக் கொடுத்தான்? இதில் என்னவோ பிரச்சனை இருக்கு.. அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தாள்.

"எதுக்குடி சிரிக்கிறே?"

"பின்னே சிரிக்காம என்ன பண்றது? ஒரு நேரச் சோத்துக்கு வழியில்லாமல் தான் எங்கள் கடையில் வேலை பார்த்தே.. நீ வந்து என் அப்பாவுக்குப் பணம் கொடுத்தியா...? எனக்கு இதைக் கேட்கவே சிரிப்பா இருக்கு!" என்றாள்.

"அப்படியா.. இந்தா பாரு..." என்று அவர் கையெழுத்துப் போட்டுக் கொடுத்த அத்தனை பேப்பர்களையும் எடுத்துப் போட்டான். கடை, வீடு எல்லாம் அவன் பெயருக்கு மாற்றி எழுதியதையும் காண்பித்தான்.

அவள் விழி விரிய அத்தனையும் பார்த்தாள்.

"இப்ப என்னடி சொல்றே?"

"நீ.. நீங்க நேரடியாகப் பணத்தை என் அப்பாவிடம் கொடுத்தீங்களா?"

"என்ன இத்தனை பணம் என்னிடம் இருக்கு என்றவுடன் மரியாதை இப்போ தானே வந்து விட்டது... பணத்துக்குத்தானே எத்தனை மதிப்பு. உன்னிடம் இப்ப தயக்கமில்லாமல்



கேட்கிறேன், என் படுக்கைக்கு நீ வருவியா.." என்றான் கேவலமாக.

அவள் உயிர் ஒரு நிமிடம் நின்று பின் இயங்கியது. அவன் கேட்ட கேள்வி...

கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

"என்ன, பதிலைக் காணோம்... உன்னிடம் நின்று பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. உன் வாயில் இருந்து எப்பொழுது உதிரும் என்று காத்துக் கொண்டிருக்க உனக்குத் தகுதியும் இல்லை."

"என்ன சொன்னாலும் நீங்கள் நினைப்பது ஒரு நாளும் நடக்காது!" என்றாள் திடமாக.

"சரி. ஓகே... நீ போகலாம். இதைச் செய்துதான் ஆகணும் என்று உன்னை நான் கட்டாயப்படுத்தவில்லை. நாளை ஒருநாள் உங்களுக்கு டைம். மறுநாள் காலை ஆறு மணிக்கு வீடு, கடை எல்லாம் பூட்டப்பட்டு என் கைவசம் வந்து விடும்."

விழி பிதுங்க அவனைப் பார்த்தாள்.

அவள் இதழோரம் துடித்தது.

"உனக்கு இப்போ சிரிப்பா இருக்கா.. நீ எதுக்கு இப்படி பழி வாங்கறே என்று எனக்குத் தெரியும். அன்று நான் நடந்து கொண்டதுக்குத்தானே..." இப்போது எல்லாம் வெட்ட வெளிச்சமாகப் புரிந்தது.

கால்கள் தள்ளாட வெளியே வந்தாள். எப்படித்தான் ஆட்டோ பிடித்து வீடு வந்து சேர்ந்தாளோ... தெரியவில்லை. வீட்டுக்கு வந்ததும் பிரமை பிடித்தாற் போல் இருந்தாள்.

அவள் அப்பாவும், அண்ணனும் வந்து கேட்டனர். "என்ன சொன்னான்?" என்று.

அவள் அப்பா முகத்தைப் பார்த்துக் கேட்டாள். ''உங்களுக்கு அவர் திவாகர் என்று தெரியுமா?''

''தெரியும்!'' என்றார் தடுமாற்றமாக.

''அப்போ அவர் போட்ட கண்டிசன் எல்லாம் உங்களுக்குத் தெரியும். தெரிந்தும் என்னை அனுப்பி வைத்தீங்க!'' என்றாள் வெற்றுக் குரலில்.

''வேற என்னம்மா பண்றது? எனக்கு வேற வழி தெரியலையே.. கடையையும், வீட்டையும், விட்டு விட்டு எங்கு செல்வது? இந்த ஊரில் இருக்க முடியுமா?''

''ஏம்பா முடியாது..? வீடும், இந்த மாதிரி கடையும் இல்லாதவங்க எல்லாம் இந்த உலகில் வாழவேயில்லையா?''

8



''எல்லாவற்றையும் விட்டுட்டு வாங்க. நாம் வேறு எந்த ஊருக்காவது சென்று விடலாம். நான் படித்திருக்கேன். என் படிப்புக்கு வேலை கிடைக்கும். நீங்களும் அண்ணனும் ஏதாவது ஒரு கடைக்கு வேலைக்குப் போங்கள். மூன்று பேர் சம்பாதித்தால் போதாதா..? நாம் குடும்பம் நடத்த.. எதுக்கு இத்தனை கடன், பிரச்சனை. நாம் எங்காவது சென்று விடலாம்,'' என்றாள்.

''ஓங்கி அறைந்தேனா... பல்லு அத்தனையும் கொட்டிவிடும். நீ எனக்குப் புத்தி சொல்லும் அளவுக்கு வந்துவிட்டாயா...? அவ்வளவு திமிர் ஏறி விட்டதா? இதெல்லாம் எங்கிருந்து வந்தது. நான் போட்ட சோறு அல்லவா இப்படி பேசுது...?''

''அப்பா இப்படி தலைகுனிந்து கஷ்டப்படுறாரே.. நம்மால முடிந்த உதவியைச் செய்வோம் என்றில்லை. பெரிசா பேச வந்துட்டே!'' என்றார் ஆத்திரமாக.



''பெத்த மகள் அப்பாவுக்கு ஒரு கஷ்டம் என்றால் உயிரைக் கொடுக்க வேண்டாமா?''

''அப்பா! நான் உயிரைக் கொடுக்கிறேன்பா. அவன் கேட்பது, நீங்கள் கொடுக்கச் சொல்வது, உயிரை விட மேலப்பா. உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றப்பட வேண்டிய ஒன்று!'' என்று அழுதாள்.

''இந்த வசனம் எல்லாம் பேசாதே.. நாளை ஒரு நாள்தான் இருக்கு. வீட்டை விட்டுப் போனால் நானும், அப்பாவும் தூக்கில் தொங்கி விடுவோம்!'' என்றான் மாதேஷ்.

''நீங்கள் மட்டும் எதுக்கு தூக்கில் தொங்கணும். நானும் வரேன்... சேர்ந்தே சாகலாம்!'' என்றாள்.

''சரி, நீயே அம்மாவைக் கொன்று விடு. இப்படி செத்து உடல் அழுகித்தானே போகப் போகிறது. அது யாருக்குப் பிரயோஜனம். இந்த உடலால் எங்களை வாழ வைக்கக் கூடாதா?'' என்றான்.

அவள் காது இரண்டையும் பொத்திக் கொண்டாள்.

''இதுவே உன் மனைவி என்றால் இப்படிச் சொல்வாயா?''

அதற்குள் கீதா, ''இது மாதிரி என்னைக் கூப்பிட்டிருந்தால், நான் அப்பவே ரெடி என்றிருப்பேன்!'' என்றாள் அலட்சியமாக.

''உன்னால் எத்தனை உயிர் அழியப் போகுது. அம்மாவுக்கு மாத்திரை வாங்கக் கூட பணமில்லை.''

''அம்மாவுக்குத் தெரிந்தால் இதை ஒத்துக் கொள்ள மாட்டார்கள்!'' என்றாள்.

''போய்ச் சொல்லேன். நீ என்னமோ பெரிய ஒழுங்கு மாதிரி பேசுறே.. நீ அவனுடன் சுற்றியவள்தானே... நீயே அவன் கையைப் பிடித்துவிட்டு, நான் பார்த்ததும் அவன்தான் என் கையைப் பிடித்து இழுத்தான் என்று சொல்லி அவனை அடித்து,

உதைத்து விரட்டினேன். இது எனக்குத் தெரியாது என்றா நினைத்தாய்? பணக்கார வீட்டுப் பிள்ளைகள் இப்படி இருப்பது சகஜம் என்று நினைத்தேன். அன்று நடந்ததுக்கு இன்று இப்படி பழி வாங்குகிறான்.

''இதற்கு யார் காரணம்? நீதானே.. நீ அன்று அப்படிச் சொல்லாமல், நானும் அடித்து அவமானப் படுத்தாமல் இருந்திருந்தால் இப்படித் திட்டம் போட்டு என்னைப் பழி வாங்கியிருப்பானா? நீயே சொல்லு..''

''நான் அந்த வயதில் தெரியாமல் செய்த தப்புப்பா..''

''நீ தெரிந்து செய்தியோ.. தெரியாமல் செய்தியோ.. இப்போ என்னை, என் குடும்பத்தைப் பழி வாங்கி விட்டது. இதற்கெல்லாம் காரணம் நீ..

''நான் எங்கேவாவது போய் விடுகிறேன். நாளை அவமானப்பட்டுச் சாவதை விட இன்றே.. இந்த ஊரை விட்டுச் சென்று விட்டால் நான் காதில் எதுவும் வாங்காதபடி இருக்கும்,'' என்று கிளம்பினார்.

''நானும் என் மாமனார் வீட்டுக்குப் போய் விடுகிறேன். நீயும், அம்மாவும் இந்த வீட்டிலேயே இருங்க... அவன் வந்து கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும்போது அம்மாவும், மகளும் எங்காவது போங்கள்!'' என்றான் மாதேஷ் இரக்கமில்லாமல்.

அவளுக்குப் பயம் வந்தது. இவர்கள் செய்து விட்டால், கை, கால் வராத, பேசாத அம்மாவோடு நடுத் தெருவில் தான் நிற்கணும். இவர்கள் இப்படி என்னை விட்டுப் போகும்போது, அவன் எப்படி எனக்கு இரக்கம் காட்டுவான்.

அம்மா.. என் நிலைமையைப் பார்த்தீங்களாம்மா.. நான் இப்ப என்ன செய்யட்டும். நான் தற்கொலை பண்ணிக்கலாம் என்றால் கூட உன்னை விட்டு எப்படிப் போவேன்... எனக்கு ஒன்றும் தெரியலையே?



இரவு மணி பத்து. சங்கரன் பெட்டியோடு கீழே இறங்கினார். அடுத்த அறையில் இருந்து மாதேசும் அவன் மனைவியும் வந்தனர்.

''அப்பா! போகாதீங்கப்பா.. இதற்கு ஒரு வழி நாம் தேடலாம்,'' என்று அவர் காலைப் பிடித்துக் கொண்டு கதறினாள்.

''என்ன வழி? என்னிடம் வேலை பார்த்த பயல் என்னை எத்தனை கேள்வி கேட்கிறான். நாளை வந்து அவன் வெளியே தள்ளிக் கதவைப் பூட்டும் போதும் நான் அதைப் பார்த்துக் கொண்டு இருக்கட்டுமா... நீயே மனம் இரங்காத போது அவன் எப்படி இரங்குவான்? அவன் அடிபட்ட புலி. என்னைப் பழிவாங்காமல் விட மாட்டான்.

''நா.. போறேன். நீ நிம்மதியா இரு!'' என்று கிளம்பினார்.

இவள் ஓடிப் போய்க் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''என் கையை விடு. இன்னும் சில நாளில் மருந்து, மாத்திரை வாங்கிக் கொடுக்க முடியாமல் உன் அம்மா உயிர் உன் கண் முன்னாடியே கொஞ்சங் கொஞ்சமாகப் போகும். உனக்குத் திருப்திதானே..?'' என்று முன்னே நடந்தார்.

நிருபா எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும், அழுது பார்த்தும், வேற வழியில்லாமல், ''நீங்கள் சொல்வதை நான் கேட்கிறேன்பா!'' என்றாள்.

மாதேஷ், ''நீ சொல்வதை நாங்கள் எப்படி நம்புவது? இது மாதிரி சொல்லி எங்களை இருக்க வைத்து விட்டு, நாளை மாட்டேன் என்றால் என்ன செய்வது?'' என்றான்.

''நான் வேறென்ன செய்யணும்?''

''இந்தா இப்போவே.. ஃபோன் போட்டு அவனிடம் நீ சொன்னதுக்கு நான் சம்மதிக்கிறேன்... எப்போ நீ வீட்டையும் கடையையும் எழுதித் தரப் போறே.. என்று எங்களுக்குச் சொல்லச் சொல்,'' என்றான்.

ஃபோனும் அவனே போட்டுக் கொடுத்தான்.

எதிர்முனை கம்பீரமாக 'ஹலோ' என்றது.

இவளுக்குப் பேச வாய் வரவில்லை. அன்று அத்தனை பேசிவிட்டு, என் அப்பா ஒரு நாளும் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார் என்று எத்தனை நம்பிக்கையுடன் பேசினேன். இன்று எனக்குச் சம்மதம் என்று எப்படிச் சொல்வேன்?

அதற்குள் அவன், ''ஹலோ.. ஹலோ..'' என்று பல முறை சொல்லிவிட்டான்.

''இவள் பேச மாட்டாப்பா, நான் சொல்லலை... இவ ஏதோ திட்டம் போட்டுத்தான் வேலை பாக்குறா... இவளே.. அவனிடம் மாட்டி வைக்கப் போறோளோ... என்னமோ.. இவ ஏற்கனவே.. அவன் கூடச் சுத்தினவள்தானே? ஏன்டி நீயும்.. அவனும் சுத்தும்போது அவன் உன்னைத் தொடாமலா இருந்திருப்பான். என்னமோ பெரிய பத்தினி போல இப்போ இப்படி நடிக்கிறே..'' என்று கடுஞ்சொல்லை வாரி வீசினான் அவள் மேல்.

9



இவன் பேசியது அந்தப் பக்கம் அவனுக்குக் கேட்டது. உதட்டை இறுகக் கடித்துக் கொண்டான்.

அவன் பேச்சைக் கேட்ட அதிர்ச்சியில், ஃபோனை ஆன் பண்ணியது கூடத் தெரியாமல் அப்படியே நின்றாள்.

''உன்னை என்ன தினம் ஒருத்தனோடவா படுக்கச் சொல்றோம்?'' என்றாள் கீதா.

''உன்னைக் கூப்பிட்ட அவன் என்னைக் கூப்பிட மாட்டேங்கிறானே. அப்படிக் கூப்பிட்டால் இந்த பிரச்சனை அன்றே முடிந்திருக்கும்!'' என்றாள் மீண்டும்.



''இப்போ பேசப் போறீயா, இல்லையாடி?'' என்றான் அதட்டலாக.

இவள் மெதுவாக, ''ஹலோ...'' என்றாள்.

''ம்.. சொல்லு....'' என்றான்.

''நீ.. நீங்க.. சொ.. ன்.. ன.. து..க்கு.. நா..ன்.. ச..ம்.. ம.. தி.. க்கிறேன்!'' என்று அழுதாள்.

''சரி, நாளை காலை, பத்து மணிக்கு இந்த இடத்தில் என்னைப் பாரு.'' என்று வேறு ஒரு அட்ரசை சொல்லிவிட்டு... ஃபோனைக் கட் பண்ணினான்.

எல்லோரும் போய்ப் படுத்து விட்டனர்.

நிருபா தாய்க்கு மாத்திரை மருந்து கொடுத்து விட்டு, பாலைக் குடிக்கக் கொடுத்து விட்டு இவளும் படுத்துக் கொண்டாள்.

நிருபா இரவு முழுவதும் கண் மூடவில்லை. கண்ணீர் வழிந்த வண்ணமே இருந்தது.

இரவே, நீ விடியாதே.. பூமித் தாயே! நீ ஒரு பூகம்பத்தில் என்னை இந்தப் பூமிக்குள் கொண்டு போய்விடு என்று அழுதாள்.

காலையில் எழுந்ததில் இருந்து படபடப்பாக இருந்தது. வீடே சுடுகாடு மாதிரி அமைதியாக இருந்தது.

காலை ஒன்பது மணிக்கே கிளம்பி ஒரு ஆட்டோவில் அந்த கெஸ்ட் ஹவுசுக்குப் போனாள். இங்கே வீட்டில், 'அவனிடம் அத்தனையும் எழுதி வாங்காமல் நீ அவனை.. விடாதே..' காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

இப்படி ஒரு பெத்த தகப்பனா, ஒரு அண்ணனா... இந்தக் குடும்பத்தில் நான் பிறக்கலாமா? கடவுளே.. இனி அவன் என்ன பேசப் போறானோ.. எனக்குத் தாங்கக் கூடிய சக்தியைத் தா.. என்று வேண்டிக் கொண்டு ஆட்டோவை விட்டு இறங்கினாள்.

இவள் ஆட்டோவை விட்டு இறங்கும்போது.. கேட்டைக் காவலாளி திறந்து விட்டான்.

உள்ளே நுழைந்ததும், ஒரு சிறு பையன், ''மேலே ஐயா இருக்காங்க. போங்க!'' என்றான்.

இவள் படியேறி மெல்ல மேலே போனாள். கதவின் முன் நின்று துடிக்கும் இதயத்தைக் கையால் அழுத்தினாள். அப்போது கதவைத் திறந்து கொண்டு திவாகர் நின்றான்.

திடுமென அவனைப் பார்த்த அதிர்ச்சியில் இதயம் வாய் வழி வந்து குதித்து விடும் போல் இருந்தது.

இவள் உள்ளே வர வழிவிட்டு நின்றான்.

அவள் உள்ளே சென்றாள். அது ஒரு நவீன வசதிகளுடன் கூடிய படுக்கையறை.

கால்கள் பின்னின. கீழே விழாமல் இருக்கப் பக்கத்தில் இருந்த ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டாள்.

''ஏய்.. அங்கே எதுக்கு நிக்கிறே... நீ இப்படி நின்னா என்னைப் பார்த்துப் பயப்படுறே.. இல்லே என் கூட படுக்கப் பயப்படுறே.. என்று நினைத்துக் கொள்வேன் என்று நினைத்தாயா? அப்படி நினைக்க மாட்டேன்.. நீ தான் பிஞ்சிலேயே பழுத்தவள் ஆயிற்றே... உனக்கு ஒண்ணும் தெரியாது.. வாடி இங்கே..'' என்றான் அதட்டலாக.

பேசாமல் அவன் பக்கத்தில் போய் அமர்ந்தாள்.

அந்தச் சிறு பையன் குடிக்கக் கொண்டு வந்து வைத்தான். அவன் போனதும், 'குடி!' என்றான் மிரட்டலாக.

அதை எடுத்து என்னவென்று கூடப் பார்க்காமல் குடித்தாள்.

குடித்து முடித்ததும் அவள் கையைப் பிடித்து இழுத்தான் வெடுக்கென்று.



''இப்படித்தானே அன்று இழுத்ததாகப் பொய் சொன்னே...'' என்று இழுத்தான்.

''ப்ளீஸ் திவா... என்னை விட்டு விடுங்கள். நான் அன்று செய்தது தப்புத்தான். என் அப்பா பார்த்து விட்டார் என்ற பயத்தில் நான் அப்படிச் சொல்லிவிட்டேன்..''

''திவா..' அப்படிச் சொல்லுவியாடி... இப்படிச் சொல்லித் தானே.. என் மனசைக் கலைச்சே... இனிமே இப்படி கூப்பிடுவே..'' என்று கன்னங் கன்னமாக அறைந்தான்.

''நான் கூப்பிட மாட்டேன். என்னை அடிக்காதீங்க!'' என்று அழுதாள்.

அவள் சாப்பிட்டு இரண்டு நாளாகி விட்டது. அவன் அடித்ததும் ரொம்ப சோர்ந்து போய்விட்டாள்.

''என்ன கேட்டே என்னைத் தொட உனக்கு என்னடா தகுதி இருக்கு என்று தானே... இப்போ என் தகுதி தெரிந்திருக்குமே..? உனக்கு இப்போ தகுதியிருக்கா என் படுக்கைக்கு வர..''

''அப்போ என்னை விட்டு விட வேண்டியதுதானே..?'' என்றாள் துடுக்காக.

''ஏன்டி உன்னை இப்படிக் கொண்டு வந்து நிறுத்த எத்தனை வருடம் காத்திருந்தேன்.. விட்டு விடவா..?''

''பொம்பளைப் பொறுக்கியா நான்? நான் உன் பின்னாடி வந்தேனா?.. இல்லை, நீ என் பின்னாடி வந்தியா..? பொம்பளைப் பொறுக்கினா என்னனு தெரியுமா உனக்கு?'' என்று அவளைக் கட்டிலில் போட்டு ஒவ்வொரு சிறகாகப் பிய்த்து விட்டான்.

அவளுக்குச் சத்தம் போடக் கூட முடியவில்லை. இந்த நரக வேதனை எப்போ முடியும் என்று நினைத்தாள்.

முடியவே... முடியாதா.. என்று இருந்த நிமிடங்கள் ஒரு வழியாக முடிந்தன.

அவளால் ஒரு விரலைக் கூட அசைக்க முடியவில்லை. அவளுக்கே பயம் வந்தது. தன் உடல் உணர்வுகளை இழந்து விட்டதோ.. என்று. அதுபோல மனமும் உணர்வுகளை இழந்து விட்டால்.. எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

மதியம் மூன்று மணியாகியது. அப்போதுதான் கண் விழித்தாள். மெல்ல எழுந்து சுடிதாரைப் போட்டுக் கொண்டு வெளியே வந்தாள்.

கீழே ஹாலில் திவாகர் உட்கார்ந்திருந்தான்.

இவள் வருவதைப் பார்த்துப் பக்கத்தில் இருந்த பைலைத் தூக்கி அவள் முன் போட்டான்.

## 10



அதைக் குனிந்து எடுத்துக் கொண்டு நிமிராமல் வெளியே போனாள்.

வெளியே அவள் அப்பாவும், அண்ணனும் நின்றிருந்தனர்.

அவள் வருவதைப் பார்த்து விட்டு வேகமாகப் பக்கத்தில் வந்தனர்.

''என்ன குடுத்துட்டானா... குடு இங்கே...'' என்று பிடுங்கி பைலைப் பிரித்துப் பார்த்தனர்.

''பார்த்தீங்களாப்பா.. அவன் புத்தியைக் காட்டி விட்டான்.. முழுவதையும் நமக்கு எழுதிக் கொடுக்கவில்லை. உரிமை மட்டுந்தான் தந்திருக்கான்,'' என்றான்.

''சரி, வா. உள்ளே போய்க் கேட்போம்,'' என்று இவளையும் கூட்டிக் கொண்டு சென்றனர்.

வந்தவர்களை நிமிர்ந்து பார்த்தான். தோள்களைக் குலுக்கி விட்டுப் பேசாமல் இருந்தான்.



சங்கரன், ''நீ சொன்னது என்ன? இப்ப நடந்துக்கிட்டது என்ன?'' என்றார்.

''என்ன சொன்னது..? என்ன நடந்தது..?'' என்று எதிர்க் கேள்வி கேட்டான்.

''நீ இவளை அனுப்பி வைத்தால் எல்லாவற்றையும் தந்து விடுகிறேன் என்று சொன்னாய் அல்லவா? இப்போ உரிமை மட்டும் எழுதிக் கொடுத்திருக்கே!'' என்றார்.

''ஆமாம். வீட்டில் இருந்து கொள்ளலாம். கடையில் வியாபாரம் நடத்தலாம். ஆனால் கடையும், வீடும் என் பெயரில்தான் இருக்கும்.. மொத்தமாக அத்தனையும் எழுதிக் கொடுக்க நான் என்ன முட்டாளா?''

''இது அநியாயம்!'' என்றார்.

''எது அநியாயம்..? கடையை நடத்த மட்டுந்தான் உங்களுக்குப் பூரண உரிமை உண்டு. சொந்தம் கொண்டாடயில்லை!'' என்றான் அழுத்தமாக.

''நீங்கள் போகலாம்... நாளை மாலை நீ மட்டும் வா.. நான் உன்னிடம் பேச வேண்டும்!'' என்றான்.

''நான் வர முடியாது..'' என்றாள்.

''இதெல்லாம் என்னிடம் நடக்காது பெண்ணே.. நான் எப்போ கூப்பிட்டாலும் நீ வந்தாக வேண்டும். நிலைமை இன்னும் மாறவில்லை. அப்படியேதான் இருக்கு.. அதை நினைவில் வை..''

''நீ ஒரு மணி நேரம் கூட என் கூட இருந்ததுக்கு அத்தனை சொத்தும் கேட்குதா..? நீ என்ன அவ்வளவு உசத்தி.. நான் என்ன சொல்கிறேனோ... நீ அதைத்தான் கேட்க வேண்டும்...'' என்றான் ஆவேசமாக.

''உங்களுக்கும் நினைவு இருக்கட்டும்!'' என்றான்.

மூவரும் வீட்டுக்கு வந்துவிட்டனர். சங்கரன் மகளைப் பிடித்துக் கொண்டார். ''உன்னிடம் என்ன சொல்லி அனுப்பினோம்.. இதெல்லாம் வாங்கிச் சரி பார்த்துதானே.. அவன் சொன்னதைக் கேட்கணும்.. என்று சொன்னோம்.. இப்ப இப்படி பண்ணி விட்டானே.. நீ இதை அவனிடம் சொல்லியிருக்க வேண்டாமா...? எல்லாவற்றையும் எங்கள் பெயருக்கு மாற்றி எழுதிக் கொடுத்தால்தான் நான் நீ சொன்னதுக்குச் சம்மதிப்பேன் என்று. அவன் கூப்பிட்டவுடன் சம்மதித்துவிட்டாயா?'' என்றார் நா கூசாமல்.

நிருபா உதட்டை இறுகக் கடித்தாள்.

''இங்கே பார், நீ எவ்வளவு சீக்கிரம் எழுதி வாங்க முடியுமோ.. அவ்வளவு சீக்கிரம் வாங்கு. இல்லையென்றால், நாங்கள் கையெழுத்துப் போட்டுக் குடுத்த வெற்றுப் பத்திரத்தையும், வீடு, கடைப் பத்திரத்தையும் அவனுக்குத் தெரியாமல் எடுத்து வந்து விடு,'' என்றார்.

''அவர் எங்கு வைத்திருக்கிறாரோ, நான் எப்படித் தெரியாமல் எடுக்க முடியும்?'' என்றாள்.

''நீ பொம்பளைதானே? அவனை மயக்க முடியாது? நைசாகப் பேசி, தடவித்தான் காரியத்தைச் சாதிக்கணும்'' என்றான் அண்ணன்.

அவளுக்கு உயிர் போய் விடாதா என்றிருந்தது.

மறுநாள் மாலை வரச் சொல்லியிருந்தான். இவளால் போக முடியவில்லை. அவள் அம்மாவுக்கு முடியாமல் போனது. மணி ஏழாகியது.

திவாகருக்கு ஃபோன் பண்ணினாள். ''என் அம்மாவுக்கு முடியவில்லை. அதான் வர முடியவில்லை,'' என்றாள்.



''இப்போ எப்படி இருக்கு?'' என்றான்.

பரவாயில்லை.. இவனுக்கும் கொஞ்சம் ஈரம் இருக்கு என்று, ''ம்.. பரவாயில்லை,'' என்றாள்.

''அப்படின்னா.. வா..'' என்றான்.

''இப்ப இந்த நேரத்தில் அவ்வளவு தூரம் நான் தனியாக வர முடியுமா? எனக்குப் பயமா இருக்கு..'' என்றாள்.

ஃபோனை கட் பண்ணி விட்டான்.

படுத்தவளுக்குத் தூங்க முடியவில்லை. உடம்பெல்லாம் ஒரே வலி. மனதில் பயம் எல்லாம் ஒன்று சேர்ந்து அவளை ஆட்டிப் படைத்தது.

அவன் அடித்த அடி கன்னமெல்லாம் வலித்தது. நாளை மீண்டும் என்று என்று நினைக்கும் போதே கண்ணீர் வடிந்தது. ஃபோனை வைத்து விட்டானே... நாளை மீண்டும் ஃபோன் பண்ணுவானா... எப்போ கூப்பிடுவானோ... போகவில்லை என்றால் மீண்டும் அடிப்பானா..? இப்படியே பலவாறு நினைத்துத் தூங்கிப் போனாள்.

அந்த வீட்டில் இருக்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை. அப்பாவும், மகனும் கடைக்குக் கிளம்பிச் சென்று விட்டனர்.

இங்கு மகள் மானத்தை விற்று, இப்படி மானத்தோடு வாழணும் என்ற நினைப்பவர்களிடையே... இருக்கவே வெறுப்பாக இருந்தது. அவர்கள் முகத்தை நிமிர்ந்து பார்க்கவே கூசினாள்.

ஆனால் அவர்கள் தலை நிமிர்ந்து சென்றனர். ஒரு அப்பா மாதிரியா பேசுகிறார். இவளின் மனம் என்ன பாடுபடும் என்று கூடவா நினைத்துப் பார்க்கத் தோணாது.

இரண்டு நாள் கழித்து நிருபாவுக்கு ஃபோன் வந்தது. ''இன்று மாலை வா,'' என்று. வேறு அட்ரஸ் சொன்னான்.

இவளுக்குத் தலை சுற்றியது. இப்படி ஒவ்வொரு இடமா கூப்பிடுகிறானே... என்னை இந்தத் தொழில் செய்பவள் போல் நடத்துகிறானே என்று திட்டினாள்.

ஒரு ஆட்டோ பிடித்து அங்குமிங்கும் சுற்றி ஒரு வழியாகக் கண்டுபிடித்தாள். அதிலே லேட்டானது.

அறைக்குள் கூண்டுப் புலி போல் நடை போட்டுக் கொண்டிருந்தான். இவளைப் பார்த்ததும் ஒரு அறை விட்டான். ஒரு அறையிலேயே.. கண்ணை இருட்டியது அவளுக்கு.

''என்னடி உன் மனதில் நீ நினைத்திருக்கே... நீ என்ன என் பொண்டாட்டியா... நீ வரும் வரை காத்திருந்து கொஞ்ச. இந்தத் தொழில் பண்றவளுக்கு இத்தனை திமிரா...? ஏன், யாரையும் பிடித்து விட்டாயா?... அவன் எழுதிக் கொடுத்தான்...'' என்று நெருப்பைக் கக்கினான்.

''அன்று என் அம்மாவுக்கு முடியவில்லை என்கிறே... நான் என்ன சொல்லியிருக்கேன்.. நான் எந்த நேரத்தில் கூப்பிட்டாலும் வரணும் என்றுதானே... ஏன் ஏழு மணிக்கு மேலே நீ வெளியே வரமாட்டியா.. தனியா வரப் பயமா இருக்கு என்கிறே... இப்போ எப்படி வந்தே?'' என்று பிடித்து ஆட்டினான்.

11



''இப்போ உன் அப்பனிடம் சொன்னியாடி.. என்னை இப்படிப் பண்ணினான் என்று!'' அவள் கன்னத்தைக் கடித்தான். இதழைச் சுவைத்தான்.

''நான் உன் கையைப் பிடிக்காத போதே.. என்னைப் பிடித்தான் என்று சொல்லிக் காலால் எட்டி உதைத்தாயே... நினைவு இருக்கா...!'' என்று அவள் முடியைப் பிடித்து பால்கனிக்கு இழுத்துப் போனான்.



அவன் வெறி கொண்ட வேங்கையாக நின்றான். அவன் கண்களைப் பார்க்கவே முடியவில்லை. இரை தேடிக் கிடைக்காத சிறுத்தையின் கண்கள் போல் நெருப்பைக் கக்கின.

''உன் அப்பன் அன்னிக்கு வந்து கேட்டான். ஒருநாள் என் மகள் கூடப் படுத்து விட்டாயே.. என் சொத்தை முழுவதும் கொடு என்று.. இப்படி ஒரு அப்பனா.. அன்று என்னமாய் என்னை அடித்தான்..''

ஓங்கி முதுகில் ஒன்று விட்டான். அவளுக்கு வலி தாங்க முடியவில்லை. பல்லை இறுகக் கடித்து வலியைப் பொறுத்துக் கொண்டாள்.

''எய்.. எழுந்திரிடி.. அந்த செல்பில் பாட்டிலும், டம்ளரும் இருக்கும். எடுத்து வா!'' என்று உத்தரவிட்டான்.

அவள் தயங்கினாள். மீண்டும் அடிக்கக் கை ஓங்கினான். அவள் எழுந்து போய் எடுத்து வந்து அவன் முன் வைத்தாள்.

''எடுத்துத் திறந்து டம்ளரில் ஊற்று!'' என்றான்.

எடுத்து ஒரு டம்ளரில் ஊற்றினாள்.

''இன்னொரு டம்ளரிலும் ஊற்று!'' என்றான்.

அதிலும் ஊற்றினாள்.

அவன் ஒரு டம்ளரை எடுத்துக் கொண்டு, மற்றொன்றை அவளிடம் நீட்டினான்.

அவள் திகைத்தாள்.

''பிடிடி... என்ன பார்வை. நீ இப்படி கண்ணை விரித்துப் பார்த்தால் நான் மயங்கி உன் காலடியில் விழுந்து விடுவேன் என்ற எண்ணமா... இல்லை, என்னை மயக்கி, தொட்டு, தடவி உன் வசப்படுத்தி விடலாம். அந்த நேரத்தில் எல்லாச் சொத்தையும் எழுதி வாங்கி விடலாம் என்று உன் அப்பன் சொல்லி அனுப்பினானா?'' என்றான்.

அவள் திகைப்பின் எல்லைக்கே போனாள்.

"இங்கே பார். உன்னைக் கெஞ்சிக்கிட்டு இருக்க எனக்கு நேரமில்லை. இது என் விருப்பம். நீ குடித்துத்தான் ஆகணும்... இல்லையென்றால் என் தண்டனை வேற மாதிரி இருக்கும்.. சரிதானா..?" என்றான்.

இவளுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது.

"வேண்டாங்க. என்னை விட்டுடுங்க.. நான் அறியா வயதில் தெரியாமல் செய்த தப்பு. அதற்குத்தான் தண்டனை கொடுத்து விட்டீங்க.. இன்னும் என்ன?" என்று அழுதாள்.

"சீ... என் முன் அழாதே.. உன் கண்ணீரை நான் நம்பவில்லை. அதில் கூட ஏதாவது ஒரு சூழ்ச்சி இருக்கும். என்னையா குடிகாரன், பொறுக்கி என்று சொன்னே... மரியாதையா இதைக் குடித்து விடு. இல்லையென்றால் உன்னைத் தொலைத்து விடுவேன்!" என்று மிரட்டினான்.

அவள் என்ன செய்வாள். அவளைப் போட்டுப் பாடாய்ப் படுத்தினான். அவளால் தாங்க முடியவில்லை. வாங்கிக் குடித்து விட்டாள். மானத்தையே விற்றாயிற்று.. இது என்ன.. என்று நினைத்தாள்.

இன்னொரு டம்ளர் ஊற்றிக் கொடுத்தான். அதையும் குடித்தாள். இரண்டு டம்ளர் குடித்ததுமே அவளுக்கு நெஞ்சை அடைத்தது. வியர்த்துக் கொட்டி, கால், கை எல்லாம் நடுங்கிக் கீழே விழுந்தாள். அவளைக் கட்டிலில் படுக்கப் போட்டான்.

அவள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு துடித்தாள். வியர்த்துக் கொட்டியது.

ஏ.சி.யை அதிகப்படுத்தினான்.

"என்ன செய்யுது... என்ன செய்யுது?" என்று கன்னத்தில் தட்டினான்.



திவாகர் பயந்து விட்டான். அவன் குடிக்கவில்லை. அவன் கேட்டதுக்கு அவள் பதில் சொல்லவில்லை.

அவன் டாக்டருக்கு ஃபோன் பண்ணினான். அவரும் உடனே வந்தார். அவர் வருவதற்குள் அவள் பட்ட பாடு.. துடித்த துடிப்பு.. திவாகரால் சகிக்க முடியவில்லை.

டாக்டர் வந்து விசயத்தைக் கேள்விப்பட்டதும், திட்டினார். "ஏன் இப்படி செய்தீங்க? இது மாதிரி நெஞ்சடைத்தால் அவள் உயிருக்கே ஆபத்து. நான் ஒரு ஊசி போடுறேன். வாந்தி எடுக்க.. வாந்தி எடுத்தால் நல்லது!" என்று ஊசி போட்டார்.

ஊசி போட்ட கொஞ்ச நேரத்திலேயே வாந்தி எடுத்தாள். அவளுக்குச் சுய நினைவு இல்லை. இரண்டு மூன்று தரம் வாந்தி எடுத்து விட்டாள்.

டாக்டர், "இனி நன்றாகத் தூங்குவாள். தொந்தரவு பண்ண வேண்டாம்!" என்று போய் விட்டார்.

வியர்வையைத் துடைத்து விட்டான். அவள் கன்னத்தில் அவன் விரல் தடங்கள். உதட்டில் காயம். கழுத்தில் மெல்லிய செயின். காதில் ஒரு கல் சின்னக் கம்மல்... கைகளில் ஒரு வளையல் மட்டும்.

அவள் போட்டிருந்த சுடிதார் கூட அத்தனை விலையில்லை. அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். சாப்பிட்டாளோ.. இல்லையோ.. இவளுக்கு ஏதாவது ஆகியிருந்தால் என்னாகியிருக்கும்?

கண்களை இறுக மூடிக் கொண்டான்.

"அம்மா...!" என்று முனகுவது கேட்டது.

"அம்மா! என்..ன.. மோ.. செய்யுது.. நான் வர்றேம்மா... என்னால் எழுந்திருக்க முடியலேம்மா... வலிக்குதுமா..." என்று

திக்கித் திணறினாள். உதடு சுழித்து அழுதாள். கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

அவள் திரும்பப் படுக்கத் தவித்தாள்.

இவன் இவளைப் பிடித்துத் திருப்பிப் படுக்க வைத்தான். இவன் பிடிக்கவும் வலியில் 'அம்மா..' என்று கத்திவிட்டாள்.

''வேண்டாங்க.. வேண்டாங்க.. எனக்கு வலிக்குது விட்டுடுங்க..'' என்று தேம்பினாள்.

திவாகர் மனதிலும் அமைதியில்லை. காலையில் எழுந்து பார்த்தான். அவள் தூங்கிக் கொண்டுதான் இருந்தாள். எழுப்பிப் பார்த்தான். அவள் அசையவேயில்லை.

நான் ஆபீஸ் போகணுமே.. இப்போ என்ன செய்வது என்று அவளை உள்ளே வைத்துப் பூட்டி விட்டுப் போய்விட்டான். மதியம் வந்து பார்க்கலாம் என்று போனவன் வேலையில் இவளைச் சுத்தமாக மறந்து விட்டான். ஒரு முக்கியமான மீட்டிங் வேறு இருந்தது. அது முடியவே மணி பத்தாகியது. நேரமாகி விட்டதால் நேராக அவன் வீட்டுக்குப் போய்விட்டான்.

அவன் அம்மா, ''என் இவ்வளவு நேரம்?'' என்றார்.

''ஆபீசில் வேலை அதிகம்மா... அதான் வர முடியவில்லை..'' என்றான்.

''சாப்பிடுப்பா!'' என்றார்.

''நான் சாப்பிட்டுட்டேம்மா.. நீங்க சாப்பிட்டீங்களா..? என்னை எதிர்பார்க்க வேண்டாம். நீங்கள் நேரத்துக்குச் சாப்பிட்டு விடுங்கள்,'' என்றான்.

''அப்பா தூங்கிவிட்டாரா..?'' என்று விசாரித்தான்.

''தூங்கி விட்டார். இன்னேரம் வரை உட்கார்ந்துதான் இருந்தார். நீ நேற்று இரவும் வரவில்லை. இன்றும் இன்னும்



காணவில்லை என்று புலம்பிக் கொண்டிருந்தார்...'' என்று சொன்னவுடன்தான் திவாகருக்கு நினைப்பு வந்தது.

நேற்று இரவு... அவள் இன்னமும் அங்கேயே.. இப்போ மணி என்ன, பன்னிரண்டாகப் போகுது.. காலையில் போகலாம்... அவள் பயப்படுவாளே.. என்று வெளியே வந்து காரை எடுத்தான்.

அங்கு போகவே ஒரு மணி நேரம் ஆனது. வேகமாகப் போய்க் கதவைத் திறந்தான்.

கதவு திறக்கும் சப்தம் கேட்கவும் தலையை டபக்கென்று தூக்கிப் பார்த்தாள்.

## 12



இவன் உள்ளே வந்து லைட்டைப் போட்டான்.

அவள் எழுந்து உட்கார்ந்தாள். ரொம்ப சோர்ந்து போய் இருந்தாள். இவள் இன்று முழுவதும் சாப்பிடவில்லை. இப்போதான் நினைவு வந்தது. இதை முன்னாடியே நினைக்கவில்லை. இந்த வீட்டில் எதுவுமில்லை. தண்ணீர் கூட உப்புத் தண்ணிதான். இப்போது என்ன செய்வது? மணி இரண்டாகப் போகுது. அவள் குனிந்த தலை நிமிரவில்லை.

பக்கத்தில் போய் அவளை அணைத்தான். அவள் உடம்பில் நடுக்கம் தெரிந்தது.

''போய் முகத்தைக் கழுவிக் கொண்டுவா,'' என்றான்.

அவளால் நடக்க முடியவில்லை. தள்ளாடியபடியே எழுந்து போய் முகத்தைக் கழுவி வந்தாள். அந்த தண்ணீரையே இரண்டு வாய் குடித்து விட்டு வந்தாள்.

வந்தவள் அவன் பக்கத்தில் படுத்தாள்.

அவன் அவளை அப்போதும் விடவில்லை. என்ன, அன்று இருந்த வெறித்தனம் இன்று இல்லை.

திவாகர் தூங்கி விட்டான்.

நிருபா விடிய.. விடிய.. அழுதாள். இடையில் ஒருமுறை விழித்துப் பார்த்தான். அவள் அழுது கொண்டிருப்பது தெரிந்தது.

காலையில் எழுந்து, 'வீட்டுக்குப் போ!' என்றான்.

அவள் எழுந்து வாசலுக்கு வந்தாள். எந்தப் பக்கம் போவது என்று தெரியவில்லை. கையில் காசும் இல்லை. ஆட்டோவில் போகவும்...

அவள் கடையில் வேலை பார்த்த ஒருவர் வண்டியில் போனார். ''வாம்மா.. உன்னை வீட்டில் விடுகிறேன்,'' என்று கூப்பிட்டார்.

''வேண்டாம். நான் போய்க் கொள்கிறேன்.'' என்றாள்.

''இந்தக் காலை நேரத்தில் இங்கே எங்கேம்மா...?'' என்றார்.

இதற்கு என்ன பதில் சொல்வாள். ''சும்மா தெரிந்தவர் வீடு இருக்கு. அங்கு வந்தேன்,'' என்றாள்.

''சரி.. பரவாயில்லை. வாம்மா...'' என்று வண்டியில் கூட்டிக் கொண்டு வீட்டில் விட்டுப் போனார்.

இருபது நாள் வரை திவாகரிடம் இருந்து எந்த ஃபோனும் வரவில்லை.

சங்கரன் மகளிடம், ''அவன் அந்தப் பத்திரங்களை எங்கு வைத்திருக்கான் என்று தேடிப் பார்த்தியா?'' என்றார்.

அவள் என்ன சொல்ல முடியும்? அவன்தான் ஒவ்வொரு தடவையும் ஒரு இடத்துக்கு வரச் சொல்றான். அந்த இடத்தைப் பார்த்தால் புது இடமாக இருக்கும். இவன் தங்கியிருக்கும் இடம்



வேறுபோல் இருக்கிறது. அந்த இடத்தில் பத்திரத்தை வைத்தா இருக்கப் போகிறான்.

இவள் உள்ளே போய் வெளியே வருவதே நரக வேதனையாக இருக்கு. இதில் நான் பத்திரத்தைத் தேடுவது தெரிந்தால் என்னைக் கொன்னே போட்டுடுவான்.

அவர் கேட்டதுக்குப் பதில் பேசாமல் இருந்தாள்.

''அம்மாவை ஹாஸ்பிட்டல் கூட்டிப் போகணும். பணம் கொடுங்கப்பா..'' என்றாள்.

''பணமெல்லாம் இல்லை. இனி அவள் பிழைத்து என்ன ஆகப் போகுது... வீண் செலவுதான்.. வைத்தியம் பார்த்தாலும் சரியாகப் போகுதா.. இந்தநேரத்தில் இது வேற தொந்தரவு!'' என்று திட்டினார்.

இத்தனை வருடம் வாழ்ந்த மனைவி, இந்தக் குடும்பத்தைக் கட்டிக் காத்தவள். இன்று முடியவில்லை என்றவுடன் தொல்லையாகி விட்டாள். இப்படியும் ஒரு கணவன்.

அந்த ஞாயிறு திவாகரிடம் இருந்து ஃபோன் வந்தது. ''ஒரு ஹோட்டலுக்கு வா,'' என்று.

இவளுக்குத் தயக்கமாக இருந்தது. ஹோட்டலுக்கு எதுக்கு? எத்தனை பேர் வர.. போற இடம்.. ''நான் ஹோட்டலுக்கு வர மாட்டேன்,'' என்றாள்.

''ஏன்..?'' என்றான்.

''ஹோட்டலுக்கு நா..ன் வருவதை நாலு பேர் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?''

''நீ என்ன பெரிய பத்தினியா..? நீ பணத்துக்காகத்தானே.. உன் அப்பனே என்னிடம் அனுப்பி வைத்திருக்கான்.. நீயும் வர்றே.. செய்யுறது அந்த தொழில்தானே... இதில் என்ன உனக்கு கவுரவம் வேண்டிக் கிடக்கு.. வான்னு கூப்பிட்டால்

வரவேண்டியதுதானே உன் வேலை. தனியிடம் என்றால் நீ செய்வது சரியா? என்னமோ பெரிய இவளாட்டம் பேசிட்டுப் போனே... அன்னைக்கு, என் உயிரை விட்டாலும் விடுவேனே தவிர உன்னிடம் நான் வரமாட்டேன் என்று. என் அப்பா அப்படிப்பட்டவர் இல்லை.. நீ பொய் சொல்றே.. என்று சவால் விட்டுட்டுப் போனே.. இப்ப என்ன ஆச்சு?

''உன் அப்பன் வாயாலேயே என் கூடப் படு என்று சொன்னதும் ரொம்ப குளிர்ந்ததா மனது. சொல்ல வைத்தேனா.. நான் கேட்டதுக்குக் கை ஓங்கினே.. பொய் சொல்வது உனக்குத்தான் புத்தி. எனக்கில்லை. சரி. நீயே சொல்லேன். உனக்கு எந்த இடம் பிடித்திருக்கிறது என்று.. அங்கு போகலாம்,'' என்றான் கேலியாக.

இவளுக்கு ஏன்டா சொன்னோம் என்று இருந்தது. ஒரு வார்த்தை கேட்கப் போய் இத்தனை வாங்கிக் கட்ட வேண்டியதாப் போச்சு. தூங்கிக் கிடந்தவனை உசுப்பி விட்ட மாதிரி ஆச்சு. இந்த வெறி அடங்க என்ன ஆட்டம் போடுவானோ.. என்று பயந்து கொண்டே போனாள்.

அங்கு போனதும் அவளுக்கு ஃபோன் பண்ணி, 'வேற இடத்துக்கு வா..' என்று சொன்னான்.

''பாவி.. படுபாவி.. ஏன்டா என்னை இப்படிச் சித்திரவதை செய்யுறே... நீ நல்லா இருப்பியா.. தெய்வம் உன்னைச் சும்மா விடுமா..?'' என்று இருக்கும் இடம் தெரியாமல் அழுதுவிட்டாள்.

பிறகு சுற்றுப்புறம் உணர்ந்து கண்ணைத் துடைத்துக் கொண்டு அங்கு சென்றாள். இவன் ஏன் இப்படிப் பண்ணுகிறான்.. இந்த மாதிரி வீடுகளே.. இல்லாத இடமா இப்படி இருக்குதே.. என்று நடுங்கினாள்.

அது ஒரு சின்ன வீடுதான்.. ஒரு ஹால், இரண்டு அறைகள். ஒரு கிச்சன். ஆனால் எல்லா வசதிகளும் இருந்தன. வீடு பார்க்க அத்தனை அழகாக இருந்தது. அதன் வண்ணமும், தரையும்,



சோபா செட்டும், திரைச் சீலையும் கண்ணை உறுத்தாத வண்ணம் இருந்தன.

''என்ன, வீடு நல்லா இருக்கா..?'' என்றான் ரகசியச் சிரிப்புடன்.

இவள் பேசாமல் இருந்தாள்.

அவள் கையைப் பிடித்தான். ''இந்தக் கையைப் பிடிக்கத்தானே.. எனக்குத் தகுதியில்லை என்றே.. படிக்காத முட்டாள் நான்.. நாட்டுப்புறத்தான். நீ படித்த அழகான பெண்...'' என்று அவள் உதட்டில் கோலம் போட்டான்.

''இந்த உதடுதானே... அன்று அப்படிப் பேசின.. என்ன கேட்டே உன் மூஞ்சிக்கு பொண்ணு கேட்குதா.. என்றா..? ஏன், எனக்கு என்ன குறைச்சல். முதலில் இப்போ நீ எனக்குத் தகுதியானவளா.. என்று நினைத்துப் பார்,'' என்று அவள் உதட்டை இரு விரலால் பிடித்து நசுக்கினான்.

''நான் பத்துப் பேரோடு அறையைப் பகிர்ந்து கொள்கிறவன். உன் அறையில் அதுவும் ஏ.சி. அறையில் படுக்க ஆசை வந்துவிட்டதா.. இப்ப நானா.. உன் அறைக்கு வந்தேன். நான் பத்துப் பேரோடு படுத்தவன் தான். ஆனால் இப்போ தினம் ஒரு வீடு.. நீ இத்தனை நாள் வந்து படுத்தியே.. எல்லாம் என் சொந்த வீடுதான்.. இப்போ புரிந்திருக்குமே என்னோட நிலைமை..''

## 13



அவள் கையைப் பிடித்து அழுத்தினான். மணிக்கட்டு வலி தெறித்தது. வாய்விட்டு அவன் முன் அழக் கூடாது என்று உதட்டை இறுகக் கடித்துக் கொண்டாள்.

இருந்தாலும் அவளை அறியாமல் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவன் கைகளில் விழுந்தது.

''என் முன்னேற்றத்துக்குக் காரணம் நீதான்டி. நீ என்னை அன்று அடித்து அவமானப்படுத்தவில்லை என்றால் நான் இத்தனை உயரத்துக்கு வந்திருக்க மாட்டேன். உன்னை ஒரு விதத்தில் பாராட்டணும். இல்லையென்றால் நீ சொன்ன மாதிரி உன் கடையைப் பெருக்கித் தள்ளி ஆயிரம் ரூபாய்க்கு மாதம் பூராவும் வேலை பார்க்கணும்!'' என்று அவள் விரலைப் பிடித்து நகக் கண்ணில் கிள்ளினான்.

விரல் விண்.. விண்.. என்று தெறித்தது.

அப்போது அவன் ஃபோன் அடித்தது. எடுத்துப் பார்த்தான். ''வா.. வா.. வர்ஷா. எப்போ வந்தே. நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் உன் அறையில் இருப்பேன்!'' என்று செல்லை அணைத்தான்.

ஒரு மணி நேரம் அவளை மூச்சுத் திணற அடித்தான்.

அவள் கிளம்பும் போது இரண்டு சுடிதார் செட்டைத் தூக்கி அவள் முன் போட்டான்.

''என் முன்னேற்றத்துக்கு.. நீ.. நீ .. மட்டுமே காரணம் என்றேனே.. அந்தப் பாராட்டைத் தெரிவிக்க.. இந்த சுடிதார். எடுத்துக்கோ,'' என்றான் இளப்பமாக.

''எனக்கு வேண்டாம்!'' என்று கீழே வந்து விட்டாள்.

அம்மா என்ன செய்யுறாங்களோ.. பால் கூடக் கொடுத்திருக்க மாட்டாங்க என்று நினைத்து வேகமாக நடந்தாள்.

ஒரே இருட்டு. மணி பத்தரை ஆகியது. இந்தப் பக்கம் வண்டி எதுவும் வரும் போலவும் தெரியவில்லை. கொஞ்ச தூரம் சென்றதும் மெயின் ரோடு வரும். மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு நடந்தாள்.

சிறிது நேரத்தில் அவள் பக்கத்தில் ஒரு கார் வந்து நின்றது.



''ஏன் நடந்து போறே..?'' என்றான்.

அவளுக்கு ஆத்திரம் வந்தது. ''நடக்காமல் என்ன பறந்தா போக முடியும். எனக்கு இறக்கை இல்லையே!'' என்றாள் வெடுக்கென்று.

அவன் கலகலவெனச் சிரித்தான்.

அவள் நடக்க முற்பட்டாள். மீண்டும், ''ஏன் நடந்து போறே?'' என்றான் அழுத்தமாக.

உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தாள். அவன் கதவைத் திறந்து கொண்டு வந்து அவள் கையைப் பிடித்தான். ஏற்கெனவே வலித்தது.

''நான் கேட்டால் பதில் சொல்லியாகணும். இப்படி நீ நின்றால் என்னை அவமானப்படுத்துவது ஆகும்.''

அவனிடம் தன் நிலையைச் சொல்லக் கூடாது என்று நினைத்துக் கொண்டுதான் பேசாமல் இருந்தாள். இவன் விட மாட்டேன் என்கிறானே.. என்று மெல்ல, ''என்னிடம் ஆட்டோவுக்குப் பணம் இல்லை!'' என்றாள் குரல் கம்ம.

அவன் ஒரு நிமிடம் அசையாமல் நின்றான்.

''சரி வா. நான் உன்னை மெயின் ரோட்டில் ஆட்டோவில் ஏற்றி விட்டுப் போகிறேன்,'' என்றான்.

''இல்லை. நான் போய்க் கொள்வேன்,'' என்றாள்.

''வழி தெரியுமா? உன் வீட்டிற்கு இங்கிருந்து போக..''

''தெரியாது,'' என்றாள் எங்கோ பார்த்துக் கொண்டு.

''தினம் ஒரு காரில் போனவள் என் காரில் வரப் பிடிக்க வில்லையா..? இருந்தாலும் எனக்கும் தயக்கமாகத்தான் இருக்கு. இப்படி உன் கூட ரோட்டில் நின்று பேசி, என் காரில் கூட்டிப்

போக.. என்னை நாலு பேர் பார்த்தால் தப்பா பேசுவாங்களே...'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

பேசாமல் காரின் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்தாள். அவளை அவள் வீட்டுத் தெரு முனையில் இறக்கி விட்டு வந்தான்.

''நாளை ஃபோன் பண்ணுகிறேன். வா,'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

அன்றும் வேறு ஒரு அபார்ட்மெண்டுக்கு வரச் சொன்னான்.

''ஏன் இப்படி ஒவ்வொரு இடமா வரச் சொல்றேன் என்று தெரியுமா..?''

அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''ரொம்ப ஆடாதீங்க.. தலை குப்புற விழுந்தா எழுவது கஷ்டம்..'' என்றாள்.

''எப்படி.. உங்களை மாதிரியா..? நான் என் பொண்டாட்டி பிள்ளைகளை இப்படி நடுத் தெருவில் விட மாட்டேன்.. அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு எல்லாவற்றையும் செய்து விடுவேன்.. எனக்குப் பிறகு அவர்கள் கஷ்டப்படக் கூடாது பார்!'' என்றான் இகழ்ச்சியாக.

''என்ன சொன்னே.. ஆயிரம் ரூபாய் நோட்டை முழுசா பார்த்திருக்கியா...? நான் பழங்கஞ்சியைத் தவிர பார்த்ததில்லை. இப்பே நீ எப்படி சாப்பிடுறே..?'' என்று எள்ளி நகையாடினான்.

''புரோக்கர் தொழிலை எத்தனை கேவலமாகப் பேசினே... ஆடு, மாடு மட்டுந்தானா, இல்லை பொண்ணுகளையுமா..? என்று. இன்று உன் அப்பா எப்படி உன்னை விற்றார். இப்போ தெரியுமே யார் புரோக்கர் தொழில் பண்ணுவது என்று. இந்த புரோக்கர் தொழிலில் தான் இத்தனை சம்பாதித்தது. இது



உனக்குக் கேவலமா..? நேர்மையான தொழில் எதுவும் கேவலம் இல்லை.'' அவளைக் கட்டி இறுக அணைத்தான். அவள் மூச்சுத் திணறினாள்.

''என்ன சொன்னே.. நான் தொட்டது அருவருப்பா இருக்கா! குளிக்கணும் போல் இருக்கா.. கை தொட்டதுக்கே அப்படினா... இப்போ என்ன பண்ணுவே..'' என்று அவள் முகமெங்கும் அழுந்த முத்தமிட்டான்.

அவள் கிளம்பும்போது, ஆயிரம் ரூபாய்க் கட்டை எடுத்து அவள் முன் போட்டான்.

''எடுத்துக்க. உனக்குத்தான்!'' என்றான்.

அவனை விழி விரித்துப் பார்த்தாள். அந்தக் கண்களில் கண்ணீர் வழிந்தது.

இந்தப் பணத்தை எடுத்துக்கலாமா.. என்று ஒரு கணம் யோசனை ஓடியது.

அம்மாவை ஹாஸ்பிடலில் கொண்டு பார்ப்போம்... மருந்து மாத்திரை இல்லாமல் எத்தனை நாள் வைத்திருப்பது என்று நினைத்து அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டாள்.

அவள் அந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளவும் அவனை ஆச்சரியமாகப் பார்த்தான். பின் எதுவும் பேசாமல் போய் விட்டான்.

அன்றே அமுதாவை ஹாஸ்பிட்டலில் சேர்த்தாள். அவர்கள், ''இங்கேயே தங்க வேண்டும்,'' என்றனர். ''சரி,'' என்று சொல்லி இவளும் அங்கேயே தங்கிக் கொண்டாள்.

வீட்டிற்குப் போய் இவளுக்கும் அவள் அம்மாவிற்கும் தேவையான துணிகளை எடுத்து வந்தாள்.

## 14



இரண்டு நாள் கழித்துத் திவாகரிடம் இருந்து ஃபோன் வந்தது. ''இரவு வர வேண்டும்!'' என்று.

அவள், ''இரவு என்றால் வர முடியாது. இ..ப்..போ.. என்றால் வருகிறேன்,'' என்றாள் மெல்லிய குரலில்.

மறுபுறம் சிறிது நேரம் மௌனமாக இருந்தது.

''சரி'' என்று வரும் இடத்தைச் சொல்லிவிட்டு வைத்தான்.

இவள் ஒரு நர்சிடம், ''நான் இரண்டு மணி நேரத்தில் வந்து விடுகிறேன்.. கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள்,'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

அவள் வந்ததும், ''ஏன் இரவு வர மாட்டேன் என்று சொன்னாய்..? எனக்கு இப்போ வேலையில்லையா..?'' என்றான் முறுவலோடு.

''வேலை இருக்குல்லே.. வேலையைப் பார்க்க வேண்டியது தானே... பிறகு எதுக்கு என்னை வரச் சொல்றீங்க..?'' என்றாள் துடுக்காக.

இதைச் சொன்னதுக்கு என்ன கிடைக்கப் போகுதோ.. என்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

அவளை உறுத்துப் பார்த்துவிட்டு, ''ஏன்..?'' என்றான். அந்தக் குரலுக்குப் பயந்து, ''என் அம்மாவை ஹாஸ்பிட்டலில் சேர்த்திருக்கிறேன். இரவு அவங்க கூட நான் இருக்கணும். இப்போ ஒரு நர்சிடம் சொல்லிவிட்டு வந்தேன்,'' என்றாள்.

''ஏன் உன் அப்பா, அண்ணன் எல்லாம் எங்கே.. நீ ஏன் இரவு ஹாஸ்பிட்டலில் தூங்கணும்?'' என்றான்.

''அவர்கள் பார்க்க மாட்டார்கள்,'' என்றாள் தலையைக் குனிந்து கொண்டே....



''அப்போ பணத்துக்கு என்ன செய்யுறே?''

''நீ.. நீங்க.. அன்று கொடுத்த பணத்தில்தான் பார்க்கிறேன்..''

''அதான் அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டாயா?''

தலை குனிந்தாள்.

''நீ வீட்டிற்குப் போவதில்லையா..?''

''இல்லை.''

''உன் அம்மாவிற்குச் சரியாகி விடுமா..?''

சன்னல் புறம் போய் நின்றாள். முதுகு குலுங்குவது தெரிந்தது.

போய் முகத்தைக் கழுவி விட்டு வந்தாள்.

பின், ''எனக்கு நேரமாகுது.. நான் சீக்கிரம் போகணும்...'' என்றாள்.

''சரி, நீ போ..'' என்றான்.

திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள். அவள் கண்கள் கெஞ்சின.

இரண்டு கட்டுப் பணத்தை எடுத்து அவள் முன் போட்டான். ''எடுத்துக் கொள்!'' என்று.

எதுக்கு இன்று சும்மா இவ்வளவு பணம் கொடுக்கிறான். இவன் இது மாதிரி செய்தால் ஏதாவது விசயம் இருக்குமே.. என்று நினைத்துப் பணத்தைத் தொடாமல் நின்றாள்.

''ஏன் சும்மா பணத்தை வாங்க கஷ்டமா இருக்கா... சரி, அப்ப வா..'' என்று பிடித்து இழுத்தான்.

அவள் மலங்க அவன் மேல் விழுந்தாள்.

சிறிது நேரத்திலேயே.. அவள் செல் அடித்தது. அவள் மேல் இருந்து கொண்டே... செல்லை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவள் பேசும்போது அவள் முகம் கலவரமானது.

''என்ன?'' என்றான்.

''நர்ஸ் ஃபோன் பண்றா.. 'உடனே வா...' என்றாள்.''

''என்னவாம்..?''

''அதான் தெரியலே... என் அம்மாவுக்கு ரொம்ப..'' அவனைத் தள்ளி விட்டு வேகமாக எழுந்தாள்.

அவள் போகும்போது, ''பணத்தை எடுத்துப் போ..'' என்றான்.

சிறிது தயங்கிப் பின் எடுத்துச் சென்றாள்.

அவள் பஸ்சில் போகும்போது செல்லை யாரோ எடுத்து விட்டார்கள். செல் காணவில்லை என்று யாரிடம் கேட்பது. நேரம் ஆகிவிட்டதால் வேகமாகச் சென்று விட்டாள்.

ஒரு இருபது நாளாக அவளைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. திவாகருக்குக் கோபம் வந்தது.

இவள் ஹாஸ்பிட்டலில் தானே இருக்கிறேன் என்றாள்.. என்று அன்று ஹாஸ்பிட்டலுக்குப் போனான்.

கீழே விசாரித்துக் கொண்டு மேலே அறைக்குப் போனான். மணி ஐந்து இருக்கும். அப்போ தான் அவள் மதியச் சாப்பாடு சாப்பிடலாம் என்று தயிர் சாதப் பொட்டலத்தைப் பிரித்தாள்.

திவாகர் கதவைத் தட்டினான். இவள் நர்ஸ்தான் என்று எண்ணி, ''வாங்க,'' என்றாள்.

இவனைப் பார்த்ததும் அதிர்ச்சியில் எழுந்தே விட்டாள். மடியில் இருந்த தயிர்ச் சாதம் கீழே கொட்டியது. புளிப்பு வாடை தாங்க முடியவில்லை.

''வா.. ங்..க..'' என்றாள். வார்த்தை வெளிவரவில்லை.



அவளைப் பார்த்தான். தலை கலைந்து, தலையில் எண்ணெய் இல்லாமல், சாயம் போன சுடிதார் அணிந்து, முகம் களையிழந்து நின்றாள்.

ஒரு சேரை இழுத்துப் போட்டாள். ''உட்காருங்க,'' என்றாள்.

அவள் அம்மாவைப் பார்த்தான். அவர் வாய் குழறி, 'யார்?' என்றார்.

இவளுக்கு யார் என்று சொல்வது என்று புரியாமல் நின்றாள்.

அவன், ''நான் உங்கள் கடையில் வேலை பார்த்த பையன். இங்கு ஒருவரைப் பார்க்க வந்தேன். நீங்கள் இங்கு இருப்பது தெரிந்தது. அதான் பார்த்துட்டு போகலாம் என்று வந்தேன்,'' என்றான் தயங்காமல்.

அவர் கண்களில் இருந்து கண்ணீர் வந்தது. தன் பெண்ணைக் கை நீட்டி என்னவோ சொன்னார். இவனுக்குப் புரியவில்லை.

''சரிம்மா. நான் கிளம்புகிறேன்...'' என்று அவளுக்கு வெளியே வா என்று ஜாடை காட்டிச் சென்றான்.

இவளும் அவன் பின்னாடியே போனாள்.

''என்ன உனக்குத் திமிர்.. நான் எத்தனை தடவை ஃபோன் பண்றது. எப்போ பார்த்தாலும் சுவிட்ச் ஆஃப் என்று வருகிறது!'' என்றான் கோபமாக.

''என் செல் அன்று நான் வரும்போது காணாமல் போய் விட்டது,'' என்று விபரத்தைச் சொன்னாள்.

''அப்போ நீயாவது எனக்கு ஃபோன் பண்ணியிருக்கலாமே?''

## 15



"எனக்கு நேரமில்லை. அதோட உங்கள் நம்பர் எனக்கு மறந்து போச்சு!" என்றாள்.

"இன்னமும் பொய் பேசுவே போலிருக்கு.. இதுதான் சமயம் என்று நீ இருந்திருப்பாய்... நான் அப்படி இருக்க முடியுமா? கொடுத்த பணத்துக்கு வசூல் பண்ண வேண்டாமா? என்ன செய்வியோ தெரியாது... இன்று இரவு முழுவதும் நீ என்னோடு இருக்க வேண்டும்!" என்று நிபந்தனை விதித்தான்.

தெரியாதவன் கிட்டே பேசலாம். எல்லாம் தெரிஞ்சவன் கிட்டே என்ன பேச முடியும். இவனின் கோபத்தை இப்படித் தீர்த்துக் கொள்கிறான். நான் இங்கு பட்ட அவஸ்தையில் இவனை மறந்து கூட விட்டேனே. இதெல்லாம் இவனிடம் சொல்ல முடியுமா..?

அந்த நர்சிடம் நூறு ரூபாய்ப் பணத்தைக் கொடுத்துவிட்டு, இன்று இரவு மட்டும் பார்த்துக் கொள் என்று சொல்லிவிட்டு அவன் சொன்ன இடத்துக்குச் சென்றாள்.

திவாகர் வந்திருக்கவில்லை. இவள் மேல் போய் அறையில் இருந்தாள். மனது கலங்கிற்று. எல்லாம் இந்த அப்பாவால் வந்த வினைதான். வருமானத்திற்கு ஏற்ற செலவு பண்ணியிருக்கணும். இந்த மாதிரி கடன் வாங்கி இப்படி என்னையும் படுகுழியில் தள்ளிவிட்டார். இப்போ கொஞ்சங் கூட மனம் கூசாமல் நடமாடுகிறார். இப்போ எங்கே போனது மானம், மரியாதை, அந்தஸ்து, கவுரவம், பெத்த பெண்ணை இப்படி அனுப்பி வாழ்வதற்குப் பதில் செத்து இருக்கலாம்.

மணி பத்தாகியது. அவன் இன்னும் வரவில்லை. இவளுக்குப் பதட்டமாக இருந்தது. தனியாக இருக்கப் பயமாக இருந்தது.

அவன் இவளை விட இவள் அப்பாவை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறான். அவர் அன்று இவளிடம் சொன்னதை அப்படியே இவன் சொல்கிறான்.



உன் அப்பா சொல்லியிருப்பாரே.. அவனிடம் நம் பத்திரங்கள் எல்லாம் இருக்கு. அவனுக்குத் தெரியாமல் எடுத்து வா.. என்று. நீ எடுக்கும் அளவிற்கு அதை வைக்க நான் என்ன முட்டாளா..? இல்லை, ஏமாளியா?

என்னமாய் அடுத்தவர்களைக் கணிக்கிறான். இந்தக் கணிப்புத்தான் அவனின் முன்னேற்றத்திற்குக் காரணமோ?

திடீரென பவர் கட்டானது.

நிருபா நடுங்கினாள். இருட்டில் மெல்ல எழுந்து கதவை நல்லா தாழ் போட்டிருக்கோமா என்று தடவிப் பார்த்தாள். கதவை இழுத்துப் பார்த்தாள். பின் சென்று அமர்ந்து கொண்டாள்.

தனி வீடு... எங்கும் ஒரே இருட்டு. வண்டுகளின் ரீங்காரமும், அப்பப்ப அந்த ரோட்டில் போகும் வாகனங்களைத் தவிர வேறு எந்த அரவமும் இல்லை. இவன் எப்போ வருவானோ.. இந்த மாதிரி இவன் இருக்க மாட்டானே... வரும்போது ஏதாவது ஆக்சிடண்ட் ஆகியிருக்குமோ... மனம் பதைபதைத்தது.

அது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவனுக்கு ஆக்சிடண்ட் என்றால் சந்தோசப்பட வேண்டியதுதானே.. ஏன் என் மனம் இப்படிப் பதைக்கிறது.. அவளுக்குப் புரியவில்லை.

என்ன இருந்தாலும் ஒரு உயிர் போவதை யார்தான் விரும்புவா..? அதை நினைக்கவும் தான் என் மனம் பதைக்கிறது என்று மனதைச் சமாதானப்படுத்தினாள்.

மணி ஒன்று ஆனது. அவளுக்கு வியர்த்து விட்டது. உடம்பு நடுங்கியது. சீக்கிரம் விடியாதோ என்று இருந்தது. அப்போது கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு விதிர்த்துப் போனாள்.

"நான் திவாகர்தான். கதவைத் திற." என்றான்.

இவள் கதவைத் திறந்தவுடன் அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

''ஏன் இவ்வளவு நேரம்? கரண்டும் இல்லாமல் நான் எத்தனை தவித்துப் போனேன்.. ரொம்ப பயமாக இருந்தது!'' என்று அழுதாள்.

அவன் அப்படியே கல் போல் நின்றான்.

ஒரு நிமிடம் அவன் மனம் சுட்டது. அடுத்த நிமிடமே.. அவளைத் தள்ளி நிறுத்தி, கையிலிருந்த செல்லில் லைட்டை ஆன் பண்ணித் தன் முகத்துக்கு நேரே பிடித்தான்.

அவன் முகத்தைப் பார்த்த அவள் அதிர்ச்சியில் கத்தினாள். பின்னால் நகர்ந்தாள். இவன் அவளை நெருங்கினான்.

''நீ யார்..? இங்கு எதுக்காக வந்தே..? போய்விடு. என்னை நெருங்காதே..' என்று ஓடினாள்.

இவனும் அவளை விடவிடல்லை. இவனும் விரட்டினான்.

''என்னை விட்டுவிடு,'' என்று கெஞ்சினாள்.

அவளைத் தூக்கிப் படுக்கையில் போட்டு, அவள் மேல் விழுந்தான். ''ஐயோ..'' என்று அந்த வீடே அதிரும்படி அலறினாள்.

அப்போது அவன் முகத்தில் இருந்து தாடியை எடுத்தான் திவாகர்.

அதைப் பார்த்த அதிர்ச்சியில் மயக்கமானாள்.

விடிந்து விட்டது. காலை வரை அவள் எழுந்திருக்கவில்லை. எழுப்பிப் பார்த்தான். எழவில்லை. அவனுக்குத் தெரிந்த டாக்டரை வரவழைத்தான்.

அவர் வந்து பார்த்து விட்டு, ''நாள் தள்ளிப் போயிற்றா?'' என்றார்.

அவளுக்கு அப்போதுதான் புரிந்தது. அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் நடந்த சம்பவத்தில் அவள் தன்னையே மறந்தாள்.



இதைப் பற்றி இவள் நினைத்துப் பார்க்கவேயில்லை. இப்போ.. என்னுள் ஓர் உயிர். நான் இப்போ என்ன பண்ணுவேன். என் அம்மாவைக் கவனிக்கணுமா...? இல்லை, என்னையா? அம்மா.. நினைப்பு வந்தவுடன் சடக்கென எழுந்தாள்.

''டாக்டர் இவளுக்கு ஊசி போட்டுக் கலைத்து விடுங்களேன்,'' என்றான் திவாகர்.

''மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. இதை ஊசியால் ஒன்றும் பண்ண முடியாது. நீங்க கிளினிக் வாங்க. அபார்சன் செய்து விடலாம்,'' என்றார்.

''சரி. நீ போய் இவங்க கிளினிக்கில பண்ணிக் கொள்,'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

இவள் எழுந்து அம்மா இருக்குமிடம் வந்தாள். அந்த நர்ஸ் திட்டினாள். ''என்ன இவ்வளவு லேட்டா வர்றீங்க.. எனக்கு என் டூட்டி முடிந்து விட்டது. சீக்கிரம் வீட்டுக்குப் போய்த் தூங்கி எழுந்தால்தான் இன்று இரவு நான் வர முடியும்,'' என்று சீறிவிட்டுச் சென்றாள்.

இவள் வாயைத் திறக்கவில்லை. பேசாமல் இருந்து விட்டாள்.

அவள் அம்மாவுக்குத் தேவையானதைக் கவனித்தாள்.

## 16



அன்று அமுதாவுக்கு ரொம்ப சீரியசாகப் போனது. டாக்டர்கள் எதையும் இப்போது சொல்ல முடியாது என்று விட்டனர்.

இப்படியே பத்து நாள் ஐ.சி.யு.வில் வைத்திருந்தனர். கொஞ்சம் நன்றானதும் வார்டுக்குக் கொண்டு வந்தனர்.

இப்படியே ஒரு மாதம் ஓடியது.

நிருபா தன்னை ஹாஸ்பிட்டலுக்குப் போய்க் கருவைக் கலைக்கச் சொன்னதை மறந்து விட்டாள். அவள் தன் நினைவில் இருந்தால்தானே தன்னைப் பற்றி நினைக்க...

அவள் அப்பா ஹாஸ்பிட்டல் பக்கமே வருவதில்லை. அமுதா தன் மகளை இப்படி தனியே விட்டுப் போகிறோம் என்று நினைத்துத் தன் உயிரை விட்டார்.

ஆம். ஒருநாள் இரவு தூக்கத்திலேயே யாருக்கும் தெரியாமல் உயிர் பிரிந்து விட்டது.

காலையில்தான் நிருபா பார்த்தாள். டாக்டர்கள் இரவே உயிர் பிரிந்து விட்டது என்றனர்.

இவளால் அழக்கூட முடியவில்லை. தன் அப்பாவுக்குத் தெரிவித்தாள். அவர்கள் வந்து வீட்டுக்குக் கூட எடுத்துப் போகாமல் நேராகச் சுடுகாட்டிற்கே கொண்டு சென்றனர்.

வீட்டில் அவள் அண்ணி அவளின் நிலையைப் பார்த்துப் பேசினாள். "நீ வீட்டில் இருக்காதே. எங்களுக்குத் தலை குனிவுதான். நீ இப்படி இருப்பது என் வீட்டிற்குத் தெரிந்தால் எங்களுக்கு அவமானம்... அதனால் நீ வீட்டை விட்டுப் போ!" என்றாள்.

அப்பொழுதுதான் தன்னிலை உணர்ந்தாள். வெளியே வயிறு தெரிய ஆரம்பித்து விட்டது. நாம் ஹாஸ்பிட்டல் போகாமல் இப்படி மறந்து விட்டோமே.. எப்படி மறந்தேன். இனி என்ன செய்வேன்? கீதா சொன்னதை அண்ணனும், அப்பாவும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

சங்கரனும், மாதேசும் கேட்கவில்லை. அவளை என் வீட்டை விட்டுப் போகச் சொல்கிறாய் என்று. மகளிடம், "நீ இப்படி இருக்கும் விசயம் தெரியுமா அவனுக்கு?" என்றார்.

"தெரியும். ஆனால் அவர் ஹாஸ்பிட்டல் போய்க் கலைத்து விடு என்றுதான் சொன்னார். நான்தான் அம்மா இப்படி ஆகி விட்டதால் மறந்து விட்டேன். என்மேல்தான் தப்பு" என்றாள்.



"இதுவும் நல்லதுக்குத்தான். இதை வைத்து நான் அவனிடம் எழுதிக் கொடுத்த சொத்து முழுவதையும் வாங்கி விடுவேன். அவன் இரண்டு மாதமாக இங்கில்லை. வரட்டும். அதுவரை நீ எங்கும் போக வேண்டாம்," என்றார்.

அவள் திக்பிரமை பிடித்தாற் போல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். மூச்சு மட்டும் வரவில்லை யென்றால் சிலைதான் அங்கிருக்கோ.. என்று தோன்றும் அளவிற்கு உட்கார்ந்திருந்தாள்.

இப்படியும் ஒரு அப்பாவா..? இதை வைத்து இன்னமும் அவனிடம் கேட்கப் போகிறாரா..? என்ன நிபந்தனை விதிக்கப் போகிறானோ..? இத்தனை நாள் பட்ட சித்திரவதை போதாதா..? இனி யாருக்காகப் படணும். என் அம்மாதான் இறந்து விட்டாரே.. இனி இவர்கள் எப்படிப் போனால் என்ன? நான் எங்காவது போய் இந்த உயிரை மாய்த்துக் கொண்டால்...

எப்படிச் சாவது? எந்த முறையில் சாவது.. அவளால் யோசிக்கக் கூட முடியவில்லை.

திவாகர் இரண்டு மாதமாக இங்கில்லையா..? அதான் என்னைக் கூப்பிடவில்லையா...? என்னை விட்டு விட்டான் என்றல்லவா நினைத்தேன்.

அப்பா அவனிடம் பேசுமுன் எங்காவது முதலில் வீட்டை விட்டு போய்விடணும் என்று நினைத்தாள்.

பிறகு சாவதைப் பற்றி முடிவு பண்ணலாம். எதுக்கும் ஹாஸ்பிட்டலுக்குப் போய் டாக்டரிடம் கேட்டு எந்த முடிவும் எடுக்கலாமே.. என்று திவாகர் சொன்ன டாக்டரிடம் போனாள்.

அவர் பார்த்து விட்டு, 'மாதம் ஐந்தாகி விட்டது. இனி ஒன்றும் செய்ய முடியாது. பெற்றுக் கொள்வதைத் தவிர.." என்றார்.

"டாக்டர், என்ன ஆனாலும் பரவாயில்லை. எனக்கு இந்தக் குழந்தை வேண்டாம். கலைத்து விடுங்கள்" என்றாள்.

''உன் உயிருக்கு ஆபத்தும்மா.. அதான் முடியாது என்கிறேன்!'' என்றார்.

''பரவாயில்லை டாக்டர் - என் உயிர் போனால் கூட!''

டாக்டர் அவளை யோசனையோடு பார்த்தார். ''சரி, நீ போய் விட்டு நாளை வா,'' என்றார்.

''நிச்சயம் நாளைக்குச் செய்து விடலாமா டாக்டர்?''

''நிச்சயமாக..''

''டாக்டர்...'' என்று தயங்கினாள்.

''என்னம்மா..?''

''டாக்டர், என்னிடம் கொடுக்கப் பணமில்லை. நாளை ஒருவேளை நான் இறந்து விட்டால், பணம் கொடுக்க முடியாமல் போய்விடும். அதனால் இந்த வளையல்களை வைத்துக் கொள்ளுங்கள்,'' என்று இரண்டு கைகளிலும் கிடந்த இரண்டு வளையலைக் கழட்டிக் கொடுத்தாள்.

அதை அவர் வாங்காமல், ''நாளை பார்த்துக் கொள்ளலாம்,'' என்று அனுப்பி வைத்து விட்டு செல்லை எடுத்து நம்பரை அழுத்தினார்.

மறுநாள் டாக்டரிடம் சென்றாள். அவர், ''என்னால் முடியாது. உன் உயிருக்கு ஆபத்து என்றால் நான் பதில் சொல்ல வேண்டி வரும். உனக்குக் கல்யாணம் ஆகி கணவன் இருந்தால் கூட பரவாயில்லை..'' என்று அனுப்பி விட்டார்.

வேறு யாரிடம் சொல்வது? இவளுக்கு வெளியே தனியாகப் போய்ப் பழக்கமில்லை. அதுவும் ஹாஸ்பிட்டலுக்கு. இருந்தாலும் துணிந்து இரண்டு ஹாஸ்பிட்டலுக்குச் சென்றாள்.

அவர்கள் விபரம் கேட்டார்கள். ''மாதம் ஆகிவிட்டது. அதனால் முடியாது. உன் கணவர் எங்கே? என்ன பண்றார்? என்



அவர் கூட வரவில்லை? இல்லை, உனக்குக் கல்யாணம் ஆகவில்லையா?'' என்று சொல்லி அனுப்பி விட்டனர்.

இதற்குள் சங்கரன் திவாகரைச் சந்தித்து விட்டார்.

''வந்த விசயம் என்ன?'' என்றான்.

அவர் தயங்காமல், ''நிருபா இப்போது ஐந்து மாதம்!'' என்றார்.

அவன் அதிர்ந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல், 'அதைக் கலைக்கச் சொன்னேனே... நான். இவள் கலைக்க வில்லையா? ஏன்?' என்று மனதில் நினைத்துக் கொண்டு, ''அதை அன்றே நான் கலைக்கச் சொல்லிவிட்டேனே?'' என்றான்.

''அவள் அதைக் கலைக்கவில்லை.''

''அதற்கு நான் என்ன செய்ய முடியும்?'' தோள்களைக் குலுக்கினான்.

17



''இதற்கு நீதான் பதில் சொல்லியாக வேண்டும். நீ என்ன சொன்னாய்? உன் மகளை என்னிடம் அனுப்பு. நான் வீட்டை, கடையைத் தருகிறேன் என்று.. இப்போது என் மகள் இப்படி இருக்கிறாள்..''

''அதற்கு என்ன செய்ய வேண்டும்?''

''நீ வீட்டையும், கடையையும் என் பெயருக்கு மாற்றி எழுதித் தர வேண்டும். மற்ற பத்திரங்களை எல்லாம் என்னிடம் கொடுத்து விட வேண்டும்!'' என்றார்.

''முடியாது என்றால்..?''

''நான் பத்திரிகையில் செய்தி கொடுப்பேன்.. உன்னால் தான் என் மகள் கருவுற்றாள் என்று. உன் பேரை நாறடிப்பேன்..''

"உன் மகள் வயிற்றில் வளரும் குழந்தைக்கு நான் மட்டுந்தான் காரணம் என்று உன்னால் சொல்ல முடியுமா? என்னிடம் பணம் வாங்கின மாதிரி மற்றவர்களிடமும் பணம் வாங்கிவிட்டு, அவளை அனுப்பி வைத்திருக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம்?" என்றான் அழுத்தமாக.

"வா.. ஹாஸ்பிட்டல் போகலாம். டெஸ்ட் செய்தால் தெரிந்து விடும் உண்மை. நான் அதுமாதிரி செய்யவில்லை. இது உன் குழந்தைதான்.. உன் காதல் லீலைகள் நீ எங்கெங்கு சென்று தங்கினாய் என்று சொல்லி விடுவேன். உன் அம்மாவிடமும் சொல்லி விடுவேன்!" என்று மிரட்டினார்.

"இதில் உன் பெண்ணின் பெயரும் அல்லவா அடிபடும். எனக்கு மட்டுமா மானம் போகும். உனக்கும் சேர்த்துத்தானே..?" என்றான் பரிகாசமாக.

"நான் எனக்கு எதுவும் தெரியாது. என் அறியாப் பெண்ணைக் கெடுத்து விட்டான் என்று கோர்ட்டில் கேஸ் போடுவேன்!" என்றார்.

"சரி. நீ இப்போ என்ன எதிர்பார்க்கிறே?"

"என் சொத்து முழுவதும் என் கைக்கு வரணும். இனி உனக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இருக்கக் கூடாது!" என்றார்.

"சரி. நான் அதன்படியே செய்கிறேன். உன் பெண்ணை என்னிடம் அனுப்பி விடு. இனி அவளுக்கும், உங்களுக்கும் எந்தத் தொடர்பும் இருக்கக் கூடாது என்று எனக்கு நீ எழுதித்தர வேண்டும்," என்றான்.

"சரி. எழுதித் தர்றேன்," என்று ஒத்துக் கொண்டார்.

அதன்படியே அவனும், அவரும் எழுதி வாங்கிக் கொண்டார்கள். இது நிருபாவுக்குத் தெரியாமலேயே நடந்தது.



மறுநாள் காரோடு திவாகர் நிருபா வீட்டுக்கு வந்து விட்டான்.

வந்த அவனைப் பார்த்து அதிர்ச்சியுற்றாள்.

சங்கரனிடம், "அனுப்பி வையுங்கள்," என்றான்.

யாரை அனுப்பி வைங்க என்கிறான். இவன் ஒருவேளை நம் அம்மா இறந்ததைக் கேள்விப்பட்டு விசாரிக்க வந்திருப்பானோ... என்று மனது சிறிது நேரத்திலேயே பலதையும் நினைத்தது.

சங்கரன் மகளைக் கூப்பிட்டு, "இவனுடன் போ.." என்றார்.

"இவனுடனா.. எங்கே?" என்றாள்.

"அவர் உன்னை மொத்தமாக வாங்கி விட்டார். அதனால் நீ அவருடன் போய்விடு. இனி உனக்கும் இந்த வீட்டுக்கும் சம்பந்தமில்லை," என்றார்.

அவள் உடம்பு நடுங்கியது. கண்களில் கண்ணீர். "நான் என்ன கலைப் பொருளாப்பா? நீங்க விற்க. அவன் வாங்க, எனக்கு மனசுனு ஒண்ணு இருக்குப்பா.. எந்த உரிமையில் என்னை வித்தீங்க? நான் அவருடன் போக மாட்டேன்.."

திவாகர் அவளைக் கவனித்தான். வயிறு நன்றாக உப்பி இருந்தது. இளைத்துப் போயிருந்தாள்.

"ஏன்..?" என்றார்.

இதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தாள். என்ன பதில் சொல்ல முடியும். ஒரு அப்பாவிடம்.. இவர் அப்பா மாதிரியா நடந்து கொள்கிறார்.. மிருகம் கூட இப்படி நடக்காது.

"சீக்கிரம் கிளம்பு!" என்றார்.

"நான் போக மாட்டேன்.."

"அப்போ நான் இன்னும் இரண்டு பேருக்குப் பணம் தரணும். போகிறாயா அவன்களுடன்... இல்லையென்றால் நீ நப்பான

தொழில் பண்ணுகிறாய் என்று போலீசில் பிடித்துக் கொடுத்து விடுவேன்!'' என்றார் தயங்காமல். அவள் அதிர்ச்சியில் தள்ளாடினாள். வியர்த்துக் கொட்டியது.

''நீயாக இப்பப் போறியா.. இல்லை, நானே வெளியே பிடித்துத் தள்ளட்டுமா? நாலு பேர் பார்த்தால் உன்னைத்தான் காறித் துப்புவார்கள்!'' என்றார்.

நல்ல வேளை, இதையெல்லாம் திவாகர் கேட்கவில்லை. காரில் போய் இருந்தான்.

''அப்பா! நான் அவருடன் போகவில்லை. வேறு எங்கேயாவது நான் போய் விடுகிறேன்.. இல்லை யென்றால் செத்து விடுகிறேன்!'' என்று அழுதாள்.

அவர் மண்ணெண்ணெய் கேனை எடுத்துத் தன் மீது ஊற்றப் போனார். ''நான் இதை ஊற்றிக் கொளுத்திக் கொள்கிறேன். ஊரில் உள்ளவர்கள் கேட்டால் மகள் இப்படிக் கெட்டுப் போய் வந்து விட்டாள். அதனால்தான் செத்து விட்டார் என்று சொல்லுங்கள்,'' என்று தன் தலையில் ஊற்றப் போனார்.

அதற்குள் திவாகர் காரில் இருந்து இறங்கி வந்து அவளின் கையைப் பிடித்து இழுத்துப்போனான்.

''வாடீ.. நீங்கள் போடும் டிராமாவைப் பார்க்கவா.. நான் வந்து தவம் கிடக்கிறேன். உன் நடிப்பு பிரமாதம்!'' என்று காரின் கதவைத் திறந்து உள்ளே தள்ளிக் கதவை அடித்துச் சாத்தினான்.

அவளின் பேச்சை கேட்கக் கூட ஆளில்லை.

இப்போ ஒரு புது வீட்டுக்குக் கூட்டிப் போனான். இறங்கியும் அவள் கையை விடாமலேயே பிடித்து இழுத்துப் போனான். அவன் பிடித்த இடம் கன்றிச் சிவந்தது.

ஒரு அறையில் உள்ளே பிடித்துத் தள்ளினான். அவள் விழுந்த வேகத்தில் பிடித்து ஓங்கி ஒரு அறை விட்டான்.



''ஏன்டீ.. உனக்கு இன்னமும் என்ன திமிர் இருந்தால் இப்படிப் பண்ணுவே.. உன்கிட்டே என்ன சொன்னேன். இதைக் கலைத்து விடு என்றுதானே. என் மீது தான் தப்பு.. நீ இப்படிப்பட்டவள் என்று தெரிந்தும் உன்னை நானே கூட்டிப் போய்க் கலைக்காமல் உன்னையே போகச் சொன்னேனே... என்னைச் சொல்லணும்.''

''...''

''உனக்குக் கொஞ்சமாவது மானம், ரோசம் இருக்கும் என்று நினைத்தேன். இப்படிக் கல்யாணம் ஆகாமல் இந்த வழியில் வந்த குழந்தையை நீ சுமக்க மாட்டாய் என்று நினைத்தேன். ஆனால் நீ.. உன் அப்பாவையும் மீறி விட்டாய். பணத்துக்காக இதைக் கலைக்காமல் எல்லாவற்றையும் எழுதி வாங்கணும் என்றுதானே.. இந்த நாடகம்.''

''...'

''என்னமோ அப்பனும் மகளும் ஒன்னுந் தெரியாத மாதிரி நடிக்கிறீங்க.. நான் போக மாட்டேன் என்கிறே நீ.. அவன் நான் கொளுத்திக் கொள்வேன் என்கிறான். என்னடி நடக்குது..'' என்று அடித்தான். கோபத்தில் அவன் மிருகமானான்.

அவள் வாய் திறக்கவில்லை. அவன் அவன் இடத்தில் இருந்து பேசுகிறான். அவன் இடத்தில் யார் இருந்தாலும் இப்படித்தான் பேசுவார்கள்.

இவள் என்னதான் உண்மையைச் சொன்னாலும், இவன் நம்பப் போவதில்லை. பின் எதற்குப் பேசணும் என்று வாய் திறக்கவில்லை.

அவள் வயிற்றில் எட்டி உதைக்கப் போனான். அவள் ''ஐயோ..'' என்று கைகளை வைத்து மறைத்துப் பின்னால் நகர்ந்தாள்.



## 19

அவளுக்கு மூச்சு வாங்கியது. அவள் கன்னங்களில் அவன் விரல் தடங்கள். அவளை உள்ளே வைத்துப் பூட்டி விட்டுப் போய்விட்டான்.

அவள் மூலையில் உட்கார்ந்து காலில் தலையைக் கவிழ்த்தாள். அவள் விருப்பம் போல் எதுவும் நடக்கவில்லை. அவரவர் விருப்பத்துக்கு அவளை ஆட்டுவித்தார்கள்.

போனவன் மறுநாள் இரவுதான் வந்தான். அதுவரை இவள் தண்ணீர் கூட குடிக்கவில்லை. தொண்டை வறண்டு விட்டது.

வெளியே இருந்து காலிங் பெல்லை அலற விட்டான்.

இவளுக்குச் சப்த நாடியும் ஒடுங்கியது. பயத்தில்.. நெஞ்சு கிடுகிடு எனத் துடித்தது. நெஞ்சை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

அவன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். கையில் ஒரு பார்சல், ஒரு தண்ணீர் பாட்டிலும் இருந்தது.

அவள் முன் தூக்கிப் போட்டான். "இந்தா, சாப்பிடு!" என்றான்.

மூலையில் படுத்திருந்தவள் இவன் சத்தத்தைக் கேட்டதும் எழுந்து சுவரில் சாய்ந்து உட்கார்ந்தாள்.

"சொல்வது காதில் விழவில்லையா?" என்று அதட்டினான்.

மெல்ல எழுந்து கவரைப் பிரித்தாள். அதில் நான்கு இட்லி இருந்தது. பசி. முடியாது என்றெல்லாம் சொல்ல முடியாது.

இட்லியைச் சாப்பிட்டாள். விழுங்க முடியவில்லை. தண்ணீரைக் குடித்தாள். அவளுக்கு அந்த நான்கு இட்டிலி பத்தவில்லை. இன்னும் சாப்பிட்டால் பரவாயில்லை என்று தோன்றியது. இருந்தால் அல்லவா சாப்பிடுவதற்கு. இவள்



சாப்பிட்டு முடிப்பதற்கும் வாந்தி வருவதற்கும் சரியாக இருந்தது. எழுந்து போவதற்கு முன் கொட.. கொட.. என்று வாந்தி எடுத்தாள். இதற்கும் எதுவும் சொல்வானோ.. என்று பயந்து அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவனும் பார்த்தான். ஆனால் அந்தக் கண்ணில் தெரிந்த பயம் அவனை என்னவோ பண்ணியது.. முகத்தில் முத்து முத்தாக வியர்வை..

முந்தானையால் முகத்தைத் துடைத்து விட்டு வாந்தி எடுத்த இடத்தில் சுத்தம் செய்தாள். இவன் வெளியே போய் விட்டான்.

மீண்டும் வந்தபோது அவன் சில புடவைகள், நைட்டி, பேஸ்ட், பிரஸ், சோப் என்று அவளுக்குத் தேவையானதை வாங்கி வந்தான்.

அவளுக்கு எதுவுமே பிடிக்கவில்லை. அவன் எது வாங்கி வந்தாலும் ஒரு வாய் இரண்டு வாய் சாப்பிட்டு விட்டு ஒதுக்கி வைத்தாள்.

அவனுக்குக் கோபம் வந்தது.

"என்னடி உன் மனசில நினைச்சிக்கிட்டு இருக்கிறே.. உன்னை வந்து நான் கெஞ்சணுமா.. சாப்பிடு.. சாப்பிடு. என்று. என்னை மீண்டும் அவமானப்படுத்துறியா...?" என்று அவளைப் பிடித்து உலுக்கினான்.

"இல்லங்க.. என்னால் சாப்பிட முடியவில்லை.. என்னை விடுங்கள்!" என்றாள்.

"அப்ப என்ன சாப்பிடுவேனு சொல்லு.."

"எ..ன..க்..கு தயிர் சாதம் இது மாதிரி கொடுங்கள்!" என்றாள்.

தயிர் சாதம் வாங்கி வந்தான். அதை வாயில் வைக்க முடியவில்லை. புளிப்பு. அதையும் அவள் சாப்பிடவில்லை.

அவளுக்குச் சூடாகச் சாப்பிட்டால்... இல்லை... குடித்தால் பரவாயில்லை போல் இருந்தது.

அவள் தயிர் சாதத்தைச் சாப்பிடாமல் ஒதுக்கி வைப்பதைப் பார்த்தான்.

அன்று இரவு அவன் அங்கேயே தங்கினான். அவளுக்குப் பசி தாங்க முடியவில்லை. விடிய.. விடிய.. தூங்கவில்லை. அவள்.. அவளுக்குத் தூக்கமே வருவதில்லை.. குழந்தை வேறு வயிற்றில் சுற்றி வந்தது பசியில்.

அவன் தூங்கி விட்டான். விடிகாலையில் ஒரு உணர்வில் கண் விழித்தான். ஏதோ அசைவது போல உணர்ந்தான். கண் விழித்துப் பார்த்தான்.

அவள் கண் மூடிக் கிடந்தாள். அப்போ.. இவள் வயிற்றில் இருக்கும் குழந்தைதான் அசைந்ததோ.. ஏதோ இனம் புரியாத பரவசம் அவனுள் தோன்றியது.

அவள் முகத்தைப் பார்த்தான்.. மூடிய இமை வழியே கண்ணீர் வழிந்தது.

அவள் உதடு காய்ந்து போய் இருந்தது.

அவன் எழுந்து போய் காபி இரண்டு பேருக்கும் வாங்கி வந்தான். அவளை எழுப்பிச் சூடாக ஊற்றிக் கொடுத்தான்.

ஒரு டம்ளர் குடித்தாள். மீண்டும் ஊற்றினான். மறுப்புச் சொல்லாமல் வாங்கிக் குடித்தாள். அவன் குடிக்கவில்லை. அவள் மீண்டும் படுத்து விட்டாள்.

அவன் ஆபீஸ் போய்விட்டான். மதியம் சாப்பாடு வாங்கி வந்து அவசரமாகக் கொடுத்து விட்டுப் போய்விட்டான்.

இரவு மீதி இருந்த சாதத்தில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றிப் பிசைந்தாள். பிசைய முடியவில்லை. சாதம் விதை.. விதையாக



இருந்தது.. அதில் போட உப்பில்லை. வாயில் வைத்தால் வாந்தி வந்தது.

அந்த நேரத்திற்குத் திவாகர் வந்தான். இவள் சாப்பிடுவதைப் பார்த்தான்.

"என்ன சாப்பிடுறே..?"

"சா.. சாதம்.." என்றாள் தயக்கமாக..

"ஏன் மதியம் சாப்பிடவில்லையா?"

"சாப்பிட்டேன்.."

"அப்புறம் இது.."

"மதியம் கொஞ்சம் எடுத்து வைத்திருந்தேன்.."

"ஏன்..?"

அவனைத் தயக்கமாக ஏறிட்டாள். என்னால் பசி தாங்க முடியவில்லை. அதனால்தான் எடுத்து வைத்தேன். நீங்கள் தான் தினமும் வருவதில்லையே. எத்தனை நேரம் தான் பட்டினி கிடக்க முடியும் என்று சொல்ல அவமானமாக இருந்தாலும், அவன் விடவில்லை.

அவள் நினைத்ததைச் சொல்ல வைத்தான்.

"ஏன் தண்ணீர் ஊற்றிச் சாப்பிடுறே?"

"வேறு எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை." பேசிக் கொண்டிருக்கும்போதே குமட்டியது.

"இதுதான் பிடிக்கும் என்கிறே... பிறகு ஏன் குமட்டுது?"

"இதில் போட உப்பில்லை. அதான் குமட்டுது.."

இதே வாய் அன்று நான் வகை வகையாய்ச் சாப்பிடுவேன். நீ பழங்கஞ்சியைத் தவிர வேற எதுவும் பார்த்திருக்கியா என்றானே..

பேண்ட்டை கழட்டி ஹாங்கரில் மாட்டப் போனவன் அப்படியே ஒரு நிமிடம் நின்றான். பின் திரும்பி, ''பணத்துக்காகவும், சொத்துக்காகவும் எப்படி யெல்லாம் கஷ்டப்படுறே.. இப்படி யெல்லாம் நீ சொன்னால் என் மனம் இறங்கி விடும் என்று நினைத்தாய்?''

அவள் வாய்க்கு எடுத்துப் போன கை அப்படியே நின்றது.

இரவு அவள் எழுந்து உட்கார்ந்தாள். அந்த அறை அவளுக்கு மூச்சு முட்டுவது போல் இருந்தது. இவள் வெளி உலகத்தைப் பார்த்தே ஒரு மாதம் ஆகிவிட்டது.

திவாகர் தூங்கிக் கொண்டு இருந்தான். அவனை ஒரு முறை திரும்பிப் பார்த்தாள். பின் மெல்ல எழுந்து அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

மெல்லப் படி யிறங்கினாள். எப்படியாவது இங்கிருந்து தப்பிவிட வேண்டும் என்று வேகமாக வெளியே நடந்தாள்.

வெளியே பெரிய கேட் பூட்டால் தொங்கியது. எதிலாவது மேலே ஏற முடியுமா என்று பார்த்தாள். ஒரே இருட்டாக இருந்தது. இது எந்த இடம் எந்த ஏரியா என்று தெரியவில்லை. வெளியில் போய்விட்டால் தப்பித்து விடலாம் என்று நினைத்தாள்.

கேட்டில் ஏறலாம் என்றால் வீட்டை மறைக்கும் அளவுக்கு உயரமாக இருந்தது.

## 19



காம்பவுண்ட் சுவரின் மீது கண்ணாடி பதிக்கப்பட்டு இருந்து.

''மேலே ஏற ஸ்டூல் எதுவும் கொண்டு வரட்டுமா மேடம்..? இல்லை... கதவைத் திறந்து கொண்டு போறியா?'' என்று சாவியை அவள் முன் தூக்கிப் போட்டான்.



அந்தக் குரலில் ஆடிவிட்டாள். படபடவென வந்தது.

''எல்லாப் பத்திரம், பாண்டும், உன் அப்பன் கைக்குப் போய்விட்டது என்று தெரிந்ததும் வீட்டை விட்டு ஓடிப் போறியா..? சரியான கைகாரிதான். இதற்குத்தானே இந்தப் பிள்ளையை பெத்துக்கப் போறே.. ஏன் திடீர்னு இந்த முடிவு? குழந்தை பிறந்ததும் என் சொத்து முழுவதும் எழுதி வாங்க எந்தத் திட்டமும் போடவில்லையா?''

அவன் பேசிய வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. கடவுளே! என் உயிர் போய்விடாதா? இந்தப் பூமி இரண்டாகப் பிளந்து என்னை உள்ளே இழுத்துக் கொள்ளாதா? என்று கண்ணீர் வடித்தாள்.

அந்த இரவு அவன் நடந்து கொண்ட விதம் தர்மங்களுக்கு அப்பாற்பட்டது.

இனி நாம் உயிரோடு இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தாள். எதுவுமே சாப்பிடாமல் இரண்டு நாளாகப் படுத்திருந்தாள்.

அவன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அவள் வாய் திறந்து எந்தப் பதிலும் சொல்லவில்லை.

ஹாஸ்பிட்டலுக்கு வா என்று கூப்பிட்டான். அதற்கும் வர மறுத்தாள்.

திவாகர் டாக்டரிடம் சென்றான். வந்து குளுக்கோஸ் எதுவும் போடச் சொல்லலாம் என்று.

டாக்டர் இவனைப் பார்த்ததும், ''நானே உன்னிடம் பேச வேண்டும் என்று நினைத்தேன். திவாகர், முடியவில்லை. நான் வெளிநாடு சென்று விட்டேன். ஆமா, அந்தப் பெண் எப்படி இருக்கா..?''

''ம்.. பரவாயில்லை..''

''நீ அன்று சொன்னதும் வந்திருந்தால் கருவைக் கலைத்திருக்கலாம். பாவம், அந்தப் பெண். அவள் அம்மா அந்த

சமயத்தில் இறந்து விட்டார்களாம்... சீரியசாக ரொம்ப நாள் இருந்திருக்காங்க.. அதனால் தான் அவள் வர முடியவில்லையாம்.."

"....."

"பின் என் காலில் விழுந்து கதறினாள். எப்படியாவது இந்த கருவைக் கலைத்து விடுங்கள்.. டாக்டர் என்று. எப்படி முடியும்? மாதம் ஆகிவிட்டது. இப்போது கலைத்தால் உன் உயிருக்குத் தானே ஆபத்து என்றேன்."

"....."

"என் உயிர் போனாலும் பரவாயில்லை டாக்டர். எனக்கு இந்தக் குழந்தை வேண்டாம் என்றாள். நான் தான் முடியாது என்றேன். இரண்டு நாளாக என்னிடம் வந்து கெஞ்சினாள். பின் வரவில்லை. வேற டாக்டரிடம் சென்றிருப்பாள் என்று நினைக்கிறேன்," என்று அவள் அன்று பேசிய அனைத்தையும் கூறினார்.

திவாகர் அப்படியே உறைந்து விட்டான்.

என் உயிர் போனாலும் பரவாயில்லை. இதைக் கலைத்து
விடுங்கள்.. நான் எத்தனை தவறாக எண்ணி விட்டேன். அவள்
அம்மா இறந்து விட்டார்களா..? அதனால்தான் இப்படி
ஆயிற்றா..? நான் இவளும் இவள் அப்பாவும் சேர்ந்து
கொண்டுதான் தன்னை ஏமாற்றி இருக்காங்க என்று
நினைத்தேனே.. டாக்டரிடம் விபரத்தைச் சொல்லிக் கூட்டிப்
போனான். அவள் இருந்த நிலையைப் பார்த்து விட்டு, "உடனே
அட்மிட் பண்ணுங்கள்.. இல்லையென்றால் காப்பாற்ற முடியாது..
இதுவே ஐம்பது சதவீதம்தான் நான் சொல்ல முடியும்," என்றார்.

திவாகர் பிடிவாதமாகக் கூட்டிச் சென்றான்.

ஸ்கேன் பண்ணிப் பார்த்துவிட்டு, "ரொம்ப பலகீனமா
இருக்கா.. வலியைத் தாங்கக் கூடிய உடல் பலமோ.. மன பலமோ



இல்லை. லேசாக வலி எடுத்தவுடனேயே.. சிசேரியன் பண்ணி விடலாம்.. இல்லையென்றால் உயிருக்கு ஆபத்து!" என்றார்.

திவாகர் இதைக் கேட்டு ஆடிவிட்டான்.

"டாக்டர், ஏன் வலி வரும் வரை நாம் காத்திருக்கணும். அதை வலி வரும் முன்பே சிசேரியன் செய்து எடுத்து விடலாமே!" என்றான் படபடப்பாக.

யாருக்கு வந்த விருந்தோ என்று இருந்தவள் அவன் சொல்வதைக் கேட்டு வியந்து அவனை நோக்கினாள்.

டாக்டர் என்ன சொல்கிறார் என்று கவனித்தாள். இதைக் கவனித்த திவாகர் நிருபாவைப் பார்த்து, "நீ வெளியில் இரு. நான் டாக்டரிடம் பேசிவிட்டு வருகிறேன்," என்றான்.

"இல்லை. நான் இங்கேயே இருக்கேன்.. அப்பத்தானே டாக்டர் என்ன சொல்கிறார் என்று எனக்கும் தெரியும். பிறகு அதன்படி நடக்க எனக்கு வசதியாக இருக்கும்," என்றாள்.

அவரும் புன்னகைத்து, "உப்பே போடாமல் சாப்பிட வேண்டும். பிரசர் இருக்கு. உப்பு சத்து இருக்கு. ஆயில், நெய், ஸ்வீட் இதெல்லாம் சாப்பிடக் கூடாது. மாடி ஏறவே கூடாது!" என்றார்.

மறுபடியும் திவாகர், "டாக்டர்! வலி எடுக்கும் முன்பே சிசேரியன் செய்து விடலாமே," என்றான்.

"சரி, அதை அப்போ பார்க்கலாம்."

நிருபா டாக்டர் எனக்கு வலி எடுத்த பின்பே சிசேரியன் பண்ணுங்கள் என்றாள்.

"இவள் சொல்வதும் சரிதான். ஏன் நாம் அவசாப்படணும்?" என்று அவர் முடித்தார்.

நிருபாவைத் திவாகர் முறைத்தான். இவள் இதைக்கண்டும் காணாதது போல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இந்தத் தடவை திவாகர் அவன் இருந்த வீட்டுக்கே கூட்டிப் போனான். வீட்டில் அவன் அம்மா, அப்பா இருந்தனர்.

இந்தப் பெண்ணை மகனுடன் பார்த்ததும் வியப்பாய் மகன் முகத்தை ஏறிட்டனர்.

அவர்களின் பார்வையைப் புரிந்து பிறகு பேசலாம் என்று கண்ணால் ஜாடை காட்டிவிட்டு, கீழே வசதியாக இருந்த அறைக்குக் கூட்டிப் போனான்.

"இதில் நீ தங்கிக் கொள்!" என்றான்.

இவள் பதில் எதுவும் சொல்லவில்லை. பேசாமல் போய்ப் படுத்து விட்டாள்.

இரவு அவன் அப்பா, அம்மா, இவனுக்காகக் காத்திருந்தனர். இவன் சுருக்கமாக 'இவளைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்!' என்றான்.

அவர்கள் கேள்விக் குறியாய் இவனை நோக்கினர்.

அவர்களின் நினைப்பு புரிந்து, "ஆம், இது என் குழந்தைதான். கோயிலில் வைத்துக் கல்யாணம் பண்ணி விட்டு, குழந்தை பிறந்தவுடன் ஹோட்டலில் எல்லோருக்கும் சொல்லி ரிசப்ஸன் வைத்து விடலாம்!" என்றான் எங்கோ பார்த்துக் கொண்டு.

மகனின் மனநிலை புரிந்து பேசாமல் இருந்தனர்.

"அம்மா, அவளை நல்லா பார்த்துக்கம்மா.. சாப்பாடு உப்பு குறைவா நேரத்துக்குச் சாப்பிடக் கொடுங்கள்," என்று சொன்னான்.

"சரிப்பா. நீ இனி கவலைப்படாதே.. நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றாள் ஆறுதலாக.



"அம்மா! நான் உங்கள் மடியில் படுக்கட்டுமா...?" என்றான்.

"படுப்பா!" என்று மடியில் படுக்க வைத்துத் தலையைக் கோதி விட்டாள்.

## 20



ஒரு நிமிடம் கண் மூடியவன் தனக்கே மனம் இவ்வளவு கலங்கி விட்டதே.. அவளுடைய மன நிலை எப்படி இருக்கும் என்ற நினைப்பு வந்தவுடன் சட்டென எழுந்தான்.

மெல்லக் கதவைத் திறந்து கொண்டு, உள்ளே போனான். அவள் தூங்கிக் கொண்டு இருந்தாள்.

அவள் அருகில் அமர்ந்து அவள் முகத்தையே பார்த்தான். அந்தப் பளீரென்ற உருண்டை முகம் வாடிப் பொலிவிழந்து கருத்துக் காணப்பட்டது.

உப்பு சத்து இருப்பதால் கால் எல்லாம் வீக்கமாக இருந்தது.

காது, கழுத்து எல்லாம் பார்த்தான். எத்தனை விதமான நகை போட்டாள். பாவம் என்று மனம் நினைத்தது.

எவ்வளவு மனம் வெறுத்துப் போயிருந்தால் நான் இறந்தால் கூடப் பரவாயில்லை. இந்தக் கருவைக் கலைத்து விடுங்கள்.. என்று சொல்லியிருக்கிறாள். இவள் அம்மா இறந்த அதிர்ச்சியில் தான் மீறந்து விட்டிருக்கிறாள்.

வயிற்றுக்கு ஒரு தலையணையைத் துணையாக வைத்துப் படுத்திருந்தாள். அவளுக்கு வியர்த்திருந்தது. ஏ.சி.யும் போடவில்லை. ஃபேனும் ஓடவில்லை. எழுந்து இரண்டையும் போட்டு விட்டான்.

அவன் மனம் இவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என முடிவு பண்ணியது. இத்தனை மாதங்களில் எத்தனை அவஸ்தைப் பட்டு விட்டாள்.

அவள் அப்பா தன்னை இப்படி அனுப்ப மாட்டார் என்று எத்தனை நிச்சயமாக நம்பினாள். இது எல்லோரும் பெத்த அப்பா மீது நம்பிக்கை வைப்பதுதானே?

திவாகர் சின்ன வயதில் பழகும் போதே பொழுது போக்குக்குப் பழகவேயில்லை. முழுமையாக இவளை நம்பி, இவள் தான் தன் வாழ்க்கைத் துணைவி என்று தான் பழகினான்.

அந்த அறியா வயதில் எதையும் சீர் தூக்கிப் பார்க்கும் பக்குவமில்லை. ஏழை, பணக்காரன் என்று பிரித்துப் பார்க்கும் மனோபாவமில்லை. அவளின் அன்பை மட்டுமே முழுமையாக நம்பினான்.

இடையில் நடந்த நிகழ்ச்சிதான் இவனை இப்படி மாற்றியது. இருந்தாலும் இவள் மேல் இருந்த காதல் மறையவில்லை. அத்தனை அன்பும் வெறியாக மாறி இவனை மிருகமாக மாற்றியது.

நிருபாவிடம், 'நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்!' என்றான்.

அவளுக்கு எங்கிருந்துதான் இத்தனை கோபம் வந்ததோ.. பக்கத்திலிருந்த தண்ணி டம்ளரை எடுத்து அவன் மீது வீசினாள்.

இவன் வேகமாக டம்ளரைப் பிடித்தாலும் தண்ணீர் அவன் மீது கொட்டியது. தண்ணீர் அவன் மீது கொட்டியதும் உள்ளூர நடுங்கினாள். என்ன நடக்குமோ என்று.

அவன் ஒன்றும் சொல்லாமல் மீண்டும் அவளிடம் பேசினான்.

''என்னால் முடியாது!'' என்றாள் முடிவாக.

''முடியாது என்றால் வேறு என்ன செய்யப் போறே...? இப்படியே சின்ன வீடா கடைசி வரை இருந்திட்டுப் போறேங்கிறியா?'' என்றான் நமட்டுச் சிரிப்புடன்.

''இப்ப என்னால் எங்கும் போக முடியாது. இவளுக்கு யாருமில்லை. அனாதை என்ற தைரியத்தில்தானே... இப்போ



இப்படி என்னைக் கேவலப்படுத்துறீங்க.. நான் கூடிய சீக்கிரம் உங்களை விட்டுப் போய்விடுவேன். எனக்கு எதுக்கு இனி கல்யாணம். எதைக் கொண்டாட.. உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு எப்படி நிம்மதியாகக் குடும்பம் நடத்த முடியும்?''

''இனி இது மாதிரி எல்லாம் நடக்காது!'' என்றான்.

''எது மாதிரி, நான் தெரியாமல் செய்த தப்புக்கு இப்படி தண்டனை கொடுத்த உங்க கூட நான் வாழ முடியுமா..? இதைவிட கேவலம் எனக்கு வேறு இல்ல.''

''அப்போ உன் முடிவுதான் என்ன?''

''அதைக் கேட்டுத் தெரிந்து நீங்கள் என்ன பண்ணப் போறீங்க..?'' என்றாள் வெடுக்கென்று.

''நீ என்ன செய்தாலும் எனக்குத் தெரிந்தாகணும்!'' என்றான் அழுத்தமாக.

''அதைப் போய் எமனிடம் கேட்டுப் பாருங்கள்..''

அவன் அதிர்ந்தான். டாக்டர் சொன்னதை இவள் கேட்டிருப்பாளோ..? என்னிடம் தனியாகத்தானே சொன்னார். இவளுக்கு எப்படித் தெரிந்திருக்கும்.? அன்று பொதுவான அறிவுரைதானே இவள் இருக்கும்போது சொன்னார்...

''உன்னை அத்தனை சுலபமாகச் சாக விடமாட்டேன்!'' என்றான்.

''அதுக்குத்தான் நீங்க இருக்கீங்களே.. ஒருத்தி எத்தனை முறைதான் சாவாள்..? நீங்கள் என்னைக்கு என்னை முதல் முறையாக தொட்டீங்களோ.. அன்றே நான் செத்து விட்டேன்.''

அவனுக்குச் சுருக்கென்றது.

''இங்க பாரு. உன்னை அடிக்கக் கூடாது என்று நினைக்கிறேன்.. நீ ரொம்பப் பேசுறே..'' என்றான் கோபமாக.

''எதுக்கு அப்படி நினைக்கிறீங்க.. அடிக்க வேண்டியது ..னே.. என்ன திடீர்னு ஞானோதயம்.. கையாலாகதவன் தான் ..பாம்பளையை அடிப்பான்.''

பேசாமல் வெளியே சென்று விட்டான்.

நிருபா வெளியில் வந்தாள். அவன் அப்பா, அம்மா ..ருந்தார்கள். இவளைப் பார்த்ததும், ''வாம்மா!'' என்று கைப்பிடித்து சோபாவில் உட்கார வைத்தனர்.

''என்னம்மா.. சாப்பிடுறே.. பால் கொண்டு வரட்டுமா..?'' ..ன்றார்.

''இல்லை. காபி சாப்பிடுகிறேன்,'' என்றாள். டாக்டர் காபி சாப்பிடக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்.

இதைக் கேட்டுக் கொண்டே படி இறங்கி வந்தான் திவாகர்.

''அவளுக்குக் காபி வேண்டாம்.. பால் இல்லையென்றால், டாக்டர் இந்த மாவு கொடுத்திருக்காங்க.. இதைப் பாலில் போட்டுக் கலந்து கொடுங்கள்,'' என்று கொடுத்தான்.

அவள் பிடிவாதமாக, ''எனக்குக் காபி வேண்டும்.. இல்லையென்றால் எதுவும் வேண்டாம்!'' என்றாள்.

அவன் அம்மா, ''நீ சும்மா இருடா.. உனக்கொன்னும் தெரியாது.. பிள்ளைத்தாச்சிப் பொண்ணு. அவள் ஆசைப் பட்டதைத்தான் சாப்பிடணும்!'' என்று உள்ளே போனார்.

அவன் யோசனையுடன் அவளைப் பார்த்தான். அவள் இதழில் லேசாகப் புன்னகை தோன்றி மறைந்தது. இத்தனை ..மாதத்தில் இல்லாதது.

எதுவும் பேசாமல் அவள் பக்கத்தில் அமர்ந்தான்.

அவன் அம்மா கொண்டு வந்த காபியை வாங்கி சிறிது குடித்துப் பார்த்தான். அத்தனை இனிப்பு. டாக்டர் இனிப்பே கூடாது என்று சொல்லியிருக்கிறார். இதை இவர்களிடம் எப்படிப்



புரிய வைப்பது என்று வகை தெரியாமல், ''என்னம்மா நீங்க, இவ்வளவு இனிப்பா..? இனி இவளுக்குச் சர்க்கரையே போடாமல் கொடுங்கள்,'' என்றான்.

அதற்குள் நிருபா, ''பாருங்கம்மா இவரை. எனக்குச் சர்க்கரையே போடாமல் கொடுக்கச் சொல்கிறார்... எனக்கு இனிப்புத்தான் ரொம்பப் பிடிக்கும். சும்மாவே வாந்தி வருது.. இதில் இனிப்பு இல்லாமல் குடித்தால் எப்படி இருக்கும்.. நீங்களே சொல்லுங்கள்... உங்கள் காலத்தில் எல்லாம் இப்படியா இருந்தீங்க?'' என்றாள் சலுகையுடன்.

அவள் அம்மா என்றதும் லெட்சுமிக்கு மனம் குளிர்ந்தது.

''டேய்.. நீ சும்மா இருடா.. இதெல்லாம் பொம்பளைங்க சமாச்சாரம்.. உனக்கென்ன தெரியும். என் மருமகளை எப்படிப் பார்த்துக் கொள்வது என்று எனக்குத் தெரியும். இனி நீ இதில் தலையிடக் கூடாது..''

மருமகள் என்றதும் அவனை நேர் பார்வை பார்த்தாள்.

அவன் லேசாகத் தலையசைத்தான்.

''எப்படி என் சாமர்த்தியம்!'' என்று கண்ணால் கேட்டாள் அவனைப் பார்த்து.

## 21



நிருபா காபியை எடுத்துக் குடித்தாள். ஓரக் கண்ணால் அவனைப் பார்த்துக் கொண்டே... இதைப் பார்த்த லெட்சுமி மனம் குளிர்ந்து போனார்.

மகன் கல்யாணம் ஆகாமலேயே இப்படி வயிற்றுப் பிள்ளையோடு ஒரு பெண்ணைக் கூட்டி வந்திருக்கானே.. இவள் என்ன மாதிரி இருப்பாளோ.. என்று மனதினுள் பயந்தது நிஜம்தான். ஆனால்

இப்போ பார்க்கும்போது நல்ல முறையில் பேசுகிறாள்... மகனுடன் அன்னியோன்னியமாக இருக்கிறாள். இல்லையென்றால் மகன் குடித்த காபியை வாங்கி இவள் குடிப்பாளா என்று கணவனிடம் சொல்லி மகிழ்ந்தாள்.

திவாகர் ஆபீஸ் போனதும் நிருபா லெட்சுமிக்கு உதவியாக அடுப்படிக்குப் போனாள்.

லெட்சுமி பதறி, 'நீ போம்மா.. நான் எல்லாம் பார்த்துக் கொள்கிறேன்.. வேலைக்காரங்க இருக்காங்க,'' என்றாள்.

''என்னம்மா நீங்கள்.. இது மாதிரி சின்னச் சின்ன வேலையெல்லாம் செய்தால்தானே.. சுகப் பிரசவம் ஆகும். இது உங்களுக்குத் தெரியாதா..? நான் என்ன காட்டு வேலைக்கா போறேன்... என்கிறேன்..

''உங்கள் கிராமத்தில் எல்லாம் பெண்கள் இப்படித்தான் இருந்தாங்களா? அவர்கள் எப்படி வேலை பார்க்கிறார்கள். ஏன், நீங்கள் கூட வேலை பார்த்திருப்பீங்க.. தானே..'' என்றாள் புன்னகையுடன்.

''ஆமாம்மா... கிராமத்தில் எல்லாம் பெண்கள் இப்படி வேலை பார்க்காமல் இருக்க முடியாது. இரண்டு பேரும் வேலைக்குப் போனால் தான் சாப்பாடு. இல்லையென்றால் எப்படிப் பிழைக்க முடியும். வலி எடுக்கும் வரை காட்டு வேலைதான் பார்ப்போம். ஒரு சிலருக்குக் காட்டில் வேலை செய்யும் போது, இல்லை விறகுக்குப் போயிருக்கும்போது இப்படி வலி வந்துவிடும்..''

''...?''

''அங்கெல்லாம் இப்படி ஆஸ்பத்திரி வசதியில்லை. இருந்தாலும் போக மாட்டோம். போகவும் வசதி இருக்காது. மாசா மாசம் நர்ஸ்கங்க வீட்டுக்கு வருவாங்க.. அவங்கதான் ஒரு சில மாத்திரையைக் கொடுத்து விட்டுப் போவாங்க. அதைக் கூட



ஒழுங்கா சாப்பிட மாட்டோம். எல்லோருக்கும் வீட்டில்தான் பிரசவம் நடக்கும். வயதான பெரியம்மா தான் பிரசவம் பார்ப்பாங்க!'' என்றாள்.

''சாப்பாடு எல்லாம் எப்படிச் சாப்பிடுவீங்க?'' என்றாள்.

''என்ன பெரிய சாப்பாடு. இது மாதிரி எல்லாம் பால், காபி எல்லாம் கிடையாது. மாடு வீட்டில் இருந்தால் கூட காலையில் இரவு வடிக்கும் சாதமோ.. இல்லை கூழ்.. இதில் தண்ணீர் ஊற்றி வைத்திருப்போம். அதைத்தான் கரைத்துப் பிள்ளைகளுக்குக் கொடுத்து விட்டு மீதி இருப்பதை ஒரு தூக்கில் ஊற்றிக் கொண்டு அதற்குத் தொட்டுக் கொள்ள மோர் மிளகாயோ.. இல்லை ஊறுகாயோ.. இரவில் வைக்கும் குழம்போ.. கீரையோ.. வெங்காயமோ... இருந்தால் எடுத்துக் கொண்டு காட்டுக்குப் போய்விடுவோம்.

''அதையும் ஒரு பதினொரு மணிக்கு மேலேதான் சாப்பிடுவோம்..''

''அப்போ மதியம் என்ன சாப்பிடுவீங்க?'' என்றாள்.

''மதியம் எல்லாம் சாப்பாடு கிடையாது. பதினொரு மணிக்குச் சாப்பிட்டால் பிறகு வீட்டுக்கு வந்து சமைத்து இரவுதான் சாப்பிடுவோம்!'' என்றார்.

''பிறகு குழந்தைகள்...?'' என்றாள்.

''அதான் காலையில் இருப்பதைக் குடித்துவிட்டுப் பள்ளிக் கூடம் போய்விடுவாங்க.. மதியம் அங்கேயே சாப்பிட்டு விடுங்க.. சாயந்திரமாகத்தானே வீட்டுக்கு வருவாங்க. அதனால் பிரச்சனையில்லை!'' என்றார்.

''சின்னக் குழந்தைகள் என்ன பண்ணும். பெரிய குழந்தைகள் தான் பள்ளிக்கூடம் போய்விடும். சாப்பிட்டு விடும். கைக் குழந்தைகளை யார் பார்த்துப்பாங்க..?''

''பால் குடிக்கிற வயதில் இருக்கும் குழந்தைகளைத் தோட்டத்திற்குத் தூக்கிப் போய்விடுவோம். மரத்தில் தொட்டில் கட்டிப் போட்டுவிட்டு வேலையைப் பார்ப்போம். கொஞ்சம் இரண்டு மூன்று வயதான குழந்தைகளை பால்வாடிக்கு அனுப்பி விடுவோம். அவர்களுக்கும் அங்கேயே சாப்பாடு கொடுப்பாங்க..''

திவாகரும் இப்படித்தான் வளர்ந்திருப்பானோ..? கேட்கத் தயக்கமாக இருந்தது.

நிருபாவுக்கு இதையெல்லாம் கேட்க ஆச்சரியமாக இருந்தது. இப்படியெல்லாம் இவள் சினிமாவில்தான் பார்த்திருக்கிறாள்.

''காய்கள் எல்லாம் கிடைக்கும் இல்லே கிராமத்திலே..''

''ம்.. கிடைக்கும்.. வீட்டுக்குப் பக்கத்துலேயே அவரை, புடலை, பாவக் காய், பீர்க்கங்காய், சுரைக்காய், பரங்கிக்காய்னு, போட்டிருப்பாங்க.. இங்க மாதிரி விலை கொடுத்து வாங்க மாட்டோம்..''

''கீரைகளும் அப்படித்தான். தோட்டத்தில் இருந்து வரும்போதே முருங்கை, மணத்தக்காளி என்று கீரைகளை எடுத்து வருவோம். திவாகருக்கு முருங்கைக் கீரைதான் ரொம்பப் பிடிக்கும்..''

''இங்கே மார்க்கெட்டில் கேட்டால் ஒரு நாலு கொத்து வைத்து கட்டி வைத்துக் கொண்டு ஒரு கட்டு ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்கிறாங்க..''

''இப்ப மாதிரி எல்லாம் பொரியல், கூட்டு என்று செய்ய மாட்டோம். எல்லா காய்களையும் ஒன்னாப் போட்டு ஒரு குழம்பு. இல்லையென்றால் கீரை. இதுதான் எங்க சாப்பாடு. வேறு எதுவும் செய்யவும் தெரியாது. நேரமும் இருக்காது..''

அவள் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்தாள்.



''அப்போ நான் மட்டும் ஏன் வேலை செய்யக் கூடாது என்று சொல்றீங்க..? நானும் வேலை பார்த்தால்தானே சுலபமா டெலிவரி ஆகும்!'' என்றாள்.

''சரி. உன்னால் முடிந்த வேலையைப் பார்.'' என்றார்.

இவள் இழுத்துப் போட்டுக் கொண்டு அத்தனை வேலையும் பார்த்தாள். தெரியாவிட்டாலும், நன்றாகச் சாப்பிட்டாள். நெய், பால், தயிர் என்று நன்றாக வெயிட் போட்டுப் பளபளப்பாக மின்னினாள். இதைப் பார்த்த திவாகர் மதியம் சாப்பிட வீட்டுக்கு வந்தான். அவளுக்கு உப்பு இல்லாமல் அவித்த காய்கறி, கீரை, ஜூஸ் என்று கொடுத்தான். அவள் சாப்பிட மறுத்தாள்.

ஒருநாள் மாடிக்குப் போய் ஒட்டடை அடித்துக் கழுவி விட்டாள். வீட்டுக்கு வந்த திவாகர், ''எங்கேம்மா அவள்?'' என்று கேட்டான்.

''அவள் மாடியைச் சுத்தம் பண்ணப் போயிருக்கா!'' என்றார்.

இவன் மனதில் அதிர்ந்து விட்டான். ''வேலைக்காரங்க எங்கே?'' என்றான்.

''அவங்க இருக்காங்க. இவதான் போனா..''

இரண்டிரண்டு படியாகத் தாவி மாடியேறினான். முதல் மாடியில் ஆளைக் காணவில்லை. இரண்டாவது மாடியிலும் இல்லை. மொட்டை மாடிக்குப் போனான்.

அங்கு அவள் அங்கிருந்த ஏணியில் ஏறிக் கொண்டிருந்தாள். அது மேலே ஓவர் டேங்கிற்குப் போகும் ஏணி. இதைப் பார்த்த திவாகர் கத்தி விட்டான்.

அவன் குரல் கேட்டதும் வேகமாக மேலே ஏறினாள்.

இவனும் வேகமாகப் போய் அவள் காலைப் பிடித்துக் கொண்டான்.

"இறங்கு நிருபா.. எதற்கு நீ இப்படிப் பண்றே.. ப்ளீஸ்..." என்றான்.

இத்தனை மாதத்தில் இன்றுதான் இவள் பெயரைச் சொன்னான்.

"நான் இறங்க மாட்டேன். என்னை விடுங்க.. இல்லையென்றால் நான் இங்கிருந்து குதித்து விடுவேன்!" என்றாள் மிரட்டலாக.

அவனுக்குக் கோபம் வந்தது.

இரண்டு படியில் கால் வைத்துக் கொண்டு, வலக் கையால் ஏணியைப் பிடித்துக் கொண்டு, இடக்கையால் அவளைப் பின்புறமாக அணைத்துப் பிடித்துக் கொண்டு மெல்ல இறங்கினான்.

கீழே விட்டதும் அவளை அறைந்தான். அவள் அப்படியே கன்னத்தைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

"நீ என்னதான்டி உன் மனசுல நினைச்சுக்கிட்டு இருக்கே. உன் இஷ்டத்துக்கு ஆடுறே..." என்று அவள் எதிர்பார்க்காத நேரத்தில் இறுக அணைத்தான்.

## 22



"என்னை எதுக்கு இப்படி சித்திரவதை செய்யுறே... உப்பு இல்லாம சாப்பிடணும் என்றால் உப்பை அதிகம் போட்டுச் சாப்பிடுறே.. மாடிப்படி ஏறக் கூடாது என்றால், இப்படி மொட்டை மாடி வரை வந்து நிக்கிறே... உனக்கு நல்லதுக்குத்தானே சொல்றேன்!" என்றான் ஆதங்கமாக.

"ஆடு நனையுதேன்னு ஓநாய் அழுததாம்... எப்படி இருக்கு கதை... எனக்கு நீ.. நீங்க.. நல்லது பண்றீங்க..



இதை நான் நம்பணும். அப்படித்தானே...?" என்றாள் இளக்காரமாக.

"எப்படி எல்லாம் சவால் விட்டீங்க... இப்ப எமனிடம் சவால் விட்டுப் பாருங்களேன்.. நீங்க ஜெயிப்பீங்க!" என்றாள் ஏளனமாக.

வாயைத் திறக்காமல் மௌனமாக நின்றான்.

"என்ன பேசாமல் இருக்கீங்க... எமனைக் கூப்பிட்டு பிளாக் மெயில் பண்ணுவதுதானே.. இல்லே... அறையில் அடைத்துச் சித்திரவதை செய்வதுதானே?.. நீங்க செய்வதையெல்லாம் கேட்கும்!" என்றாள் கேலியாக.

"உனக்கு நல்லதுக்குத்தானே சொன்னேன். கேட்டால் கேளு இல்லையென்றால் விடு.. எனக்கென்ன?" என்று தோளைக் குலுக்கினான்.

"அதானே பார்த்தேன். எங்கடா என் மீது பாசமும், அக்கறையும் வந்து விட்டதோ என்று. நான் செத்தால் முதலில் சந்தோசப்படும் நபர் நீங்களாகத்தான் இருப்பீங்க.. ஆனா எந்தத் திட்டத்துக்காக என்னைக் காப்பாத்த நினைப்பது போல் ட்ராமா போடுறீங்க என்று எனக்குத் தெரியவில்லை. குழந்தையைக் கூட கருவிலேயே சிறிதும் யோசிக்காமலேயே கலைக்கச் சொன்னவர்தானே நீங்க.. இப்ப யார் மேலே திடீர் பாசம்.. என் வேறு எவளும் படுக்கைக்குக் கிடைக்கவில்லையா?" என்றாள் உதடு வளைய.

வேகமாகக் கையை ஓங்கி வந்தவன் சட்டெனக் கீழே இறக்கினான்.

இவளும் பயந்தாள். எங்கே தன்னை அடித்து விடுவானோ என்று... உள்ளூர நடுங்கினாள். எச்சிலை விழுங்கிப் பயத்தை அடக்கினாள்.

தினமும் ஒரு வகையில் டார்ச்சர் கொடுத்தாள். டாக்டர் கொடுத்த மாத்திரையைச் சாப்பிடாமலேயே தூக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டாள்.

முதலில் இருந்ததை விட நல்லா வெயிட் போட்டு விட்டாள். ஒரு பேச்சுப் பேச முன் மூச்சு வாங்கியது.

இதற்கிடையே நிருபா அண்ணி கீதா லெட்சுமியைச் சந்தித்தாள். அவளிடம் நிருபாவைப் பத்தி தவறாகக் கூறினாள். வெள்ளை மனம் படைத்த லெட்சுமி அதை முழுமையாக நம்பினாள்.

''நிருபா என் நாத்தனார்தான். அவள் நடத்தை சரியில் லாதவள். ஏற்கெனவே இரண்டு தரம் கல்யாணம் ஆகிவிட்டது. இவள் நடத்தையைக் கண்டு அவர்கள் கண்டித்தார்கள். இவள் அடங்கவில்லை. இதுமாதிரி இருந்தால் எந்த ஆம்பிளைதான் பொறுத்துப் போவான். அதான் இவளை விட்டு அவர்கள் போய்விட்டார்கள்..

''இவள் சும்மா விடுவாளா... அவர்கள் சொத்தில் பாதியை எழுதி வாங்கிக் கொண்டாள். இப்படியே தான் பணக்காரப் பையன்களா வலை வீசிப் பிடிப்பது, வலையில் விழுந்ததும் இந்தக் குழந்தை உன்னதுதான் என்று கல்யாணம் பண்ணிக் கொள். இல்லையென்றால் சொத்தை எழுதிக் கொடு என்று பிடுங்கி விடுவாள்...''

லெட்சுமி அம்மாள் திறந்த வாய் மூடவில்லை. இப்படியும் நடக்குமா? இந்தப் பெண் இப்படிச் செய்வாளா..? தன் பிள்ளையை ஏமாத்தி சொத்து முழுவதும் பிடுங்கி விடுவாளா...? இந்தக் குழந்தை தன் மகனோடது இல்லையா? சே.. நினைக்கவே அருவருப்பாக இருந்தது.

கீதா சொல்வதை மீண்டும் காது கொடுத்துக் கேட்டாள்.



''பணத்துக்காகத்தான் அப்பாவும், மகளும் இப்படிப் பண்ணுகிறார்கள். இல்லையென்றால் இப்படி கல்யாணம் ஆகாமலேயே பிள்ளை பெறுவாளா ஒருத்தி. உங்க மகனை மிரட்டிப் பணிய வைத்திருக்கா..!''

லெட்சுமி அம்மாளுக்கு இரத்தம் கொதித்தது.

''முன்னாடி உங்க பையன் எங்க கடையில்தான் வேலை பார்த்தான். அப்போ இருந்தே இருவருக்கும் பழக்கம். இப்போ நொடித்து விட்டார்கள். பாவம், உங்கள் மகன். இது தெரியாமல் இவள் நடத்திய நாடகத்தில் மயங்கி அவள் காலடியில் கிடக்கிறார்... எல்லாம் வெள்ளைத் தோல் செய்யும் மாயம்.

''பாதி சொத்தைக் கூட எழுதி வாங்கி விட்டாள். இன்னும் இருக்கும் மீதிச் சொத்துக்காகத்தான் இங்கு வந்திருக்கா... உங்களிடம் கூட நல்லா பாசமா அன்பா இருக்கிற மாதிரி நடிப்பாளே.. எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வாளே... எல்லாம் நடிப்புத்தான்.. இதில் எல்லாம் மயங்கி விடாதீங்க.''

''ஆமாம்மா. நீ சொல்வது போலத்தான் செய்யுறா.. என் மகன் கூட வேலை செய்யாதே என்கிறான். என்னிடம் வேலை செய்ய விடாதே.. மாடிப்படி ஏறக் கூடாது. பார்த்துக் கொள் என்றான்.''

''ஆனால் இவள் கேட்கமாட்டாளே... எல்லாம் நடிப்புத்தான். நீங்கள் இதுவரை கேட்டு இருக்கீங்களா... நீ யார்? எந்த ஊர்? உன் அப்பா, அம்மா எங்கே? எதனால் அவர்களை விட்டு இங்கு வந்திருக்கே.. உன் வீட்டில் உன்னைத் தேட மாட்டார்களா...?'' என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டு போனாள் கீதா. இதே ஊரில் தானே நாங்கள் இருக்கிறோம்... ஏன் வீட்டிற்கு வராமல் உங்கள் வீட்டில் இருக்கணும் கல்யாணம் ஆகாமல்..''

''ஆமாம். இவள் கேட்பதில்லை. எல்லா வேலையையும் செய்வாள். மாடியைச் சுத்தம் செய்கிறேன் என்று மேலே போய்விடுவாள்!'' என்றாள்.

''சுத்தம் செய்றேனு எதுக்குப் போனா... எல்லாம் சுருட்டத்தான். எது.. எது.. எங்கே இருக்குன்னு பார்த்து வச்சுக்கிட்டு சமயம் கிடைக்கும் போது எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய்விடுவாள். சொத்தை மட்டும் எடுத்துக் கொண்டு போனால் பரவாயில்லை. உங்க மகனுக்கு உயிருக்கு எதுவும் ஆபத்து என்றால் என்ன செய்வீங்க? சொத்து போனால் சம்பாதித்துக் கொள்ளலாம். மகன் உயிர் போனால் மீட்க முடியுமா?'' என்று அந்த அம்மா முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

அந்த அம்மாளின் முகம் இருளடைந்தது. பயம் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

''கொ.. கொ.. ன்னு புடுவாளா... என் புள்ளையை..'' அந்த அம்மாவுக்குப் பேச நா வராமல் குழறியது.

''நிச்சயமாக.. இது மாதிரி பெரிய இடத்துப் பையன்கள் கூடப் பழகி அவர்கள் இரண்டு பேர் இறந்து விட்டார்கள்.. பிறகு அவர்கள் தானே தற்கொலை பண்ணிக் கொண்டார்கள் என்று சொல்லிவிட்டார்கள். அப்புறம் என்ன செய்ய முடியும்? இது வெளியே தெரிந்தால் குடும்ப மானம் போய்விடும் என்று அவர்களும் பேசாமல் இருந்து விட்டார்கள். கேஸ் போட்டுப் பிரச்சனை பண்ணினால் போன உயிர் திரும்பி வருமா.. மானமாவது மிஞ்சட்டுமே என்று இருந்து விட்டார்கள்..''

''....''

''உங்கள் மகனின் உயிரைக் காப்பது இனி உங்க பொறுப்புத்தான். அவளை வீட்டை விட்டு அனுப்பி விடுங்கள்... இது உங்க மகனுக்குத் தெரியாமல் நடக்க வேண்டும். அவருக்குத் தெரிந்தால் உங்களை அனுப்பச் சொல்லி விடுவாள். அவன் பேச்சைத்தான் கேட்பார்.. இனியும் ஏமாந்து விடாதீர்கள்... நான் வருகிறேன்.'' என்று வேலை முடிந்தது என்று கிளம்பி விட்டாள்.



23



திவாகர் அன்று ஒரு பார்ட்டிக்குப் போய்ட்டு வந்தான்.

பார்ட்டியில் அவன் ஃபிரண்டோட தங்கையும் வந்திருந்தாள். எல்லோரும் தண்ணி அடித்து விட்டு ஆடத் தொடங்கினர்.

திவாகர் பார்ட்டிகளில் கலந்து கொண்டாலும், தண்ணியடிப்பதில்லை. இன்று மனம் ஏனோ கலங்கியிருந்தது. அவனும் ஒரு கிளாசை எடுத்தான். அவன் நண்பன் சுந்தர் அவனை விசித்திரமாகப் பார்த்தான்.

தன் தங்கை ருபிணியைக் கூப்பிட்டு அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். அவளும் புன்னகையுடன் கை குலுக்கினாள். பிறகு அவனை விட்டு விலகவேயில்லை.

திவாகர் நடனமாடினான். அவன் கூடச் சேர்ந்து கொண்டாள். சிறிது நேரத்தில் அது அவனுக்கு அலுத்து விடவே கிளம்பினான். அவள் விடவில்லை.

''ஏன் இதற்குள் கிளம்பி விட்டீங்க.. என் கூட கொஞ்ச நேரம் இருக்கக் கூடதா...?'' என்று தன் மை விழியைச் சுழற்றித் தன் செவ்விதழைக் குவித்தாள்.

திவாகர் தனக்குள் சிரித்துக் கொண்டான். பெரிய இடத்துப் பெண்களின் சாகசத்தைப் பற்றி இவன் நிறையக் கற்றிருந்தான்.

''இல்லை. வேலையிருக்கு.'' என்றான்.

''எ..ன்.. னை.. விட..வா..?'' என்றாள் கண்கள் செருக.

பதில் சொல்லாமல் கிளம்பினான்.

அவன் எதிர்பாராத நேரத்தில் அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

ஒரு நிமிடம் அப்படியே நின்றான். பின் எந்தச் சலனமுமில்லாமல் அவளை ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டுச் சென்று விட்டான்.

அவனுக்கு நிருபாவின் முகம் கண் முன் வந்தது. அவள் இப்படித்தான் ஒரு நாள் இவன் எதிர்பாராத தருணத்தில் தன் சின்ன சிவந்த மெல் இதழை மொட்டுப் போல் குவித்து அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவன் அப்படியே உறைந்து போனான். அவன் கண்களில் சலனம். நெஞ்சு படபடப்பை உணர்ந்தான். அந்த நிமிடந்தான் அவன் வாழ்விலேயே... எத்தனை சுகமான ராகங்கள்.. அந்த நிமிடத்தைக் கண் மூடிச் சில நிமிடங்கள் ரசித்தான். அவன் வாழ்வில் வசந்தகாலம் தேரில் ஏறி வந்தது போல் இருந்தது.

இப்பொழுதும் கன்னம் குறுகுறுக்கவே, கை தானாகவே கன்னத்தைத் தடவியது.

அந்த முத்தம் ஒரு பெண்ணின் முதல் முத்தம். அவன் ஆண்மையை அசைத்துப் பார்த்தது. அன்றுதான் முதன் முறையாகத் தன்னை உணர்ந்தான்.

நான் புன்னகையுடன் திருப்பித் தரும் போதுதான் அவள் முகம் எப்படிச் சிவந்தது. எத்தனை நாணம். அது எல்லாம் பொய்யாய்ப் போயிற்றே... உன்னை எத்தனை நம்பினேன்.

எப்பொழுதும் புன்னகை தவழும் முகத்தில் இப்போது ஒரு சின்னச் சிரிப்பிற்கே பஞ்சமாகப் போயிற்று.

திவாகர் வீட்டிற்குப் போனான். மனம் நிருபாவைச் சுற்றிச் சுற்றி வந்தது.

வெளியில் நிருபா இல்லை. அவள் அறைக்குப் போனான். இங்கு வந்ததில் இருந்து இப்பத்தான் அவள் அறைக்குச் செல்கிறான்.



நிருபா படுத்திருந்தாள். கதவு திறந்து தாழ் போடும் சத்தம் கேட்கவும் தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

இவன் பக்கத்தில் வருவதைப் பார்த்து நெஞ்சு தடதடத்தது. இருந்தாலும் பேசாமல் படுத்திருந்தாள். வேண்டாம் என்றால் விடவா போகிறான்.. கூட கொஞ்சம் வெறிதான் அதிகமாகும். இப்போ எதிர்க்கும் சக்தி மனதிலோ... உடலிலோ இல்லை..

''நிருபா!'' என்றான். அவன் குரலில் ஏதோ ஒன்று இருந்தது.

கண்களை மட்டும் மலர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் பார்ப்பதை உணர்ந்து, ''நீ எனக்கு முதல் முறையாக முத்தம் கொடுத்தியே... அதுபோல இன்று எனக்கு முத்தம் கொடு!'' என்றான்.

அவள் திடுக்கிட்டு விழித்தாள். அவளுக்கு எரிச்சலாக வந்தது. முதன் முறையாகக் கொடுத்தாலும், கடைசியாகக் கொடுத்தாலும் ஒரு மாதிரிதான் இருக்க முடியும். முணு முணுத்தாள்.

''என்ன முணுமுணுப்பு.. நான் சொல்வது காதில் விழவில்லையா?'' என்றான் அழுத்தமாக.

''என்னால் முடியாது!'' என்றாள் மெல்ல.

''ஏன்..?''

''...''

''உனக்கு என்னை அலுத்துவிட்டதா.. புதுசா தேடுதா உடம்பு?'' என்றான் இரக்கமேயில்லாமல்.

அவனை வெறித்துப் பார்த்தாள்.

''நான் கொடுக்கட்டுமா உனக்கு?'' என்று அவ்வளைப் பிடித்து முகமெங்கும் அழுத்த முத்தமிட்டான்.

அவன் குடித்திருப்பது தெரிந்தது. எதுவுமே பேசாமல் ..ங்கினாள்.

அவளின் நெஞ்சுத் துடிப்பு அவனுக்குக் கேட்டது.

அவள் முகத்தைப் பார்த்தான். அந்தக் கண்ணில் வெறுமை... னி தனக்கு எதுவுமே இல்லை.. எல்லாம் முடிந்து விட்டது ன்பது போல் இருந்தது.

அவன் எழுந்து, ''எனக்குப் பசிக்குது. தோசை ஊத்து.'' ன்றான்.

இவள் எழுந்து போய்த் தோசை ஊற்றி எடுத்து வந்தாள்.

ஏதோ உருட்டும் சத்தம் கேட்கவும் லெட்சுமி எழுந்து வந்தார். இவள் தட்டில் தோசையுடன் வரவும், 'ஏன்டி திருட்டு நாயே... நான் தூங்கியவுடன் தோசை ஊத்திச் சாப்பிடுறியா..? இப்படி திருட்டுத்தனமா சாப்பிடுவதற்கு நீ இந்த உயிரை விட்டு விடலாம்..'' என்று ஒரு அறை அறைந்தார். மகன் டைனிங் டேபிளில் உட்கார்ந்திருப்பதைக் கவனிக்காமல்.

அவர் அறைந்த வேகத்தில் அவள் கையில் இருந்த தட்டு கீழே விழுந்தது.

திவாகருக்கு ஒன்றும் புரியவில்லை. இங்கு என்ன நடக்குது? அம்மா ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று புரியாமல் பார்த்தான்.

இரண்டு நாட்களாகவே கீதா வந்து சொன்னதில் இருந்து லெட்சுமி அம்மாள் நிருபா மேலே கடுங்கோபம் கொண்டார். இப்படியும் ஒரு பெண்ணா என்று.

அவளை மாடிக்கு வேலை இல்லையென்றாலும் நான்கைந்து முறை அதைப் போய் எடுத்து வா.. இதைக் கொண்டு மொட்டை மாடியில் காய வை என்று அனுப்பிக் கொண்டே இருந்தார்.



நிருபா இவர் ஏதோ கோபத்தில் இருக்கிறார் என்று நினைத்துப் பேசாமல் சொன்னதைச் செய்தாள். ஆனால் தன்மேல்தான் இத்தனை கோபம் என்று புரியவில்லை.

மாடிக்கு வெயிலில் போய்ட்டு வந்ததில் நாக்கு வறண்டு விட்டது. குடிக்க ஃப்பிரிட்ஜைத் திறந்து ஐஸ் வாட்டரை எடுத்தாள். அதற்கு அந்த அம்மாள் திட்டினார்.

## 24



எடுத்ததைப் பேசாமல் மூடி உள்ளே வைத்துவிட்டு வந்து விட்டாள்.

காலையில் இருந்து இட்லி ஊத்து, சட்னி அரை என்று வேலை வாங்கினார். வேலையை முடித்து விட்டு இரண்டு இட்லியை வைத்து எடுத்துச் சாப்பிடும் போது. 'உன் வயிற்றில் இருக்கும் சனியன் யாரோடது?' என்றார்.

இட்லியைப் பிட்டு வாய்க்குப் போன கை அப்படியே நின்றது. எடுத்து வைத்து விட்டு வந்து விட்டாள்.

மதியம் சாப்பிடப் போகும் போது, ''வேலைக்காரங்களுக் குத்தான் சாதம் இருக்கு,'' என்றார்.

இப்படியே சாப்பாடு போடவில்லை. இரண்டு நாளாக.

''ஏன்டீ.. எவனுக்கோ பிள்ளையைச் சுமந்து கொண்டு என் வீட்டிற்கு வந்து என் பிள்ளையின் குழந்தை என்று சொல்லிச் சொல்லி சொத்து முழுவதும் எழுதி வாங்கவா திட்டம் போடுறே!''

''வீட்டை விட்டு வெளியே போடீ..'' என்று பிடித்துத் தள்ளினார்.

அதுவரை எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த திவாகர் இரண்டெட்டில் வந்து கீழே விழப் போனவளைப் பிடித்துக் கொண்டான்.

பின் அம்மாவிடம் திரும்பி, "அம்மா.. ஏன் இப்படிப் பண்றீங்க?" என்றான்.

அவ்வளவுதான். அவர் பிடித்துக் கொண்டார்.

"டேய் இவ யாருடா... நீ சொன்னதுக்காகத்தான் நான் இவளை நம்பினேன். இப்போ எல்லா உண்மையும் எனக்குத் தெரிஞ்சு போச்சு.. இவ ஒரு நடத்தை கெட்டவ.. எத்தனையோ பேர் கூட லாட்ஜில் தங்கி பணத்துக்காக இவ இப்படித்தான்... பணக்கார வீட்டுப் பையனைப் பார்த்துப் பிடித்துக் கொள்வாளாம்... அவர்கள் சொத்தை யெல்லாம் எழுதி வாங்கிக் கொண்டு அவர்களை விட்டு விடுவாளாம்... சொத்தைக் கொடுக்க வில்லையென்றால் கொன்று விடுவாளாம்...

"திவாகர்! நீ எனக்கு ஒரே மகன்டா.. நீ எனக்கு வேண்டும். நீ இவளுக்கு இல்லையென்றால் இன்னொரு புருசன். எனக்கு அப்படியா..? நீதான் என் வாழ்வின் ஆதாரமே.. நீ நல்ல பெண்ணப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோ.. இவ மட்டும் வேண்டாம்!" என்றார்.

இதைக் கேட்ட திவாகரே ஆடி விட்டான். "அம்மா... என்ன பேசறீங்க.. முதலில் நீங்க பேசுவதை நிறுத்துங்க," என்றான் கோபமாக.

"எதுக்கடா நான் நிறுத்தனும்.. ஒரு நல்ல குடும்பத்துப் பெண் கல்யாணத்துக்கு முன்னாடியே இப்படி இருப்பாளா...? இல்லை, வீட்டை விட்டுத்தான் வருவாளா? அவள் மேல் தப்பில்லையென்றால் இதுவரை உயிரோடு இருப்பாளா? நல்ல ஒழுக்கமுள்ளவள் அடுத்தவன் குழந்தையை வயிற்றில் சுமப்பாளா? இதில் இருந்தே தெரிய வேண்டாம்.. இவள் எப்படிப்பட்டவள், குடும்பம் எப்படிப்பட்டது என்று.. வீட்டை விட்டுப் போகச் சொல்லுடா," என்றார்.

அவள் டைனிங் டேபிள் மீது மயங்கிச் சரிந்தாள்.



"அம்மா, எதா இருந்தாலும், காலையில் பேசிக்கலாம்... இப்போ போய்ப் படுங்கள்," என்றான்.

அவன் அம்மா பேசியதை அவனாலேயே தாங்க முடியவில்லை. அவள் எப்படித் தாங்குவாள்?

சிறிது நேரம் அவள் அறையில் இருந்து விட்டு, அவன் அறைக்குச் சென்று விட்டான்.

இரவு மணி மூன்று இருக்கும். அவன் கதவு தட்டும் சத்தம் கேட்டு எழுந்தான்.

கதவைத் திறந்து பார்த்தான். அவன் அம்மா நின்றிருந்தாள். இவன் பதட்டமாக, "என்னம்மா?" என்றான்.

"திவாகர், அவளைக் காணவில்லைடா... மழை வேறு பெய்கிறது!" என்றார்.

திவாகருக்குச் சர்வமும் ஆடி விட்டது. கீழே இறங்கி ஓடினான். அவள் அறையில் வேறு எங்கும் இல்லை. கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தான். மழை வானத்தைப் பிளந்து கொண்டு கொட்டுவது போல் கொட்டியது. மின்னல், இடி, காதைப் பிளந்தது.

காற்று சுழற்றிச் சுழற்றி அடித்தது. வெளிக் கேட்டைப் போய்ப் பார்த்தான். பூட்டித்தான் இருந்தது. மீண்டும் தோட்டத்திற்கு ஓடினான். அங்குள்ள பெஞ்சில் ஒரு சிலை போல அமர்ந்திருந்தாள்.

அந்த நிலையில் அவளைப் பார்த்த அவன் இதயம் ஒரு நொடி நின்று பின் இயங்கியது.

பக்கத்தில் போய் அவள் தோளில் கை வைத்தான். அவள் திரும்பவில்லை. குனிந்த தலை நிமிரவில்லை. அவளின் நெஞ்சு கொதிப்பு மழையில் நனைந்தும் அடங்கவில்லை. அவளை நெஞ்சோடு சேர்த்து அப்படியே அணைத்துக் கொண்டான்.

"நிருபா, வா வீட்டிற்குள் போகலாம்," என்றான்.

அவள் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். மின்னல்கள் கண்ணைப் பறித்தன. பக்கத்தில் இருந்த வாழை மரங்கள் காற்றில் சாயந்தன. எதையும் அவள் உணரும் நிலையிலில்லை.

எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான். அவள் அசையவில்லை. அவன் அம்மா போனவனைக் காணவில்லை என்றதும் தோட்டத்துக்கு வந்தார். இவர்கள் இருப்பதைப் பார்த்து விட்டு, "உள்ளே கூட்டி வாடா.. வயிற்றுப் பிள்ளைக்காரி இடிச் சத்தம் கேட்கக் கூடாது.. இந்த மழையும் ஆகாது!" என்றார்.

இப்படியே அவனும் மழையில் ஒரு மணி நேரம் நின்றான். இவள் வரவில்லை. அவளைப் பிடித்துத் தூக்கினான். அவளின் முயற்சி இல்லாமல் தூக்குவது, கஷ்டமாக இருந்தது. இருந்தாலும் தூக்கிக் கொண்டு அவள் அறைக்கு வந்தான்.

அவள் பார்வை இலக்கற்று வெறித்தது. அவளைப் பிடித்து உலுக்கினான். பிறகு கன்னத்தில் ஓங்கி அறைந்தான். ஈரத்தோடு அறையவும் சுளீர் என்று பட்டு விட்டது. 'ஆ'.. என்று கன்னத்தைப் பிடித்துக் கொண்டாள்.

"முதலில் துணியை மாற்று!" என்றான்.



## 25

"பாருடா நீ.. சொல்வதைக் கேட்க அவள் என்ன நீ தாலி கட்டிய பொண்டாட்டியா..? பணத்துக்காக வந்தவள்தானே.. நீ சொல்வதை எப்படிக் கேட்பாள்.."

"அம்...மா.. நீங்கள் முதலில் வெளியே போங்கள்... முதலில் அவள் துணி மாற்றட்டும்," என்றான் கோபமாக.

அவர் வெளியே போய்விட்டார்.



இவன் பீரோவைத் திறந்து நைட்டி ஒன்றை எடுத்துக் கொடுத்தான்.

அவள் எதையும் உணராதவள் போல் வாங்கி அணிந்து கொண்டாள்.

அவள் சடையைப் பிரித்துக் காயவிட்டான். அவளை அப்படியே தன் மடி மீது படுக்க வைத்து முதுகைத் தடவிக் கொடுத்தான்.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

அந்த வாரத்தில் லெட்சுமி அம்மாள் தன் தம்பிக்கு ஃபோன் பண்ணி வரச் சொன்னார். அவரும் குடும்பத்தோடு வந்தார்.

லெட்சுமி மகனிடம், "நான் உன் மாமாவை வரச் சொல்லியிருக்கேன்.. உனக்கும் அவர் பெண் மல்லிகாவுக்கும் நிச்சயதார்த்தம். கல்யாணத்தை எப்போ வைத்துக் கொள்ளலாம் என்று சொல். நான் அவர்களிடம் சொல்ல வேண்டும்," என்றார்.

அவனுக்கு வந்ததே கோபம். "யாரைக் கேட்டு இந்த ஏற்பாட்டைச் செய்தீங்க? என்னால் இதுக்கு ஒத்துக்க முடியாது.."

"ஏன் ஒத்துக்க முடியாது. நான் அவளைக் கல்யாணம் செய்ய ஒருபோதும் ஒத்துக் கொள்ள மாட்டேன்.."

"அம்மா, நீங்கள் தேவையில்லை என்று சொல்லுமளவிற்கு என்னை நிறுத்தி விடாதீங்க.. எனக்கு அவதான் வேண்டும். அவ மட்டுந்தான் வேண்டும். அவளைக் கவனிக்காவிட்டால் என்றால் கூட பரவாயில்லை. சித்திரவதை செய்ய வேண்டாம்... அவளுக்கு ஏதாவது ஒன்று என்றால் என்னை உயிருடன் பார்க்க முடியாது.."

லெட்சுமி வீட்டிற்குத் தம்பி, தம்பி பெண் வந்தவுடன் நிருபாவிடம், "இவள்தான் என் மகனுக்குக் கல்யாணம் செய்யப் போகும் பெண். நீ இங்கு இருப்பதால் தான் அவன்

கல்யாணத்திற்குத் தயங்குகின்றான். இன்று பேசி முடித்து தட்டு மாற்றிவிட்டு பின் கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்கிறான்.

''நாங்கள் பேசும் போது நீ இங்கிருக்க வேண்டாம்... தோட்டத்துக்குப் போய் விடு,'' என்றார்.

அவளும் சரி என்று தோட்டத்திற்குப் போனவள்தான். இன்னும் உள்ளே வரவில்லை. கொய்யாப் பிஞ்சு, மாம் பிஞ்சு, என்று பிடுங்கித் தின்றாயிற்று. பசி வயிற்றைப் போட்டுப் பாடாய்ப் படுத்தியது. முகத்தைக் கழுவிக் கொண்டு தலையைச் சீவலாம் என்று சீப்பை எடுத்துக் கொண்டு போனாள்.

தலையைச் சீவும்போது சீப்பு கீழே விழுந்து விட்டது. அதைக் குனிந்து எடுக்க முடியவில்லை.

அதைப் பார்த்துக் கொண்டு வந்த திவாகர் குனிந்து சீப்பை எடுத்துக் கொடுத்தான்.

அவள் முகம் சோர்வுற்றிருப்பதைப் பார்த்து விட்டு, ''வெளியே போயிட்டு வரலாமா நிருபா?'' என்றான்.

அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள். இதுவரை அவளை அவன் இப்படி வெளியே கூப்பிட்டதில்லை. வெளியே கூட்டிப் போய்ச் சாப்பிட எதுவும் வாங்கிக் கொடுப்பானா..? பசி எவ்வளவு கொடுமையானது என்று இப்போது புரிந்தது.

''சரி,'' என்று தலையாட்டினாள்.

''போய் டிரஸ் மாத்திட்டு வா,'' என்றான்.

காரில் ஏறப் போனவளிடம், ''செருப்புப் போடலையா..?'' என்றான்.

''செருப்பு போட முடியாது,'' என்றாள்.

''எங்கே போகலாம்?'' என்றான்.



எப்படிச் சொல்வது? சாப்பிடணும். ஹோட்டலுக்குப் போங்க என்று. இவள் பதில் சொல்லுமுன் கார் ஒரு ஹோட்டலுக்குச் சென்றது.

சாப்பிட வாயில் வைக்கும்போது, அவள் கை நடுங்கியது. இந்தச் சாப்பாட்டிற்காக.. என்று நினைக்கும் முன் கண்ணீர் சாப்பாட்டில் உதிர்ந்தது.

''நிருபா, என்ன இது... இந்த இடத்தில் நீ இப்படி அழலாமா?'' என்றான் கண்டிக்கும் குரலில்.

சாப்பிட்டுவிட்டு காருக்கு வந்தனர். இவளுக்கு ஏதாவது இனிப்பு சாப்பிடணும் போல் இருந்தது.

''ஏங்க, எனக்கு இனிப்பு சாப்பிடணும் போல் இருக்கு. வாங்கித் தாரீங்களா?'' என்றாள்.

அவன் இதயத்தில் சுரீர் என்றது. இத்தனை மாதத்தில் இன்றுதான் இப்படிக் கேட்கிறாள். ஆனால் இனிப்புச் சாப்பிடக் கூடாதே...

''இனிப்பு நீ சாப்பிடக் கூடாதில்லையா...?'' என்றான்.

''நான் சீக்கிரம் செத்துப் போயிடுவேன் என்றுதானே இன்று கூட்டி வந்து சாப்பிட வாங்கிக் கொடுத்தீங்க... அதுபோல இனிப்பு வாங்கித் தாங்களேன்,'' என்றாள்.

அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

''என்னை கொல்லாதே நிருபா. இனி நீ அந்த வார்த்தையைச் சொல்லாதே. என்னால் தாங்க முடியாது.'

''நா.. சாவதற்குப் பயப்படலேங்க. அந்த நாளை நான் சந்தோசமா வரவேற்கிறேன். நான் கொஞ்சங்.. கொஞ்சமாய் உங்கள் கண் முன்னாலேயே சாவணும்.. அதை நீங்கள் பார்த்து ரசிக்கணும்... உயிர் பிரிந்த என் உடலை நீங்கள் பார்த்து

சந்தோசப்படணும் என்பதுதான் என் ஆசை. இல்லையென்றால் நான் ஏன் இத்தனை மாதம் உயிரோடு இருக்கப் போகிறேன். உங்கள் அம்மா என்னை வேசி என்று சொல்லியும், இப்படிச் சாப்பிடவும் அவமானமா இருக்கு.

''இந்தக் குழந்தையை உங்களிடம் பெற்றுத் தந்து விடுகிறேன். நீங்கள் வளர்த்துக் கொள்ளுங்கள். எனக்காக எதுக்கு நீங்கள் கல்யாணத்தைத் தள்ளிப் போடணும். நான் வேணா ஹாஸ்பிட்டலில் தங்கிக்கட்டுமா..?'' என்றாள்.

அவன் எதுவும் பேசாமல் இறங்கிச் சென்று இனிப்பு வாங்கி வந்தான். வரும்போது ஒரு சின்னப் பையன் வண்டி ஓட்டி வந்து அவன் மீது மோதி விட்டான்.

வண்டி வருவதைப் பார்த்த திவாகர் மறுபுறத்தில் குதித்து விட்டான். அது லேசான சரிவு. ஆதலால் கீழே உருண்டு விட்டான்.

## 26



அதைப் பார்த்த நிருபா.. ''திவா..'' என்று கத்தி விட்டாள். அவன் விழுந்த வேகத்தில் எழுந்து வந்துவிட்டான்.

''எனக்கு ஒண்ணுமில்லே நிருபா!'' என்றான்.

அவள் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டாள். வியர்த்துக் கொட்டியது.

''எனக்கு அடிபடலேடா. எதுக்கு இப்படி பயப்படுறே..'' என்று அவள் தலையைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான்.

அவள் அப்படியே அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கதறி விட்டாள்.



''எதுக்கு இப்படி பாசத்தைக் காட்டுற மாதிரி நடிக்கிறீங்க. நான் சொன்ன ஒரு பொய்க்கு என்னை ஏன் இப்படி சித்திரவதை செய்றீங்க... என்னாலே தாங்க முடியலியே.. அம்மா.. எனக்கு எப்போம்மா விடுதலை. நான் செத்தாத்தான் இவங்க மனசு குளிரும்!'' என்று அழுதாள்.

அவன் அப்படியே கல்லாய் இறுகிப் போய் அமர்ந்திருந்தான்.

லெட்சுமி திவாகரைக் கேட்காமலேயே நிச்சயதார்த்தப் பத்திரிகை அடித்து விட்டாள்.

திவாகர் கத்தினான். ''இப்ப தம்பி பொண்ணு.. தம்பி பொண்ணுனு தலையில் வைத்து ஆடுறே... அப்போ எங்கே போனாங்க உன் தம்பி.. நாம் கஷ்டப்படும்போது ஒரு உதவி செய்யாதவர். இப்போ பணம் வந்ததும் பொண்ணு கொடுத்து உறவாட வந்து விட்டாரா?''

''ஒரு கல்யாணத்திற்குப் போயிருந்தபோது பக்கத்தில் இருந்தவர், இது யார் என்று கேட்டதுக்கு என் தங்கை மகனோ இல்லை மருமகனோ என்று சொல்லவில்லை. என் பக்கத்தில் நின்ற பெரியப்பாவைக் கைகாட்டி இவரோட தம்பி மகன் என்றார். வீட்டுக்குப் போனவனுக்கு ஒரு நேரச் சோறு போடவில்லை. இப்போ மட்டும் மூச்சுக்கு முன்னூறு தடவை மாப்பிள்ளை... மாப்பிள்ளை என்கிறார். அப்போ எங்கே போயிற்று பாசம்.. இந்த உறவு. இதே நாம் கிராமத்தில் நானும் கூலி வேலை செய்து கொண்டிருந்தால் இவர் வந்து பொண்ணு கொடுப்பாரா..? எல்லாம் பணம்.. மனிதனை மதிக்காதவர், உறவை மதிக்காதவர், பணத்திற்கு மட்டும் மதிப்புக் கொடுப்பவர் வீட்டில் பெண் எடுத்தால் என்ன மரியாதை கிடைக்கும் எனக்கு. எனக்கு மரியாதை இல்லாமல், என் பணத்துக்கு மட்டுந்தானா.. எனக்கு இந்த உறவு வேண்டாம்!'' என்றான் முடிவாக.

அவன் அம்மா விடுவதாகயில்லை.

"இப்ப வந்திருப்பவள் மட்டும் எதுக்காக வந்திருக்கா.. உன் சொத்துக்காகத்தானே.. இப்ப இவ பணத்துக்கு அலையலையா?"

அவன் வாய் அடைத்துப் போயிற்று. இவர்களிடம் இந்த உண்மைய யார் சொன்னது? இவங்களுக்கு எதுவரை நடந்தது தெரியும் என்று தெரியாமல் வாய்விட முடியாமல் தவித்தான்.

"அவ பணத்துக்காக வரலைம்மா.. என் கட்டாயத்திலும், அவர் அப்பா நிர்பந்தத்திலும் தான் வந்திருக்கா.. இதில் இவளுக்கு உடன்பாடோ சம்மதமோயில்லை... யாரும் இவள் சம்மதத்தைக் கேட்டு நடக்கவில்லை. எங்கள் இழுப்பிற்கு இவள் ஆடும் பொம்மை. அவ்வளவுதான்!" என்றான்.

"காரணம் எல்லாம் ஒன்றுதானே.. பணத்துக்காகத்தானே.. இதில் பிடிக்குது, பிடிக்கலே என்ன இருக்கு.. நாம் பேசுவது அவள் விருப்பத்தைப் பற்றி இல்லை. பணத்துக்காக நீ சொன்னே... அப்பா சொன்னார் என்று சம்மதித்தவள் எதை வேணாலும் செய்வாள். அவள் அப்பா சொன்ன மாதிரி, நீ சொன்னா அது மாதிரி போவாளா?"

அதிர்ச்சியில் "அ..ம்..மா..மா.." என்று கத்தி விட்டான். "வயசுக்குத் தகுந்த மாதிரி பேசுங்க. ஒரு மகனிடம் பேசுகிறோம் என்ற நினைப்பு இருக்கட்டும்."

"எதா இருந்தாலும் வீட்டை விட்டு அனுப்பு.. இனி அவள் இந்த வீட்டில் இருக்கக் கூடாது!" என்றார் கறாராக.

"நான் அவளை அனுப்ப முடியாது. நீங்கள் வேண்டுமானால் வீட்டை விட்டுப் போங்கள். நான் இது மாதிரி சொல்லக் கூடாது என்று தான் நினைத்து இத்தனை நாள் பொறுமையாக இருந்தேன். என்னைப் பேச வைத்து விட்டீங்க!" என்றான்.

"பெத்த என்னை விட நேற்று வந்தவள் உனக்குப் பெரிதா போய்விட்டதா.. இந்த ஒழுக்கம் கெட்டவளுக்காக நான் வீட்டை



விட்டுப் போகணுமா..? பணம் உன்னைப் பேச வைக்கிறதா.. இல்லை, அவள் உடம்பு உன்னைப் பேச வைக்குதா? அப்பவே அவள் சொன்னாள்.. அவள் உங்களை வீட்டை விட்டு அனுப்பச் சொல்லுவாள் என்று.. அது மாதிரியே சொல்லி விட்டாயே."

"அம்மா, தயவு செய்து வார்த்தைகளை விடாதீங்க.. உங்களுக்கு யார் சொன்னது? அவள் நடத்தை கெட்டவள் என்று.."

"அவ அண்ணிதான்டா சொன்னா.. இது மாதிரி ஏற்கெனவே இரண்டு கல்யாணம் ஆனவளாமே... பணத்தைப் பிடுங்கிக் கொண்டு கொலையும் செய்து விடுவாளாம்... நீ மூன்றாவதாம்.. அதான் அவளை வீட்டில் சேர்க்காமல் வீட்டை விட்டு அனுப்பி விட்டார்களாம்.." என்றார்.

திவாகர் வாயடைத்துப் போனான். இது அவ அண்ணியோட வேலைதானா? அடிப்பாவி! உனக்கென்னடி அவ தீங்கு செய்தா? அவளாலே தானே நீங்கள் ஊருக்குள் நடமாடுறீங்க... அப்படியிருந்தும் அவளை ஏன் இப்படி வாட்டுறே.. ஆத்திரம் வந்தது. அவள் அண்ணி கீதாவை நினைத்து.

இப்படி ஒரு அப்பா, அண்ணன், அண்ணி! எதுவும் பேச முடியாமல், 'இந்தக் கல்யாணத்தை நிறுத்துங்கள் முதலில். இல்லையென்றால் நான் என்ன முடிவெடுப்பேன் என்று சொல்ல மாட்டேன்... செய்து காட்டுவேன்... முதலில் அவர்களை வீட்டை விட்டுப் போகச் சொல்லுங்கள்!" என்றான்.

"ஏன்டா தெருவிலே கிடந்த எவளோ ஒருத்தி இந்த வீட்டோட இருக்கணும். நாங்கள் உரிமை உள்ளவர்கள் வீட்டை விட்டுப் போகணும்.. அவள் சொல்லிக் கொடுத்தாளா?" என்றார், அவரும் சளைக்காமல்.

அம்மா இப்படிப் பேசிக் கேட்டதில்லை. மீண்டும், "ஏம்மா நான் சொல்வதை நம்ப மறுக்கிறீங்க... அறிமுகமே இல்லாத

ஒருத்தி சொல்வதைக் கேட்டுக் கொண்டு என்னிடம் சண்டை போடுறீங்க.. உண்மையிலேயே நிருபாவைத் தப்பானவள் என்று சொல்றீங்களா.. இல்லை உங்கள் தம்பி மகளை என் தலையில் கட்ட நீங்கள் போடும் வேஷமா... அவள் மீது இப்படிப் பழி போட்டால்தான் நான் நம்புவேன் என்று நினைக்கிறீங்களா...? அவளோட இந்த நிலைமைக்கு முழுக் காரணம் நான்தான்..''

''எல்லாம் சரிடா. எனக்கு ஒரு முடிவு சொல்..''

திவாகரால் இதற்கு ஒரு முடிவு சொல்ல முடியவில்லை.

''நான் வேலை விசயமாக வெளியூர் போகிறேன். வர மூன்று நாள் ஆகும். நான் வந்த பிறகு இதைப்பற்றிப் பேசி நல்ல முடிவா எடுக்கலாம். நான் வரும்வரை இதைப் பற்றி யாரும் பேச வேண்டாம்,'' என்று சொல்லிவிட்டான்.

திவாகர் கிளம்பி நிருபா அறைக்கு வந்தான்.

''நிருபா..'' என்றான்.

நிமிர்ந்து பார்த்தாள். அவள் விழிகளை உற்றுப் பார்த்தான். அது இலக்கின்றி எங்கோ வெறித்தது. இப்போ நடந்ததை எல்லாம் கேட்டுத்தானே இருப்பாள்.

''நான் வெளியூர் போகிறேன்.. சீக்கிரம் வந்து விடுகிறேன்,'' என்றான்.

இது மாதிரி சொல்வது இதுதான் முதல் தடவை.

இத்தனை நாள் இல்லாமல் இப்போ ஏன் என்னிடம் சொல்றீங்க என்பது போல் பார்த்தாள்.

''நிருபா! நல்லா யோசனை பண்ணி முடிவு செய்து வை. இங்கு நடக்கும் பிரச்சனை உனக்குத் தெரியும். நான் உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு நீதான் உடனே முடிவெடுக்க வேண்டும். நான் வரும்போது நல்ல முடிவாகச் சொல்.''



அருவருப்பில் அவள் முகம் சுருங்கியது. முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவனுக்கு இந்த அலட்சியத்தைத் தாங்க முடியவில்லை. கோபம் வந்தது. இது கோபப்படும் நேரமில்லை என்று குரலைத் தணித்து மீண்டும், ''நான் கேட்டேனே...'' என்றான்.

''எதுக்கு ஏற்கெனவே இரண்டு கல்யாணம் செய்து கொண்டவளை மூன்றாவதாகக் கேட்கிறீங்க... பிரஷ்ஷா ஒண்ணு கிடைக்கலையா..? அதோட எங்க வீட்டு வேலைக் காரனைக் கல்யாணம் செய்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை. வேலைக்காரன் வேலைக்காரனாகவே இருங்க!'' என்றாள் கொதிப்பாக.

அவன் ஒற்றைப் புருவம் மேலேறியது. பார்வை அவள் முகத்தில் நிலைத்தது. உதடு ஏளனமாக வளைந்தது.

'ஏன் இத்தனை மாதம் என்கூட இருக்கையில் வேலைக்காரன் என்று தெரியவில்லையா? என் பணத்தை உன் அப்பா கை நீட்டி வாங்கும்போது வேலைக்காரன் என்று தெரியவில்லையா..? சொத்தை யெல்லாம் நான் திருப்பித் தரும்போது நான் வேலைக்காரன் என்று தெரியவில்லையா..?' என்று கேட்பது போல் இருந்தது பார்வை.

அவன் வெளியே சென்று விட்டான்.

அவன் அம்மா மறுபடியும் அவனிடம் கேட்டார். ''மாமா இங்கு நீ வரும்வரை இருக்கச் சம்மதமா?'' என்றார்.

''சம்மதம்,'' என்றான்.

வெளியே வந்த நிருபாவின் காதில் இந்த வார்த்தை மட்டும் விழுந்தது. அப்போ அவளை மணக்க மனதில் பிரியம் இருக்கப் போய்த்தானே சம்மதம் என்று சொல்கிறான். பிறகு எதற்கு என்னிடம் வந்து நல்லவன் மாதிரி நடக்கிறான். கல்யாணம்

செய்து கொள்கிறாயா என்று. நான் சம்மதம் சொல்லியிருந்தால் என்ன செய்வான்? பிறகு எதுவும் பிரச்சனை பண்ணுவேன் என்று இப்படிக் கேட்டு முடிவு பண்ணினானோ.. சே.. நான் செத்தாலும் உன் மூஞ்சியில் விழிப்பேனா.. வஞ்சகக்காரா... பயத்தில் தெரியாமல் செய்த தப்புக்கு எத்தனை பெரிய தண்டனை கொடுத்து விட்டான்.

அவள் மனச்சாட்சி கேட்டது. அவனா.. தண்டனை கொடுத்தான். அவனிடம் தள்ளித் தண்டனை கொடுத்தது யாரு?

தானாகவே அவனிடம் தள்ளி விடும் நிலையில் வைத்து விட்டானே..

ஏன் உன் அப்பா, அண்ணன் என்றவுடன் தப்பு பெரிதாகத் தெரியவில்லையா? அவன் கேட்டவுடன் போடா நீயும் உன் பணமும். எனக்கு என் பெண்தான் உசத்தி இந்த உலகில்.. என் சொத்துத்தானே வேண்டும்.. இந்தா எடுத்துக் கொள் என்று அவன் மூஞ்சியில் தூக்கி எறிந்து விட்டுத் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிவிட வேண்டியதுதானே... இந்தப் பரந்த உலகில் பிழைப்புக்கா பஞ்சம்... கூலி வேலை செய்தாவது பிழைத்துக் கொள்வோம்... இப்போ நயவஞ்சகன் யாரு.. இவனா.. உன் அப்பனா..?

பதில் சொல்ல முடியாமல் கண்களை இறுக மூடிக் கொண்டாள். எல்லோருமே மோசம்தான் என் வாழ்வில்.. என் அம்மா இருந்திருந்தால் எனக்கு ஏதாவது வழி கிடைத்திருக்கும். அவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொன்னார்கள். பொண்ணுன்னா இப்படித்தான் இருக்கணும் என்று. நான் கேட்கவில்லை. இப்போ அனுபவிக்கிறேன்.. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்து என்ன பயன்...

நான் அன்று செய்த தப்பு என் அம்மாவுக்குத் தெரிந்திருந்தால் என்னைத்தானே கண்டித்திருப்பார்கள்.. அப்படி நடந்திருந்தால் இந்தப் பிரச்சினைக்கே வழியில்லை.



27



திவாகர் சென்றவுடன் லெட்சுமியும், அவர் தம்பி, அவர் மனைவி எல்லோரும் ஒரு அறையில் கூடிப் பேசினர். "திவாகர் வருவதற்குள் இவளை வீட்டை விட்டு அனுப்ப வேண்டும் என்று. இவளிடம் கோபமாகப் பேசியோ, திட்டியோ.. அனுப்ப முடியாது. நயமாகப் பேசித்தான் அனுப்ப வேண்டும்.. அதை நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றார்.

மறுநாள் காலை நிருபாவிடம் லெட்சுமி, "இங்கே பார் நிருபா.. இந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க அவனுக்கு முழுச் சம்மதம். நீ இந்த வீட்டில் இருப்பதால்தான் அவன் தயங்குகிறான். அதனால் நீ இந்த வீட்டை விட்டுப் போய்விடு. உன்னால் எங்கள் வீட்டில் எத்தனை பிரச்சனை என்று பார். ஏன் எங்கள் நிம்மதியை நீ கெடுக்கிறே..? உங்களுக்குள்ள என்ன பிரச்சனையோ.. அது முடிந்து விட்டது.. அவன் வருவதற்குள் நீ இந்த வீட்டை விட்டுப் போய்விடு. இருந்தால் உனக்குப் பிரச்சனைதான்!" என்று அவள் முகத்தைப் பார்த்தார்.

அவளுக்கும் இந்த உலகில் வாழவே பிடிக்கவில்லை. வெறுத்து விட்டது. இனி யாருக்காக நான் வாழ வேண்டும். பெத்த அப்பனே பணத்தை வாங்கிக் கொண்டு உனக்கும் இந்த வீட்டிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று அனுப்பி விட்டார். இனி இந்த வீட்டில்தான் எந்த உரிமையோடு இருக்க முடியும்? அவர்கள் சொல்வது போல் உனக்குத் தாலி கட்டி விட்டானா? நான் உன்னை வீட்டை விட்டு விரட்டுகிறேன் என்று சொல்வதற்கு. என் தம்பி என் சொந்த பந்தத்திடம் போய்ச் சொன்னால் என்னவாகும்? இதுமாதிரி ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டான் என்று. எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை உன்னை. எந்த தாய்தான் ஒரு நடத்தை கெட்ட பெண்ணைத் தன் மகனுக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்று விரும்புவாள். உன்னால் என்னை வீட்டை

விட்டு வெளியேறச் சொல்றான். நான் எங்கு போவேன்? பெத்த மகனை விட்டு என் இடத்தில் இருந்து நீ யோசித்துப் பார்!" என்றார்.

அவளும் யாருக்குமே பிடிக்காமல் இங்கு இருந்து என்ன பண்ணப் போகிறோம் என்று. "வீட்டை விட்டுப் போய் விடுகிறேன்!" என்றாள்.

ஒரு பெண் வீட்டை விட்டு வந்து இப்படி இருந்தால் என்ன மரியாதை கிடைக்கும் என்று தெரிந்து கொண்டாள். எங்கு போவது? என்னால் தாய், மகனுக்குள் பிரச்சனை வேண்டாம். அவன் அம்மா சொல்வது போல் அவளிடம் சம்மதம் கேட்கிறேன். முடியாது என்று அவள் வீட்டை விட்டுப் போய்விட்டால், இவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்றான். உன் கையில்தான் இருக்கு எங்கள் வாழ்க்கையின் கயிறு. உன் ஒருத்திக்காக என் சொந்த பந்தத்தை ஒதுக்க முடியுமா? நீ வீட்டை விட்டுப் போகவில்லையென்றால் நாங்கள் உயிரை விட்டு விடுவோம். நீயும் அவனும் சந்தோசமாக இருங்க.. நான் செத்த பின்னாடி சொத்துக்காக என் பிள்ளையைக் கொன்னு விடாதே.. உன்னிடம் மடிப்பிச்சை கேட்கிறேன்.. என் மகனைத் திருப்பிக் கொடு!" என்று கண்ணீர் விட்டார்.

அவளுக்கு அந்த நேரத்தில் சிரிப்புத்தான் வந்தது. அவள் என்னமோ இவனைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவது போலவும், தான் அவனைக் கட்டிப் போட்டு வைத்திருப்பது போலவும், என் பேச்சைத் தட்டாமல் கேட்பது போலவும் இவர்கள் பேசுகிறார்கள். இவனை என் மனம் எவ்வளவு வெறுக்கிறது என்று தெரியாமல். இவளுக்கு ஒரு இடம் கிடைத்தால் என்றோ போயிருப்பாள்... நான் யாரிடம் என்ன சொல்ல முடியும்? ஆனால் எங்கு தங்குவது?

முதலில் வீட்டை விட்டுக் கிளம்பி விடுவோம். நேரம் கிடையாது. இரண்டு நாள் என்றான். ஒரு நாள் ஓடி விட்டது.



நாளை காலை வந்து விடுவான். வந்து விட்டால் எதுவும் செய்ய முடியாது. என்னால் அவனுக்கும் எதுக்கு தயக்கம். நான் போய்விட்டால் பிரச்சனையில்லாமல் கல்யாணம் பண்ணிக் கொள்வான். நான் இருக்கவும் தான் இப்படி நடிக்கிறான்.

அவன் அம்மா சொல்கிறார். நான் என்னம்மா செய்யட்டும்.. இவ வேறு இங்கு இருக்கிறாள் என்று புலம்புகிறான் என்கிறார். உன் குழந்தையை நான் மனதார ஏற்றுக் கொள்ள மாட்டேன்... உனக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று சொல். என் மகனுக்குத் தெரியாமல் தருகிறேன். நீ போய்விடு கண் காணாமல்.

அவளை ஒரு லட்டர் மட்டும் எழுதி வச்சுட்டுப் போ.. இதோ நாங்களே எழுதி விட்டோம்... நீ கையெழுத்து மட்டும் போடு என்று வாங்கி வைத்துக் கொண்டார்.

ஒரு கிராமத்துப் பெண்மணிக்கு என்னவெல்லாம் தெரிந்திருக்கு.. நாளை தன்னை எதுவும் சொல்லிவிடக் கூடாது என்று எத்தனை முன்னெச்சரிக்கை.

படித்துக்கூடப் பார்க்காமல் கையெழுத்துப் போட்டாள். படித்து என்ன ஆகப் போகிறது. எனக்கும் இங்கிருக்க விருப்பமில்லை. என்ன எழுதியிருந்தால் என்ன. ஆனால் இந்த நிலைமையில் வீட்டை விட்டுப் போகச் சொல்கிறார்களே... ஏன் உன் அப்பா அனுப்பவில்லையா...? மனச்சாட்சி கேட்டது.

எந்தப் பொருளும் எடுத்துக் கொள்ளாமல் செலவுக்கு மட்டும் பணம் வாங்கிக் கொண்டு வீட்டை விட்டுப் போனாள்.

வெளியே வந்ததும் இருள் அவளைப் பயமுறுத்தியது. என் வாழ்வே இதை விட இருட்டா இருக்கு.. வெளிச்சமே இல்லாத இருளை நோக்கி என் வாழ்க்கை பயணிக்கிறது. என்னைப் படைக்கும் போது கடவுள் இருளில் இருந்திருப்பாரோ... அதான் என் வாழ்வில் வெளிச்சம் என்பதற்கே இடமில்லையா? இருளை

நோக்கிப் பயணிக்கும் நான் வெளிச்சத்தைப் பார்க்கும் முன்னரே என் வாழ்க்கை முடிந்து விட வேண்டும். இந்தக் குழந்தை பிறந்து அதுவும் அனாதை மாதிரி தெருவில் அலைய வேண்டுமா...?

ரயில்வே ஸ்டேசனை நோக்கிப் போனாள் ஒரு ஆட்டோவில்.. எந்த ட்ரெயின் இருக்கோ ஏறி விடுவோம்.. கண் காணாமல் வேறு ஊருக்குப் போய் இந்த உயிரை விட்டு விடுவோம்... என்று ஒரு மும்பை டிரெயினில் ஏறினாள்.

மும்பை போகும் முன்னரே ஒரு இடத்தில் இறங்கினாள். அது ஒரு கிராமம் மாதிரி இருந்தது. இவள் தன் வாழ்வை முடித்துக் கொள்வோம் என்று ஒரு தனிப் பாதையில் சென்றாள்.

இவளுக்கு மூச்சு வாங்கியது. ஒரு மரத்தடியில் நின்றாள். சுற்றிலும் தோட்டம். ஒரு பெரிய கிணறு பக்கத்தில் தெரிந்தது. ஒரு பெண் வேகமாகக் கிணற்றை நோக்கி ஓடினாள். இவள் அவளைப் பார்த்ததும் தப்பான முடிவுடன்தான் கிணற்றை நோக்கிச் செல்கிறாள் என்று தான் எதற்கு இங்கு வந்தோம் என்பதை மறந்து வேகமாக ஓடி அவளைப் பிடித்தாள்.

அவள் திமிறிக் கொண்டு குதிக்கப் போனாள். கன்னத்தில் ஓங்கி ஒரு அறை அறைந்தாள். அவள் கன்னத்தைப் பிடித்துத் திகைத்து நிற்கையிலேயே பிடித்துத் தாதாவென இழுத்து வந்து பக்கத்தில் கிடந்த கல்லின் மேல் உட்கார வைத்தாள்.

அவள் நடந்ததை உணர்ந்து முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

அவள் அழட்டும் என்று இவளும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

நிருபாவும் தன்னிலை உணர்ந்தாள். தான் என்ன முடிவெடுத்து இங்கு வந்தோம். இப்போ என்ன செய்து கொண்டிருக்கிறோம். தன் முடிவு என்ன? இவள் சென்ற பிறகு



தன்னை மாய்த்துக் கொள்ளலாமா? இவள் யார்? இந்தச் சின்னஞ்சிறு வயதில் இவளுக்கு என்ன பிரச்சனை? எல்லாம் காதலாகத்தான் இருக்கணும். இல்லை, எவனாவது ஏமாற்றி இருக்கணும் என்று நினைத்தாள். இந்த வயதில் வேறு என்ன பிரச்சனை இருக்கப் போகிறது..?

சர்ரென ஒரு கார் வந்து நின்றது. அதில் இருந்து ஒரு நடுத்தர மனிதரும், ஒரு இளைஞனும் இறங்கி வேகமாக ஓடி வந்தனர்.

அந்த மனிதர், ''மகளே.. என் கண்ணே! ஏம்மா இந்த முடிவு உனக்கு.. அப்பா நான் இருக்கும்போது?'' என்று அவளைக் கட்டிக் கொண்டு அழுதார்.

அந்த இளைஞன் அவள் அண்ணன் போல. அவனும் தங்கையின் தலையைத் தடவிக் கொடுத்தான். கண்களில் கண்ணீர். அவள் அழுகை ஒருவாறு நிற்கவும் சுற்றுப்புறச் சூழ்நிலையை உணர்ந்தனர். பக்கத்தில் நிற்பவளைப் பார்த்து வியந்தனர். நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும் இவள் யார் என்று நினைக்கும்போதே.. தோட்டத்தில் வேலை செய்த ஒருவர் ஓடி வந்தார் மூச்சிரைக்க...

மகளிடம், ''ஷோபா! யாரும்மா இந்தப் பெண்..? உனக்குத் தெரிந்தவளா?'' என்றார்.

''இல்லேப்பா.. இவங்க யாருன்னே எனக்குத் தெரியாது. நான் கிணற்றில் குதிக்கப் போகும்போது இவங்கதான் ஓடிவந்து என்னைத் தடுத்தாங்க!'' என்றாள்.

தோட்டத்தில் வேலை செய்பவரும், ''ஆமாங்கய்யா.. இந்தப் பெண் இந்த நிலைமையிலும் வேகமாக ஓடி வந்தாள். நான் இவளைத்தான் பார்த்தேன். உங்க பொண்ணை நான் கவனிக்கவில்லை. மரம் வேறு மறைத்து விட்டது. வயிற்றுப் பிள்ளைக்காரி ஏன் இப்படி ஓடுகிறாள்.. இந்தப் பெண் நம்

பக்கத்துப் பெண் போல் இல்லையே.. என்று நினைத்துத்தான் நானும் ஓடி வந்தேன். வந்ததும் தான் தெரிந்தது. உங்க பொண்ணைக் காப்பாற்றத்தான் ஓடி வந்திருக்கா என்று. உங்க பெண் வரமாட்டேன் என்றதும் ஓங்கி அறைந்து பிடித்து இழுத்து வந்தாங்க!" என்று நடந்ததைச் சொன்னான்.

## 28



அவர் நிருபாவைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டார். "என் பெண்ணைத் தெய்வம் மாதிரி வந்து காப்பாற்றி இருக்கே... நான் கும்பிடும் தேவிதான் உன் உருவத்தில் வந்திருக்கா.. நீ வயதில் சின்னவளாக இருக்க.. இல்லையென்றால் உன் காலில் விழுவேன். சின்னவள் என்றால் என்ன... என் தாய் காலில் விழுவதுபோல் விழுகிறேன்." விழப் போனார்.

அவள் பதறி, "அப்பா..." என்று கத்தி விட்டாள்.

"என்ன காரியம் செய்றீங்க... உங்க பெண்ணைப் போல் தான் நானும். என் காலில் விழலாமா?" என்று அவர் கையைப் பிடித்துக் கொண்டாள்.

அவர் உடம்பு சிலிர்த்தது. "அப்பா" என்ற வார்த்தை.

"நீ இந்த ஊராம்மா?" என்றார்.

"இல்லை," என்றாள்.

"நினைத்தேன். உன் தமிழைப் பார்த்து. பின் எந்த ஊர்? நீ இங்கு எதற்காக யார் கூட வந்திருக்கே?" என்றார்.

அவர் இப்படியொரு கேள்வியைக் கேட்பார் என்று எதிர்பார்க்கவில்லை. இதற்கு என்ன பதில் சொல்வது? அவள் யோசிக்கலையே...



"ஏனம்மா இத்தனை தயக்கம்.. என்ன பிரச்சனை உனக்கு? இந்த நிலைமையில் தனியாகவா வந்தே..?"

"ஆ..மா..ம்.. இல்லை.. சொந்தக்காரங்க கூட வந்திருக்கேன்!" என்றாள் தடுமாற்றத்துடன்.

அவள் கண்கள் அலைப்புறுவதையும், பேச்சில் உள்ள முரண்பாட்டையும் கவனித்தார். கண்களைச் சுருக்கி யோசனையுடன் பார்த்தார் அவளை. அவள் பார்வையை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.

தோட்டக்காரரிடம் மெல்ல யாருக்கும் கேட்கா வண்ணம், "இந்தப் பெண் இந்த ஊரா.. இல்லை பக்கத்து ஊரா.. உங்களுக்கு எதுவும் தெரியுமா?" என்றார்.

"இல்லைங்கய்யா இந்தப் பெண் இந்தப் பக்கத்துப் பெண் கிடையாது. புதுசாத்தான் இருக்கு!" என்றான் இந்தியில்.

சர்மாவுக்குச் சந்தேகம் தோன்றியது. அவளின் நிலை. பதிலில் தடுமாற்றம், எதற்காக இங்கு வந்திருக்கா என்று. இந்த நிலைமையில்...

அவளிடம் எதையும் காட்டாமல், "சரி. வாம்மா. உன்னை உன் வீட்டில் விட்டுட்டுப் போறேன்," என்றார்.

"என்.. வீடா.. வேண்..டா..ம்.. நான் போய்க் கொள்கிறேன்," என்றாள். தன் தடுமாற்றத்தை அவர் கவனிப்பதைக் கவனிக்காமல்.

"பரவாயில்லை. வாம்மா... இந்த நிலையில் உன்னை விட்டுப் போக மனசில்லை எனக்கு. என் பெண்ணைக் காப்பாத்திய உனக்கு இந்த உதவி கூடப் பண்ணவில்லையென்றால் நான் மனிதனே கிடையாது!" என்றார் அவரும் பிடிவாதமாக.

அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

"நீ எதற்கம்மா இங்கு வந்திருக்கே? தப்பான முடிவுடன் தானே. உன்னையும் அனுப்பி, என் பெண்ணையும் அனுப்பி கடவுள் உன் மூலமா என் பெண்ணைக் காப்பாற்றி என்னையும் வரவழைத்து என் மூலமா உன்னைக் காப்பாத்தச் சொல்கிறார். இதில் இருந்து என்ன தெரியுது.. நீங்க இரண்டு பேருமே வாழப் பிறந்தவர்கள்... எதற்காக உயிரை விட வேண்டும்.. இந்த உலகில் சாதிக்க எத்தனையோ விசயங்கள் இருக்கு.."

அவர் அப்படிக் கேட்டவுடன் அதிர்ந்தாள்.

"இல்லை. நான் வரவில்லை. நீங்கள் போகலாம்," என்றாள்.

"நீயும் தற்கொலை பண்ணிக்கத்தானே வந்தே. பிறகு எதற்கு உன் நிலைமையை மறந்து ஏன் என் பெண்ணைக் காப்பாற்றினாய்? நீ எடுத்த முடிவைத்தானே அவளும் எடுத்திருக்கா... பிறகு எதற்கு அவளைக் காப்பாற்றணும். உன் போலவே கவலையை மறந்து சாகட்டுமே என்று விட்டிருக்க வேண்டியதுதானே. ஏன் காப்பாற்றினாய்? மனிதாபிமானம். அப்படித்தானே.. ஒரு மனிதன் தான் எப்படி கஷ்டப்பட்டாலும் பிறர் படக் கூடாது என்று நினைக்கும் நல்ல மனது. தன் கண் முன்னே ஒரு உயிர் போகக் கூடாது என்ற துடிப்பு. இவ்வளவு பிரச்சனையில் இருக்கும் உனக்கே இத்தனை மனிதத் தன்மை இருக்கும்போது என் பெண்ணின் உயிரைக் காப்பாற்றிய உன்னை இப்படியே விட்டுவிட்டுப் போக முடியுமா?"

"....."

"அப்படிப் போனால் நான் என்ன மனிதனா? தான் இறந்தாலும் பரவாயில்லை. பிறர் உயிர் போகக் கூடாது என்ற உயர்ந்த எண்ணமே உன்னை வாழ வைக்கும்.. என் கூட வா.. நீ தனியாகத்தான் வந்திருக்கே... இனியும் பொய் சொல்லாதே. என்ன பேசுவதென்றாலும் வீட்டில் போய்ப் பேசி முடிவெடுப்போம்.. உணர்ச்சி வேகத்தில் எந்த முடிவும் எடுக்கக் கூடாது. அது சரி வராது."



அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு வேறுபுறம் திரும்பி நின்றாள்.

"உன் அப்பா மாதிரி என்னை நினைத்துக் கொள்ளம்மா.. நீ பயப்பட வேண்டாம். இவங்க கூடப் போனால் என்ன விபரீதம் நடக்குமோ என்று. நான் சத்தியம் செய்து தருகிறேன்.. என்னை முழுமையாக நீ நம்பலாம். வாம்மா!" என்றார்.

அவள், "அப்பா என்று சொல்லாதீங்க... அப்பா என்று சொல்லாதீங்க!" என்று கதறிவிட்டாள்.

அவர் திகைத்தார். "சரி, சொல்லலை.. என் வயதுக்கு மரியாதை கொடுத்து வாம்மா.. எனக்கும் எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கு!" என்றார்.

அவள் இவர்கள் தன்னை விடப் போவதில்லை. இவர்களைத் தவிர்த்து விட்டு இந்த ஊரில் தற்கொலை பண்ணிக்கவும் முடியாது. வேறு எங்கு செல்வது இந்த நிலையில். தெரியாத இடத்தில் வேறு யாரிடமாவது மாட்டிச் சாவதை விட இவர்களுடனே சென்று விடலாம். இப்போ தற்கொலையை நினைக்கவும் பயமாக இருந்தது. மனம் தளர்ந்தது. 'சரி, வர்றேன்,' என்றாள்.

காரில் மும்பை சென்றனர்.

ஒரு மாளிகையின் முன் கார் நின்றது. இறங்கி உள்ளே சென்றனர். ஒரு பெண்மணி வந்து மகளைக் கட்டிக் கொண்டார்.

சர்மா பக்கத்தில் நின்ற நிருபாவைக் காட்டி, "சீமா! உனக்கு இன்னொரு மகளைக் கூட்டி வந்திருக்கேன். நீ பார்த்துக் கொள்," என்றார்.

அப்பொழுதுதான் அவளைப் பார்த்தாள். அவள் நிறைமாத கர்ப்பிணி என்று தெரிந்ததும் கைப் பிடித்துக் கூட்டிப் போய் ஒரு அறையில் படுக்க வைத்தாள். சூடாகப் பால் ஆற்றிக் கொண்டு குடிக்கக் கொடுத்தாள். அவளும் மறுக்காமல் குடித்தாள்.

கொஞ்ச நேரம் படுத்து ஓய்வெடு என்று வெளியே வந்தாள். வந்தவள் கணவனின் முகத்தைப் பார்த்தாள். அவர் நடந்த அனைத்தையும் கூறினார். அந்த அம்மாள் நன்றிப் பெருக்கில் அவள் படுத்திருந்த அறையை நோக்கிக் கும்பிட்டாள்.

"சீமா.. நீ இனி பத்திரமாகப் பார்த்துக் கொள்ளணும். பிறகு என்ன விசயம், எதற்காக நீ இப்படி வந்திருக்காய் என்று கேட்காதே!" என்று எச்சரித்தார்.

"சரிங்க, நான் கேட்க மாட்டேன்," என்றாள்.

மகளைக் கூட்டிக் கொண்டு போனாள்.

இரவு எல்லோரும் சாப்பிட்டுவிட்டுத் தோட்டத்தில் மிதமான வெளிச்சத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"நிருபா! கேட்டியாம்மா.. உன் தங்கை செய்த வேலையை. ஏன் இப்படிப் பண்ணினாய் என்று கேட்டாயா?" என்றார் சர்மா.

நிருபா பார்வையை உயர்த்தி ஷோபா முகத்தைப் பார்த்தாள். நான் எப்படி இந்தக் கேள்வியைக் கேட்க முடியும்? எனக்கு அந்தத் தகுதி இல்லை.. என்று நினைத்தாள்.

ஷோபாவே, "அக்கா! நானும் என் ஃப்ரெண்ட்ஸ்களும் போட்டி போட்டோம். பிளஸ் டூவில் நான் தான் ஸ்கூல் பர்ஸ்ட் வருவேன் என்று நால்வரும் போட்டி போட்டோம். எல்லோரும் நீதான் வருவே என்று என்னிடம் சொன்னார்கள். நானும் அந்த நம்பிக்கையில் படித்தேன். எனக்கு அந்த நேரம் பார்த்து அம்மை போட்டு விட்டது. என்னால் சரிவரப் படிக்க முடியவில்லை. இருந்தாலும் முதலில் வந்திருப்பவளை விட நான் மூணு மார்க்குதான் கம்மி. அவள் என்னமோ கோட்டையைப் பிடித்து விட்ட மாதிரி என்னை நிக்க வைத்து அத்தனை பேர் முன்னாடி அவமானப்படுத்தினாள். என் மீது நம்பிக்கை வைத்தவர்கள் எல்லாம் என்னை ஏளனமாகப் பார்த்தார்கள். என்னால் தாங்க



முடியவில்லை. அதனால்தான் உயிரோடு இருக்கக் கூடாது என்று சாக முடிவெடுத்தேன். யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டுப் போய்விட்டேன். அந்த நேரத்தில் நீங்கள் வந்து காப்பாத்திட்டீங்க!" என்றாள்.

நிருபா அதிர்ந்தாள். சர்மா, "இதற்காகவா தற்கொலை பண்ணிக்குவாங்க..? படிப்பில் போட்டி போடுவது எல்லோருக்கும் சகஜம்தான். இது இப்படி வெறியாக மாறக் கூடாதே. இது நல்ல ஆரோக்கியமான விசயமில்லை.. படிப்பு நம் வாழ்க்கைக்குத் தேவைதான்.. படிப்பே வாழ்க்கையாகிடாது தெரியுமா..? நல்ல அறிவை வளர்த்துக்குறதுக்கும், தெளிவா சிந்தித்து முடிவெடுக்கவும், நல்லது கெட்டதைப் பிரித்துப் பார்க்கவும் வல்லமையைத் தரும் படிப்பு. நீ இந்தப் படிப்பையே காரணமா வச்சு இப்படி முட்டாள்தனமா முடிவெடுத்திருக்கியே.. ஃப்ரெண்ட்ஸ்கள்லே நாலு பேர் நல்லவங்க இருப்பாங்க. நாலு பேர் கெட்டவங்க இருப்பாங்க.. நம்ம கூட நல்லவங்க மாதிரி பழகினாலும் மனதில் பொறாமை இருக்கும் சில பேருக்கு."

# 29



"சில பேர் அந்தப் பொறாமையில் சீண்டி விடுவார்கள். அவர்கள் பேச்சு நமக்கு ஆத்திரத்தைக் கொடுக்கும்.. அந்த நேரத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் இந்த மாதிரி தப்பாக முடிவெடுப்பது."

"............"

"மார்க் கம்மியானா என்ன? அடுத்த பரிட்சையில் எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே, இது என்ன பெரிய விசயமா? இதுக்குப் போய் இவ்வளவு பெரிய முடிவு எடுத்துக்கிறியே.. பெத்த எங்களை ஒரு நிமிசம் நினைத்துப் பார்த்தியா? உன்னைக் காணவில்லை என்றதும் எப்படி

துடித்தோம் என்று தெரியுமா? உன்னை இழந்து நாங்கள் எப்படி உயிரோட இருப்போம். இந்த உலகிலேயே படிப்பு மட்டுந்தான் முக்கியமா? அப்போ நாங்க இல்லை.. யாரோ ஒரு பொண்ணு சொன்னதுக்காக இப்படிச் செய்யத் துணிந்து விட்டாயே.. நீ இப்படி ஒரு கோழை என்று நினைக்கவில்லை.''

''........''

''எனக்குப் பிறந்த மகளா என்று நினைக்கவே ஆச்சரியமாக இருக்கு. எனக்கு இருக்கும் நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் உன்னிடம் .துளிக் கூட இல்லையே... அவமானத்தைச் சந்திக்காமல் எதையும் சாதிக்க முடியாது. எடுத்ததுமே யாரும் உச்சிக்குப் போனதா சரித்திரமே இல்லை. உச்சியில் இருப்பவர்களைக் கேட்டால் அவர்கள் பட்ட காயங்கள், வலி, அவமானம், அசிங்கம் எல்லாம் எல்லையற்றவை. யாரும் இதைக் கடக்காமல் வாழ முடியாது.''

''...........''

''ஏன், என்னையே எடுத்துக் கொள்ளேன். உதாரணத்திற்கு நான் என்ன பிறக்கும் போதே பணக்காரனா? சிறு வயதிலேயே தாய், தந்தையை இழந்து, மாமன் வீட்டில் விபரம் தெரியும் வரை வளர்ந்து, விபரம் தெரிந்த முதல் வீட்டு வேலை, துணிகூட துவைக்கணும். அப்பத்தான் ஒரு வேளைச் சோறு கிடைக்கும். ஏதோ ஒரு ஸ்கூலுக்குப் போனேன். உன் அப்பா என்ன படித்திருக்கேன் என்று நினைக்கிறே... மூணு, நாலு டிகிரி வாங்கியிருப்பேன் என்றா... நான் ஐந்தாவது கூட முடிக்க வில்லை. வீட்டை விட்டுப் போ என்று சொல்லிவிட்டார்கள்..''

''.........''

''அந்த வயதில் எங்கு போக முடியும்? எங்க ஊரில் நாடோடிக் கும்பல் டெண்ட் அடித்து தங்கியிருந்தார்கள். அவர்கள் கூடவே இருந்தேன். அவர்கள் சாப்பிடுவதை எனக்கும் கொஞ்சம்



தருவார்கள். இப்படியே இருந்து அவர்கள் கூடவே ரயிலில் ஏறி மும்பை வந்தேன். அவர்கள் என்னை ஒரு டீக் கடையில் சேர்த்து விட்டுப் போய் விட்டார்கள். நான் அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டு இருந்தேன். இரவில் பிளாட்பாரத்தில் தான் படுத்திருந்தேன். காலையில் நான்கு மணிக்கே எழுந்து விடுவேன். கடைக்குத் தண்ணி தெளித்து கூட்டி சுத்தமாக வைத்திருப்பேன். கொஞ்ச நாளில் பக்கத்துக் கடைகளை யெல்லாம் பெருக்குவேன். அவர்கள் வாரம் இவ்வளவு என்று தருவார்கள். அதையெல்லாம் வாங்கி என் முதலாளியிடம் கொடுத்து வைப்பேன். பேப்பர் போட்டேன். அந்தக் கடை முதலாளி சின்ன ஹோட்டல் போல் வைத்திருந்தார். நான்தான் இட்லி ஊத்தி சட்னி, சாம்பார், தோசை, புரோட்டா எல்லாம் செய்வேன்.''

''...........''

''முதலில் என் முதலாளி இட்லி தோசையெல்லாம் வேண்டாம் என்றார். நான் தான் தமிழ் நாட்டுக்காரங்க இந்தப் பகுதியில் நிறையப் பேர் இருக்காங்க. விரும்பிச் சாப்பிடுவாங்க என்றேன். பிறகு ஒத்துக் கொண்டார். ஹோட்டல் நல்ல ஓட்டம். நிறைய லாபம். மதியம் சாப்பாடு கிடைக்குமா என்று சிலர் கேட்டனர். இன்னும் விரிவுபடுத்தினோம். வேலைக்கு இரண்டு ஆட்களைப் போட்டு மதியம் சமைத்தோம். அந்த ஏரியாவில் நல்ல பேர். வெளியிலும் இருந்து வந்தனர் சாப்பிட. அந்த இடத்தை வாங்கிப் பெரிய ஹோட்டலாகக் கட்டினோம். இது மாதிரியே வேறு ஏரியாக்களிலும் தொடங்கினோம். நான் முதலாளிக்குப் பக்க பலமாக இருந்தேன். உண்மையா நம்பிக்கையா இருந்தேன்..''

''.........''

''என்னை அவர் ஹோட்டலில் பார்ட்னர் ஆக்கினார். நானும் அயராது உழைத்தேன். வந்த லாபத்தில் இந்த இடத்தை

வாங்கினேன். எனக்கும் இருபத்தைந்து வயதானது. முதலாளி தன் மகளைக் கல்யாணம் செய்து கொள் என்றார். எனக்கு அதில் விருப்பமில்லை. அவர் மகளை மணக்க எத்தனையோ பேர் வருவாங்க. ஒரு ஏழைக்கு வாழ்க்கை குடுக்கணும் என்று மறுத்து விட்டேன். அவர் எத்தனையோ சொன்னார். என் சொத்து முழுதையும் எழுதித் தர்றேன் என்று. நான் மறுத்து விட்டேன்."

"........."

"அப்போ படிப்பு என்னை உயர்த்தலே. என் உழைப்புத்தான். நானாகவே எல்லாம் கத்துக்கிட்டேன். எல்லாம் அனுபவந்தான். நான் மும்பை போனதும் பிளாட்பாரத்தில் படுக்க சின்னத் துணி உங்க அம்மாவோட அப்பாதான் தந்தார். தன் இடத்தில் படுக்க வைத்தார். தன் பிள்ளைகளுக்குப் பலகாரம் வாங்கித் தந்தால் அதில் ஒன்றை எடுத்து வைத்திருப்பாள் இவள். இவள் பெரியவள் ஆனதும் நான் இருந்த ஹோட்டலிலேயே தண்ணீர் பிடித்து ஊற்றுவாள். துடைப்பாள். பெருக்குவாள். இவளை நான் மனதார ஏற்றுக் கொண்டேன் என் மனைவியாக.."

சீமா கண்ணில் கண்ணீர் வழிந்தது.

மனைவியைத் தோளில் சாய்த்துக் கொண்டார்.

திருபா, ஷோபா, அஸ்வத் மூவரும் அசையாமல் உட்கார்ந்திருந்தனர்.

"இவள் அப்பா என்னைக் கையெடுத்துக் கும்பிட்டார். இவளைக் கல்யாணம் செய்த பிறகு, அந்த ஹோட்டலில் வேலை செய்வது சரி வராது என்று என் பங்கை வாங்கிக் கொண்டு சின்னதாக எக்ஸ்போர்ட் யூனிட் ஒன்றை ஆரம்பித்தேன். இவள் தங்கை, தம்பி, இன்னும் அங்கிருந்த சில பேருக்கு டைலரிங் எல்லாம் கத்துக் குடுக்க ஏற்பாடு பண்ணினேன். நாங்க அனைவருமே நேரம் காலம் பார்க்காமல் உழைத்தோம். மூன்றே வருடத்தில் நல்ல லாபம். கம்பெனியை



விரிவுபடுத்தினோம். வெளிநாடுகளுக்கு அனுப்பினோம். நம்பிக்கையானவர்களை வைத்து இன்னும் சில பிசினஸ்களை ஆரம்பித்தேன். என்னிடம் வேலை பார்ப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தேன். இப்போ காலி மனைகளை வாங்கிப் பெரிய பிளாட், பங்களா என்று கட்டி விற்கிறேன்."

"ஏம்பா உங்களுக்கு ஹோட்டல் பிசினஸ் பத்தித்தானே தெரியும். பிறகு ஏன் எக்ஸ்போர்ட் கம்பெனி தொடங்குனீங்க.. தெரியாத தொழில்! தெரிந்த தொழிலை விட்டவனும் கெட்டான், தெரியாத தொழிலைத் தொட்டவனும் கெட்டான் என்று எங்கள் சார் அடிக்கடி சொல்வார். தெரியாத தொழிலில் எப்படி இவ்வளவு உயரத்துக்கு வந்தீங்க...?"

அவர் சிரித்தார். "என் மகள் நான் நினைத்த மாதிரியே புத்திசாலிதான்.

"கடவுள் மீது எனக்கு நம்பிக்கை இருந்தாலும், நான் என்னை முழுமையாக நம்பினேன். என் உழைப்பை நம்பினேன். நான் என் மீது வைத்த நம்பிக்கையை விட என் மனைவி என் மீது வைத்த நம்பிக்கைதான் அதிகம். என் சுற்றத்தாரும் அப்படியே. இரவு, பகல் பாராமல் உழைத்தோம் வேலைக்காரர்களோடு. முதலாளி என்ற கர்வம் இல்லாமல். முதலில் ஒரு முதலாளிக்குக் கர்வம் இருக்கக் கூடாது. நம்மிடம் கை நீட்டி வாங்கும் கூலிக்காரர்கள்தானே என்ற அலட்சியம் கூடாது. நீங்கள் என்னிடம் வேலை பார்ப்பவர்தானே என்ற அகம்பாவம் கூடாது. முடியவில்லை என்றாலும், அவர்களின் சில சொந்த விசயங்களாவது இருந்தாலும் நான் லீவு தர முடியாது. நீ வேலை பார்த்துத்தான் ஆகணும் என்று கட்டாயம் இருக்கக் கூடாது. அதற்காக அவர்கள் பொய் சொல்வதை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது.."

"....."

''இவனை நாம் ஏமாத்த முடியாது என்ற எண்ணத்தையும் கொண்டு வர வேண்டும். அதே நேரத்தில் நண்பனாகவும் இருக்கணும். உனக்குத்தான் கஷ்டம், எனக்கென்ன என்று இருக்கக் கூடாது. கூப்பிட்டு அன்பா மெதுவா சொன்னா நிச்சயமாக கேட்பாங்க. முதலில் அன்புதான் பெரிய சொத்து. ஒரு முதலாளி அன்பையும், அதிகாரத்தையும் சரியான முறையில் கையாள வேண்டும். அவன்தான் தொழிலில் வெற்றி பெறுவான். ஒரு முதலாளிக்குத் தொழிலாளிதான் முதல் கடவுள். ஏன்னா அவர்களை நம்பித்தான் தொழிலையே தொடங்கு கிறோம். பணத்தையும் போடுகிறோம். கடவுளுக்கு எப்படிக் குறை வைக்க மாட்டோமோ அப்படித்தான் தொழிலாளிக்கும் வைக்கக் கூடாது. உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் கட்டாயம் கொடுக்கணும். காலையில் இருந்து மாலை வரை மாடா உழைக்கிறேன். இந்த சம்பளந்தான் தர்றாங்க.. குடும்பத்திற்குப் பத்தலை என்று புலம்பக் கூடாது. அதற்காகவே அள்ளிக் கொடுக்க முடியாது. தராசு இந்தப் பக்கமும் இறங்காமல், அந்தப் பக்கமும் தாழாமல் சரி சமமாக நடக்கணும் ஒரு முதலாளி..''

''ஏன் இந்தக் கம்பெனியைத் தொடங்கினீங்க என்றேன் நான்...'' என்றாள் ஷோபா.

''என் முதலாளியிடம் கத்துக் கொண்ட தொழிலையே நான் அவருக்கு எதிராகப் பயன்படுத்த விரும்பவில்லை. நானும் இதே பக்கத்தில் தானே இருக்கேன். நான் ஹோட்டல் ஆரம்பித்தால் அவருக்கு வியாபாரம் நிச்சயம் குறையும். அவர் எனக்குக் குரு. அவர் மனதைக் கஷ்டப்பட வைக்க எனக்கு விருப்பமில்லை. நீ கேட்கலாம், இவ்வளவு பெரிய சிட்டியில் அவர்கள் கடையில் சாப்பிடுபவர்கள் மட்டுந்தானா இருக்காங்க. இன்னும் வேறு ஹோட்டலே இல்லையா? நான் மக்களுக்காக இன்னும் கொஞ்சம் விலையைக் குறைக்கலாம். அது அவரைப் பாதிக்கலாம். ஏன்னா நான் சோத்துக்கே கஷ்டப்பட்டவன். அந்த வடு இன்னும் நெஞ்சில் ஆறாமல் இருக்கு..''



''பிறகு எப்படி இந்தத் தெரியாத பிசினஸ்சுக்கு ஐடியா வந்தது?''

''கடைக்குச் சாப்பிட வரும் கஸ்டமர்களில் இந்த கம்பெனி நடத்துபவர்களும் வந்தார்கள். அவர்களிடம் நான் சில ஐடியாக்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். தைரியமாக இறங்கினேன். ஏட்டுப் படிப்பை விட அனுபவப் படிப்பு பெரியது. உன் அம்மாவும் காலையில் ஏதோ சமைத்து விட்டு, இருவரும் சாப்பிட்டு இருப்பதை எடுத்துக் கொண்டு கம்பெனிக்குப் போய் விடுவோம். சில நேரங்களில் சாப்பிடக் கூட மாட்டோம். நீங்கள் வயிற்றில் இருக்கும் போது கூட உன் அம்மா ரெஸ்ட் எடுக்க மாட்டா. உங்க இரண்டு பேருக்குமே வேலை பார்த்துக் கொண்டு இருக்கும்போதுதான் இடுப்பு வலியே வந்தது. தொழிலாளிகள் அனைவரும் ஆஸ்பத்திரிக்கு வந்தனர். எனக்குத்தான் எத்தனை உறவுகள்.. நான் அனாதை என்று எத்தனை நாள் கண்ணீர் விட்டிருப்பேன். அதைப் போக்கியவள் உன் அம்மா. அந்தக் காயத்தை ஆற்றியவள் உன் அம்மா. நான் தாய் முகத்தைப் பார்த்ததில்லை. உன் அம்மா உருவில் நான் பார்க்கிறேன். ஒரு பெண் அன்பே உருவாக கருணையே வடிவாக இருந்தால் போதும். அந்த வீடு கோயிலாகும். கோயிலுக்குப் போக வேண்டிய அவசியமே யில்லை. ஆனால் எல்லோருக்கும் இப்படி அமைவதில்லை. ஏன், உங்க இரண்டு பேரையுமே இதற்கு உதாரணமாகச் சொல்லலாமே!'' என்று இருவரின் முகத்தையும் பார்த்தார்.

நிருபா, ஷோபா இருவருக்கும் முகம் கன்றிச் சிவந்தது.

''இந்த வயதில் வாழ்க்கையை எதிர் கொள்ள முடியாமல் தற்கொலை வரைக்கும் போகும் பெண்கள், வாழ்க்கையில் என்னத்தைச் சாதிக்கப் போறீங்க... வாழ்க்கையை எதிர் கொள்ளணும். எவ்வளவு பெரிய பிரச்சனையாக இருந்தாலும், எதற்குமே ஒரு தீர்வு உண்டு வாழ்க்கையில்..''

# 30



''யார்தான் தப்பு பண்ணலே. நீங்க இரண்டு பேருமே தப்பு பண்ணினதில்லையா? உங்களால் யாரும் சின்னப் பாதிப்புக் கூடப் பட்டதில்லை. உங்களுக்குனு ஒரு பிரச்சனை வந்ததும் உடனே தற்கொலை. இதுதான் தீர்வா? எல்லோரும் இப்படி நினைத்தால் எப்படி இந்த உலகம் பொறுக்கும். சுடுகாடா ஆகிவிடாதா? யாருக்குத்தான் பிரச்சனையில்லை. அவர் அவர்களுக்குத் தகுந்த மாதிரி பிரச்சனை இருந்து கொண்டுதான் இருக்கும்..''

இருவரும் தலை குனிந்தனர்.

''ஒரு சின்ன சாதாரணப் படிப்பு விசயம். நீ இன்னும் முயன்று படித்தால் நல்ல மார்க் எடுத்து விடலாம். முயற்சி பண்ணாமல், சரியாகப் படிக்காமல் மார்க் கம்மியாக எடுத்துவிட்டு கம்மியாகி விட்டதே என்று சாகப் போறியே... இதில் யார் தப்பு இருக்கு. உன் மீதா இல்லை மார்க் அதிகமாக எடுத்த பெண் மீதா? எல்லோரும் பேசுவாங்கதான். நாலு பேர் குறைந்தாலும் பேசுவாங்க, உயர்ந்தாலும் பேசுவாங்க.. பேசுபவர்கள் எங்கும் எல்லா இடத்திலும் இருக்கத்தான் செய்வார்கள். ஏன் நீ இதுவரை யாரையும் கேலி பேசியதில்லையா? குறை சொன்னதில்லையா? யாரும் உன்னால் மனது நோகவில்லையா? சொல், பார்ப்போம். நமக்குனு ஒரு அவமானம் என்றதும் பெற்றவர்களை மறந்து தப்பா முடிவெடுக்க வேண்டியது. ஏன் இந்த முடிவு எடுக்கத் தெரிந்த உனக்கு அடுத்த பரிட்சையில் படித்து இன்னும் மார்க் வாங்கணும் என்ற நினைப்பு வரவில்லை. இல்லை, உலகம் இன்றோடு அஸ்தமித்துப் போகப் போகுதா? இனி எதையும் சாதிக்க முடியாது என்று நினைப்பதற்கு ஏதாவது ஒன்னுனா உடனே செத்தாகணும். இல்லையென்றால் பழி வாங்கணும். நீ செத்தால் பள்ளிக்குத்தான் நஷ்டமா இல்லை மார்க் எடுத்த பிள்ளைக்குக் கஷ்டமா..? நீ யாருக்குத் தண்டனை குடுக்கப் போனே..''



''தப்பு செய்தவள் நீ... இதைத் தப்புனு கூட சொல்ல முடியாது. உன்னால் என்ன முடியுமோ அதைச் செய். நீ முயன்றால் ஸ்கூல் பர்ஸ்ட் என்ன, ஸ்டேட் பர்ஸ்ட்டே வரலாம். எந்த முயற்சியும் பண்ணினால், கஷ்டப்பட்டு உழைக்காமல் நீ மார்க் வரலையே என்றால் என்ன அர்த்தம்? நீ இவ்வளவுதான் உழைச்சிருக்கே. அதற்குத் தகுந்த மார்க் வந்திருக்கு. எப்படி உழைக்கிறோமோ, அக்கறை காட்டுகிறோமோ, அதன் பலன்தான் நமக்குக் கிடைக்கும். கடவுள் அதில் வஞ்சகமே காட்ட மாட்டாரு. நாம் உழைக்காமல், கஷ்டப்படாமல் வீட்டிலேயே இருந்து கொண்டு பாடத்தையும் கவனிக்காமல் வீட்டிலும் சரியாகப் படிக்காமல் இருந்தால் எப்படி மார்க் வரும்? நீ எதை விதைக்கிறாயோ அதைத்தான் அறுவடை செய்ய முடியும். நீ முதலில் உன்னை உணரணும். திட்டம் போட்டுப் படிக்கணும். சும்மா ரெண்டு மணி வரை படிக்கிறேன், மூணு மணி வரை படிக்கிறேன். அவள் படிக்கவே மாட்டா, அவள் மட்டும் எப்படி மார்க் வாங்குறா என்று சொல்லக் கூடாது.''

''........''

''நாம் எத்தனை மணி நேரம் படிக்கிறோம் என்பது கணக்கில்லை. என்ன படிக்கிறோம் என்பதுதான் கணக்கு. எனக்கு முதலிலேயே நன்றாகப் படிக்காமல் நான் நல்லாத்தான் படித்தேன். மார்க் வரலே, பெயிலாயிட்டேன் என்று சொல்பவர்கள் ஒரு கோழை. படிக்க உங்களுக்கு எவ்வளவு நேரம் இருக்கு. அதே பாடத்தைத்தானே மற்றவர்களும் படித்து முதலில் வருகிறார்கள்? நீ மட்டும் ஏன்? குறை உன்னிடம் தான். நீ தான் திட்டம் போடணும். இப்போ இப்படி ஆகிவிட்டது. இனி அடுத்து நாம் என்ன செய்தால் மார்க் அதிகம் வாங்கலாம் என்று சரியா கணிப்பதை விட்டுவிட்டு இந்த முடிவு எடுத்திருக்கிறாயே.. வாழ்க்கையை எதிர் கொள்ளத் தெரியாத கோழை எடுக்கும் முடிவுதான் தற்கொலை. உடனடித் தீர்வுக்கு எடுக்கும் நிரந்தர முடிவு. நீ உன் மேல் நம்பிக்கை வை. அப்பத்தான் நீ பிறரை நீ

நம்புவாய். உன்மேல் உனக்கு நம்பிக்கையில்லையென்றால் நீ யார் மேலேயும் நம்பிக்கை வைக்க மாட்டே.. உன்னைச் சுலபமாக ஏமாற்றலாம்.''

ஷோபா விழி கலங்கியது.

''முதலில் இது மாதிரி எதுக்கெடுத்தாலும் அழக் கூடாது. அழுகை ஒரு தீர்வேயில்லை. அழுதால் மனப் பாரம் குறையும் என்பார்கள். அது நடக்கும் விசயத்தைப் பொறுத்தது. எதுக்கு அழணுமோ அதுக்குத்தான் அழணும். கண்ணீர் உன்னைக் கோழையாக்கி விடும். நீயே ஒரு முடிவு பண்ணிக்கோ. இப்படி போட்டி, பொறாமை, அது இது என்று மனதைக் குழப்பிக் கொள்ளாதே. படிப்பில் மட்டும் கவனத்தைச் செலுத்தாதே. இடையில் பிசினசையும் பாரு. எத்தனை பேர் வேலை பார்த்துக் கொண்டே படிக்கிறார்கள். அவர்களும் வாழ்க்கையில் முன்னேறுகிறார்கள்தானே. அப்பாவிடம் பணம் இருக்கு. நாம் ஏன் சம்பாதிக்கணும் என்ற நினைப்பு இருந்தால் இன்றே அதை அழித்து விடு. நீ உழைக்கணும். உன் சொந்தக் காலில் நிற்கணும். அப்போதான் தன்னம்பிக்கை வரும். அதற்காக என்னடா இப்படி சம்பாதிக்கச் சொல்கிறாரே என்று நினைக்க வேண்டாம். நான் உழைப்பது உங்களுக்காகத்தான். உனக்குனு தனி முத்திரை பதி. நீ என் மகள். இனி சரியான முடிவெடுப்பாய் என்று நினைக்கிறேன். உனக்குந்தான்டா!'' என்றார் மகனைப் பார்த்து.

''..........''

''சும்மா இருந்தாலே மனசு நாம் எதை மறக்க நினைக்கிறோமோ அதைத்தான் நினைக்கும். பிறகு இப்படி நடந்து விட்டதே என்ற மனச் சோர்வு. உடம்புக்கு முடியவில்லையென்றாலும் வைத்தியம் பார்த்து விடலாம். மனதுக்கு அது முடியாது. அந்த மருந்து உங்களிடம் தான் இருக்கு. ஆனால் அது தெரிந்து எப்போ மருந்து போடணும். என்ற முடிவுக்கு நீங்கள் யாரும் வருவதில்லை. தன்னைத்தானே



கழிவிரக்கம் கொண்டு என் வாழ்வு இப்படியாகி விட்டதே. என்று இனி நமக்கு வாழ்க்கையில் ஒண்ணுமேயில்லை என்று முடிவெடுப்பது. தப்பு நடந்தது நடந்து விட்டது. இனி அதை மாற்ற முடியாது. இது தெரிந்த விசயம்தானே. அதையே நினைத்துக் கொண்டு வாழ்நாள் முழுவதும் வாழ முடியுமா? பட்ட கஷ்டத்தை மறக்க முடியாதுதான். ஒதுக்க முடியுமே.. அந்த இடத்தில் நல்ல சிந்தனை, ஒரு வேலை, இல்லை படிப்பு. அது முடியவில்லையென்றால் வெளியே போய் காலார நடந்து விட்டு சில பல மனிதர்களைப் பார்த்தாலும் மனது ரிலாக்ஸ் ஆகுமே. இதை எதையும் செய்யாமல் இப்படி இருந்தால் யாரும் உங்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். நீங்கதான் உங்களைப் பற்றிக் கவலைப்பட்டு என்ன செய்யலாம் என்று யோசிக்கணும். இதை நான் சொல்லத்தான் முடியும். நீங்கள் தான் இதை நடைமுறைப்படுத்தணும். யாரும் ஒண்ணும் செய்ய முடியாது. பெண்களால் நினைத்தால் என்ன முடியாது? உங்க அன்பை மட்டும் முதலீடா பயன்படுத்துங்க. பிறகு வீடு என்ன, இந்த நாடே உங்கள் கீழ். இது உனக்குத்தான் நிருபமா. நான் இத்தனை நேரம் சொன்னது ஷோபாவுக்கோ இவனுக்கோ மட்டுமோ என்று இல்லை. உனக்குந்தான். நீ பயப்படாதே. இங்கு இருக்கலாம். நீ என்ன முடிவு எடுத்தாலும் எனக்குச் சம்மதமே. நான் ஊருக்குப் போகிறேன், என்னைக் கணவனுடன் சேர்த்து வைங்க என்று சொன்னாலும் அதற்கும் நான் ரெடி. இப்போ இந்த இடத்தில் யார் மீது தப்பு சரி என்று பேச வேண்டாம். இந்த நிலைமையில் நீ வீட்டை விட்டு வந்து விட்டாய். மோசமான கணவன் என்றால் கூட மனது துடிக்கும்தானே. இதை நீ நினைத்துப் பார்த்தாயா? உன் தங்கை மாதிரி நீயும் முடிவெடுத்து விட்டாய். அவள் செய்தது தப்பு என்றால் நீ செய்தது மாபெரும் தப்பு. ஒரு உயிருக்கு இரண்டு உயிர். உன் உயிரைப் போக்கிக் கொள்ள உனக்கு உரிமை இல்லாத போது, உன் வயிற்றில் வளரும் குழந்தையைக் கொல்ல உனக்கு ஏது உரிமை. நீ

அவர்களுக்கு இப்படி ஒரு தண்டனையைக் கொடுக்கலாமா..? நாளை உன் கணவன் வந்து எங்கே என் குழந்தை என்றால் என்ன பதில் சொல்வே. சரி, எல்லாம் முடிந்து விட்டது. இனி நடந்ததைப் பற்றி பேசவோ.. முடிவெடுப்பதோ கூடாது. இனி என்ன நடக்கணும் என்று நீங்க இரண்டு பேரும் முடிவு பண்ணுங்கள். உங்க எதிர்காலத்தை மனதில் வைத்து. மனதை வேறுபுறம் திருப்பணும். உனக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன் நிருபா. ஆனால் நீ இங்க பயமில்லாமல் இருக்கலாம். எங்களுக்கு இரண்டு பிள்ளைகளுள் நீ மூன்றாவது பிள்ளை.''

நிருபாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

''நிருபா... முதலில் நீ அழுவதை நிறுத்து!'' என்றார் குரலை உயர்த்தி.

''இதுதான் நீ அழுவது கடைசியாக இருக்கணும். அழுகிற நேரத்தில் ஏதாவது உருப்படியாகச் செய். மனசுக்கும் நல்லாயிருக்கும். வருமானமும் வரும்!'' என்றார்.

''சரிங்கப்பா,'' என்றாள் திடமான முடிவோடு. அவரை மரியாதையோடு பார்த்தாள். கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''குட்.. இப்படித்தான் இருக்கணும். நீ புத்திசாலி என்று உன்னைப் பார்த்ததுமே புரிந்து கொண்டேன். எப்போ உன்னைப் பற்றி கவலைப்படாமல் இவளைக் காப்பாத்தினாயோ.. அப்பவே நீ வாழ்க்கையில் உயர்ந்த இடத்துக்கு நீ வருவாய் என்று உணர்ந்தேன். வாழ்க்கையில் ஒருவன் உயர நல்ல மனது வேண்டும். அது உன்கிட்டே இருக்கு. ஆனால் நீ தான் முடிவு பண்ணணும், என்ன செய்யணும் என்று. அதற்கு நான் உறுதுணையாக இருப்பேன் மகளே.. உன் அண்ணனும் பிசினஸ்தான் பண்றான். நீ அவனிடமும் கேட்கலாம். உன்



அம்மா இருக்கா எங்களை விடப் புத்திசாலி. பெண்கள் தான் எத்தனை திறமையுள்ளவர்கள். அதை நீங்களே புரிந்து கொள்வதில்லை. புரிந்து கொண்டாலும் சில வீடுகளில் பல கணவன்மார் இதை ஏற்றுக் கொள்ளுவதுமில்லை. வீட்டைக் கவனித்து, கணவன், பிள்ளைகள், பெரியவர்கள், வீட்டுக்கு வருபவர்கள், பிறகு பிசினஸ், வேலை என்று எத்தனை ரூபமாக, வடிவாக இருக்கிறீங்க.. அதிலும் ஒரே நேரத்தில் பிள்ளைகளை ஸ்கூலுக்குக் கிளப்பிக் கொண்டு, அடுப்பிலும் பார்த்துக் கொண்டு, இடையில் கணவன் கூப்பிடும் குரலுக்கு ஓடி வெளியில் காய்க்காரி குரல் கேட்கிறதா.. என்று காதை வெளியில் வைத்து அப்பப்பா.. எத்தனை திறமைகள் ஒரே நேரத்தில் வெளிப்படுகின்றன. பெண்கள் உண்மையிலேயே கடவுள்தான். கையெடுத்துக் கும்பிட வேண்டியவர்கள்தான்..''

அங்கு மௌனமே நிலவியது.

''சரி. எல்லோரும் போய் அவரவர் வேலையைப் பாருங்கள்,'' என்றார்.

நிருபாவும் தன் அறைக்குச் சென்றாள். அவள் தற்கொலையில் இருந்து மீண்டும் நாம் என்ன செய்வோம் என்று சிந்திக்கும் அளவிற்கு வந்து விட்டாள். அவரின் பேச்சில் அத்தனை தெளிவு. நீ என்ன தப்பு செய்தாய்? உயிரை மாய்த்துக் கொள்ள. விரும்பி ஏற்றுக் கொண்டாயா தப்பை - உயிரை விட. தப்பு பண்ணினவன் இன்று அனைவர் முன் தலை நிமிர்ந்து நிற்கிறான். அவனே வெட்கப் படலே.. நீ மனசால் தூய்மையானவள்.. நீயும் இந்த உலகில் எதையும் சாதிக்கலாமே.. கடவுள் கொடுத்த இரண்டு கை, கால்கள் இருக்கின்றனவே.. அவனுக்கு முன்னால் வாழ்ந்து காட்டலாமே.. என்னைப் பார்.. உன்னால் நான் அழிந்து விடவில்லை. நீ இல்லையென்றாலும் நான் அழிந்து போகவில்லை.

ஏன் ஒரு சராசரிப் பெண் போல் அவனையே நினைத்து உருகிக் கொண்டு இருக்க வேண்டும். அவன்தான் உலகமா? இல்லையே... சர்மா சொல்வது போல் ஒருத்தருக்காக ஒருத்தர் உயிரை விட்டால், ஒருவருமே இருக்க மாட்டார்கள். ஏதோ ஒரு வழியில் ஒருவருக்கொருவர் தீங்கு இழைத்துக் கொண்டேதான் இருக்கிறோம். பாதிக்கப்படுகிறோம்.

## 31



மனதில் திடமாக முடிவெடுத்தாள். தான் ஏதாவது வேலை பார்க்கலாம். இங்கு இவர்கள் எத்தனையோ பிசினஸ் பண்ணுகிறார்கள். அதில் நாம் ஏதாவது செய்தால்.. எதைச் செய்வது? பில்டிங் கான்ட்ராக்ட் என்று நினைத்தவுடனேயே உள்ளுக்குள் ஒரு சிலிர்ப்பு ஓடியது. ஏன் இதை அவன் மட்டுந்தான் செய்வானா? என்னால் முடியாதா? அவன் குழந்தையைப் பெற்றுப் போட்டுவிட்டு மூலையில் கிடக்கணுமா? நான் இந்தத் தொழிலில் ஜெயித்து என்றாவது ஒரு நாள் அவன் முன் நிமிர்ந்து நிற்கலாமே.. சே.. சே. இனி அவன் முகத்தில் விழிப்பதா.. கூடவே கூடாது. மனதில் ஒரு வைராக்கியம் வந்தது. அவளின் பிடிவாதம் இதில் ஜெயிக்கப் போகுது.

ஒரு வாரம் பேசாமல் இருந்தாள். பின் ஒரு நாள் இரவு சாப்பாட்டின் போது சர்மாவிடம், ''அப்பா! நான் ஏதாவது உங்க கூட தொழில் கத்துக்கலாம் என்று நினைக்கிறேன். நீங்க என்ன சொல்றீங்க?'' என்றாள்.

''குட்.. ரொம்ப சந்தோசம்மா நீ எடுத்த முடிவு. இப்படித்தான் இருக்கணும். ஒவ்வொரு பெண்ணும். என்ன பண்ணலாம் என்று முடிவு பண்ணியிருக்கே?'' என்றார்.



''பண்ணியிருக்கேன்பா.. பில்டிங் கான்ட்ராக்ட் எடுத்துப் பண்ணலாம் என்று ஆசை. அதான் எனக்கும் பிடித்திருக்குது.'' என்றாள்.

''நல்ல பிசினஸ். தாராளமாகச் செய்யலாம். அஸ்வத் உன் அண்ணன். இப்போ இதைத்தான் பார்க்கிறான். நீ இவன் கூடப் போ. முதலில் ஆபீசில் உட்கார்ந்து வேலையைக் கற்றுக் கொள். பின் யாரைச் சந்திக்கணும்? எப்படிச் செய்யணும் என்று கற்றுத் தருவான்,'' என்றார்.

சீமா, ''என்னங்க இந்த நேரத்தில் இவளை வேலை கத்துக்க என்கிறீங்க.. முதலில் குழந்தை பிறக்கட்டும்,'' என்றாள்.

''குழந்தை பிறப்பதற்கும், வேலை கத்துக் கொள்வதற்கும் என்ன இருக்கு? எத்தனையோ பெண்கள் சித்தாள் வேலை பார்க்கிறார்கள். நிறைமாத கர்ப்பிணியாக. ஏன் நீ பார்க்கலையா? இவளுக்குத் தெரியும். படித்தவள் எப்போ எப்படி நடந்துக்கணும் என்று. அவள் உடம்பு எப்படி இருக்கு என்று. முடியவில்லையென்றால் அவளே ரெஸ்ட் எடுப்பா. நீ பயமுறுத்தாதே. என்னம்மா நான் சொல்வது சரிதானே. உன் உடம்பையும் பார்த்துக் கொள்வாய்தானே? சும்மாவே இருப்பதை விட வேறு கஷ்டம் ஒன்றுமில்லை என்று நான் நினைக்கிறேன். நீ தாராளமாக நாளையில் இருந்து இவன் கூடவே போகலாம். ஆனால் நான் சொன்னதற்காக ஏனோ.. தானோ. என்று வேலை பார்க்கக் கூடாது. முழுக் கவனமும் அதில் இருக்கணும். இவன் இல்லாமல் நீயே பார்த்துக் கொள்ளுமளவிற்கு நீ உன்னை உயர்த்திக்கணும். நானும் வேலைக்குப் போறேன் என்று போய், சொன்னதைச் செய்துவிட்டு வரக் கூடாது. உனக்குனு தனி முத்திரை இருக்கணும். உன் கருத்தையும் தாராளமாகச் சொல்லணும். சரியாக இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும். அதே நேரத்தில் தப்புனு தெரிந்தால் யாராய் இருந்தாலும் பயப்படாமல் சுட்டிக் காட்டணும். அப்பாதானே. அண்ணன்தானே.

அவர்களுக்குத் தெரியாதா என்று நினைக்கக் கூடாது எல்லோரிடமும் தவறு இருக்கும். எங்களுக்கு அது தெரியாமல் போகலாம். ஒரு மனிதன் தினம் தினம் புதிதாகத்தான் கற்றுக் கொள்கிறான். எல்லாமே முழுமையாகத் தெரிந்த மனிதன் கிடையாது. புதுப்புது வரத்துக்களாய் புதுசு புதுசாகத்தான் கத்துக் கிறோம். தவறுகள் செய்வது இயற்கை. முதலில் எந்த தொழிலுமே பிரம்மாண்டமாகப் பயமுறுத்தும். முதலில் நீந்தக் கத்துக் கொள்வது போல.. இவ்வளவு ஆழத்தில் எப்படி நீந்தப் போகிறோம் என்று நினைத்தால் தண்ணியில் இறங்கவே முடியாது.''

''எங்க இந்த வேலையெல்லாம் ஆம்பிளைங்க பார்ப்பது. கட்டட காண்ட்ராக்ட் என்பது சாதாரண வேலையில்லை. சைட்டுக்குப் போகணும். வெளியூர், ஏன் வேற நாடே கூட போக வேண்டியிருக்கும். வெளியிலும் தங்கணும். பல அரசியல் குறுக்கீடுகள் இருக்கும். பலரைப் பகைச்சுக்க வேண்டி வரும். இதெல்லாம் இவளுக்குச் சரிப்பட்டு வருமா? பேசாம நம் கம்பெனியில் ஏதோ ஒரு வேலையை உட்கார்ந்து செய்வது போல் கொடுக்க வேண்டியதுதானே.. ஏன் இவளுக்கு இப்படி பிரச்சனை உள்ள வேலையைக் கொடுக்கிறீங்க?'' என்றாள் சீமா-கோபமாக.

மௌனமாக நிருபாவைப் பார்த்தவர், அவள் பேசாமல் இருக்கவே, அவர் தொடர்ந்தார்.

''முதலில் நீ என்னைப் புரிஞ்சுக்கணும் சீமா. நான் யாரையும் கட்டாயப்படுத்தலே, கட்டாயப்படுத்தவும் மாட்டேன். இதைச் சுதந்திரமா நீங்களே முடிவெடுங்க என்றுதான் உங்கள் விருப்பத்துக்கே விட்டு விட்டேன். இது அவளுடைய முடிவு. இதை நான் வேண்டாம் என்று சொல்ல மாட்டேன். எந்தத் தொழிலில்தான் பிரச்சனையில்லை. பிசினஸ்சும், பிரச்சனையும் கூடப் பிறந்தவர்கள். கூடப் பிறந்தவர்கள் என்று கூட சொல்லக் கூடாது. இரண்டும் ஒட்டிப் பிறந்தவை. என்றுமே பிரிக்க முடியாது.. உடலையும் உயிரையும் போல..''



''..........''

''பிசினசில் பிரச்சனை என்பது மூச்சுக் காற்றுப் போல. மூச்சு இல்லாமல் எப்படி நாம் உயிர் வாழ முடியாது என்பது போல். பிரச்சனையில்லாமல் நாம் பிசினஸ் பண்ண முடியாது. அதில் இருந்து நாம் எப்படி வெளிவந்து பிசினசில் உயர்கிறோம் என்பதுதானே முதல் வெற்றி. பிசினசில் முதல் இடத்தைப் பிடிப்பது அத்தனை சுலபமில்லை. அதையும் தாண்டி நாம் வந்து விட்டால் சேமித்த பணத்தைக் காப்பாத்தணும். முதல் படியில் இருக்கும் பிசினசைக் கீழிறங்காமல் காப்பாத்தணும். நமக்கு இதுக்குப் போராடவே நேரம் சரியாக இருக்கும். இந்தப் போராட்டத்தில் ஆண் என்ன, பெண் என்ன, இதில் மனம்தான் வேண்டும் திடமாக. எதையும் எதிர் கொள்ளும் பக்குவம், லாபத்தை எப்படி நாம் ஏற்றுக் கொள்கிறோமோ, அதேபோல் நஷ்டத்தையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரே மனநிலை வேண்டும். பிசினசில் அதுதான் நமக்கு முதல் வெற்றி.''

''.........''

''சின்னத் தோல்வியைக் கண்டதுமே மனம் துவண்டு இரவு, பகல் என்று பாராமல் புலம்பிக் கொண்டே இருந்தால் மற்ற வெற்றிகளை நாம் எட்ட முடியாது. தோல்விக்குப் பக்கத்திலேதான் வெற்றியும் இருக்கு. நம் கைக்கெட்டும் தூரம்தான். தோல்வியைப் பிடித்தே நாம் தொங்கிக் கொண்டே இருந்தோம் என்றால் வெற்றி கைக்கெட்டும் தூரத்தில் இருந்தும் அதை நாம் விட்டு விடுவோம். கயிறுகளின் இரு முனைதான் தோல்வியும் வெற்றியும். தோல்வியைப் பிடித்தால் வெற்றியை விட்டு விடுவோம். வெற்றியை மட்டுமே நாம் பிடிக்க முடியாது. தோல்வியைப் பெற்று ஒரு கயிறு முனை கீழே இறங்கும் போது நாம் மற்றொரு வெற்றி முனையையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு இறங்கணும். பிடிக்க முடியவில்லையென்றால கையை நீட்டி முயற்சியாவது செய்யணும். இந்த முறை

முடியவில்லையென்றால் அடுத்த முறை நிச்சயம் வெற்றியைத் தொட்டு விடலாம்! முதலில் நம்பிக்கை. மனம் தளராத இதயம் வெற்றி, தோல்வி இரண்டையுமே சமமாகச் சீர்தூக்கிப் பார்க்கும் பக்குவம். இது இருந்து விட்டாலே பிசினஸ்சில் நாம்தான் நம்பர் ஒன். அதோட வீட்டில் உள்ளவர்களிடமும் நாம் சொல்ல வேண்டும். நம் பிரச்சனையை. பணம் இருக்கும்போது செலவுக்குக் கொடுப்பதும். இல்லாதபோது கேட்டால் சண்டை போடுவதும் கூடாது. வீட்டில் உள்ள மனைவிக்குத் தெரிந்தால்தானே வருமானத்திற்குத் தகுந்த மாதிரி செலவு பண்ணத் தெரியும். அதை விட்டு விட்டு மனைவி நம்மை மதிக்கணும் என்று பந்தாவாகப் பணத்தைக் கொடுப்பது ஆபத்தில் முடியும்.'' நிருபாவைப் பார்த்துச் சிரித்தார்.

''கணவன் மனைவி என்றால் இருவரும் உண்மையாக இருக்க வேண்டும். ஒரு பொண்ணு கல்யாணம் ஆகி வந்தால், அவ புருசன், புள்ளை, வீடுனு அதான் அவள் உலகம்னு மாறி விடுறா. அதேபோல் கணவனும் பொண்டாட்டி புள்ளைகள்தான் உலகம்னு வாழணும். அதை விட்டுவிட்டு நான் சம்பாதிக்கிறேன். நீ சமைக்கிறாய். அதோட உன் வேலை முடிந்தது. நீ என் பிரச்சனையில் தலையிடாதே என்று ஒதுக்கி வைக்கக் கூடாது. அவளோட அன்பும், ஆதரவும் இருப்பதால் தான் நாம் வெளியில் தன்னம்பிக்கையோடு வலம் வர்றோம். ஆண்களோட பலமே மனைவிதான் என்பதைப் பலர் மறந்து விடுகிறார்கள். கஷ்டத்துக்கு மட்டும் மனைவி, பிரச்சனை என்றால் மனைவி வேண்டும் ஆனால் சந்தோசத்தைப் பகிர்ந்து கொள்ள மனைவி கிடையாது. அப்போ ஃபிரண்ட்ஸ், பார் என்று போவது. நான் பெரிய பிரச்சனை என்று நினைத்து உன் அம்மாவிடம் சொல்வேன். அவள் பூ.. இதுதானா.. இதுக்குப் போயா இவ்வளவு வருத்தமாக இருந்தீங்க.. அப்படின்னு அதற்கு ஒரு தீர்வு சுலபமா சொல்வா. நானும் அதையே செய்வேன். நல்ல படியாக முடியும். சிலர் கட்டிய மனைவியிடமே வருமானம் எவ்வளவு என்பதைச் சொல்வதேயில்லை. இது பச்சைத்



துரோகம். நம்மளையே நம்பி வந்தவளை ஒதுக்கி வைப்பது போல ஆகிவிடும். அவள் மனதில் இருப்பதை வெளியில் சொல்லாவிட்டாலும், அப்படியே சொன்னாலும் கணவன் தப்பாக நினைப்பார் என்று மனதில் போட்டு வேதனைப் படுவாள்.

''கட்டின பொண்டாட்டிகிட்டே மறைச்சு என்னத்தைச் சாதிக்கப் போறோம். வருமானத்தைச் சொல்லாதவன் கடனை மட்டும் சொல்வான். அதை மட்டும் ஏன் அவள் தெரிந்து கொள்ளணும். இதையும் மறைப்பதுதானே? தன்னம்பிக்கை இல்லாதவன், வழ்க்கையை எதிர் கொள்ளத் தெரியாதவன், கையாலாகாதவன் தான் இப்படிச் சொல்வான். அவன் ஒரு கோழை. இவன் வாழ்க்கையில் எதையும் சாதிக்க மாட்டான். தான் செய்யும் தப்பை மறைக்க மனைவியிடமே குற்றம் காண்பான். குறை சொல்வான். தான் தப்பிக்க எதை வேணாலும் பொய் சொல்வது, இதுவா வாழ்க்கை. ஒருநாள் வாழ்ந்தாலும் உண்மையாக வாழணும். ஒரு மனைவியிடம் உண்மை பேசாதவன் எதைச் சாதிக்கப் போகிறான். தப்பைத் தப்புனு ஒத்துக்கணும். ஒரு நல்ல மனைவிக்குத் தெரியும், கணவன் செல்லும் பாதை சரியில்லை என்று. சொன்னாலும் கேட்பதில்லை. பின் கடன்காரன் வீட்டில் வந்து நிற்பான். இப்போ மட்டும் எங்கிருந்து வந்தாள் மனைவி. மனைவி என்பவள் எதற்கும் லாயக்கில்லாதவள் என்று நினைத்தவன் எல்லாம் இன்று அதல பாதாளத்தில் தான் விழுந்து விட்டான். நம் மான மரியாதையை வீட்டை விட்டு வெளியே போகாமல் காப்பவளே... மனைவிதான் என்பதைச் சிலர் மறந்து விடுகின்றனர். அவளைப் பற்றியே தன்னை உயர்த்திக் கொள்ள மற்றவர்களிடம் தாழ்வாகப் பேசுவது. அதே நேரம் எப்படி நாம் சொல்வதை நம்புவார்கள் என்று நினைப்பதில்லை. இப்படிப் பேசியே தன்னை வெளிப்படுத்தித் தானே தாழ்த்திக் கொள்வது. நானே இப்படி சிலரைப் பார்த்திருக்கிறேன்,'' என்றார்.

''நீங்க சொன்னபடி அப்படியே நடக்கிறேன்பா..''

''பாத்தியா. நீ தப்பு பண்றே... நான் சொன்னபடி நீ அப்படியே நடக்கக் கூடாது. இதை நீ ஆராயணும். இதில் எங்காவது தப்பு இருக்கா என்று. சுதந்திரமா நீ செயல்படணும். உன்னோட ஆசை, திறமை, நினைத்தது எல்லாமாக நீ திகழணும்.. ஒரு கட்டடத்தைப் பார்த்தால், ம்.. நல்லாயிருக்கு என்று மட்டும் சொல்லக் கூடாது. முதலில் அதில் என்ன குறையிருக்கு.. அதை இப்படி யிப்படி செய்திருக்கணும் என்று சொல்பவனே முழுமையான பிசினஸ்மேன்..

''எந்த இடத்திலும் குறைகளைச் சுட்டிக் காட்டத் தயங்கக் கூடாது. அதுபோல் நாம் செய்யும் வேலையைக் குறை சொன்னாலும் திருத்திக்கணும். நாம் மட்டுந்தான் குறை சொல்லணும், நாம் செய்யும் வேலையை யாரும் குறை சொல்லக் கூடாது என்று நினைக்கக் கூடாது. முதலில் நிறையை விட குறையைத்தான் அதிகமாக விமர்சிக்கணும்... அப்பத்தான் அடுத்த தவறு நடக்காது. நீ என்ன சொன்னாலும் நான் இப்படித்தான் என்பது அது வேறு விசயம். உன் வேலையில் உனக்கு முழு சுதந்திரமும் உண்டு. அதில் யாரும் தலையிட மாட்டோம். உன் பின்னால் உறுதுணையாய் இருப்போம். நீ பயப்படாமல் இந்த வேலையை ஆரம்பிக்கலாம்..''

''.....''

''உன் அம்மா சொல்வதைக் கேட்டு நீ மனம் தளராதே. எந்த தொழிலில்தான் பிரச்சனையில்லை. ரோட்டோரக் கடை வியாபாரியில் இருந்து, வண்டிக்கடை, இட்லி வியாபாரத்தில் இருந்து, இண்டர்நேசனல் வரை தொழில் பண்றவனுக்கு பிரச்சனை இருக்கத்தான் செய்கிறது. முதலில் பிரச்சனையைப் பத்தி நினைத்தோம் என்றால் யாரும் தொழில் பண்ணவே முடியாது. தொழிலில்தான் எத்தனை அனுபவங்கள்.. எத்தனை மனிதர்கள்... குணங்கள்.. உலகத்தைப் பத்தி தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் தொழில் பண்ண வேண்டும். அதில் அத்தனை புதுமையான அனுபவங்கள் நிறைய கிடைக்கும். நாம்



படித்த படிப்பு சில சமயம் வேலைக்காகாது. மனிதர்களிடம் படிக்கும் பாடம், அனுபவம், சமயோசிதபுத்தி, எப்படி நடந்து கொள்ளணும் என்ற தெளிவு எல்லாம் நாம் கற்றுக் கொள்ளலாம். தினம் தினம் ஒவ்வொரு மனிதர்களிடமும் புது அனுபவம் கிடைக்கும். சில அனுபவம் முன்னேற்றத்தைத் தரும். சில.. பல அனுபவங்கள் வேதனையைத் தரும். அதை நாம் தவிர்க்க முடியாது. ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்..''

நிருபா சீமாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

அவள் கணவரைக் கோபமாகப் பார்த்தாள்.

சர்மா சிரித்துக் கொண்டே, ''பார்த்தியாம்மா உன் அம்மா முறைப்பதை. இதன் அர்த்தம் எனக்கு மட்டுந்தான் புரியும். இதையெல்லாம் நான் சமாளித்துத்தான் ஆகணும். முதலில் வீட்டைச் சமாளிப்பதற்காக நாம் நிறைய படிக்க வேண்டும். எப்ப எந்த ரூபத்தில் மனைவி வேசம் போடுவாளோ என்று யாருக்கும் தெரியாது.''

''நான் வேசம் போடுறேனா... இருங்க, பேயா மாறி உங்களைக் கடித்துக் குதறுகிறேன்..''

''க்கும்.. இப்ப மட்டும் நீ மனுசியா இருப்பதாக நினைப்பா.. நான் பேய் கூட குடும்பம் நடத்திக்கிட்டுத்தானே இருக்கேன். தினம் தினம் கடிபடறேன்!'' என்றார் கண்களால் சிரித்துக் கொண்டே...

அவர் சொன்னதின் பொருளில் இருந்த ரகசியத்தைப் புரிந்து கொண்டு கன்னம் சிவந்தாள் சீமா.

அஸ்வத், ''என்னம்மா, அப்பா உங்களைப் பேய் என்கிறார். நீங்க சண்டை போடாம வெட்கப்படுறீங்க..'' என்றான்.

''என்ன சீமா உன் புள்ளை சண்டை போடச் சொல்றான். நீ பேசாம இருக்கே.. சண்டை போடலாமா?'' என்றார்.

"என்னை வம்புக்கிழுக்காமல் உங்களுக்கு தூக்கமே வராது!" என்றாள் கேலியாக.

"என்னது நான் வம்புக்கிழுக்கிறேனா.. இத பார்டா அஸ்வத். உன் அம்மா சரியான சண்டைக்காரி. கல்யாணத்துக்கு முன் இவள் பிடித்து வைத்திருந்த ஒரு குடம் தண்ணியை நான் ஊற்றிக் குளித்து விட்டேன். வந்தாளே பாரு சண்டைக்கு. பாவாடையை எடுத்து மேலே வாரிக் கொண்டு எப்படி தண்ணியை எடுக்கலாம் என்று. நான் நடுங்கிவிட்டேன். இப்ப தண்ணியைக் கொண்டாந்து தரலே.. என்ன நடக்கும்னு தெரியாது என்றாள். அப்புறம் இவள் அம்மா வந்து சமாதானப்படுத்தினாள். தெரியாமல் ஹோட்டலில் இருந்து ஒரு தோசை ஊற்றி இவளுக்குக் கொடுத்தேன். அதை மட்டும் வாங்கிச் சாப்பிடத் தெரியுது.. ஒரு குடம் தண்ணி குடுக்கத் தெரியலே!" என்றார் சிரித்துக் கொண்டே.

சீமா, "ஐயோ.. என்னயிது. பிள்ளைகளிடம் போய் இப்படிப் பேசறீங்க.." என்று வெட்கப்பட்டுக் கொண்டு உள்ளே சென்றாள்.

பிள்ளைகளின் சிரிப்பு அவளைப் பின் தொடர்ந்தது.

நிருபாவின் கண்கள் பனித்தன - தன் அம்மாவை நினைத்து.

## 32



அப்பா இப்படி ஒரு நாள் கூட அம்மாவிடம் கேலிபேசி விளையாடியதில்லை. எப்பவுமே ஏ... மாடு.. எருமை, முண்டம்... இப்படித்தான் கூப்பிடுவார். தானும் அண்ணனும் கூட அப்பா பேச்சை ரசித்துச் சிரித்ததுண்டு.. அப்போ எனக்குப் புரியவில்லை. அம்மாவை இந்த மாதிரி பேசக் கூடாது என்று. அப்பா அம்மாவை மதிக்கவே யில்லை.. அம்மாவும் அதை



வெளிக்காட்டிக் கொண்டதில்லை. ஆனால் மனதில் எத்தனை வேதனை இருந்திருக்கும்... புருசன் தான் மதிக்கவில்லை. பிள்ளைகளும் இப்படி இருக்கிறார்களே என்று. எங்கள் வளர்ப்பு அப்படி, அப்பா வழியில்.

ஒரு கணவன் மனைவியை மதிக்க வேண்டும். அவள் தன் சுயத்தை இழக்கக் கூடாது. ஏதோ ஒரு ஜடப் பொருள் போல. அனைத்து வேலைகளையும் செய்து தன் கணவனுக்கும் கடமை தவறாது படுக்கையிலும் சந்தோசத்தைக் கொடுப்பது மனைவியின் கடமை மட்டுமா..? ஏதோ ஒரு இயந்திரம் போல் தாம்பத்திய வாழ்க்கை வாழ்வது ஒரு வாழ்வா...? அதில் இனிமை இருக்கணும், தன்னை மறந்து காதலில் சங்கமிக்க வேண்டும்.

அம்மா ஒரு இயந்திரம் போல் தானே இருந்தார்கள். அப்பா அம்மாவை உண்மையில் நேசிக்கவில்லையா? இல்லை யென்றால் எப்படி மனது வரும். ஒரு மனைவி மரணப் படுக்கையில் கிடக்கும்போது கூட மனம் இரங்காமல் இருக்க அத்தனை கல் மனதா? ஏன் பெத்த பெண் கூட என்று பாராமல் என்னையே.. கடவுளே.. எனக்கு மறக்கும் சக்தியைக் குடு.. பழைய நினைவுகளை முற்றிலும் மறந்து போக எனக்குச் சாபமிடு. இல்லையென்றால் அம்னிசியா வந்து என்னையே மறக்கச் செய்.

முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு குமுறினாள்.

முதலில் இந்த நினைவுகளில் இருந்து நான் விடுபட வேண்டும் என்றால் வேலையில் என் மனதைச் செலுத்தணும். உடல் களைக்க வேலை செய்யணும். வீட்டில் இப்படிப் படுத்தேயிருந்தால், பைத்தியம் பிடித்து விடும்- இன்னும் சில நாளில். என் வாழ்க்கை என்னைக் கேட்காமலேயே, என் விருப்பமில்லாமலேயே அதுபாட்டுக்குப் போகிறது. இனி நானும் அதன் போக்கில் போய்த்தான் ஆகணும். எங்குபோய் நிற்குமோ அப்போ நாமும் நிற்போம். நாமாக வேறு எதுவும் செய்யக் கூடாது.

நான் எடுக்கும் எந்த முடிவும் இதுவரை நடக்கவில்லை. ஊரை விட்டு வந்தாச்சு. உயிரையும் விட முடியவில்லை. என் அப்பா எனக்குத் தராத தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் பெறாத அப்பா தருகிறார். நானும் கொஞ்சம் புண்ணியம் பண்ணித்தான் இருக்கேன். இதுமாதிரி ஒரு அப்பா கிடைக்க. என் மனதில் வேறுபாடு உண்டாகக் கூடாது என்று உன் அம்மா, தங்கை, அண்ணன் என்கிறார். எத்தனை பெரிய மனது இவருக்கு. எத்தனை கஷ்டப்பட்டு வாழ்க்கையில் முன்னேறி இருக்கிறார். இத்தனை சொத்து இருந்தும் எல்லாரும் தன் சொந்தக் காலில் நிற்கணும் என்கிறார். உழைப்பின் உன்னதத்தை எப்படி உணர்த்துகிறார். இதே என் அப்பா என்னிடம் நீ எதற்கு வேலை பார்க்கணும். நீ நல்லா செலவு செய்து ஊர் சுற்று என்று தானே கற்றுக் கொடுத்தார். இதுமாதிரி கண்டிப்போடு இருந்திருந்தால் நான் அவனிடம் இந்த மாதிரி நடந்திருப்பேனா..? அவன்தான் என்னைப் பழி வாங்கி இருப்பானா? பாவி.. நான் வளர்ந்த முறை சரியில்லை.. இத்தனை சொத்து இருந்தும் எந்த ஒரு ஆடம்பரமுமில்லாமல் எப்படி இருக்கிறார்கள்...!

என் அம்மாவும்தான் எத்தனையோ என்னிடம் எடுத்துச் சொன்னாங்க... நான் கேட்டேனா.. சனியன் யாரை விட்டது என்ற மாதிரி என்னைப் பிடித்துக் கொண்டது. நானும் அம்மாவை மதித்தேனா, படிக்காத பட்டிக்காடு என்று தானே நினைத்தேன். அவர்கள் தான் எத்தனை தீர்க்கதரிசி. நீ இப்படி நடக்கக் கூடாது. பெண் என்றால் இப்படித்தான் நடக்கணும் என்று அறிவுறுத்தினார்கள். இல்லை யென்றால் நீ வாழ்க்கையைச் சந்திக்கும்போது நிறையக் கஷ்டப்படுவாய் என்று சொன்னார்கள்தானே? நான் பணம் மட்டும் இருந்தால் போதும் என்றுதானே என் அப்பா போல நினைத்தேன். பணம், பதவி, ஆடம்பரம், அந்தஸ்து எல்லாம் உண்மையான அன்புக்கு முன் தூசு என்று நிரூபிக்கப்பட்டு விட்டது. உலகின் சக்தி வாய்ந்த ஆயுதம் அன்பு மட்டும்தான். அன்பால் எதையும் சாதிக்கலாம்... பணம் நிலையானதில்லை. அன்பு மட்டும்தான்



அன்பு மட்டும்தான் உயர்ந்தது என்று நினைத்திருந்தால், அப்பா அப்படிச் செய்திருக்க மாட்டாரே.. என் உயிரைக் கூறு போட்டிருக்க மாட்டாரே... பெத்த பெண் நான் எங்கேயோ இருக்க அவர் கடை, வீடு பணம் என்று தானே வளைய வருகிறார். இதே நான் என் அப்பா மாதிரி அவர்களிடம் அகப்பட்டு இருந்தால்.. என் கதி.. கடவுளே.. அம்மா.. நீங்க என்னைத் தெய்வமா இருந்து காப்பாத்துங்க... நீங்க உயிரோட இருந்து சொன்னதை நான் கேட்கலை. அதான் பட்டு விட்டேன்.. இனிமேலாவது என்னை வழி நடத்துங்க.. நான் அதன்படி நடக்கிறேன்.. என்று கடவுள் முன்னால் சங்கல்பம் எடுத்துக் கொண்டாள்.

மறுநாள் காலையில் எட்டு மணிக்கெல்லாம் கீழே சாப்பாடு ஹாலுக்கு வந்துவிட்டாள். அனைவரும் இருந்தனர். "அண்ணா! நான் உங்களுடன் ஆபீஸ் வருகிறேன்," என்றாள்.

"வாம்மா, நானே உன்னைக் கூட்டிப் போகிறேன்," என்றான் அஸ்வத்.

சர்மாவிடமும், சீமாவிடமும் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டு அஸ்வத்துடன் சென்றாள்.

அஸ்வத் அவளுக்குனு தனி கேபின் கொடுத்தான். மற்ற ஸ்டாப்புகளை அறிமுகப்படுத்தி வைத்தான். அவளுக்கு வேலையைக் கற்றுக் கொடுக்க ஒருவரை நியமித்தான்.

நிருபா ஒரே வாரத்தில் வேலையைக் கற்றுக் கொண்டாள். அஸ்வத் சர்மாவிடம் சொன்னான். அவரே பிரமித்தார்.

அஸ்வத்துக்கு எல்லா விதத்திலும் உதவியாக இருந்தாள். அவனுக்குத் தேவையான பைல்களை முறையாக ரெடி பண்ணினாள். கான்ராக்ட்களுக்குத் தானே கொட்டேசன் தயார் பண்ணினாள். அதைப் பார்த்த அஸ்வத் திகைத்தான்.

நிருபாவிற்குப் பிரசவ நாள் நெருங்கியது. ஹாஸ்பிடலில் அட்மிட் செய்தனர். ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது.

திவாகரையே உரித்து வைத்துக் கொண்டு. வீட்டுக்கு வந்தாள் குழந்தையுடன். ஒரு மாதம் இருந்தாள். பின் வேலைக்குக் கிளம்பினாள்.

சீமா, 'குழந்தை கொஞ்சம் வளரட்டும். அதுவரை வீட்டில் இரு. உன் உடம்பும் நல்லா ஆகட்டும்!'' என்றாள்.

''என் உடம்பு நல்லாத்தான் இருக்கு. குழந்தையைப் பார்க்கத்தான் நீங்க இருக்கீங்க.. பிறகு நான் என்ன செய்யப் போறேன்?'' என்று சென்று விட்டாள்.

இப்படியே ஒரு வருடம் ஓடியது. நிருபா இப்போ தனியா கான்ட்ராக்ட் எடுத்துத் தனியாக நின்று கட்டடத்தைக் கட்டித்தரும் அளவுக்கு வளர்ந்து விட்டாள்.

சர்மாவும் தனியாகப் பணத்தைப் போட்டு, ''நான் இதற்கு இவ்வளவு முதலீடு போட்டிருக்கிறேன். இதை நீ கட்டி முடி. எப்படிச் செய்கிறாய் என்று பார்ப்போம். உனக்கு எல்லாம் தெரியும். என்ன பொருள் எங்கெங்கு வாங்கணும், எப்படி நிர்வகிக்கணும் என்று. நான் போட்ட முதலீட்டை நீ கொஞ்சங் கொஞ்சமாக எனக்குக் கொடுத்து விடணும். மீதி உன் லாபம். வருமானம்!'' என்றார்.

நிருபா அதிர்ந்தாள். தன்னை நம்பி இவ்வளவு முதலீட்டைப் போட்டு இத்தனை பெரிய ஹோட்டலே கட்டச் சொல்கிறாரே என்று தன்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை வீணாக்காமல் முழு மூச்சுடன் உழைத்தாள். அவளின் வேகத்தைக் கண்டு அதிகாரிகளே பயந்தனர்.

இன்ஜினியர்கள் போட்ட பிளான்களையே இவள் மாற்றினாள். கட்டி விட்டாலும், அதைத் தயங்காமல் இடித்துக் கட்டச் சொன்னாள். தனக்கு நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று. இன்டீரியர் டெக்கரேசனை அவளே பிளான் பண்ணினாள். அதற்கும் நல்ல வரவேற்பு. கார்பெட்டில் இருந்து



ஜன்னல் திரை, ஸ்கிரீன் வரை அவளே முன் நின்று தேர்ந்தெடுத்தாள்.

அவள் திவாகர் கட்டிய கட்டடங்களைப் பார்த்திருக்கிறாள். அதை மனதில் கொண்டு இன்னும் பலமாடிக் கட்டடங்களைக் கட்டினாள். வெளியில் கார்டனை மிகவும் அழகாக்கினாள். திவாகர் பேசும்போது சொல்வான். இந்த மாதிரி வீட்டுக்கு இந்தப் பக்கம் கார்டன் இருந்தால் நல்லா இருக்கும். இந்த சைஸ் ஹோட்டலுக்கு சைடில் இருந்தால் பார்க்க நன்றாக இருக்கும். சில கட்டடங்களுக்குப் பின்புறம் இருக்க வேண்டும். தோட்டம் மாலை நேரம் ரம்மியமாக இருக்கும். இடத்தைப் பொறுத்து அமைக்க வேண்டும். ஒரு சில இடத்துக்குத் தோட்டத்தின் நடுவில் பங்களா இருக்க வேண்டும். காலைச் சூரியன் பங்களாவின் மீது விழுந்து கொண்டிருக்க வேண்டும்.

சுற்றிலும் பச்சைப் பசேல் என்று தோட்டம். செயற்கை நீரூற்றுகள். தாமரைக் குளம். அதில் இந்தப் பக்கம் இருந்து அந்தப் பக்கம் போக நடுவில் மரப்பாலம். இரண்டு பக்கமும் மரத்தாலான கைப்பிடி. இரவின் பௌர்ணமி வெளிச்சத்தில் வெண் தாமரை மலர்கள் நிலவின் பொன் நிறங்களால் கருநீலத் தண்ணீரில் மிதந்தன.

வீட்டின் முன்புறம் பெரிய பவுண்டன். சுழற்றி அடிக்கும் நீர் வீழ்ச்சி. நீண்டு ஓடும் கார் பாதை. இரு மருங்கிலும் வரவேற்கும் விதவிதமான பூச்செடிகள். புல் வெளியின் நடு நடுவே ஓங்கி வளர்ந்த செண்பக மரம், பன்னீர் மரம், மனோரஞ்சிதம் என்று சுற்றிலும் வாசனை. பங்களாவின் இடது பக்கம் பர்ண சாலை போல் அமைத்துக் கிளிகளும், பறவைகளும் சின்னச் சின்ன ஊஞ்சல்களில் ஆனந்தமாக ஆடின.

பங்களா ஒரு குன்றின் மேல் இருக்குமாறு வடிவமைத்துக் கட்டியிருந்தாள். கார் ஓடும் பாதையும் குன்றின் மேல் ஏறிப் பின் இறங்கிக் குகைக்குள் செல்வது போல் அமைத்திருந்தாள்.

தோட்டத்தில் ஆங்காங்கே வட்ட வடிவமான நிழற் குடைகள் ...ட்கார கிரானைட் கல் பெஞ்சு. முடித்து விட்டு சர்மா குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு காட்டினாள். அவர் திகைத்துப் போய்விட்டார். இத்தனை கலை நயமாக, நுணுக்கமாக ஒவ்வொரு தூணிலும், கதவுகளிலும், நிலைகளிலும், சிற்பங்கள் செதுக்கியிருந்தன. ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கவனித்துப் பார்த்துப் பார்த்துச் செய்திருந்தாள்.

பார்த்த எல்லோரும் பாராட்டினர். நிறையப் பேர் எங்களுக்கும் இது மாதிரி வேண்டும் என்று போட்டி போட்டனர். சின்ன இடத்திலும் அழகாகக் கட்டித் தந்தாள்.

33



சர்மாவிடம் பணத்தைக் கொடுத்து விட்டாள். இவளின் சேமிப்பு கணக்கில் ஏறியது. சர்மா அன்றே தெளிவாகச் சொல்லிவிட்டார். ''இதப் பாரும்மா நிருபா. நான் பணம் போடுகிறேன் உன்னை நம்பி. நீ பணத்தைத் திருப்பித் தந்து விட வேண்டும். அப்புறம் நீ சம்பாதிக்கும் பணம் உனக்குத்தான். ஏன்னா நான் வருசம் பூராவும் இருந்து உனக்கு உதவி பண்ண முடியாது. நீதான் உன்னையும் உன்னை நம்பியிருக்கும் குழந்தையையும் பார்த்துக் கொள்ளணும்..''

''உன் குழந்தையையும்'' என்ற வார்த்தையை அழுத்திச் சொன்னார்.

''எனக்கு வயசாகி விட்டது. எனக்குத் திடீர்னு ஏதாவது ஒன்று ஆனா நீ என்ன பண்ணுவே.. ஷோபா கலியாணம் ஆகிப் போயிடுவா.. அஸ்வத்துக்கும் கல்யாணம் ஆகிவிடும். பிறகு நீ என்ன செய்வாய்? வருமானத்திற்கு என்ன வழி? நான் இருக்கும் வரைதான் உனக்கு இந்த வீட்டில் இடம். நான் இப்படிச் சொல்றேனு நீ தப்பா எடுத்துக்கக் கூடாது. ஏன்னா நடைமுறை



இதுதான். உன் வாழ்க்கைக்கு ஒரு வழி காட்டி விட்டேன். நீயும் அதை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டு மேலே வந்து விட்டால், உன் வருமானத்தை வீடாகவோ... இல்லை நிலமாகவோ.. வேறு எந்த விதத்திலும் நீ பயன்படுத்தலாம். இனி உன் எதிர்காலத்தை நீதான் தீர்மானிக்க வேண்டும். அதற்காக உன்னை வீட்டை விட்டுப் போ என்று சொல்ல மாட்டேன். இந்த இடம் உனக்கு எப்பவும் நிரந்தரம் இல்லை என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும். என்னடா அப்பா இப்படிச் சொல்கிறாரே என்று நினைக்கக் கூடாது. எதற்கும் நீ உன்னைத் தயார்ப்படுத்திக்க வேண்டும். அடுத்தவர் நிழலிலே எத்தனை காலம் வாழ முடியும்? எங்களுக்கும் வயசாகி விட்டது. உன் அண்ணன் கடைசிவரை வைத்துக் காப்பாற்றுவான் என்று என்ன நிச்சயம்? நானும் அதைச் சொல்ல முடியாது!'' என்றார். அவளின் முகத்தை ஆராய்ந்து கொண்டு.

அவள் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது. பதிலேதும் சொல்லவில்லை.

நிருபா தனி ஆபீஸ் போட்டாள். ஆட்களை வைத்து ஒரே சமயத்தில் நான்கைந்து இடங்களில் வேலை பார்த்தாள்.

அவளுக்குச் சமீப காலமாகத் தமிழ் நாட்டில் இது மாதிரி கட்டடங்கள் கட்டணும் என்று ஆசை இருந்தது. ஆசை என்பதை விட வெறி என்றே சொல்லலாம். இதைச் சர்மாவிடம் சொன்னாள்.

''சரிம்மா. உன் இஷ்டம். உன்னால் முடியும் என்றால் செய்,'' என்றார் யோசனையாக.

இவள் அங்கு செல்லாமல் நம்பிக்கையான ஆட்களை வைத்து முதலில் விபரங்களைச் சேகரித்தாள். ஒரு பெரிய நட்சத்திர ஹோட்டல் ஆரம்பிக்க டெண்டர் விடப்பட்டது. நிருபா கொட்டேசன் தயாரித்தாள். இது மாதிரி மூன்று இடங்களுக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பினாள்.

மூன்று இடங்களுமே இவள் அனுப்பிய கொட்டேசனை ஏற்றுக் கொண்டன. இவள் ஆட்களை அனுப்பி வேலையை ஆரம்பித்தாள். வேலை மளமளவென்று நடந்தது.

இது மாதிரி பல இடங்களில் அடுக்கு மாடிக் கட்டடம், காலேஜ், காம்ப்ளக்ஸ், மால் என்று காண்ட்ராக்டுகள் குவிந்தன.

சென்னை - திவாகர் ஆபீஸ். அவன் டென்சனில் இருந்தான். தான் அனுப்பிய கொட்டேசன் எல்லாம் கேன்சல் ஆகி விட்டது. அத்தனை இடங்களிலும். ஏன்..? எங்கே தவறு நடக்குது. எதனால் இத்தனை வருடம் இல்லாத தோல்வி? இதில் இங்கு இருக்கும் கன்ஸ்ட்ரக்சன் தலையிடவில்லை. பிறகு யார்..? யோசித்தான்.

மகாபலிபுரம் ரோட்டில் ஒரு பெரிய காண்ட்ராக்ட் வந்தது. பெரிய ஹோட்டல். நீச்சல் குளம், சுற்றிலும் காட்டேஜ், லாட்ஜ் என்று கிட்டத்தட்ட முடிவான பிறகு கைவிட்டுப் போனது. திவாகர் கோபத்தின் உச்சியில் இருந்தான். ஒரு டிடெக்டிவ் ஏஜென்சி மூலம் இரகசியமாக யார் என்ன விபரம் என்று தெரிய வேண்டும் என்று சொன்னான்.

அவர்கள் ஒரே வாரத்தில் ரிப்போர்ட் கொடுத்தனர்.

அவர்கள் மும்பைக்காரர்கள். இங்கு வந்து வேலை பார்ப்பவர்கள் யார் யார்.. என்று தெளிவாகச் சொன்ன ரிப்போர்ட் இதன் தலைமை அதிகாரி யார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை என்றனர்.

மும்பை இவனுக்கு யோசனையாகவே இருந்தது. இதுவரை இவன் இது யதார்த்தமாகவே நடந்தது என்று தான் நினைத்தான். இந்த மாதிரி காண்ட்ராக்ட் கைவிட்டுப் போவது சகஜம். ஆனால். இது இப்போது திட்டமிட்டுத் தன் தொழிலையே குறி வைப்பது போன்று இருக்கிறதே.. சந்தேகம் வந்தது.



இவன் அறிந்தவரை இவனுக்குத் தொழிலில் எதிரி களில்லை. போட்டி, பொறாமை என்று எதிலும் இறங்க மாட்டான். இவர்கள் ஏன் மும்பையில் இருந்து தன்னை நோக்கியே காயை நகர்த்தணும். இதில் ஏதோ சூது இருக்கு.

யார் தலைமையில் இது நடக்குது.. எத்தனை முயன்றும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. குழப்பத்தில் இருந்தான்.

அவன் ஃபிரண்டிடம் பேர் சொல்லி விசாரிக்கச் சொன்னான். அவனும் 'அந்த மாதிரி இங்கு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை,' என்றான்.

ஒரு சில தகவல்களை வைத்து எதையும் தீர்மானிக்க முடியவில்லை. என்னவென்று அவர்களிடம் போய்க் கேட்க முடியும். எத்தனையோ பேர் போட்டி போட்டார்கள். அதில் நாங்களும். நாங்க ஏன் உங்களை மட்டும் போட்டியா நினைக்கப் போறோம் என்றால் என்ன சொல்ல முடியும்.

இந்த காண்ட்ராக்ட் எல்லாம் பேசி முடித்துக் கையெழுத்துப் போடும் சமயத்தில் கைவிட்டுப் போனது. இது அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இத்தனை வருடத்தில் இது மாதிரி நடந்ததில்லை. இது எல்லோருக்கும் சகஜம்தான். என்றாலும் ஏதோ அவனுள் உறுத்தியது. அது என்னவென்றுதான் தெரியவில்லை.

கிளப்பில் அவனுக்குத் தெரிந்த நண்பர். வயதில் பெரியவர். தொழிலில் நம்பர் ஒன். அவரே வியந்து, 'ஏன் திவாகர், என்ன பிரச்சனை உனக்கும் அவனுக்கும், ஏன் கைவிட்டுப் போனது, யார் அந்த பில்டர்ஸ்?'' என்றார்.

மனதில் குமைந்தாலும், சிரித்த முகமாகவே.. ''தொழிலில் இப்படி நடப்பது தெரிந்ததுதானே... கடைசி நிமிடத்தில் ஒரு சில நேரம் கை மாறும் என்று. இது எப்படியோ நடந்து விட்டது..''

''இது மாதிரி நீ விடமாட்டியே... அதான் எனக்கு ஆச்சரியம் ஏன் வேறு பிசினஸ் எதுவும் பண்ணப் போறியா..? இதில் கவனம் குறைந்து விட்டதா..?'' என்றார் கேலி போல.

''உங்களுக்குத் தெரியாமலா நான் வேறு தொழில் தொடங்கப் போறேன்.. அப்படித் தொடங்கினால் முதலில் உங்களுக்குத் தான் சொல்வேன்..''

''சரி. ஏன் இன்னும் எந்த மான் வலையிலும் சிக்காமல் நாலு கால் பாய்ச்சலில் ஓடிக் கொண்டிருக்கிறாய்?'' என்றார் நமட்டுச் சிரிப்புடன்.

அவன் பெண்கள் விசயத்தில் நெருப்பாக இருப்பது அவர் அறிந்த விசயம். இந்த இளம் வயதில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்து விட்டான் தொழிலில். நிலையான பிசினஸ். எத்தனையோ பெண்கள் பார்ட்டியிலும் சரி, மற்ற வேறு விசயங்களிலும் சரி, இவன் கடைக்கண் பார்வை தன் மேல் படாதா என்று ஏங்கி அவன் முகத்தைப் பார்த்தவர்கள் உண்டு. இதை அவர் கவனித்து இருக்கிறார். இவரிடமே எத்தனையோ பேர் என் பெண்ணுக்குக் கேட்டுச் சொல்லுங்கள் என்று சிபாரிசுக்கு வந்தார்கள். இவன் எதிலும் பிடி கொடுக்காமல் நழுவி விடுவான்.

''மான் என்னைக் கவர்ற மாதிரி இருக்க வேண்டாமா? நானே மயங்கி அதன் வலையில் சிக்கித் தவிக்க வேண்டாமா... அப்படிச் சிக்கினால் நான் வெளி வரவே கூடாது!'' என்றான் சிரித்துக் கொண்டே.

''எத்தனை பெண்களைக் கடந்திருப்பாய்.. அதில் ஒருத்தி கூடவா இம்ப்ரஸ் பண்ணலே?''

அவன் கண் முன்னால் தான் கடையைக் கூட்டக் கையில் துடைப்பத்தோடு நிற்கும்போது, தன் கையைப் பிடித்துத் தன் உதட்டில் மெல்ல ஒற்றி எடுத்த பெண் முகம் நினைவுக்கு வந்தது.



திருபா.. மெல்ல மலர்ந்தது அவன் இதயம். மலர்ந்த இதயத்தைச் சுற்றி ரீங்காரமிட்டன வண்டுகள். அந்த தருணத்தின் நினைவுகள்... ஒரு பெண்ணின் ஸ்பரிசம், அவனை உணர வைத்தது. உறைய வைத்தது.

முதன் முதலில் அவன் ஆண்மையை உணர வைத்தவள். ஒரு பூ மலர்ந்தாற்போல் எத்தனை மெல்லிய ஒற்றுதல். புல்லில் ஒரு பனித்துளி விழுந்தாற்போல் சிலிர்த்துப் போனான். அவன் தூய்மையான இதயத்தில் தங்கப்பதுமை போல் சிம்மாசனமிட்டு அமர்ந்தாள்.

நான் கடந்தேன். ஆழிப் பேரலையில் அமிழ்ந்தேன். எழ முடியாமல் மூச்சுத் திணறினேன். தென்றல் போல் என்னைத் தீண்டினாள். அந்தத் தீண்டலில் நான் உயிர்த்தெழுந்தேன். எழுந்த என்னை மரணப் படுக்கையில் தள்ளினாள் உடனே. அந்த நெருப்பில் வெந்து, கருகி நான் சாம்பலானேன். என்னை மனிதனாக உருவாக்கிய அவள் மிருகமாகவும் மாற்றினாள்.

தென்றலாக விடியலின் பனியாக வந்த அவள் என்னைக் கடக்கும்போது புயலாக, சூறாவளிக் காற்றாக, மழையாக, என்னைக் கடந்து சென்றாள். நான் எத்தனை நிலையாக நின்றாலும் முடியவில்லை. புயலாகச் சீறி, காற்றாகச் சாய்த்து, மழையாக அடித்துச் சென்றாள். அப்படிச் செல்லும் போதும் அதை நான் ரசித்தேன்.

''என்ன திவாகர் சிந்தனை? என்னடா இந்தக் கிழவன்கிட்டே நம் கனவுக் கன்னியைப் பற்றிச் சொல்லலாமா? இவனுக்கு என்ன தெரியும் என்று நினைக்கிறாயா..? என்னையும் ஒரு காலத்தில் தென்றல் தீண்டியது. உன்னையும் தீண்டியிருக்கும்... அப்படித்தானே..'' என்றார் வெடிச் சிரிப்புச் சிரித்து.

அவனையறியாமல் பெருமூச்சு ஒன்று வெளிவந்தது. ஆம்.. என்னையும் தென்றல் தீண்டியது. தென்றலாகயில்லை. கொடிய நல்ல பாம்பாகத் தீண்டியது. அந்த விஷத்தை இதுவரை

என்னால் இறக்க முடியவில்லை. இறக்கவும் முடியாது. கண் மூடி நின்றான் வெறுமையாக.

''உன்னிடம் உண்மையை வாங்க முடியாது என்று நினைக்கிறேன். சரிப்பா, நான் கிளம்புகிறேன்,'' என்று புறப்பட்டார்.



## 34

அப்படியே ஒரு சேரில் அமர்ந்து விட்டான் திவாகர். மூடிய இமைகள் நனைந்தன. ஏன்டி உன்னை நான் பார்க்கணும். நான் பார்த்தாலும் எந்த சலனமும் இல்லாமல்தானே நான் இருந்தேன். நீயே சலனத்தையும், கிளர்ச்சியையும் உண்டாக்கி என்னைப் பெண்மையின் மென்மையை உணர வைத்து களங்கமில்லாத என்னை நீ இப்படி நிக்க வைத்து அடிக்கலாமா? இது எந்த விதத்தில் நியாயம்? என் இதயம் முழுவதும் நீதான் இருக்கே.. என் நாடி, நரம்பு, என் இரத்தத்தில் எல்லாம் கலந்து என் சுவாசமாக நீ இருக்கிறாய்.. என் கண்ணே... நீ எங்கே.. இதயம் வேகமாகத் துடித்தது. எங்கே தான் வாய்விட்டுக் கதறி விடுவோமோ.. என்ற நிலைக்கு வந்துவிட்டான். சட்டென எழுந்தான். சுற்றிலும் பார்வையை ஓடவிட்டான். தெரிந்தவர்கள் இவனைப் பார்த்துப் புன்னகைத்தனர். இவனும் பதிலுக்குப் புன்னகை சிந்தினான் போலியாக.

''என்ன திவாகர் கிளம்பிட்டியா?'' என்றான் கோபால்.

''ஆமா.. ஒரு சின்ன வேலை. அதான்..''

''நீ இன்றைக்கு எந்த வேலையும் வைத்துக் கொள்ள மாட்டியே.. தலையே போனாலும். இப்ப என்ன?'' என்றான் கேள்வியுடன்.

ஆமாம். திவாகர் அப்படித்தான். எந்த வேலையும் ஞாயிறு வைத்துக் கொள்ள மாட்டான். அந்த நாளை அவனுக்கென்று



ஒதுக்கி விடுவான். சிலர் ஏன் வரவில்லை கிளப்புக்கு என்றால் வேலை நிறைய அதான் ஞாயிறு பார்த்தேன் என்பார்கள். திவாகர் அதுமாதிரி செய்ய மாட்டான். ஏப்பா நீ ஒண்டிக்கட்டைதானே. எதற்கு ஒரு நாளை வீணாக்குகிறாய் என்றால், இப்போது இருந்து கத்துக் கொண்டால் தானே பின்னால் பிரச்சனை வராது மனைவி கூட எவ்வளவு வேலை இருந்தாலும் குடும்பத்துக்கென்று நேரம் ஒதுக்கணும். நாம் யாருக்காகச் சம்பாதிக்கிறோம்... மனைவி மக்களுக்காகத்தானே... பிறகு அதை அவர்கள் கூடச் செலவிடாமல் அப்படியென்ன வேலை? நமக்கு வருசம் பூராம்தான் வேலையிருக்கும். எப்போதான் குடும்பத்தோட செலவிடுகிறது என்பான். ஆனால் அவனே இப்போ வேலை என்றதும் பிடித்துக் கொண்டான்.

திவாகருக்கு அப்படியொன்றும் வேலையில்லைதான். அவன் மனநிலை இப்போது ஒரு நிலையிலில்லை என்பதே உண்மை. கேட்டதும் பேச்சுக்கு வேலை யிருக்கு என்று சொன்னான்.

''லேசா தலைவலி மாதிரி இருக்கு. அதான் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தால் சரியாகிவிடும்!'' என்றான்.

''ஆமாம். உன் முகமே சரியில்லை. நீ போ.. நான் வேறு பிடித்துக் கொண்டேன்!'' என்றார்.

திவாகர் இதயம் கொந்தளித்தது. நேராக வீட்டுக்குப் போனான். வேலைக்கார அம்மாவிடம், ''எனக்குச் சாப்பாடு வேண்டாம்.. நீங்கள் சாப்பிட்டுப் படுக்கலாம்,'' என்று சொல்லி விட்டான்.

கதவை அறைந்து சாத்திவிட்டுப் படுக்கையில் குப்புற விழுந்து வாய்விட்டுக் கதறி அழுதான். எதற்கு அழுகிறோம் என்று தெரியாமல். அவள் தன்னை ஏமாற்றியதற்கா, இல்லை, அவள் ஏமாற்றியதில் அவனைப் பழி வாங்கியதற்கா.. இல்லை, அவள் தன்னை விட்டுப் போய்விட்டதற்கா.. இல்லை, இப்ப

அவள் உயிருடன் இருக்கிறாளா.. இல்லையா.. என்று தெரியாமலா.. என்று அழுதான்.

அவன் நினைவுகள் பலத்த காற்றால் பின்னோக்கி இழுத்துச் செல்லப்பட்டன.

அன்று அவன் வெளியூர் சென்று விட்டு இரண்டு நாளில் வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனவன் இரண்டு நாளில் வர முடியவில்லை. ஐந்து நாள் ஆகிவிட்டது. வேலை முடிந்ததும் ஓடோடி வந்தான்.

ஏனோ அவன் மனதில் ஒரு தவிப்பு இருந்து கொண்டே இருந்தது. நிருபாவைப் பற்றி. வந்ததுமே அவள் அறைக்குச் சென்று பார்த்தான். அவள் இல்லை. சரியென்று அவள் இருக்கும் மற்ற இடமெல்லாம் பார்த்தான். காலையிலேயேவா தோட்டத்திற்குச் சென்று விட்டாள்.. அங்கும் பார்த்தான். எங்கும் இல்லை. அவன் இதயத்தில் அபாய முரசு கொட்டுவது கேட்டது.

தன் அம்மாவைத் தேடிப் போனான். ''அம்மா, நிருபா எங்கே?'' என்றான்.

அவள் முகத்தைத் திருப்பினாள்.

''என்னம்மா, நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் முகத்தைத் திருப்புறீங்க. எங்கே அவள்?'' என்றான்.

''எனக்கென்ன தெரியும்? என்னமோ என்னிடம் சொன்ன மாதிரி கேட்குறே.. அவ என்ன என் மருமகளா.. இல்லை, உன் பொண்டாட்டியா..? அவள் எப்படி வந்தாளோ.. அது மாதிரி போயிருப்பா.. என்னை வந்து கேக்குறே..'' என்றாள்.

அவன் வாயடைத்துப் போனான்.

''அம்மா, பிளீஸ்.. என்னைப் புரிஞ்சுக்கோங்க.. அவள் எங்கே? இந்த நிலையில் அவள் வேறு எங்கு போக முடியும்? போகவும் இடமில்லை. சொல்லுங்கள்..'' என்று கெஞ்சினான்.



''உண்மையிலேயே எனக்குத் தெரியாது. நான் மறுநாள் அவள் நடமாட்டம் இல்லையென்றதும்தான் பார்த்தேன். அவள் இல்லை. பிறகு நீ எதுவும் சொல்லித்தான் எங்கும் சென்றாளோ என்று இருந்து விட்டேன். ஏன்னா நான்தான் உனக்கும் அவளுக்கும் கொடுமைக்காரிதானே. அதனால் நான் கொடுமைப் படுத்தி விடுவேன் என்று நீங்கள் இருவரும் திட்டம் போட்டு நீ அவளை அனுப்பியிருப்பாய் என்று நினைத்தேன்.. எனக்கு வேறு எதுவும் தெரியாது.. பிறகு அவள் எங்கே என்று யோசிக்கவுமில்லை!'' என்றாள் குத்தலாக.

திவாகர் அசந்து விட்டான். தான் கேட்ட கேள்வி அவள் எங்கே.. என்று. இதற்கு இப்படி ஒரு பதிலா..? எனக்குத் தெரியும். இல்லை, தெரியாது என்று சொல்லாமல், இது என்ன இரண்டுங்கெட்டான் பதில். இப்போ அவள் எங்கே என்று இவர்களுக்குத் தெரியுமா.. இல்லை, தெரியாதா... அவனே குழம்பினான்.

இவர்களிடம் இனி கேட்டுப் பயனில்லை என்று அவள் அறைக்கு வந்து தேடினான். டேபிள் மீது ஒரு கடிதம் இருந்தது. அதைக் கை நடுங்க எடுத்துப் பிரித்தான்.

படித்துப் பார்த்தவன் அப்படியே கல்லாக இறுகிப் போனான். ஆனாலும் அதை முழுமையாக நம்பவில்லை.

அம்மாவின் மேல் சந்தேகமாக இருந்தது. அவள் முகத்தைப் பார்த்தான். அதில் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவள் மகன் கடிதத்தைப் பார்க்கும்போது அவன் முகத்தை உற்றுக் கவனித்தாள். அதில்தான் எத்தனை விதமான உணர்ச்சிகள். சந்தேக ரேகைகள். இதை நம்பி விட்டான் என்று முழுமையாக நினைக்க முடியவில்லை. தன்னைப் பார்ப்பதும் சந்தேகக் கண்ணோடதான்.. இவன் மனம் மாறுமா? இவன் அவள் எழுதிய லட்டரை நம்பி என் வார்த்தையைக் கேட்பானா?

தான் அதில் அதிகமாக எழுதச் சொல்லி விட்டோமோ.. குழம்பினாள்.

திவாகர் அந்த லட்டரை நம்பவில்லை. இது மாதிரி தெரியாமல் லட்டர் எழுதி விட்டுச் செல்லுமளவிற்குத் தைரியமில்லாதவள் இல்லை. முகத்துக்கு நேரே எதாயிருந்தாலும் தைரியமாகப் பேசுவாள். இந்த மாதிரி திருட்டுத்தனமாகச் செய்ய மாட்டாள். நான் வீட்டை விட்டுப் போகிறேன் போடா என்று அவள் சொல்லிவிட்டுப் போனாலும் என்னால் தடுக்க முடியாதுதான். ஆனால் அவள் இத்தனை மாதம் வரை செய்யவில்லையே..? இதுவரை நான் வெளியூர் செல்லவில்லையா... இப்போதான் சென்றேனா? இப்போ மட்டும் ஏன்.. இந்தத் திடீர் முடிவு. அம்மாதான் நான் போனதும் ஏதாவது சொல்லி அவளை வீட்டை விட்டு அனுப்பியிருக்கணும். இப்போ எங்கே போனாளோ.. அவள் நிச்சயமாக எனக்குப் பயப்பட மாட்டாள். அவள் பிரச்சனைகளுக்கும், அவள் அப்பாவிற்கும் கட்டுப்பட்டாளே.. தவிர எனக்குப் பயந்து அல்ல. எனக்குப் பயந்தவள் என்னைக் கைநீட்டி அறைய மாட்டாள். நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்று கேட்டபோது என் வீட்டு வேலைக்காரனைக் கல்யாணம் பண்ண மாட்டேன் என்றாளே துடுக்குத்தனமாக. இதில் ஏதோ சூது இருக்கு. வீட்டை விட்டுப் போகணும் என்றால் தைரியமாக என்னிடம் சொல்லிவிட்டே செல்வாள். இப்படி எனக்குத் தெரியாமல் போகக் காரணம் ஏதோ இருக்கு. நான் இங்கு இல்லாததை இவர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.. இல்லை அவளே.. தப்பான முடிவுக்கு எதும் வந்து நாம் ஏன் உயிரோட இருக்கணும் என்று தவறான முடிவைத் தேடிக் கொண்டாளா..? அவனுக்குச் சர்வமும் நடுங்கியது. கடவுளே.. அவளைக் காப்பாற்று... எங்கு இருந்தாலும்... டெலிவரிக்கு இன்னும் இருபது நாள்தானே இருக்கு.

டாக்டர் சொன்னது நினைவுக்கு வந்தது. வலி எடுக்கு முன் குழந்தையை எடுத்துவிட வேண்டும். இப்போ.. ஐயோ.. நான்



என்ன செய்வேன். எப்படி அவளைக் காப்பாற்றுவேன்... இடது கையால் முடியை அழுந்தக் கோதி விட்டான்.

அவன் அம்மா அவனையே பார்த்துக் கொண்டு இருப்பதைப் பார்த்தான்.

"ஏம்மா, உண்மையைச் சொல்.. நீ போகச் சொன்னாயா.. இல்லை அவளா போனாளா.. ஏன்னா, அவளா போயிருக்க மாட்டாள்!" என்றான் அழுத்தமாக.

அவளுக்கு உள்ளுக்குள் நடுக்கம் இருந்தாலும், "ஏன்டா.. பெத்த தாயையே சந்தேகப்படுறியா...? அப்போ நான் சொல்வது பொய்யா.. அந்த லட்டரில் என்னதான் எழுதியிருக்கா... என்னைப் பற்றித் தான் எழுதியிருக்காளா... அதைப் படித்துப் பார்த்துவிட்டுத்தான் இப்படி என்னை நிக்க வைத்துக் கேள்வி கேட்கிறாயா..? அந்தச் சண்டாளி போனதுதான் போனாளே.. இப்படியா என்னை வம்பில் மாட்டி விட்டுப் போகணும். நீ இருக்கும்போதே போயிருக்கக் கூடாதா.. எப்படிப் போவாள் நீ இருக்கும்போது. நல்ல பொண்ணா இருந்தாத்தானே.. அப்படிப் போவா.. இப்போ யார் கூடப் போனாளோ.." என்று தன்னையும் அறியாமல் வாயை விட்டார்.

அவன் பார்வை கூர்மையாயிற்று. யார் கூடப் போனாளா? இந்த வார்த்தை அவன் இதயத்தைக் குத்தியது.

"அவளுக்கு உன்னை மாதிரி வஞ்சகம் பண்ணத் தெரியாதும்மா. இதுமாதிரி மாட்டி விடணும் என்று. ஏம்மா உனக்கு எதுவுமே தெரியாது என்கிறே.. இப்போ யார் கூடப் போனாளோ என்கிறே.. அப்போ உனக்குத் தெரியும்.. அவள் யார் கூடப் போனா?" என்ற வார்த்தைகள் கூர் உளிகளாயின.

## 35

"அப்படி எங்கடா நான் சொன்னேன். நீ என் வாயைப் பிடுங்கி அதில் வரும் வார்த்தையை வைத்து என்னைப் பேசுறே.. எனக்கு இந்த மாதிரி எல்லாம் பொடி வைத்துப் பேசத் தெரியாது. ஏதோ எதார்த்தமாகப் பேசினா. அதைப் பிடித்துக் கொண்டு தொங்குறே.. அதில் என்னதான்டா எழுதியிருக்கா. என்னைப் பற்றி. இதுக்குத்தான எங்களை ஊரில் இருந்து கூட்டி வந்தியா...? இப்படி யாரோ ஒருத்திக்காகப் பழி போட.. அதுக்கு நான்தான கிடைத்தேனா உனக்கு.. போதுமடா சாமி.. உன்னைப் பெத்து வளர்த்ததுக்கு நீ செய்யும் கைம்மாறு..

"அவள் அப்படியே சொல்லியிருந்தாலும் அதை நீ நம்பலாமா.. இதே உன் மாமா பெண் என்றால் இப்படிச் செய்வாளா... போய்ப் பார்டா... எதையும் தூக்கிக் கொண்டு போயிருக்கப் போறா.." என்றார் படபடப்பாக.

"அ...ம்..மா...மா.." என்றான் கர்ஜனையாக.

அவர் அதிர்ந்தார். இவன் இப்படிக் கோபப்பட்டு அவர் பார்த்ததில்லை. வாயடைத்துப் போய் நின்றார்.

"நீயெல்லாம் ஒரு பொம்பளையாம்மா... உன் வயதென்ன அவள் வயதென்ன. நான் உன் பிள்ளை. ஒரு பிள்ளையிடம் ஒரு அம்மா பேசும் பேச்சுக்களா பேசுறீங்க. இல்லை நடந்துக்கிறீங்க... நிறை மாதத்தில் ஒரு பெண்ணை எல்லாரும் சேர்ந்து வீட்டை விட்டு அனுப்பிட்டீங்க.. உங்களிடம் நான் இதை எதிர்பார்க்கவில்லை. என் அம்மா கள்ளங்கபடம் இல்லாதவங்க என்று நம்பினேன். உங்களை நம்பி நான் போயிருக்கக் கூடாது. போனது தப்புத்தான். இப்போ என் வாழ்க்கையையே நான் இழந்து நிற்கிறேன்," என்றான்.

"ஏன்டா நீ வாழ்க்கையை இழந்து நிக்கணும்.. நீ ஆம்பளை. எத்தனை கல்யாணம் வேணாலும் பண்ணலாம்.. அவ



பொம்பளையே அப்படிப் போகும்போது நீ ஏன் இப்படித் தவிக்கிறே.. அவளுக்கு உண்மையிலேயே உன் மீதும் குழந்தை மீதும் அக்கறை இருந்திருந்தா நான் சொன்னாலும் வீட்டை விட்டுப் போயிருப்பாளா..? நீ வரும்வரை இருக்க வேண்டியதுதானே.. நான் என்ன போக மாட்டேன் என்றவளை ஆட்களை விட்டுத் தூக்கிக் கொண்டா போகச் சொல்வேன். அவளுக்கு உன்னைப் பிடிக்கவில்லை. என்னமோ நீ தாலி கட்டிய பொண்டாட்டியா..? நான் செய்தது தப்பு என்று சொல்ல. நீ தான் அவள் வயிற்றில் வளரும் குழந்தை என்னோடது என்கிறே.. இது எப்படித் தெரியும் உனக்கு. நீ அவ கூடவே இருந்து பார்த்தியா..? ஒரு பொம்பளைக்குத்தான்டா தெரியும் அது யார் குழந்தை என்று. உன்னோடது என்றால் ஏன் போகணும்.. உன்னிடம் தானே பெற்றுத் தரணும்.. யாராவது இந்த நிலையில் போ என்றால் போவார்களா..? எந்தத் தைரியத்தில் போவா? அவளுக்கு யாரோ உதவி பண்ணப் போய்த்தானே சென்றிருக்கா.." என்று நீளமாகப் பேசி முடித்தார்.

தாயின் முகத்தைப் பார்த்தான். அவர் சொல்வதிலும் உண்மை இருந்தது. இவர்கள் சொன்னாலும் ஏன் வீட்டை விட்டுப் போகணும். தன் மீது அன்போ, பாசமோ, காதலோ இல்லையென்று அவனுக்குத் தெரியும். அவன் செய்ததற்கு இருந்தாலும் அது செத்து விடும் என்பது உண்மையே.. தன்னைப் பழிவாங்கத்தான் இப்படி பண்ணியிருப்பாளோ.. ஒரு முடிவுக்கும் வர முடியாமல் தவித்தான்.

"உன் வாழ்க்கை வீணாவதை நாங்க பார்த்துக் கொண்டு இருக்க முடியுமா...? நீ மாமா பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள். உனக்குனு ஒரு குழந்தை பிறந்தால் எல்லாம் மறந்துவிடும். உன் வாழ்க்கையில் எத்தனையோ பேரைச் சந்தித்திருப்பாய். அத்தனை பேரையும் எண்ணியா உருகுறே. அதுபோல எண்ணி மறந்து விடு. நீ இப்படி ஒரு பெண்ணோடு வாழ்ந்தும் உன்னை அவள் ஏற்றுக் கொள்கிறேன் என்கிறாள்.

இதற்கே நீ அவளைக் கும்பிட வேண்டும்.. உன் புத்தி தெரிந்தும் சம்மதம் சொல்லியிருக்கா.. இவள் பெண்ணா, உன்னை விட்டு ஓடினவ பெண்ணா...?"

திவாகர் கோபம் எல்லை கடந்தது. "என்ன சொல்றீங்க.. இவ எனக்கு வாழ்க்கை குடுக்கிறாளா.. நான் இவளிடம் வந்து கெஞ்சினேனா, வாடி உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன் என்று.. நான் என்னமோ பொம்பளைங்க கூட பொறுக்கிக்கிட்டு திரிந்த மாதிரியும், இவ என் புத்தி தெரிந்தும் கல்யாணம் பண்ணிக்கிறாளாமா.. அப்படி என்னம்மா உனக்குத் தலையெழுத்து என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள. நீரதி. உனக்கு எத்தனை மாப்பிள்ளை கியூவில் நிக்கிறாங்க.. கையில் மாலையோட நீ.. வெக்கமாயில்லை. இப்படிச் சொல்ல. இவளா என் மேல் வந்து விழுந்து என்னை மயக்கப் பார்க்குறாளா.. இவ உத்தமமான பெண். நீயும் ஒரு தாய். நீ சொல்லித்தான் இவ இப்படி செய்தா என்று எனக்குத் தெரியும். இதா ஒரு தாயோட வேலை. நீங்க நல்ல பெண்மணி. அவள் கெட்டவள்.."

"அப்படி நான் சொல்லலேடா.."

கைநீட்டித் தடுத்து, "எப்படிச் சொன்னாலும் ஒன்றுதான். முதலில் நீங்க இங்கிருந்து எல்லோரும் கிளம்புங்க.. இந்த வீட்டில் ஒரு நிமிசம் கூட இருக்கக் கூடாது. இதுக்குத்தான் நீ வரும்வரை இவங்க இங்கே இருக்கட்டும்னு சொன்னீங்களா.. நீ வந்த வேலை நினைத்த நினைப்பு எல்லாம் நடந்து முடிந்து விட்டது. இனி உங்களுக்கு இங்கு வேலையில்லை. அதனால் நீங்க அனைவரும் வீட்டை விட்டுப் போகலாம். இனி இந்த வீட்டிற்குள் யாரும் நுழையக் கூடாது. அப்பா! உங்களுக்கு மாதா மாதம் வீட்டுக்குப் பணம் வரும். இனி என் முகத்தில் முழிக்கக் கூடாது!" என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டான்.

அத்தனை பேரும் இந்தத் திருப்பத்தை எதிர்பார்க்கவில்லை. மலைத்து நின்றனர்.



நாம் அவள் லெட்டரைப் பார்த்து உண்மையென நம்பி வெறுத்து ஒதுக்கி விடுவான் என்று நினைத்தால் இவன் இப்படிப் பேசி விட்டானே. இப்போ என்ன செய்வது? மகன் பிடிவாதம் தெரிந்ததே... சரி. இப்போ ஊருக்குப் போய்விட்டு, பின் வந்து சமாதானப்படுத்திக் கொள்வோம் என்று கிளம்பினர்.

அவன் அம்மாவின் மனதில் ஆறாத வேதனையாக இருந்தது மகன் இப்படிப் பேசியது. இவனை எப்படி வழிக்குக் கொண்டு வருவது? அவள் கண் முன் இருந்தால்தானே இவன் தன் தம்பி மகளை வேண்டாம் என்கிறான். அவளை எங்காவது அனுப்பி விட்டால் இவன் மனது மாறி விடும். ஏன்னா இவன் வயது பெண் தேடும் வயது. எவன் தான் தப்பு பண்ணலை. இவன் தான் பெரிசா பண்ணி விட்டானா என்று சாதாரணமாக நினைத்துச் செய்த செயல், இப்போது தன் கண்ணிலேயே விரலை விட்டு ஆட்டுது. மகன் பெண்களிடம் பலகீனமானவன் இல்லை என்பதைப் புரிந்து கொண்டாள். தன் மகன் வாழ்வு இப்படியே இருந்தால் எப்படி. என் காலத்துக்குள்ளேயே ஒரு கல்யாணத்தைச் செய்து பேரப்பிள்ளையைக் கண்ணால் பார்க்க முடியுமா..? என்ற கேள்விக் குறி மனதில் எழுந்தது.

தம்பியும் கோபமாக இருப்பதாகத் தெரிகிறது. இதுவரை தன்னுடன் ஒரு வார்த்தை பேசவில்லை. என்ன நடக்குமோ என்று நினைத்தார்.

தம்பியிடம், "தம்பி நீ எதுவும் நினைக்காதேடா. நான் பேசிச் சரி பண்றேன்" என்றார்.

"அக்கா..." என்றான் கோபமாக.

"நீ என்னதான் நினைச்சிருக்கே உன் மனதில். நீ சொன்னதைக் கேட்டு என் பெண்ணையும் இங்கு கூட்டி வந்து என் மகள் மனதில் ஆசையை வளர்த்து ஒன்றுந் தெரியாத பொண்ணுக்கு அதையும் இதையும் சொல்லிக் கொடுத்து, அவள் மனதைக் கெடுத்ததுமில்லாமல், உன் மகனிடம் வேறு

அவமானப்பட்டு நிற்கிறோம்... இது எங்களுக்குத் தேவையா? என் கிராமத்தில் ஒரு மரியாதை கெட்டு, ஊரிலும் மரியாதை கெட்டு என்னையும், என் பொண்ணையும் இந்த நிலையில நிறுத்திய உன்னை என்ன செய்வது? உன் பையனுக்கும் என் பொண்ணுக்கும் கல்யாணம் என்று ஊரே சொல்லியாச்சு. சொந்தபந்தங்கள் எல்லாம் தெரிந்து போயிற்று. இப்ப நான் என்ன பண்றது? உனக்கு மாமனையே கட்டி வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு வேறொரு மாப்பிள்ளை பார்க்க முடியுமா? என் பொண்ணு என்ன பொம்மையா. நீதானே சொன்னே என் பையன் உன்னைக் கட்டிக்குவான்னு. இப்போ என் பெண்ணுக்கு என்ன பதில் சொல்லப் போறே... எத்தனை நாள் திட்டம் போட்டீங்க. இப்படி குடும்பமே சேர்ந்து அவமானப்படுத்த..''

''கோபப்படாதேடா.. தம்பி. நான் அவன்கிட்டே மறுபடியும் பேசறேன்..''

''என்னன்னு? அவன்தான் திட்டவட்டமா தெளிவா தன் முடிவைச் சொல்லிவிட்டுப் போய்விட்டானே.. இனி என்ன பேச இருக்கு. உன்னையும் இனி இங்கு வரக் கூடாதுன்னு சொல்லிவிட்டான். பிறகு நீ எப்படிப் பேச முடியும். நீ எப்போ பேசுவே என்று என் பொண்ணை இலவு காத்த கிளி போல காத்திருக்கச் சொல்றியா? எத்தனை வருடம்? இல்லை, ஆயுள் முழுக்கவா.. நீ பேசாமல் இருந்திருந்தாலாவது அவன் அந்தப் பொண்ணு கூடவாவது குடும்பம் நடத்தியிருப்பான். இப்ப அவளையும் திட்டம் போட்டு வீட்டை விட்டுத் துரத்தி விட்டுட்டே... இனி என் பெண் என்ன ஆவாளோ... இனி யாருக்குப் பேசி முடிக்கப் போறேனோ.. தெரியலியே.. உன் பேச்சை நம்பி என் பொண்ணு தலையில நானே மண்ணை வாரிப் போட்டுவிட்டேனே!'' என்று புலம்பினார்.

தம்பி புலம்புவதைக் கண்டு வாயைத் திறக்கவில்லை அவர். அவன் சொல்வதும் உண்மைதானே.. இது எல்லாருக்கும் தெரிந்து விட்டது. இனி யார் பெண் கேட்பா? அவளின்



நிலையென்ன? இவனை நம்பி இப்படி வாக்குக் கொடுத்து விட்டு தன் தம்பியை வேற இப்படி பகச்சுக்கிட்டேனே.. இருந்த ஒரு உறவும் இவனாலே அத்துப் போய்விட்டதே. பணம் வரவும் இப்போ தாய் தந்தை என்று கூட பாராமல் வீட்டை விட்டுப் போ என்று சொல்லிவிட்டானே.. அவள் இங்கு இருந்தால் இப்படித்தான் செய்வான் என்று நினைத்ததற்கு அவள் போய்ச் சொல்ல வைத்து விட்டாளே.. பாவி!

இவனுக்கு எதுவும் ஃபோன் பண்ணி சொல்லியிருப்பாளோ.. நகைகளை எடுத்துப் போறேன் என்று எழுதியும் அதைப் பற்றி ஒன்றும் பேசவில்லையே அவன்.

## 36



அவன் நம்பவில்லையோ... அவள் நகையை எடுத்துப் போயிருப்பாள் என்று. கிளம்புவோம். நான் திரும்பி வரும்போது வீட்டில் யாரும் இருக்கக் கூடாது என்று சொன்னது நினைவு வந்தவுடன், அனைவரும் கிளம்பினர்.

திவாகர் அவன் ஆபீசுக்குச் சென்று விட்டான். இரவுதான் வீடு வந்தான். வீட்டில் ஒருவரும் இல்லை. நிருபா அறைக்குச் சென்று அவள் படுக்கையில் படுத்தான். காலையில் இருந்து அடக்கி வைத்திருந்த துக்கமெல்லாம் நாலு திசையில் இருந்து ஓடி வந்தது. இரவு முழுவதும் கண்ணீரில் கரையப் பார்த்தான். முடியவில்லை. மறுநாளும் விடிந்தது.

நிருபா! நீ இப்படிப் பண்ணலாமா? நான் செய்தது மாபெரும் குற்றம்தான். தெரிந்தே தான் செய்தேன். தெரியாமல் இல்லை. எனக்கு மன்னிப்பே கிடையாதுதான். ஆனால் நீ இப்படிப் போகலாமா? இந்த நிலையில் நீ எங்கு சென்றாய்? நான் செய்த தப்புக்கு எனக்கு இப்படி தண்டனை கொடுத்து விட்டாயே. நான்

இது மாதிரி கனவிலும் நினைக்கவில்லையே.. நீ என்னை விட்டுப் பிரிவாய் என்று.

அந்த லெட்டரில் நான் நகைகள், பணம் எல்லாம் எடுத்துப் போகிறேன் என்று எழுதியிருந்தது. நீ நிச்சயம் அப்படிச் செய்திருக்க மாட்டாய். என் பணம், காசை நீ எவ்வளவு கேவலமாக நினைத்தாய் என்று எனக்குத் தெரியும். நான் குடுத்த போது கூட நீ வாங்கவில்லை. நீயா இப்படிப் பண்ணுவாய்? இது உண்மையா இருந்தால் கூட நான் சந்தோசப்படுவேன்.. உனக்குப் பணமாவது இருக்கே.. எங்காவது உயிரோடவாவது இருப்பே என்று. இப்போ நான் என்ன நினைப்பது? நிருபா! வந்து விடு. என்னால் உன்னை விட்டு இருக்க முடியாது.. என்னைப் புரிந்து கொள்ளவில்லையா..? நான் புரிந்து கொள்வது மாதிரியா நடந்து கொண்டேன். என் பாசமெல்லாம் இப்படி வெறியாக மாறி உன்னைக் கடித்துக் குதறிவிட்டேனே...

இனிமேல் என் அன்பைப் புரிய வைக்கணும் என்று நினைத்தேனே. குழந்தை பிறக்கட்டும். இப்ப எதைச் சொன்னாலும் நீ நம்ப மாட்டாய். பின் குழந்தை முகத்தைப் பார்த்ததும் நீ மாறி விடுவாய் என்று நினைத்தேனே.. நிருபா! என் கூட சண்டை போடவாவது வந்து விடுடி.. என் அன்பு முழுக்க உனக்கு மட்டுந்தான். உன்னைப் பூப்போலத் தாங்கணும் என்று நினைத்தேன்.. நீ இப்படிப் பண்ணுவாய் என்று தெரிந்திருந்தால் நான் போயிருக்க மாட்டேனே.. அடுத்த வாரம் போனால் உனக்கு டெலிவரி டைம்.. அதனால்தான் முன்னாடியே வேலையை முடித்துக் கொண்டு உன் கூடவே இருக்கணும் என்று நினைத்தேனே.. இப்ப எதுவுமே நடக்கவில்லையே.. தன் இயலாமையை நினைத்து பெட்டில் ஓங்கிக் குத்தினான்.

தன் தாயிடம் எவ்வளவோ, கெஞ்சி, கூத்தாடி, காலில் விழுந்து கதறிக் கூட கேட்டுவிட்டான். அவள் எங்கு போனாள் என்று, கடைசி வரை தெரியாது என்று விட்டார்களே.. இனி யாரைக் கேட்பது? எங்கு தேடுவது? சிலரிடம் ரகசியமாகச்



சொல்லித் தேடச் சொன்னான். அவர்களும் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றனர்.

திவாகர் ஒரு நடை பிணமானான். எத்தனை நாளைக்கு ஆபீஸ் போகாமல் வீட்டிலேயே இருக்க முடியும். வேலை தலைக்கு மேலே இருந்தது. மேனேஜர் ஃபோன் மேல் ஃபோன் போட்டார். எத்தனை நாளைக்குத்தான் ஃபோனை ஆஃப் பண்ணி வைக்க முடியும்? இப்படியே இருந்துவிட முடியுமா? வேலையைப் பார்த்துத்தானே ஆகணும்.

அவன் மனம் முரண்டியது. எதுக்காக இனி நாம் வேலை பார்த்துச் சம்பாதிக்கணும்? யாருக்காக? அவளே இனி இல்லை என்று ஆகிவிட்டது. யாருக்குச் சம்பாதிக்கணும். ஓடி.. ஓடி.. இருப்பது போதாதா வாழ்நாள் முழுமைக்கும்.. இனி வேலை வேண்டாம் என்று நினைத்தான்.

இவன் நினைத்ததும் முடித்துக் கொள்ளக் கூடிய வேலையில்லையே.. எவ்வளவோ வேலைகள் பாதியில் இருக்கு. அது முடியவே எத்தனை வருடம் ஆகுமோ.. இப்படி எதை எதையோ நினைத்துக் குழம்பினான்.

அவனுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிமானமே இல்லாமல் போனது. தன்னால்தான் இவளின் வாழ்க்கை இப்படியாகி விட்டது. அவளின் அப்பாவின் பலகீனத்தை வைத்து இவளை இப்படி ஆட்டிப் படைத்தேனே.. என்னமாய்த் துடித்தாள். அப்பக்கூட அவளின் மன நிலையை அறிந்து நான் நடந்து கொள்ளவில்லையே...

நிருபா! நீ ஏன் என்னைத் தப்பாக நினைத்தே. நான் உன் அன்பை மறக்க முடியாமல் தான் அப்படிப் பண்ணினேன். நீ என் மனைவி என்று தான் நினைத்தேன். நான் நடந்து கொண்டது முரட்டுத்தனமாக இருக்கலாம். நான் ஒத்துக் கொள்கிறேன். நீ கேட்கலாம் - ஒரு மனைவியை எந்தக் கணவனாவது இப்படி நடத்துவானா? மாட்டவே மாட்டான். ஆனால் உன்

வேதனையின் பின்னால் என் அன்புதானே இருக்கு.. இது சத்தியமான உண்மை.

ஆனால் இதை எந்தப் பெண்ணும் உணர மாட்டாள். என் காமத்துக்குப் பின்னாடி காதல்தான் இருக்கு என்றால்.. எப்படி புலம்பினாலும் இனி அவள் வரப் போவதில்லை.

அவன் இதயம் வெடித்துச் சிதறியது. அவள் உயிருடன் இருப்பாளா என்று. இந்த மாதிரி நடக்கும் என்று தெரிந்திருந்தால் நான் உன் பக்கமே திரும்பியிருக்க மாட்டேன். எங்கே எனக்கு கிடைக்காமல் போய் விடுவாயோ என்றுதான் நான் அப்படி நடந்து கொண்டேன். நான் அப்படி நடந்து கொள்ளவில்லையென்றால் நீ வேறு யாரையாவது கல்யாணம் பண்ணிக் கொண்டிருப்பாய். எனக்கு அதை நினைத்துப் பார்க்கக் கூட முடியலை. உன் உயிர் வேறொருவருடனா.. நீ எனக்கே கிடைக்க வேண்டும் என்றுதான் நான் அப்படி நடந்து கொண்டேன். இனி நான் என்ன சொன்னாலும் உனக்குத் தெரியாது. நான் புலம்பி பயனில்லை. ஆனால் கடவுளே! அவளை உயிருடன் காப்பாற்று. என்னிடம் வரவில்லை என்றாலும் அவள் எங்காவது உயிருடன் இருந்தால் போதும் என்று மட்டும் நினைத்தான்.

இந்த நினைவுகளுடனேயே அப்படியே தூங்கி விட்டான். இரவு என்று ஒன்று இருந்தால் பகல் வந்துதானே ஆகணும். விடிந்தது. இரவெல்லாம் தூங்காதது, அழுதது எல்லாம் கண் நெருப்பாக எரிந்தது. கோவைப் பழம் போல் சிவந்து இருந்தது. எழுந்ததுமே டேபிளில் இருந்த அவளின் போட்டோவைப் பார்த்தான்.

அவள் உதட்டோர மெல்லிய புன்னகையில் உயிர்வரை கரைந்தது. உதடு இரண்டும் மெல்ல விரிந்து லேசான கீற்றுப் போல் பற்களின் வரிசை அந்த முகத்திற்கு இன்னும் மெருகூட்டியது. கண்களில் மின்னல் வெட்டியது. கள்ளச் சிரிப்பில் அவன் உள்ளம் கொள்ளை போனது. அவன் உதடு புன்னகைத்தாலும் கண்கள் பனித்தன.



போட்டோவை எடுத்து அந்த இதழில் தன் உதட்டை அழுந்தப் பதித்தான். அப்படியே ஆழ்ந்து விடுவது போல்.

அவள் முதன் முதலில் அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். அவன் எதிர்பாராத நேரத்தில். அவனுக்கு இந்த உணர்வு புதிது. இப்போ நினைத்தாலும் மனம் கிளர்ச்சியுற்றது.

அந்த முத்தத்தை உயிர் என்று நினைத்தான். கள்ளமில்லா மனதில் முதன் முதலில் வித்திட்டவள். விதைத்து விருட்ச மாக்கியவள். அன்று அடியோடு.. வேரோடு பிடுங்கி விட்டாள்.

அந்த வலியை அவனால் இன்னும் மறக்க முடியவில்லை. இப்போ நினைத்தாலும் அதே போன்ற உணர்வு. தலையைக் குலுக்கினான்.

இதையே நினைத்துக் கொண்டிருந்தால் எனக்காக எத்தனையோ கடமைகள் காத்திருக்கின்றன. அதையெல்லாம் தவிர்க்க முடியாது.

எழுந்து கிளம்பிக் கீழே வந்தான். மரகதம் அவனுக்காக டிபனை டேபிளில் எடுத்து வைத்துக் காத்திருந்தார்.

பேசாமல் அமர்ந்து டிபனைச் சாப்பிட்டான். இந்தச் சமையல்காரம்மா முதலில் இருந்தே இந்த வீட்டில் இருப்பவர்.

## 37



நடந்தது எல்லாம் தெரிந்தும் எதுவும் பேசாதவர். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவர். கணவர் மூட்டை தூக்கும் வேலை ரயில்வே ஸ்டேசனில். அவர் சமீபத்தில்தான் இறந்து விட்டார். ஒரு மகன் பிளஸ் டூ படித்து விட்டு ஒரு கம்பெனியில் வேலை பார்க்கிறான்.

அவன் ஒரு பெண்ணை லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிக் கூட்டி வந்து விட்டான். வந்த மருமகளுக்கு மாமியாரைப் பிடிக்கவில்லை. மகனோ.. பொண்டாட்டி சுகத்தில் தாயை வீட்டை விட்டுப் போ என்று விட்டான். இவரும் வேலை பார்த்த இந்த வீட்டிலேயே தங்க அனுமதி கேட்டு விட்டோடு இருக்கிறார்.

மற்ற வேலைக்காரர்கள் போல் வம்பு பேசுபவர் இல்லை. வேலைக்காரர்கள் மூலமாகத்தான் வீட்டுப் பேச்சு வெளியேறும் என்பார்கள். ஆனால் இந்தப் பெண்மணி அதற்கு விதிவிலக்கு தேவையில்லாமல் வெளியே வரமாட்டார். கேட்டால் பதில் உரிமை எடுத்துக் கொண்டு எந்தப் பிரச்சனை என்று பஞ்சாயத்துப் பண்ணுவதில்லை.

திருபாவை வீட்டை விட்டு அனுப்பும்போது கூட மனது பதறியதே தவிர.. நீ இரும்மா என்று தான் சொல்ல முடியுமா? இல்லை ஏன் இப்படி அனுப்புறீங்க என்றுதான் கேட்க முடியுமா? அத்தனையும் பார்த்துக் கொண்டு மௌனமாகவே இருந்து விட்டார்.

திவாகரிடமும் எதுவும் பேசவில்லை. அவன் துடிப்பதும். நேற்று அவன் அழுததும் தெரியும். ஆனால் இவர் என்ன செய்ய முடியும்? இவரால் இந்த பிரச்சனையைத் தீர்த்து வைக்க முடியுமா? அவன் முகம் சோர்ந்திருப்பதைப் பார்த்துக் கலங்கிப் போனார்.

திவாகர் இதுவரை அவரை ஒரு வார்த்தை கடிந்து பேசியதில்லை. இவன் அம்மா கூட வேலைக்காரிதானே என்ற நினைப்பில் விரட்டுவார். இதற்கு கேஸ் அடுப்பு பத்த வைக்கத் தெரியாது. இவன் அப்படியில்லை. "நீங்கள் சாப்பிட்டீங்களா.. அம்மா?" என்பான்.

மரகதத்திற்கு சுகர் இருக்கு. நேரத்திற்கு நீங்கள் சாப்பிடுங்கம்மா.. நான் வர லேட்டாகும்.. என்னை எதிர்பார்க்க



வேண்டாம்.. நேரத்திற்கு நீங்கள் சாப்பிட வேண்டும். மாதம் ஒரு முறை செக்கப்பிற்குச் சென்று வாருங்கள். நான் டாக்டரிடம் சொல்லி விடுகிறேன். இங்கு பார்த்தால் பணம் நிறையச் செலவாகும் என்று போகாமல் வேறு டாக்டரிடம் செல்ல வேண்டாம். எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்.. என்னை உங்க மகனா நினைத்துக் கொள்ளுங்கள். அப்படித்தான் அது மாதிரி தோணுது.

வேலையை ரொம்பப் போட்டு இழுத்துக்காதீங்க.. உங்களுக்குத் தெரிந்த யாராவது இருந்தால் உதவிக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்பான்.

தோட்டத்துக்குத் தனி ஆள் இருந்தது. அதைப் பார்க்க. வீட்டு வேலைதானே அவரே பார்த்துக் கொள்வார். வீடு சுத்தம் பண்ண, துடைக்க இதுக்கு மட்டும்தான் தோட்டக்காரர் மனைவி வந்து உதவுவாள். அவள் ஒரு ஓட்டை வாய். ஐயா ஏன் தனியா இருக்காரு என்பாள்.

இவர் சிரித்து மழுப்புவாரே தவிர. பதில் ஏதும் சொல்ல மாட்டார்.

திவாகர் எழுந்து கை கழுவி விட்டு டவலால் கைகளைத் துடைத்தவாறு வந்தான்.

மரகதம் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தார். எத்தனை துடிப்பான இளைஞன். இப்படிச் சோர்ந்து போய்ட்டானே. தேனீயின் சுறுசுறுப்புப் போல எந்நேரமும் வளைய வந்து கொண்டிருப்பான். இப்போ அந்த முகத்தில் தான் பொலிவு இல்லை. கண்களில் உயிர்ப்பில்லை. புன்னகையில் சோகம் இழையோடியது.

படிய வாரிய முடியை இடது கையால் கலைத்துவிட்டான். முகத்தில் ஒரே சிந்தனை. பக்கத்தில் நின்ற மரகதத்திடம் வர்றேன்மா என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

மரகதம் கண் கலங்க, இந்தப் புள்ளைக்கு நல்ல வழி காட்டப்பா என்று ஏழுமலையானை மனமுருக வேண்டினார்.

திவாகர் மும்பையில் ஒரு டிடெக்டிவ் ஏஜென்சியிடம் பேசினான். முதலில் பெரிய புள்ளிகள் யார்.. யார்.. கன்ஸ்ட்ரக்ஷன் பிசினஸ் பண்றாங்க.. ரிப்போர்ட் எனக்கு வேண்டும்.. பிறகு மும்பையில் மட்டுந்தானா.. இல்லை, வேறு மாநிலத்திலும் அங்கிருந்து பண்றாங்களா.. என்று தெரிய வேண்டும் என்றான்.

அவர்கள் எங்களுக்குக் கொஞ்சம் டைம் கொடுங்கள்.. கூடிய சீக்கிரமே தகவல் சொல்கிறோம் என்றனர்.

திவாகர் தொடர்ந்து தொழிலைக் கவனித்து வந்தான். திவாகர் ஒருநாள் அவர்கள் கட்டும் நட்சத்திர ஹோட்டலுக்குப் போனான். அவர்களின் பிளான் பக்காவாக இருந்தது. இவனே அசந்து விட்டான். அத்தனை நுணுக்கமான வேலைப்பாடுகள், கட்டட அமைப்பு, தோட்டம், ஹோட்டலின் முன்புறம் எப்படி இருக்கணும், பின்புறம், மற்ற இரண்டு பக்கமும் எல்லாமே அத்தனை நேர்த்தியாய் இருந்தது. கார்டனில் வித்தியாசமான சின்னச் சின்னக் குகை போன்ற அமைப்பில் மெல்லிய வெளிச்சத்தில் டேபிள் சேர் போடப்பட்டு இருந்தது. அந்தக் குகையின் மேலே சில கொடிகள படரவிட்டு இருந்தனர். இயற்கையின் சூழலில் இருப்பது போன்ற செயற்கை மலை. அதிலிருந்து பாலாய் வடியும் அருவி, மரங்கள் என்று சொர்க்கலோகமாகவே காட்சியளித்தது.

மற்றொரு ஹோட்டலில் இதேபோன்று சின்னச் சின்னக் குடில்கள் போல் அமைத்து அதன் பக்கவாட்டில் நீரூற்று. அந்த நீர் குடில்கள் மீது விழுந்தது. உள்ளே இருப்பவர்கள் மீது லேசான சாரல் போல் தெளித்தது நனைக்காமல். உள்ளே வண்ண விளக்குகள். வண்டுகள், பூச்சிகள் உள்ளே போகாமல் இருக்க மெல்லிய கம்பி வலை.



இவனே உள்ளே அமர்ந்து பார்த்தான். பனிச்சாரல் போல் மெல்லிய சாரல். உடல் நனையாமலும்.. அதே நேரத்தில் அந்தக் குளிர்ச்சியை உணர்வது போலவும் அமைப்பு இருந்தது. இதைக் குழந்தைகள், பெரியவர்கள் என ரசித்து வந்தனர்.

இரண்டு பேர் அமர, பேமிலியாக உணவருந்த, பிசினஸ் பேச என்று தனித்தனியாக இருந்தது. ம்.. இது இப்போ இருக்கும் லவ்வர்ஸ்களுக்கு நல்ல விருந்து. யாரும் பார்த்து விடப் போறாங்களோ, தெரிந்தவர்கள் வருவாங்களோ.. என்று பயப்பட வேண்டாம். பக்கவான பாதுகாப்பு. அப்புறம் கேட்க வேண்டுமோ கூட்டத்துக்கு.

திவாகர் முகத்தில் புன்னகை அரும்பியது. இத்தனை அழகா, ரசனையா இந்தப் படைப்பு படைக்க ஒரு பெண்ணால்தான் முடியும். ஏனோ அவன் மனதில் அப்படித் தோன்றியது. இத்தனை மெல்லிய நுட்பமான மென்மை, அந்த நடனப் பெண்களின் நளினம், இவையனைத்தும் ஒரு பெண் மனதில் இருந்துதான் வந்திருக்கணும்.

பெண் படைப்பவள், பிரம்மனின் மறுவடிவம். ஆக்கும் சக்தி கொண்டவள். அவள் மனம் குமுறினால் அழிக்கவும் செய்வாள், என் நிருபா போல.

ஹோட்டல் மேனேஜரிடம் சென்று விசாரித்தான்.

''இதை யார் பிளானிங் பண்ணியது. நானும் இது மாதிரி கட்டணும்!'' என்று. அவர் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

பின் தன் விசிட்டிங் கார்டை எடுத்துக் காண்பித்தான்.

அதன் பிறகு அவர், ''சார்! இதெல்லாம் எனக்குத் தெரியாது. மேனேஜ் மட்டுந்தான் நான். இதெல்லாம் முதலாளிக்குத்தான் தெரியும். மற்றப்படி வேறு எனக்கு எதுவும் தெரியாது.'' என்றார்.

அவன், ''உங்க முதலாளியை நான் பார்க்க முடியுமா?'' என்றான்.

''இல்லை. பார்க்க முடியாது. அவர் இப்ப இங்கு இல்லை, அவர் இப்ப வெளிநாடு போயிருக்கார்.''

''எப்ப வருவார்..?''

''சார்.. நீங்களும் இந்தத் தொழிலில் இருப்பவர்தான். நீங்க எங்கே போறீங்க.. எப்ப வருவீங்க என்ற பர்சனலை எல்லாம் எங்க மாதிரி ஆட்கள் கிட்டவா சொல்லிட்டுப் போவீங்க.. எனக்கு மேலே அதிகாரி இருக்கார். நான் பார்க்கணும் என்றால் அவரைத்தான் பார்க்கணும்.. நான் நேரடியாக முதலாளியைப் பார்க்க முடியாது!'' என்றான்.

திவாகர் சிரித்துக் கொண்டே, ''சாரி சார்..'' என்றான்.

''இது சொன்னதே அதிகம் என்று நினைக்கிறேன்,'' என்றார் மேனேஜர்.

''ஆம்.. நீங்கள் பயப்பட வேண்டாம்... பிறகு பார்க்கிறேன்.''

அவனுக்குத் தூக்கம் வரவில்லை. ஹோட்டலின் பின்புறமாக ஒதுக்குப்புறத்தில் ஒரு செயற்கைக் குளம். ஆனால் ரொம்பப் பெரியது. அதைச் சுற்றிலும் உட்காரக் கல் பெஞ்சு. உட்கார்ந்திருப்பது தெரியாமல் இருக்க மெல்லிய கம்பி வலை. அதன் மேல் பச்சைக் கொடிகள் பூக்களுடன்.

குளத்தின் நடுவில் மரப்பாலம். நான்கு பக்கமும் ஊஞ்சல்.

பெரிய.. பெரிய இரும்பு ஆங்கில்கள் ஊன்றி தண்ணிக்கு மேலே ஊஞ்சல் கட்டியிருந்தார்கள். அதற்குப் போகத் தனிப்பாதை. குழல் விளக்குகள். இது ஒரு ஹனிமூன் ஸ்பாட் போலவே இருந்தது. காதலர்களுக்கு இது நல்ல வரப்பிரசாதம். ஒருவர் இருப்பதை மற்றவர் அறிய முடியாத வகையில். எப்படி பிளான் பண்ணி இருக்காங்க..!

முதலில் இது யார் என்று கண்டுபிடிக்க வேண்டும். தீவிரமாக முயன்றான்.



பாம்பே.. சர்மா வீட்டில் சாப்பிட அனைவரும் அமர்ந்திருந்தனர். குழந்தை சர்மா மடியில் அமர்ந்து அவர் ஊட்டுவதை வாங்கிக் கொண்டது.

ஷோபாவின் சடையைப் பிடித்து இழுத்தான். அவள், ''ஏன்டா என்னை வம்புக்கிழுக்கிறே... நேற்றுத்தான் என்னுடன் சண்டை போட்டுப் பேச மாட்டேன் என்று கோபித்துக் கொண்டு போனாயே.. இப்ப எதுக்கு வந்து என் சடையை இழுக்குறே..'' என்றாள்.

வருண் அவளைப் பார்த்துச் சிரித்தான். இதோ ஆகிவிட்டது நான்கு வயது. ஸ்கூல் போகிறான். ஸ்கூல் போனாலும் மழலைக் குரலில் தான் பேசுவான். அதைக் கேட்டுக் கொண்டிருக்கும் இவர்களுக்குத்தான் புரியும்.

''அக்கா.. சாரி!'' என்று கன்னங்குழியச் சிரித்தான்.

அவன் சிரித்ததும் ஷோபா அவனைத் தூக்கி முத்தமிட்டாள்;

38



காலை நேரம் பரபரப்பாக இருந்தது. நிருபா சீக்கிரம் கிளம்பி விட்டிருந்தாள். ஓடி வந்து காலைக் கட்டிய குழந்தையைப் பிடித்து விலக்கி விட்டு, ''நீ ஹோம் வொர்க் எல்லாம் பண்ணினியா.. என்ன இது காலையில் வந்து இப்படி தொந்தரவு கொடுக்குறே..'' என்றாள் மகனைப் பார்த்து.

சீமா நிருபாவிடம், ''ஏம்மா, நீதான் நாள் பூராம் குழந்தையைப் பார்ப்பதில்லை. இரவிலும் லேட்டா வர்றே.. கிட்ட வந்த குழந்தையை தூக்கினா என்ன கொஞ்ச நேரம்... அதுக்கும் ஆசை இருக்குமில்லையா...?'' என்றாள்.

உதட்டைக் கடித்துக் கொண்டு குழந்தையைத் தூக்கினாள். அவன் அவளின் கழுத்தைக் கட்டிக் கொண்டு காதோரம் மெல்ல முத்தம் கொடுத்தான்.

அவள் உடம்பே ஆடியது. இவ.. இவன்... அவன் மாதிரியே காதோரம் முத்தம் கொடுக்கிறானே... அவன் சாயலில் அவன் செய்ததெல்லாம் செய்தான். இவனைப் பார்க்கும் போதெல்லாம் அவனின் நினைவு பொங்கும். சோபாவில் உட்கார்ந்து கொண்டு உதட்டை மடித்து யோசனையாகப் பார்ப்பது.. நேருக்கு நேர் உற்றுப் பார்ப்பது.. நிற்கும் போதே ஒரு காலை லேசாக ஆட்டுவது.. தலை சரித்துப் பார்த்து உதட்டைக் கடிப்பது.. நிமிர்ந்து பார்த்தால் பளீரென்று புன்னகைப்பது.. இதனால் தான் நிருபா முடிந்தவரை மகனைத் தவிர்ப்பாள். அவனின் செய்கை அவளுக்குச் சலனத்தை ஏற்படுத்தும். அதோடு வெளியே சென்று வேலை பார்க்க முடியாது.

இன்றும் அவன் முத்தத்தில் விதிர்விதிர்த்துப் போய் நின்றாள். அவன் நெற்றி முடியை அந்தப் பிஞ்சுக் கையால் ஒதுக்கி விட்டான். அவசரமாக மகனை இறக்கி விட்டாள். இனியும் தாங்க முடியாது என்று. அவன் அப்படித்தான் முடியை ஒதுக்கி விடுவான். அவன் நினைவே எனக்குக் கூடாது.

மகனிடம் பாசம் இல்லாமல் இல்லை. மகன் மேல் உயிரையே வைத்திருந்தாள். அவளுள் ஒரு இறுக்கம். தன் மனதை வெளிக்காட்டாமல் பூட்டி வைத்திருந்தாள்.

சீமாவைப் பார்த்து, ''நான் வர்றேம்மா,'' என்று விரைந்து சென்றாள்.

இப்படி வேகமாக ஓடும் அவளைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள்.

சர்மா சீமாவிடம், ''அவளை விடு சீமா.. வாழ்க்கையில் ரொம்ப அடிபட்டிருக்கா.. இந்த வரை தெளிந்தாளே என்று பெருமைப்படு. அவள் அந்த பிரச்சனைகளை விட்டு வெளியே



வர வேண்டும் என்றுதான் நான் அவளை வேலை செய் என்றேன். அவள் அதைப் பிடித்து மேலே ஏறி வந்து விட்டாள்..''

''ஏங்க, நீங்களாவது கேட்கக் கூடாதா.. இவன் அப்பா எங்கே என்று.''

''அவசரப்படாதே சீமா. நாம் பழையதைக் கிளறவில்லை என்பதால்தான் அவள் நம்முடன் இருக்கிறாள். அவள் அந்த அளவுக்கு வேதனை அடைந்திருக்கவேண்டும். அவளா வாய் திறந்து என்றைக்காவது பேசுவாள். அதுவரை நாம் பொறுமையாக இருப்போம். நீ எதையும் கேட்டு வைக்காதே. இப்போ அவள் ஒரு பக்குவத்திற்கு வந்திருப்பாள். அப்படியே வந்திருந்தாலும் பிரச்சனையைச் சொல்லும் மனநிலைக்கு அவள் வரவில்லை. என்றாவது ஒருநாள் வருவாள். நாம் இப்படியே விட்டுவிடப் போவதில்லை.''

''ஏங்க, எத்தனை வருடம் ஆகிவிட்டது. இவளைப் பெத்தவங்க எப்படி துடிக்கிறாங்களோ.. இவளைக் கட்டிய கணவன் வேதனைப்படறானோ.. இதெல்லாம் தெரிந்தும் நாம் இத்தனை வருடம் பேசாமல் இருந்து விட்டோம்.. அவளா ஒரு முடிவுக்கு வரட்டும் என்று. ஆனால் அவள் எந்த முடிவுக்கும் வரவில்லை. இதுவரை அவளுக்கும் சின்ன வயசு. நாம் பெரியவர்கள் இப்படியே விடலாமா? நாளைக்கு அவளைப் பெத்தவங்களோ.. கணவனோ வந்து கேட்டால் என்ன பதில் நாம் சொல்வது..?''

''ம்..ம்.. நானும் இதையெல்லாம் யோசிக்காமல் இல்லை. ஆனால் பெத்தவங்களோ.. கணவனோ வந்தால் அவள் பதில் சொல்லி விடுவாள். அவள் மனதில் எத்தனை அவமானங் களையும், கேவலங்களையும் சந்தித்திருந்தால் அவள் அந்த நிலையில் உயிரை விட வந்திருப்பாள். அந்த அவமானமும், வெறியும்தான் அவளை இந்த அளவுக்கு உயர்த்தியது.

இல்லையென்றால் இவ்வளவு சீக்கிரம் உயர முடியாது. அவள் பட்ட அடி. அதன் வலியை இன்னும் அவளால் ஜீரணிக்க முடியவில்லை என்று நினைக்கிறேன்..''

''ஏங்க இவளுக்கு கல்யாணம் ஆகியிருக்குமா? நான் தப்பா கேட்கலை.''

''நீ கேட்டதே தப்புத்தான். இதில் என்ன தப்பா கேட்கலை. சீமா! நீயா எந்த முடிவுக்கும் வராதே.. எப்படியிருந்தால் என்ன, அதை நாம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். நடந்ததை மாத்த முடியுமா? அதை விமர்சனம்தான் பண்ணலாமா...? பொறுத்தது பொறுத்தோம். இனி கொஞ்ச காலம் பொறுப்போம். பிள்ளையும் பெரியவனாகி விட்டான். தகப்பனோட அருகாமை வேண்டும். இதைப்பற்றிப் பேசலாம் நிதானமாக. அவள் தொழிலில் தன்னை முழுதாக ஈடுபடுத்திக் கொண்டாள். இதில் இருந்தே தெரிய வேண்டாமா? அவள் தன்னையே.. மறக்க நினைக்கிறாள் என்பதை..

''வீட்டிற்கு வந்தாலும் வேலை என்று அறையில் புதைந்து கொள்கிறாள். நம்முடன் கலகலப்பாக இருப்பது போல இருந்தாலும், அவள் நிம்மதியாக இல்லை. இது இவள் இயல்பு இல்லை போல் தெரியுது..''

''ஆமாங்க, வருணைப் பார்த்தாலே.. ஒதுங்கிப் போறா..''

''அவள் ஒதுங்கவில்லை சீமா.. அவனில் இருந்து ஏதோ நினைவுகள் அவளை ஆட்டிப் படைக்குது. மகன் மீது உயிரையே வைத்திருக்கா.. அவனுக்காகத்தான் இந்த அபார உழைப்பு. அவள் சந்தித்த பிரச்சனைகள், அதுபோல இருக்கு. அதில் இருந்து மீண்டு விட்டது போல் நினைத்தாலும், நினைவுகள் அவளை விடவில்லை. இவ சீக்கிரம் மறக்கக் கூடிய வலி இல்லை போல் இருக்கு. காலம் எத்தனை காயமா இருந்தாலும் அதை ஆற்றிவிடும் வல்லமை வாய்ந்தது. காலத்திற்கு இருக்கும்



சக்தி வேறு எதற்கும் இல்லை. எந்தப் பிரச்சனையையும் நாம் நினைத்துக் கொண்டே வாழ முடியாது.''

''.......''

''ஏன் நம் பிரச்சனையை எடுத்துக்கோயேன்.. காலம் எத்தனை மாற்றி விட்டது நம்மை. அதன் போக்கில் நாம் மாறித்தான் ஆகணும். அதையே நினைத்துக் கொண்டிருந்தால் எப்படி? இப்போ இறந்து விட்டால் அன்று ஒருநாள் அவர்களைப் பார்த்து அடித்துக் கொண்டு அழறோம்.. மறுநாள், மறுநாள், அதையே செய்கிறோமா.. துக்கம் இருக்கும். ஆனால் குறைந்திருக்கும். துக்கம் இருக்கு என்று எதை நாம் நிறுத்துகிறோம். எதையும் நிறுத்துவதில்லை. அந்தப் பக்கம் காட்டுக்குப்போனாலும் வீட்டைக் கழுவி, நாம் குளித்து உடனே சாப்பிடுகிறோம். எதுவும் நிற்பதில்லை. அந்த சூழ்நிலையிலும் தண்ணீர் நாளை வேண்டும், கரண்ட் இருக்கும்போதே மோட்டார் போட்டு வைத்துக் கொள்ளணும் என்று நாம் போடுவதில்லையா..? எல்லாமே அதன் பாட்டுக்கு நடந்து கொண்டுதான் இருக்கும். நமக்காக எதுவும் காத்திருக்காது. விதி நடத்தும் வழியில் நாம் சென்றுதான் ஆகணும்..''

''ஏங்க, என்ன அழகாக இருக்கா.. இவளை விட இவ கணவனுக்கு எப்படித்தான் மனசு வந்ததோ..''

''இதைத்தான் இன்னேரம் வரை சொல்லிக்கிட்டு இருந்தேன். பிரச்சனை என்னனு தெரியாமல் எதையும் ஆராயாதே.. ஒருநாள் தெரிய வரும்போது நீ வருத்தப்பட நேரிடும். ஐயோ.. நாம் இப்படி நினைத்து விட்டோமே என்று. அவள் பாட்டுக்கு இருக்கட்டும்.. நல்லா இப்பத்தான் வளர்ந்து வர்றா..'' என்றார்.

''ஏங்க, சென்னையிலே எதுக்காக வேலை செய்றா..''

''எல்லாத்துக்கும் காரணம் இருக்கும்... பிறகு அதை அவளே சொல்வாள். நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். இங்கிருந்தே என்னமா மெயின்டன் பண்றா தெரியுமா..? வேலை

வாங்கும் நேக்கு.. அதிர்ந்து பேசாத தன்மை. கடுமையை முகத்தில் காட்டாத புன்சிரிப்பு. கனிவான பேச்சு. வேலைக்கு வருபவர்களை முதலில் வாங்க சாப்பிட்டீங்களா என்றுதான் கேட்கிறா... வேலைக்கு வருபவர்களை எந்த முதலாளியும் வாங்க என்று கூப்பிட மாட்டாங்க. இவ கூப்பிடுவா.. அவர்களிடம் ஒரு நெருக்கம், அன்பு இதனால் ஏற்படுகிறது. சாப்பிடவில்லையென்றால் உடனே போய்ச் சாப்பிட்டு வந்து வேலையைப் பாருங்கள், சாப்பிடாம எதற்கு வேலை செய்யணும், இந்த வயித்துக்காகத்தானே இப்படி உழைக்கிறோம்... சாப்பாட்டிற்கு அப்புறந்தான் எதுவுமே.. பசியோட யாரும் வேலை பார்க்கக் கூடாது.. என்ன பிரச்சனை வந்தாலும் என்னிடம் தாராளமாகச் சொல்லலாம் என்பாள். இதுதான் ஒரு முதலாளி உயரத் தேவையான ஏணிப் படிகள். அந்தக் குரலில் உள்ள மிடுக்கு அத்தனை பேரையும் கட்டுப்படுத்தும்.

''பணத்தைக் கொடுத்து விட்டு மூஞ்சியில் அடித்தது போல் பேசக் கூடாது. முதலாளி என்ற கர்வம் கூடாது. நாம் பிறந்து வரும்போதே முதலாளியாகப் பிறப்பதில்லை. இதை மனதில் வைத்து நடந்தாலே... வேலைகள் தானாக நடக்கும். அதன் சூட்சமத்தை நன்கு அறிந்து வைத்திருக்கிறாள்..

''நான் முதலாளி.. நான் சொல்வதைக் கேட்டுத்தான் ஆகணும் என்று சொல்லக் கூடாது. வேலைக்கு வருபவர்கள் என்றால் அவனும் மனிதன்தானே. அவனுக்கும் மனசிருக்கும். மான அவமானங்கள் இருக்கும் என்று நினைக்கணும். வேலைக்கு வருவதால் எல்லாவற்றையும் வீட்டில் விட்டு விட்டா வருகிறான். முடியவில்லையென்றால் தாராளமாக வீட்டிற்கு அனுப்பலாம். அவன் மறுநாள் நாம் சொல்லாமலேயே அந்த வேலையைச் சேர்த்துப் பார்ப்பான். பிசினஸ் பண்றது பெரிய விசயமல்ல. அதை எப்படிப் பண்றோம் என்பதுதான் முக்கியம். என்னிடமே பல இன்ஜினியர்கள் உங்க பொண்ணு ரொம்ப



புத்திசாலி என்பார்கள். பிசினசில் இவ்வளவு சீக்கிரம் நல்ல பேர் எடுக்க முடியாது. இவள் எடுத்துவிட்டாள்..''

''.........''

''சென்னையில் வேலை பார்ப்பவர்களுக்குத் தேவையானதைச் செய்கிறாள். அவர்கள் அங்கு நிம்மதியாகவே வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கும் தங்க ஒரு வீடு வாங்கி சமைக்க நான்கு பேர் போட்டு இருக்கிறாள். எத்தனை வருடத்திற்கு ஹோட்டலில் சாப்பிட முடியும். அது ஒத்துக் கொள்ளுமா என்றுதான். இதெல்லாம் செய்து கொடுக்கணும் ஒரு தொழிலாளிக்கு. மாதத்தில் நான்கு நாள் லீவு கொடுக்கிறாள். ஒவ்வொருத்தருக்கும் மாற்றி.. மாற்றி.. வந்து போகிறார்கள்.. இதெல்லாம் கம்பெனிச் செலவுகள். எப்படி புத்திசாலியா நடக்கிறா பார்த்தியா?

''ஆயிரம் செலவு பண்ணினால்தான் பத்தாயிரம் சம்பாதிக்க முடியும். பிசினசில் இதைச் சில பேர்தான் தெரிந்து செயல்பட்டிருக்காங்க..''

''சரிங்க. உங்களுக்கு டீ தரட்டுமா.. வெளியே போகணும் என்றீங்க,'' என்று ஞாபகப்படுத்தினாள்.

''ஆமா. டீ கொடு. நான் போயிட்டு மதியம் வீட்டுக்கு வந்துவிடுவேன்,'' என்றார்.

''சீமா! நீ போய் கம்பெனியைப் பார்த்துக் கொள். நான் மதியம் வந்துவிட்டு வேறு வேலையாக வெளியே போக வேண்டியிருக்கு. இன்னிக்கு ஒரு மீட்டிங் இருக்குது. அதை நீ கவனி. குறிப்பு எடுத்து வை. நான் வந்து பார்க்கிறேன். என் பி.ஏ.விடம் கேள். எல்லாம் தயாராக இருக்கும்,'' என்றார்.

''சரிங்க. நான் பார்க்கிறேன்'' என்றாள்.

# 39



வீட்டு வேலை செய்யும் ராகினியிடம், ''மதியம் சார் சாப்பிட வீட்டுக்கு வருவார். நீ சீக்கிரம் பண்ணிவிடு. நான் மதியத்துக்கு மேல் கம்பெனிக்குச் செல்ல வேண்டும். அதனால் வீட்டைப் பார்த்துக் கொள். ஷோபா வந்து விடுவாள்.. வருணும் வந்து விடுவான்,'' என்றாள்.

''சரிம்மா. நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் போய்ட்டு வாங்க,'' என்றாள் புன்னகையுடன்.

எத்தனை வேலை என்றாலும் புன்னகை மாறாமல் செய்வாள். முகம் சுழிக்க மாட்டாள். இவர்களிடம் ரொம்ப வருடமாகவே வேலை பார்ப்பவள். வீட்டை நம்பி விட்டுப் போகலாம்.

ராகினிக்கு ஒரு பையன் சி.ஏ.பண்றான்.

மறுநாள் ஷோபா காலேஜில் டூர் போக இருந்தனர். முதல் நாளே, ''ராகினி அம்மா! நான் நாளைக்கு டூர் போறேன்.. எனக்கு டிபனும், சாப்பாடும் கொஞ்சம் கட்டித் தரணும். கொஞ்சம் சேர்த்து என் ஃபிரண்ட்ஸ்களுக்கும்!'' என்றாள்.

''சரி ஷோபா. உனக்கு என்ன வேண்டும் என்று சொல். இன்றே அதை வாங்கி வைக்கணும்,'' என்றாள்.

அவள் சொன்னவற்றைக் குறித்துக் கொண்டாள். ''சிலது வீட்டில் இருக்கு. இதுதான் வாங்கணும்.. இப்போ வீட்டில் யாருமில்லை. நான் நாளை வரும் போது வாங்கி வந்து விடுகிறேன்,'' என்றாள்.

ராகினிக்கு எல்லாவற்றிற்கும் உரிமை வைத்திருந்தனர். தேவையானதை வாங்க. ஆனால் அதை மீற மாட்டாள்.

மறுநாள் ராகினியால் எழுந்திருக்க முடியவில்லை. நல்ல ஜுரம். மூச்சுத் திணறல் வேறு. தலைதூக்க முடியவில்லை. அவள் மகன் ரமேஷ் பார்த்து விட்டு, ''என்னம்மா இப்படி அனலாகக் கொதிக்குது... மூச்சுத் திணறல் வேறு இருக்கு..



வாங்க ஹாஸ்பிடல் போகலாம்,'' என்று கை பிடித்துத் தூக்கி உட்கார வைத்தான்.

பக்கத்து பங்களாவில் டாக்டர் இருக்கிறார்... இவன் அவரிடம் தான் பார்ப்பான்.

ரமேஷ் கூட்டிப் போய் பார்த்துவிட்டு மாத்திரை வாங்கி வந்து கொடுத்துவிட்டு, அரிசியை மிக்சியில் உடைத்துக் கஞ்சி வைத்து இரண்டு டம்ளர் குடிக்கக் கொடுத்து மாத்திரையைப் போடச் சொன்னான். பின் அவள் குடித்த டம்ளரைக் கழுவி வைத்துவிட்டு, ''அம்மா நான் இன்னைக்கு காலேஜ் லீவு போடவா?'' என்றான்.

''ஆமாடா.. ஜுரம் வேதனையில் நான் மறந்து விட்டேன். சர்மா சார் வீட்டில் ஷோபா இன்னிக்கு டூர் போறா.. சாப்பாடு, டிபன் செய்யணும். நான் இப்படி இருக்கும்போது போய்ப் பண்ண முடியாது. ஜுரத்தோட.. ஏன்னா குழந்தை வேறு இருக்கான். நிமிடத்துக்கு ஓடி வந்து பாட்டி தூக்கு என்று என் மேலே விழுவான். ஜுரத்தோட குழந்தையைத் தூக்கக் கூடாது. அதனால் நீ என்ன பண்றே... இன்று லீவு போட்டுட்டு அந்த வீட்டுக்குப் போ. இந்தா, இந்த சீட்டில் இருக்கும் பொருளையும் வாங்கிப் போ.. இதில் இருப்பதைத்தான் அவளுக்குச் சாப்பாடு, டிபன் பண்ணித் தரணும். வீட்டில் இன்று காலை டிபன், மதியம் சாப்பாடு, இரவு டிபன் என்று எல்லாவற்றையும் சொன்னாள். அந்த வீட்டில் செய்பவை எல்லாம் ஓரளவுக்கு இவனுக்குத் தெரியும். இவன் அம்மா தினம் வந்து சொல்வாள் நன்றியுணர்ச்சியோடு. அம்மா சொன்னதைக் கேட்டுக் கொண்டு, ''ஏம்மா, நீங்க இப்படி தனியா இருந்துப்பீங்களா...?'' என்றான்.

''நான் இருந்துப்பேன் ரமேஷ். இப்ப நீதான் அங்கு முக்கியம். இந்த மாத்திரையைப் போட்டுக் கொண்டு படுத்தால் நான் நல்லா தூங்கி விடுவேன். மதியத்திற்குத்தான் மீதம் கஞ்சி இருக்கே... அதைச் சூடு பண்ணிக்கிறேன்.. நீ போய்ட்டு வா..'' என்றாள்.

ரமேசுக்கும் தெரியும். அவர்கள் இல்லையென்றால் நானும் என் அம்மாவும் இல்லையென்று. அவனும் கிளம்பி சீமா வீட்டுக்குச் சென்றான், தேவையானதை வாங்கிக் கொண்டு.

சீமாவிடம் ரமேஷ், "அம்மாவுக்கு ஜுரம் ஆன்ட்டி. அதான் நான் வந்தேன்," என்றான்.

"ஏ.. ரமேஷ்.. உனக்கு இன்று காலேஜ் இருக்குமே.. ஒரு ஃபோன் பண்ணிச் சொன்னால் இதையெல்லாம் நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா.. நீ எதற்கு இப்படித் தேவையில்லாமல் லீவு போடுறே.. முதலில் காலேஜுக்குப் போ.." என்றாள்.

"ஆன்ட்டி! நீங்களும், அங்கிளும் இன்னைக்கு ஒரு ஹோட்டல் திறப்பு விழாவிற்குப் போகணுமாம்.. போனால் நேரமாகி விடுமாம். ஷோபா வேறு இன்றைக்கு டூர் போறாங்களாம்.. இதை நீங்க கவனிக்க முடியாதாம் என்று அம்மா சொல்லித்தான் என்னை அனுப்பினாங்க.. அதான் நான் வந்தேன். நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்.. நீங்கள் போயிட்டு வாங்க ஆன்ட்டி," என்றான்.

சீமா புன்னகையுடன் ரமேஷ் தலையைக் கலைத்துவிட்டு. "சரி," என்றாள்.

புள்ளைன்னா இப்படித்தான் இருக்கணும். ஆம்பளைன்னா.. சமையல் என்றால் என்ன என்று கேட்பவர்களுக்கு மத்தியில் இவன் ஒரு வித்தியாசமானவன். எல்லா வேலைகளையும் செய்வான். சிறு பிள்ளையில் இருந்தே.. அவன் அம்மாவும் அப்படிப் பழக்கினாள். சாப்பிட்ட தட்டை எடுத்துக் கழுவி வை. சாப்பிட்டவுடன் எல்லாவற்றையும் எடுத்து மூடி வை. சாப்பிட்ட இடத்தைச் சுத்தம் செய். கீழே ஒரு பொருள் கிடந்தால் உடனே.. அம்மா.. இல்லை மனைவி.. மகளையோ.. கூப்பிட்டு என்ன இது இந்தப் பொருள் இப்படி ஹாலில் கிடக்குது.. எடுத்து வை என்று கூறாமல் ஏன் இதை நீ கீழே வைத்தால் என்ன... இதையெல்லாம்



பொம்பளைங்க மட்டுந்தான் பார்க்கணுமா.. உனக்குக் கை இருக்குல்லே.. இது மாதிரி பேசக் கூடாது என்று பழக்கினவர்.

சின்னப் பையனாக இருக்கும்போதே.. ஸ்கூல் விட்டு வந்ததுமே அவன் அம்மா காலையில் போய் இரவு வருபவள்தானே.. இவனே வீட்டைப் பெருக்கி, காய வைத்த துணிகளை எடுத்து மடித்து வைத்து, சமைத்த பாத்திரங்களைக் கழுவி, தான் காபி போட்டுக் குடித்து விட்டுப் பின் படிக்க உட்காருவான். அவனுக்கு விபரம் தெரிந்த நாளில் இருந்தே அவன் துணிகளை அவனே துவைத்துக் கொள்வான். வேலையில் ஆம்பிளை என்ன, பொம்பளை என்ன என்பாள் அவன் அம்மா.

படிப்பிலும் படு சுட்டி. இதுவரை ஒரு டியூசன் கிடையாது. அவனாகவே படித்துக் கொள்வான்.

நிருபா இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் அப்பாவின் நினைவு வந்தது.

வீட்டில் ஹாலில் ஏதாவது துணியோ.. பொருளோ.. கிடந்தால் ஏய். சனியனே.. முண்டம்! உனக்கு எத்தனை தடவை சொல்றது. இது மாதிரி சோபாவிலோ.. சேரிலோ.. போடாதே என்று. ஒரு தடவை சொன்னால் புரியாதா? சரியான பட்டிக்காடு.. மாடு மேய்ப்பவனின் மகள்தானே.. உனக்கெங்கே புத்தி வரப் போகுது... நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்த மாதிரிதான் உன்னைத் திருத்துவது.. என்று யார் வந்திருந்தாலும் அவர்கள் முன்னாடியே பேசுவார். இதை இவளும் இவள் அண்ணனும் கேட்டுக் கொண்டுதான் உட்கார்ந்திருப்பார்கள். ஆனால் அதை நாம் எடுத்து வைக்கணும் என்ற எண்ணமோ.. இல்லை, நீதான் எடுத்து வைத்தால் என்னம்மா என்று அவரோ.. சொன்னதில்லை.. சொன்னாலும் இவள் கேட்பதில்லை.

பிள்ளைகள் நல்லவர்கள் ஆவதும், கெட்டவர்கள் ஆவதும் தாயின் வளர்ப்பினிலே... என்பது பொய். தந்தை வளர்ப்பினிலே

யும் தான். அவள் தாய் நீ ஒரு பொண்ணு, வேறு வீட்டிற்குப் போறவள், இதையெல்லாம் நீ கத்துக்க என்று தான் சொன்னாள். அவள் அப்படிச் சொல்லிவிட்டால் போதும். இவள் அப்பா அவள் அம்மாவைக் கழுத்தைப் பிடித்து நெரிக்காத குறையாக வாங்கு.. வாங்கென்று வாங்கிவிடுவார். அந்தம்மா பேசாமல் வாய் திறந்து மறுவார்த்தை சொல்லாமல் சென்று விடுவார்.

அம்மா என் நன்மைக்குத்தான் சொல்கிறார் என்று நினைக்கவில்லையே.. அப்பா சின்ன வயதில் இருந்தே இந்தப் பிள்ளைகள் முன்னாடி அவளை மட்டம் தட்டிப் பேசியே கேட்டு வளர்ந்து விட்டார்கள்... இவர்களுக்கும் அந்தப் பக்குவம் இல்லை. இவங்களும் தாயை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. இவர்களும் மட்டமாகத்தான் நினைத்தார்கள். தாய் என்றால் நமக்கு வேலை செய்பவர்கள். அவர்கள்தான் செய்ய வேண்டும் என்ற கட்டாயம். அதுதான் அவர்கள் கடமை என்று நினைத்தேனே தவிர.. எனக்கும் கடமையிருக்கு, தாய்க்கு நாம்தான் கஷ்டம் உணர்ந்து உதவணும் என்று எனக்குத் தெரியவில்லையே.. நான் அந்த மாதிரி வளர்க்கப்பட வில்லையே.. காலம் சென்று தான் தவறை உணர்ந்து கண்ணீர் விட்டாள் தாயை நினைத்து. ஆம்பளை என்ற திமிர் இவள் அப்பாவிடம்தான் அத்தனையும் இருந்தது. பொம்பளை என்றால் அவள் கேவலமானவள், தனக்கு வீட்டு வேலை செய்யணும், தன் அம்மா, அப்பா மற்றும் கூடப் பிறந்தவர்களைப் பார்த்துக் கொள்ளணும். ஒரு குறை வைக்கக் கூடாது. பின் பெற்ற குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளணும். ஆனால் புருசன் என்ன சம்பாதிக்கிறான், என்ன வருமானம் என்ற விபரம் அவளுக்குத் தெரியவே.. தெரியாது. அவரும் சொல்ல மாட்டார். இந்தம்மாவும் பயந்து கொண்டு கேட்க மாட்டார்.

வருமானத்தைப் பற்றி வீட்டில் சொன்னால்தானே அவள் எந்தச் செலவைக் குறைக்கணும், எந்தச் செலவை அவசியம் செய்யணும் என்று சொல்வாள். இவளுக்குத்தான் எதுவுமே



தெரியாதே.. எப்பவாவது ஒரு முறை இதெல்லாம் ஏங்க வீண் செலவு என்றால் ஏ.. நீ.. என்ன உன் அப்பன் வீட்டில் இருந்தா கொண்டு வந்து போடுறே.. பிச்சைக்காரிதானே.. நீ. மாசா மாசம் வண்டி வண்டியா வருது பாரு.. பேசாமே வாயை மூடிக்கிட்டு போடி. உன் வேலை என்னவோ அதைப்பாரு என்று ஏளனமாகப் பேசுவார்.

அவர் அப்படியே ஓட்டுக்குள் நத்தையாய் ஒடுங்கி விடுவார். பொம்பளைங்களைச் சாதாரணமாகச் சிலர் எடை போடு கிறார்கள். இவளுக்கு என்ன தெரியும் என்று. நாம் வாங்கிப் போடுவதைச் சமைத்தால் போதுமென்று. அவர்களுக்குத் தெரியும் இந்த மாதம் எதைச் செய்யணும். இந்த மாதம் நிறைய எதிர்பாராத செலவு கல்யாணம் என்று இருக்கு. பத்திரிகை வந்தவுடனேயே அவர்கள் அடுத்த மாதம் இந்தக் கல்யாணத்திற்குப் போகணும், போக வர.. மொய் என்று இவ்வளவு ஆகும். இந்த மாதம் செலவைக் குறைத்தால் தான் கட்டுப்படியாகும் என்று மனதினிலேயே.. கணக்குப் போடுவார்கள். என்ன தான் இவர்கள் கணக்குப் போட்டாலும் புருசன் சரியென்று ஒத்துக்கணுமே.. இல்லை, முதலிலேயே சொல்லணும்.. எத்தனையோ பெண்கள் இன்னும் புருசன் என்ன சம்பாதிக்கிறான் என்ன வருமானம் என்று தெரியாமல்தான் குடும்பம் நடத்துகிறார்கள். அதுக்காக எல்லா குடும்பங்களும் இப்படித்தான் இருக்கு என்றில்லை. சில குடும்பங்கள் சர்மா குடும்பங்கள் போலவும் இருக்கு. தன் பெண்டாட்டி, பிள்ளைகளுக்காக உயிரையும் கொடுப்பவர்கள் இருக்கிறார்கள். இன்னும் பல குடும்பங்களில் பொண்டாட்டியிடம் பிச்சை போடுவது போல் இந்தா இரண்டாயிரம், இதுதான் என்னால் முடியும். நீ என்னமோ செய்து கொள். சாப்பிடுவாயோ.. வாடகை கொடுப்பாயோ.. இல்லை ஸ்கூல் பீஸ் கட்டுவாயோ.. எனக்குத் தெரியாது. நீ எப்படியோ.. போ.. என்று மனச்சாட்சியே இல்லாமல் பேசுவதுண்டு. ஆனால் அவனுக்கு மட்டும் ராஜ உபச்சாரம் நடக்கணும். அவன் தான் பொண்டாட்டி பிள்ளை

ளுக்குச் செய்வது நம் கடமை என்று நினைப்பதில்லை. அந்த ரெண்டாயிரத்தைக் கொடுத்துவிட்டுத் தலைநிமிர்ந்து என்னை மாதிரி யார் செய்ய முடியும் என்பது போல பேச்சிருக்கும். ஏதோ போனால் போகுது என்று. இதுகூட ஒரு வளர்ப்பு முறைதான். ஆண் என்கிற திமிர். ஆனால் அதுவும் ஒருநாள் அடங்கும் என்பது தெரிவதில்லை.

குடும்பங்களில் ஒரு வயதுக்குப் பின் பிள்ளைகளிடமும் வருமானம், வேலை, இதில் இவ்வளவு கஷ்டம் இருக்கு, இந்தப் பொருள் இவ்வளவு விலை, நீ அடுத்த தடவை வேறு கடையில் கேட்டுப் பாரேன்.. விலை குறைவா இருக்கா என்று. அங்கு வாங்கலாம் என்று சொல்ல வேண்டும். அவர்களையே வாங்கியும் வரச் சொல்லவும் வேண்டும். அப்பத்தான் எது என்ன விலை.. இப்படி வாங்கினால் ஒரு மாதம் எவ்வளவு செலவாகிறது என்று அவர்களுக்குத் தெரியும். சும்மா மூன்று வேளையும் சோத்தைப் போட்டு திங்கவிட்டு ஊருக்குள் அலைய விட்டு இப்படி பொறுப்பில்லாத ஒரு பொறுக்கியா வளர்ப்பது. இதிலும் மூன்று, நான்கு பெண்களுக்குப் பிறகு ஆம்பிளைப் பிள்ளை பிறந்தால் போதும், அவன் மட்டும் என்னமோ ஆகாயத்தில் இருந்து வந்து குதித்த மாதிரி கவனிப்பாங்க. அவனுக்கு மட்டுந்தான் முதல் மரியாதை எல்லா விசயத்திலும். எல்லோரும் அவனுக்கு வேலை பார்க்க வேண்டும். இது மாதிரியே சின்ன வயதில் இருந்து பழக்கி விடுவதால் பெண்கள் தான் நமக்குச் சேவை செய்யணும், நாம் உட்கார்ந்து கொண்டு அதிகாரம் பண்ணணும் என்ற மனப்பான்மை வந்து விடுகிறது.

ஆண்கள் என்னதான் படித்து, சமத்துவம் பேசினாலும், பெண்கள் வேலைக்குப் போனாலும் மனதில் ஓரத்தில் சிறு துளியாவது தான் ஆண் என்கிற திமிர் இருக்கும். ஆனால் இவனோ வித்தியாசமாக இருக்கானே...



40



இதுவும் நல்ல வளர்ப்பு முறைதான்.. ஆண், பெண் என்ற பேதமென்ன? இன்னும் சிலர் ஆண் காதலித்தால் வீட்டை விட்டுப் போ என்று துரத்தி விடுவார்களாம். பெண் என்றால் வெட்டி ஆத்தில் விடுவார்களாம். ஆணுக்கு வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்க உரிமை இருக்காம். பெண்ணுக்கு இல்லையாம்.

வெட்டி ஆத்தோட போடுற பெண் எங்காவது சென்று யாரோடாவது வாழ்ந்தாலென்ன? அவளுக்கு அந்த உரிமையில்லையா? நிருபாவின் உள்ளம் கொதித்தது.

சீமா, ''நிருபா!'' என்று அழைத்தார் இரண்டு முறை.

நிருபா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். ''என்னம்மா?'' என்றாள்.

''உனக்கு நேரமாகலையா? கிளம்பணுமில்லே..'' என்றாள்.

''ஆமாம்மா.. நான் கிளம்புறேன்,'' என்று சென்றாள்.

கிளம்பி வந்து, ''என்ன ரமேஷ், எங்களோட இடத்தை நீ பிடிச்சுக்கிட்டே..'' என்றாள் சிரிப்புடன்.

''ம்..ம்.. என்ன பண்றது... எங்களோட இடத்தையெல்லாம் நீங்க பிடிச்சிக்கிட்டு வேலை பார்க்கும்போது நாங்க இந்த இடத்துக்கு வாயை மூடிக் கொண்டு வர வேண்டியதுதானே?'' என்றான் அவனும் சிரித்துக் கொண்டே கேலியாக.

''இப்ப நீ நான் வேலை பார்ப்பதால்தான் சமைக்க வந்தியா?'' என்றாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. அம்மாவுக்கு முடியவில்லை. நான் அவர்களுக்கு உதவி பண்ணுகிறேன். அவ்வளவுதான். இதில் இவ்வளவு பேச என்ன இருக்கு? அம்மாவோட கடமைகள்

மகனுக்கு இல்லையா..? இப்படி திடீர்னு இங்கு வேலைக்கு வராமல் இருந்து விட்டால், எல்லாம் தலைகீழாக மாறிவிடும்தானே... என் அம்மாவின் கஷ்டத்தில் பங்கு கொள்கிறேன். இதில் ஆண் என்ன, பெண் என்ன, மனசுதான் வேணும் உதவ.. ஏன், அடுப்படி மட்டும் பெண்களுக்குன்னு எழுதிக் கொடுத்திருக்கா?'' என்றான்.

''அப்படித்தானே.. காலங் காலமாக நடந்து வருது.. பிறக்கும் போதே பெண்கள் வேலை செய்ய என்று..''

''சரிக்கா. எனக்கு நேரமாகுது. நாம் இதைப் பற்றி இன்னொரு நாள் பேசலாம்,'' என்று உள்ளே போய் வேலைகளைப் பார்த்தான்.

ஷோபா வேகமாக மாடியில் இருந்து அடுப்படிக்கு வந்து, ''ராகினிம்மா.. என் அறையில் தண்ணீர் கொட்டி விட்டது. கொஞ்சம் துடைத்து விடுறீங்களா...?'' என்றாள் - ரமேஷ் இருப்பதைக் கவனிக்காமல். ரமேஷ் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். ''சரி ஷோபா, நான் இதோ இந்த வேலையை முடித்து விட்டுத் துடைத்து விடுகிறேன்,'' என்றான்.

ஷோபா திடுக்கிட்டுப் போனாள். ''சாரி ரமேஷ்.. நான் ராகினிம்மானு சொல்லிவிட்டேன். நானே துடைத்துக் கொள்கிறேன்.. ராகினிம்மா வரலையா? ஏன்?'' என்றாள்.

''இதில் என்ன இருக்கு ஷோபா.. உனக்கு காலேஜுக்கு நேரமாகி விட்டது. நீ கிளம்பு. நான் துடைத்து விடுகிறேன். என் அம்மா செய்யலாம். நான் செய்யக் கூடாதா..? அப்புறம் அம்மாவுக்கு உடம்புக்கு முடியவில்லை. அதான் நான் வந்தேன். டிபன் ரெடியா இருக்கு.. சாப்பிட்டு நீ கிளம்பு,'' என்று தட்டை எடுத்து வைத்தான்.

இந்த வீட்டில் சர்மா வேலை செய்பவர் யாரையும் அலட்சியமாகவோ, பேர் சொல்லியோ வா.. போ. என்றோ கூப்பிடக் கூடாது. அவர்களும் வேலை செய்பவர்கள்தான்.. வீட்டு வேலை என்றால் கேவலமானது. ஆபீஸ் வேலை



பார்ப்பதென்றால் கௌரவமானது என்று இல்லை. அங்கேயும் வேலை தான் பார்க்கிறோம். இங்கேயும் வேலைதான் பார்க்கிறோம். வேலைதான் வித்தியாசமே தவிர மனிதர் அல்ல. வீட்டு வேலை பார்ப்பவர் நமக்குக் கும்பிடு போடணும் என்று அவசியமில்லை. அவர்களையும் சரி சமமாக நடத்த வேண்டும் என்பார்.

அதனால்தான் இவர்கள் சகஜமாகப் பேசிக் கொள்கிறார்கள்.

''ஆமா ரமேஷ்... உனக்கெப்படி இந்த வேலையெல்லாம் தெரியுது?''

''ஒரு சமையல்காரியோட மகனுக்கு இதெல்லாம் தெரியாது என்றால்தான் கேட்கணும் எப்படித் தெரியாது என்று. தெரிந்திருப்பது ஆச்சரியப்படக் கூடிய விசயமில்லை.. ஏ.. உன்னையே எடுத்துக் கொள். பிசினஸ் பத்தி உனக்கு முழுவதும் தெரியாது என்றாலும் ஓரளவுக்காவது தெரிந்திருக்கணுமே..'' என்றான்.

ஷோபா சிரித்துக் கொண்டே, ''ஆமாம்..'' என்றாள்.

சர்மாவும், ''நீ கேட்பது சரிதான் ரமேஷ். நம் வீட்டு வேலைகள், தொழில்கள் பற்றி வீட்டில் உள்ளவர்கள் கட்டாயம் தெரிந்திருக்கணும். உன்னைப் பெற்றதுக்கு ராகினி ரொம்பக் குடுத்து வச்சிருக்கணும்!'' என்றார்.

''ஏம்பா.. இப்படிச் சொல்றீங்க.. ராகினிம்மாதான் குடுத்து வச்சிருக்காங்க என்று. இவரைக் கட்டிக்கப் போற பொண்ணும் ரொம்பக் குடுத்து வச்சவதான்!'' என்றாள் ஷோபா.

ரமேஷ் சிரித்துக் கொண்டான்.

அனைவரும் சென்ற பின் அத்தனை வேலைகளையும் முடித்தான். ஷோபா கொண்டு போகும் சாப்பாட்டைத் தயார் பண்ணினான். வீட்டைத் துடைத்தான். ஷோபாவுக்கு இரவு டிபனுக்கு ரெடி பண்ணினான்.

சாப்பாடு அத்தனை சுவையாக இருந்தது. இரண்டு நாளாக வந்து சமைத்துவிட்டுப் போனான். மாலையில் வருணையும் பார்த்துக் கொண்டான். அவனுக்குச் சரி சமமாக விளையாடி னான்.

நிருபா இதையெல்லாம் கவனித்தாள்.

ரமேசிடம், ''ஏ.. ரமேஷ், வருணைப் பார்க்கும்போது நீ என்னைத் தப்பாக நினைப்பாயே..'' என்றாள் சின்னக் குரலில்.

ரமேஷ் அவளைப் பார்த்துவிட்டு, ''நான் அப்படி நினைக் கலைக்கா.. ஏன் தப்பா நினைக்கணும். பெண்களுக்கெல்லாம் அவர்கள் சம்மதத்துடனா.. எல்லாம் நடக்குது. பிடிக்காமலும், கட்டாயத்தின் பேரிலும் நடக்குதுதானே... இப்போ உதாரணத்துக்கே எடுத்துக்கோங்க.. ரோட்டில் போகும் போது ஆக்சிடெண்ட் நடக்குது. அது நாம் விரும்பியா நடக்குது. இல்லைதானே.. யாரும் எனக்கு இன்று ஆக்ஸிடெண்ட் ஆகணும் என்று நினைத்துக் கொண்டு செல்வதில்லை. எதிர்பாராமல் நடப்பதுதானே.. அதில் உயிர் போவதுமுண்டு.. கை, கால் போவதுமுண்டு.. அதுபோலத்தான் இதுவும்.. இதை ஏன் தப்பா எடுத்துக் கொள்ளணும். விபத்து என்று எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே!'' என்றான்.

இவர்கள் பேசியதை அனைவரும் வீட்டில் கேட்டனர். ஆனால் இதை யாரும் கேட்டுக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

திவாகர் டிடெக்டிவ் ஏஜென்சியிடம் இருந்து ஃபோன் வர, உடனே கிளம்பி மும்பை போனான்.

ஏர்போர்ட்டுக்கு அவன் ஃபிரண்ட்டோட கார் வந்திருந்தது. அவன் அதில் ஏறியதும் கார் கிளம்பியது. ரொம்ப ட்ராபிக் இருந்தது. ஸ்கூல் விட்டுக் குழந்தைகள் வந்து கொண்டிருந்தன.

''மெதுவா போப்பா.. ஸ்கூல் விட்டுக் குழந்தைகள் வருது.''



டிரைவரும் கொஞ்சம் மெதுவாகத்தான் போனான். அப்படியிருந்தும் ஒரு குழந்தை மீது கார் மோதி விட்டது. லேசாகத்தான். இருந்தாலும் கீழே விழுந்து தலையில் அடிபட்டு இரத்தம் வழிந்தது.

டிரைவர் நடுங்கி விட்டான். திவாகர் வண்டியை நிறுத்து என்று டிரைவரிடம் சொல்லி காரை விட்டு அவசரமாக இறங்கினான். கீழே கிடந்த குழந்தையைத் தூக்கி காரின் பின் சீட்டில் உட்கார்ந்து கொண்டு, ''வேகமாக ஒரு பெரிய ஹாஸ்பிட்டல் போ,'' என்றான்.

அதற்குள் யாருடனோ ஃபோனில் பேசினான். இவன் காரை விட்டு இறங்குமுன் ஸ்ட்ரெச்சரோடு ரெடியா இருந்தனர்.

அதற்குள் இரத்தம் திவாகர் சட்டையை நனைத்திருந்தது.

திவாகர் எல்லாக் கடவுளையும் வேண்டினான். நல்லா ஆகிவிடணும் என்று.

சின்னக் குழந்தைக்கு ஏதாவது ஒன்று ஆனா.. கடவுளே.. என்று கண்களை இறுக மூடிக் கொண்டான்.

டாக்டர்கள் இரத்தத்தைத் துடைத்துக் கட்டுப் போட்டனர். தலையில் ஊசி போட்டு ட்ரிப்ஸ் ஏற்றினர்.

டாக்டர் திவாகரிடம் வந்து, ''வேறு ஒன்றும் பலமான அடியில்லை. தலையில் மட்டுந்தான் அடிபட்டிருக்குது.. எதுக்கும் ஒரு ஸ்கேன் பண்ணி விடுவோம்,'' என்றார்.

''சரிங்க டாக்டர்,'' என்றான்.

அதற்குள் திவாகர் ஃபிரண்ட் வந்துவிட்டான்.

''என்னடா எப்படி ஆச்சு? இது யார் குழந்தை? இன்னேரம் வரை காணாமல் எப்படி தேடுகிறார்களோ.. அவர்கள் வீட்டுக்குத் தகவல் குடுத்துட்டியா?'' என்றான்.

"இன்னும் இல்லை. குழந்தை ஐ.டி. கார்டில் ஃபோன் நம்பர் இருக்கு. நான் ஃபோன் பண்ணுகிறேன்," என்றான்.

'எப்படி நடந்தது என்பதை திவாகர் சொன்னான். "டிரைவர் மேல் தப்பில்லை. இந்தக் குழந்தைதான் திடீரென வந்து விட்டது. முடிந்தவரை பிரேக் போட்டும் விபத்தைத் தவிர்க்க முடியவில்லை," என்றான்.

திவாகர் ஃபிரண்ட் டிரைவரைத் திட்டினான்.

"டேய் திவா, குழந்தையோட யூனிபார்ம் பார்த்தால் பெரிய இடத்துப் பிள்ளை போல் இருக்கு. இது அவ்வளவு பெரிய ஸ்கூல். எனக்கே பயமா இருக்கு. பிரச்சனை எதுவும் வராமல் இருக்கணுமே.." என்றான் கவலையுடன்.

"சரிடா. என்ன செய்வது? நடந்தது நடந்து விட்டது சதீஸ். குழந்தையையும் நாம் தப்பு சொல்ல முடியாது. நாம் தான் கவனமாயிருந்திருக்கணும். நான் அவர்கள் வீட்டிற்குப் போன் பண்ணுகிறேன்," என்று ஐ.டி.யில் இருந்த நம்பருக்குப் போட்டான்.

ரிங் போன உடனே எடுத்தனர்.

அந்தப் பக்கம், 'ஹலோ சர்மா ஹியர்,' என்று குரல் இந்தியில்.

திவாகருக்கு ஒரு சிங்கத்தின் குரல் போல் இருந்தது. "ஹலோ சார், நான் திவாகர் பேசுறேன்.. உங்க வீட்டுப் பையன் என் காரில் விழுந்து விட்டான்.."

அந்தப் பக்கம் பதறியது தெரிந்தது.

"பயப்படாதீங்க சார்.. லேசான காயம்தான். நீங்க உடனே வாங்க," என்றான் இவனும் இந்தியில் - ஹாஸ்பிட்டல் பேரைச் சொல்லி.



## 41

அடுத்த அரை மணி நேரத்தில் அனைவரும் அங்கு வந்தனர். வேகமாக நிருபா ஓடி வந்தாள். பையனைப் பார்த்ததுமே கத்திக் கதறி விட்டாள். சர்மா குடும்பமே ஆச்சரியப்படும் அளவிற்கு.

திவாகர் அவளைப் பார்த்ததுமே ஆடிவிட்டான். இ..வ..ள்.. நி..ரு..பா.. இல்லே.. இதுவரை ஆகாயத்தில் எங்கோ பறந்த உயிர் மீண்டும் அவனிடத்தில் வந்தது போல் உணர்ந்தான். மீண்டும் பிறந்து உயிர்த்தெழுந்ததுபோல் புத்துணர்ச்சி பெற்றான்.

என் உயிர் என்னை விட்டுப் போகவில்லை. உயிருடன்தான் இருக்கிறாள். இறந்து விட்டாள் என்று இதுவரை எப்படித் துடித்தேன். என் இதயம் முழுவதும் இரத்தம் கசிந்ததே..! கடவுளே..! உனக்கு நன்றி. என் மனைவியை என் கண்ணில் காட்டியதற்கு..

இவள் மகனே.. என்றால் இது.. என்.. கு.. ழ..ந்.. தை..யா.. அவனால் அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. சுவரைப் பிடித்துக் கொண்டான்.

என் மகனே.. என் தங்கமே.. அப்பாவாடா.. இப்படிப் பண்ணினேனே. என். கண்ணே.. இனி என் உயிர் வைத்துக் காப்பேன்டா.. என் செல்வமே. ஐயோ.. இந்த நிமிடத்தில் என் மகன் என்று தெரிந்தும் முதலில் துடித்ததை விட இப்படித் துடிக்குதே மனசு. இவனைப் பெத்தவளுக்கு எப்படியிருக்கும் என்று உருகினான்.

சீமா, ஷோபா, சர்மா எல்லோரும் அழுது விட்டனர்.

டாக்டர், சர்மாவிடம், "சார். நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. முதலில் இவர்களைச் சமாதானப் படுத்துங்கள்," என்றார்.

பிறகு திவாகரைக் கை நீட்டி, ''இவர்தான் உடனே இங்கு வந்து சேர்த்தார். அதனால்தான் இரத்தம் அதிகம் போவதைத் தடுக்க முடிந்தது,'' என்றார்.

எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். அவன் சட்டையெல்லாம் இரத்தம். நிருபா அவனைப் பார்த்ததுமே.. மகனைப் பார்த்த அதிர்ச்சியை விட பல லட்சம்.. ஏன் ஆயிரம்.. கோடி அதிர்ச்சியடைந்தாள்.. ஈரேழு உலகமும் தன் தலையில் ஒருங்கே விழுந்தது போல் துடித்துப் போனாள்.

அவனைப் பார்த்ததுமே ஆத்திரம், கோபம் ஏன்... வெறி எல்லாம் சேர்ந்து வேகமாக ஓடி அவன் சட்டையை இரண்டு கையாலும் கொத்தாகப் பிடித்தாள்.

''அட கொலைகாரப் பாவி.. நீதானா.. அது? என் வாழ்க்கையை வீணாக்கியது மட்டுமல்லாமல், என பிள்ளையையும் கொல்லப் பார்த்தாயா.. நீ தெரியாமல் மோதியிருக்க மாட்டாய்.. வேண்டும் என்றேதான் மோதியிருப்பாய்.. எனக்குத் தானே தெரியும்.. உன்னைப் பறறி..'' என்று அவன் நெஞ்சில் ஓங்கி ஓங்கிக் குத்தினாள்.

திவாகர் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டு, அசையாமல் நின்றான். அவள் கதறியதை அவனால் தாங்க முடியவில்லை. கைகளால் அவளை அணைத்தான். அவள் அப்படியே அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டு அழுதாள்.

சிறிது நேரத்தில் அவனின் அணைப்பில் இருப்பதை உணர்ந்து வேகமாகப் பிடித்துத் தள்ளிவிட்டாள்.

சர்மா குடும்பம், சதீஸ் அத்தனை பேரும் பிரமித்து நின்றனர். என்ன நடக்குது என்று தெரியாமல்.. இவள் அதிர்ச்சியில் இப்படி நடந்து கொள்கிறாள் என்று நினைத்துப் பேசாமல் இருந்தனர்.

நிருபாவைப் பிடித்து இழுத்தனர். ''நிருபா! என்ன இது.. நடந்தது நடந்து விட்டது. பேசாமல் இரு. இது என்ன பொது



இடத்தில்.. கொஞ்சங்கூட நாகரிகம் இல்லாமல்.. இது உனக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கும்.. அதுக்காக இப்படியா?'' என்றார் சர்மா.

''அப்பா..'' என்று அவர் தோளில் சாய்ந்து அழுதாள்.

''முதலில் அவனை இங்கிருந்து போகச் சொல்லுங்கள்,'' என்றாள் கோபமாக.

''அவர்தான் நம் குழந்தையை ஹாஸ்பிடல்ல சேர்த்தவர். நன்றி சொல்லவில்லையென்றாலும், நாம் அவமானப்படுத்தக் கூடாது. தப்புத்தான் அவர் கார் மோதியது. என்ன நடந்தது என்று நாம் விசாரிக்கவேயில்லை,'' என்று அவன் முகத்தைப் பார்த்தார்.

அவன் அவர் பார்ப்பதைக் குறிப்பறிந்து நடந்ததைச் சொன்னான்.

''சரிங்க சார்.. நீங்க கிளம்புங்க.. இனி நாங்க பார்த்துக் கிறோம்,'' என்றார்.

''இல்ல சார். நான் இங்கு இருந்து பார்த்துக்கிறேன்.. நீங்க கிளம்புங்க,'' என்றான்.

சர்மா திகைப்பின் எல்லைக்கே போனார்.

''என்ன சார் இது.. உங்களை நாங்க தப்பா எடுத்துக்கலை. நீங்க இருந்துதான் பார்க்கணும் என்றில்லை. இதுவரை பார்த்ததுக்கு ரொம்ப நன்றி சார்!'' என்றார்.

''நன்றியை முதலில் நான்தான் சார் உங்களுக்குச் சொல்லணும். நீங்க கிளம்புங்க.. நான் இங்கு இருக்கேன்..''

சர்மாவுக்குக் கோபம் வந்தது. ''என்ன சார் இது, எங்கள் வீட்டுப் பிள்ளையை எங்களுக்குப் பார்த்துக்கத் தெரியாதா..? நீங்கள்தான் இத்தனை வருடமா பார்த்துக் கொண்டீர்களா?'' என்றார் கோபமாக.

''அதைத்தான் சார் நானும் சொல்கிறேன். இத்தனை வருடம் பார்த்துக்கு ரொம்ப நன்றி.. இனி நான் பார்த்துக் கொள்கிறேன்..''

சதீஸ் திவாகர் கையைப் பிடித்து இழுத்தான். ''திவாகர்! என்ன இது... நிதானத்தில்தான் இருக்கியா...? என்ன பேசுறேன்னு புரிஞ்சுதான் பேசுறியா..? இந்த அளவுக்கு உன்னைச் சும்மா விடுறாங்க என்று பேசாமல் வா.. போலீஸ் என்று போனால் என்னாகும் என்று நினைத்துப் பார்,'' என்றான்.

''நான் நிதானத்தோடுதான் பேசுறேன் சதீஸ். இனி இவனை நான் பார்த்துக் கொள்வேன்..''

சர்மாவின் கோபம் எல்லை மீறியது. ''நீ யார்.. இதைச் சொல்ல. எங்க வீட்டுக் குழந்தை இவன். இவனை நீ பார்த்துக் கொள்ளணும் என்ற அவசியமில்லை. நீங்க கிளம்புங்க முதலில்.''

''நான் யார்.. என்று நிருபாவைக் கேளுங்கள். பதில் சொல்வாள்,'' என்றான்.

நிருபா அவனை அறைய வந்தாள். அவள் கையை இலகுவாகப் பிடித்து ஒதுக்கி விட்டு, ''நிருபா! என் மேல் கோபம் இருக்கும்தான். நான் இல்லையென்று சொல்லவில்லை. உன்னைக் காணவில்லையென்றதும் நான் எப்படித் துடித்தேன் தெரியுமா? நீ செய்ததுக்கு நான்தான் உன்னை அறைந்திருக்கணும். இப்போ நம் பிரச்சனையைப் பத்தி பேசும் நேரமில்லை. பிறகு பேசிக் கொள்ளலாம்.. இப்போ இவர்களுக்குப் பதில் சொல்,'' என்றான்.

''என்னனு சொல்லட்டும். நீ ஒரு பொம்பளைப் பொறுக்கி என்றா..? நீ யார் என் பிள்ளையைச் சொந்தம் கொண்டாட..? உனக்கு என்ன உரிமை இருக்கு..? முதலில் நீ வெளியே போ.. என்ன நாடகம் ஆடுகிறாயா..? இனி மேலும் ஏமாற நான் என்ன பழைய நிருபா என்றா நினைத்தாய்.. என்னிடம் வாலாட்ட.. என்னவெல்லாம் செய்து விட்டு இப்போ வந்து உரிமையைப் பற்றி பேசுகிறாயா?''



''இப்போ நான் யார்... ? அதைச் சொல் முதலில். பிறகு என் மகனைப் பற்றிப் பேசலாம்.''

''நானே.. உனக்குச் சொந்த மில்லாதபோது என் மகன் மட்டும் எப்படி உனக்குச் சொந்தமாவான்..? மரியாதையாக இங்கிருந்து போ..'' என்றாள்.

''எனக்கும் அது தெரியுமடி.. நீ என்ன சட்டம் பேசுறே.. எங்கே சொல், இவன் என் மகன் இல்லையென்று..''

''இல்லை யென்றால்...''

''அறைஞ்சேன்னா பல்லு அத்தனையும் கொட்டி விடும்டி.. என்ன பேசுறேனு தெரிந்துதான் பேசறியா..? என்ன தெரியாமல்தான் இத்தனை நேரம் சண்டை போடுறியா? என்னால் டெஸ்டில் நிரூபிக்க முடியாதா?''

''நீ எதை வேணா நிரூபி. இப்ப இங்கிருந்து போய்விடு. என் பிள்ளை உன் முகத்தில் விழிக்கக் கூடாது. இல்லை, உன்னைக் கொலையே பண்ணி விடுவேன்!'' என்று அவன் கழுத்தைப் பிடித்தாள்.

அவன் தணிந்த குரலில், ''இங்க பாரு நிருபா. நான் செய்தது தப்புத்தான். என்னை மன்னித்து விடு. நடந்ததை மறந்து விடுவோம்.. இனி நடப்பதைப் பற்றி பேசுவோம்,'' என்றான்.

''டேய், உன்கூட சண்டைபோட எனக்குத் தெம்பில்லை இப்போ... நடந்ததை மறந்து விடுவோம் என்கிறே.. சரி. நான் மறந்து விடுகிறேன். இப்போ இடத்தைக் காலி பண்றியா.. இப்படியெல்லாம் பேசினால் நான் இளகிடுவேன் என்ற எண்ணம்தானே.. நீ போ..'' என்றாள் அலட்சியமாக.

''நிருபா! இதற்கு நீ வருத்தப்படப் போறே.. நான் என் பிள்ளை என்கிறேன்.. நீ இல்லை என்கிறே.. இதோ இவர்கள் இருக்கிறார்கள்.. இந்த ஹாஸ்பிட்டலில் நான் நிரூபிக்கிறேன்..

என் மகன்தான் என்று ரிசல்ட் வந்தால் என் மகனை எனக்குக் கொடுத்து விடுவாயா?'' என்றான் அவனும் கோபமாக.

''இங்கே பாரு. உன்னை விட்டு ஒழியணும் என்றுதான் இத்தனை வருடம் நான் உன் கண்ணில் படாமல் இருந்தேன். இனியும் அப்படியே இருந்து விட்டுப் போகிறேன்.. என்னை விட்டுவிடு,'' என்றாள் குரல் தழுதழுக்க..

''உன்னை யார் கூப்பிட்டது. இல்லை நான் கூப்பிட்டதும் வந்து விடுவியா? என் பிள்ளை எனக்கு வேணும்.. அதுக்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்று உனக்கே தெரியும்..''

''ஏ.. ஊரில் ஒரு அப்பனும் ஏமாறலையா.. இல்லை, அவனுக்குத்தான் பொண்ணுகளே.. இல்லையா..? இத்தனை வருடம் என்னமோ ... எனக்காகக் காத்திருந்த மாதிரி பேசுறே.. உனக்கு எவ்வளவு பணம் வேணும்.. ஏன்னா பணத்துக்காக நீ என்ன வேணாலும் செய்வியே.. துரோகி..'' என்று அவள் சொல்லி வாய் மூடு முன் அறைந்தான்.

''என்னடி வாய் ரொம்ப நீளுது.. நீ சொல்ற மாதிரி எல்லாமே பண்ணினேன் தான். இப்பவும் அப்படித்தான் பண்றேன்.. அதைப் பற்றி உனக்கென்ன, என் பிள்ளை எனக்கு வேண்டும்..''

''நான் போலீசுக்குப் போவேன்,'' என்றாள்.

''போ.. ஏன்.. உனக்குத்தான் எல்லாம் தெரியுமா? நானும் சொல்றேன். எனக்குப் பிறந்த பிள்ளையை என் கண்ணில் இத்தனை வருடம் காட்டாமல் மறைத்து வைத்திருந்தாள்.. இப்போ தான் கண்டுபிடித்தேன் என் மகன் இருக்கும் இடத்தை என் மகனுக்கு ஆபத்து இவள் மூலமா.. அதனால் என் குழந்தையை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நானும் வாதாடுவேன்,'' என்றான் ஒற்றைப் புருவத்தை மேலேற்றி.



நிருபா பேசுமுன் சர்மா இடையில் புகுந்தார். ''இங்க பாரு நிருபா.. இவர் யார்? இங்கு என்ன நடக்குது என்று எங்களுக்கும் சொல்லிவிட்டு சண்டை போடுங்கள்,'' என்றார்.

''இவன் யாருன்னே.. எனக்குத் தெரியாதுப்பா.''

''தெரியாமலா... இத்தனை நேரம் சண்டை போட்டாய்..?''

அவள் எதுவும் பேசவில்லை.

## 42



''ஏம்மா, தெரியாதவனா வந்து இவன் என் மகன் என்பான்? இப்பவே சொல். இவனை போலீஸ் லாக்கப்பில் வைத்து காலைக் கையை உடைத்து விடுகிறேன்,'' என்றார்.

''முதலில் அதைச் செய்யுங்கப்பா..'' என்று அந்தப் பக்கம் சென்று விட்டாள்.

சதீசும், ''வாடா திவாகர், இப்ப வீட்டுக்கு. நீ குளித்து விட்டு டிரஸ் மாற்றிக் கொண்டு காலையில் வரலாம்,'' என்றான்.

திவாகர் சரியென்று சதீசுடன் சென்று விட்டான்.

திவாகருக்கு டிடெக்டிவ் ஏஜென்சியில் இருந்து ஃபோன் வந்தது. உடனே வாங்க என்று.

திவாகர் காலையில் எழுந்து அவன் வேலைகளை முடித்துக் கொண்டு டிடெக்டிவ் ஏஜென்சியைப் பார்க்கப் போனான்.

அவர்கள் சொன்ன விபரத்தைக் கேட்டுக் கொண்டான். அவர்கள் லேடி என்றதும்.. ''நினைத்தேன்,'' என்றான்.

''அவர்கள் போட்டோ.. எதுவும் இருக்கா..?''

''இதோ...'' என்று அவர்கள் போட்டோ, அட்ரஸ் எல்லாம் கொடுத்தார்கள்.

போட்டோவை வாங்கிப் பார்த்தவன் அதிர்ந்தான். 'நி.. ரு.. பா.... வாடி என் பொண்டாட்டி.. நீதான் இந்த வேலை பண்ணினியா?' கோபப்படுவதற்குப் பதில் மனம் சந்தோசப் பட்டது. எத்தனை அருமையாக வடிவமைத்திருந்தாள்...

போட்டோவை பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு, ''சரி. நான் வர்றேன் சார்,'' என்று செக்கில் கையெழுத்துப் போட்டுக் குடுத்துவிட்டுச் சென்றான்.

நீண்ட வருடங்களுக்குப் பிறகு அவன் மனம் சலனமே இல்லாமல் அமைதியாக இருந்தது.

உயிருடன் இருக்க மாட்டாள் என்று நினைத்தவள் இன்று என் குழந்தையோடு.. பகவானே..! உனக்குக் கோடி நன்றிகள்..

சர்மாவுக்கு ஃபோன் பண்ணினான். உங்களுடன் தனியாகப் பேச வேண்டும் என்று. அவரும் சரி என்று அவனை வரச் சொன்னார்.

மாலைதான் ஹாஸ்பிடல் வர முடிந்தது. நிருபாதான் இருந்தாள்.

''என்னடி சொன்னார் டாக்டர்..? இப்போ எப்படி இருக்கு?'' என்றான்.

''எப்படி இருந்தா உனக்கென்னடா... கொலைகாரப் பயலே.. ஒரு நல்லவன் கொண்டு வந்து சேர்ந்திருந்தா இன்னேரம் சரியாகி இருக்கும். ஒரு கெட்டவன் சேர்த்ததால் இன்னும் சரியாகவில்லை!'' என்றாள் துடுக்காக.

நமட்டுச் சிரிப்புடன், ''நீ சொல்றியா.. இல்லை டாக்டர் சொன்னாரா.. இன்னும் அப்படியே.. தான் பேசுவே போலிருக்க. ம்.. ம்.. பேசு. பேசு. யாரைப் பேசுறே.. உன் புருசனைத்தானே.. போடா.. வாடா.. நீ பேச முடியும். நீ பேசுடி செல்லம்.. நான் ஒவ்வொருத்தன் மாதிரி கோபித்துக் கொள்ள மாட்டேன்.. நான்



டி போட்டுப் பேசும்போது நீ பேசக் கூடாதா..? என்னடி மாடல் மங்கை..''

அவளுக்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

''உன்னை இங்கு யார்டா வரச் சொன்னது? நீ என்ன எனக்குத் தாலியா கட்டியிருக்கே.. நீ எனக்குப் புருசன்.. இதைச் சொல்ல உனக்கு வெக்கமாயில்லை.. உனக்கெங்கே இருக்கப் போகுது. நீதான் மானங்கெட்டவன் ஆச்சே... புருசனாம்.. புருசன்..! வேலைக்கார..''

''ஏண்டி நிறுத்திட்டே... நாயேன்னு தான்னே சொல்ல வந்தே.. சொல்லி முடிக்க வேண்டியதுதானே... ஏன் நிறுத்திட்டே... என்ன இருந்தாலும் புருசனைச் சொல்லக் கூடாது என்று நினைக் கிறேயில்லே..'' என்றான் ஏளனமாக.

''நான் உன் வீட்டு வேலைக்காரன்தான்... நான் இல்லை யென்று ஒருபோதும் மறுத்ததில்லை. அந்த வேலைக்காரன் கன்னத்தில்தானே முத்தமிட்டே... என் மார்பில் சாய்ந்துதானே.. மயங்கிப் போனே.. என் கம்பீரத்தில்.. ஆண்மையில் மயங்கித் தானே.. என் கூடச் சுத்தினே... என்னை லவ் பண்றேன் என்றே.. ஏன் இப்ப கசக்குதா?'' என்றான் அவனும் இகழ்ச்சியாக.

''இதப் பார்டா... நான் உன்னை விட்டு வந்தாச்சு. நீயும் என்னை விரட்டி விட்டுட்டே... அது முடிந்து விட்டது. இனி நீ என் பிரச்சனைக்கு வராதே.. இது உன் பிரச்சனையில்லை.. நான்.. அந்த மாதிரி நடந்துதான் இந்தப் பிள்ளை எனக்.. கிடைக்...''

கன்னம் சுரீர் என்று எரிந்ததும்தான் அவன் அறைந்திருக்கான் என்று தெரிந்தது.

''நான் பிள்ளையைத் தரமாட்டேன் என்று சொல். அது ஒரு விதத்தில் நியாயம். அதுக்காக என்னை மானங்கெட்டவன் என்று சொல்லிவிட்டு.. நீ ஏண்டி... இப்படிக் கேவலமாகப் பேசுறே.. நீ

இப்படியெல்லாம் பேசினா. அதை நான் நம்பி விடுவேனா..? என்னை என்னன்னு நினைச்சுருக்கே..''

''உன்னை ஒரு கையாலாகதவன்... என்று நினைச்சிருக்கேன். புருசன்.. புருசன் என்கிறே.. ஒரு புருசன் தான் தன் பெண்டாட்டியை லாட்ஜுக்கும்.. கண்ட.. கண்ட வீடுகளுக்கும் நீ வா என்பானா.. இந்த வார்த்தையைச் சொல்ல உனக்கே அசிங்கமாயில்லே.. கேட்கிறே எனக்கே அருவருப்பா இருக்கு.. எதுக்குடா என்னை அடிக்கிறே.. பழைய நினைப்பிலா..? இப்போ நான் நினைத்தால்.. உன்னைக் கை வேறு, கால் வேறா உடைத்து தூக்கிப் போட்டுடுவேன்... இனி உன் விரல் நுனி கூட என் மீது படக் கூடாது.. உன் கை பட்டதும் எனக்கு அந்த மாதிரி போய் வந்த மாதிரி இருக்கு.. தூ...'' என்று துப்பினாள்.

திவாகர் ஒரு நிமிடம் அதிர்ந்ததென்னவோ உண்மை.

''ஏன்டா, நான் எப்படி இருந்தா உனக்கென்ன? நான் தான் பணத்துக்காக எதையும் செய்கிறவளாச்சே.. ஏன் இந்த ஊரில் பணக்காரங்களே இல்லையா.. இல்லை ஆம்பளைகள் தான் இல்லையா.. என்னமோ தாலி கட்டிய பொண்டாட்டி எவன்கிட்டேயோ போன மாதிரி ரோசம் பொத்துக்கிட்டு வருது.. நீ யார்டா.. என்னை அதிகாரம் பண்ண... என் அப்பா வாங்கிய பணத்தை வட்டியும் முதலுமா இந்த நிமிசமே திருப்பித் தர்றேன்.. நீ என்னைப் பழைய மாதிரி திருப்பித் தருவியா..? உன் பணத்தால் அதை அளிக்க முடியுமா? இந்தப் பிள்ளை உனக்குப் பிறக்கலே.. நீ போகலாம்..'' என்றாள் வாசலைப் பார்த்துக் கையை நீட்டி.

''நிருபா..! நீ எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாய் என்று உன் பேச்சில் தெரியுது. நீ வயிற்றுப் பிள்ளையோடு இங்கு வந்து எப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருப்பாய் என்பதும் தெரியுது. ஆனால் நீ எந்த அளவுக்கு வேதனைப்பட்டியோ.. அதே அளவு குண்டுமணி கூடக் குறையாமல் நானும் வேதனையை அனுபவித்தேன்டா.. உன்னைக் காணவில்லை என்றதும் நான்..



என் இதயம் இதுவரை இயக்கத்தை நிறுத்தாததுதான் அதிசயம்!'' என்றான் வேதனையுடன்.

நிருபா கடகட வெனச் சிரித்தாள். இதுவரை அவன் கேட்டறியாத சிரிப்பு.

''உண்மையிலேயே.. நீ என்னை நினைத்துக் கவலைப் பட்டிருந்தால்தானே.. உன் இதயம் நிற்க. நான் காணவில்லை யென்றதும் சந்தோசம்தானே.. பட்டுருப்பே... என்னமோ உனக்கு ஒண்ணுமே தெரியாத மாதிரி சீன் விடுறே.. எல்லாம் சேர்ந்துதானே நாடகம் போட்டீங்க.. ஏ.. அவ என்ன ஆனா.. உன் மாமா பொண்ணு... உன் வண்டவாளம் தெரிந்து ஓடிப் போய்ட்டாளா.. உனக்கு இதயம் இருக்கா.. அது நிக்க?'' என்றாள் வேதனையின் விளிம்பில் நின்று கொண்டு.

கண்களை இறுக மூடிக் கொண்டான். அவள் வார்த்தை களைச் சாட்டையால் விளாசினாள்.

''சரிடா. நான் நேரடியாகவே விசயத்துக்கு வர்றேன். நீ என்ன காரணத்துக்காக இப்ப வந்து இப்படி என் பிள்ளை என்று உரிமை கொண்டாடுறே.. எனக்குச் சந்தேகமா இருக்கு...'' என்றாள்.

'என் பிள்ளை என்பதால்..''

''உ..ன்.. பிள்..ளை என்பதாலா..? ஏன் உனக்கு இனி பிறக்கவே பிறக்காதா..? இல்லை இது மட்டுந்தான் உன் பிள்ளையா..? இது மாதிரி எத்தனை இருக்கும்? உண்மையான காரணத்தைச் சொல்லுடா.. இனியும் உன் பேச்சை நம்புற முட்டாளில்லை..''

அவன் சிரித்தான்.

''ஏன்டா நீ என்ன லூசா.. என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கு.. நான் என்ன ஜோக்கா சொன்னேன். நீ ஆம்பளையா, இல்லையா.. என்று கேட்டது, உனக்கு இது எல்லாம் சாதாரண விஷயமாப்

பார்ச்சு.. புதுப்பணக்காரன்தானே... பணத்தைப் புதுசா பார்த்தா இப்படித்தான் பொறுக்கச் சொல்லும்.."

"இது மாதிரி பேசித்தானே.. என்ன நடந்தது என்று உனக்குத் தெரியும் என்பதை நீ மறந்து விட்டாய் என்று நினைக்கிறேன்.."

அவள் உடல் விரைத்தது. அப்படியே உறைந்து நின்றாள்.

"நீதான்டா என் பிள்ளை மீது காரை விட்டு வேணும்னே.. கொல்லப் பார்த்தே.. இப்ப ஏன் பிள்ளைப் பாசம் பொங்குது.. பொறுக்கி!" என்றாள்.

"இங்க பாரு பைத்தியமாட்டம் பேசினதையே.. உளறிக்கிட்டு இருக்காதே... உன் பார்வையில் நான் கெட்டவனாக இருந்தாலும் ஒரு குழந்தையை கார் ஏத்திக் கொல்வேனா... அதோட இது என் பிள்ளைதான் என்று எனக்குத் தெரியுமா..? லூசு மாதிரி பேசாதே.. இதை யாராவது கேட்டால் உன்னை மென்டல் ஆஸ்பிடலுக்கு அனுப்பிவிடப் போறாங்க.. பிறகு அதுக்கும் நான்தான் காரணம் என்பே.." என்றான் சிரியாமல்.

"உனக்கா தெரியாது.. எல்லாம் தெரிந்து விசாரித்துத்தான் வந்திருப்பே.. உன்னோட திருட்டுத்தனமெல்லாம் எனக்கா தெரியாது.."

"உன்னிடம் பேசுவது வேஸ்ட் என்று தெரியும். இருந்தாலும் சொல்றேன். எனக்குத் தெரிந்திருந்தால் ஏன் இத்தனை வருடம் பேசாமல் இருந்திருக்கப் போறேன்...?"

நிருபா வெறுப்பின் உச்சியில் இருந்தாள். "உன் முகத்தைப் பார்க்க எனக்கு விருப்பமில்லை. என் முகத்தில் விழிக்காதீங்க!" என்றாள் எங்கோ பார்த்துக் கொண்டு.

திவாகருக்கும் ஆத்திரம் வந்தது. "சரிடி.. நான் இனி உன் முகத்தில் விழிக்கவில்லை. இதுவே நான் உன்னைப் பார்க்கும் கடைசித் தடவையாக இருக்கட்டும்..." என்று விருட்டென்று வெளியே போய்விட்டான்.



அவன் போனதும் நெஞ்சை அடைத்தது. இந்தப் பாவி காரிலேயா போய் விழணும். அன்று ஷோபா வரும்போது கூட்டி வரச் சொல்லியிருந்தார்கள். ஷோபாவுக்கு செமினார் இருந்ததால் லேட்டாகி விட்டது. மற்ற எல்லோரும் வெளியில் இருந்தனர். இந்த டிரைவராவது நேரமாகும் என்றால் முதலில் குழந்தையை வந்து கூட்டிப் போயிருக்கலாம். அதுவும் சிரமம்தான். திரும்பி வந்து மீண்டும் அங்கு போக ரொம்ப தூரம். இது தெரியாத வருண் காரைக் காண வில்லையென்றதும் வெளியில் வந்து பார்த்திருக்கிறான். அப்போதுதான் இது நடந்திருக்குது.

என்னமா வந்து பேசுறான்.. என் குழந்தை என்று.. என்னமோ கஷ்டப்பட்டு பெத்து பேர் வச்ச மாதிரி.. வயித்துப் பிள்ளையை விரட்டி விட்டவன்தானே.. இந்தக் குழந்தையை அழித்துவிடு என்று என்னமாய்ச் சொன்னான். அதைச் செய்யவில்லை யென்றதும் என்னமாய் அடித்துத் திட்டினான் பாவி.. இவன் நல்லா இருப்பானா? என்னமோ... சாதாரண புருஷன் பொண்டாட்டி மாதிரி வந்து பேசுறான்.. இனி வரட்டும். அவனுக்கு மண்டகப்படிதான்.. இனி இந்தப் பக்கம் எட்டிப் பார்ப்பான்...?

## 43



பார்த்ததும் எங்கே போனே.. இத்தனை வருடம் எங்கே இருந்தே.. எப்படிச் சாப்பிட்டே.. குழந்தையை எப்படி வளர்க்கிறே.. நீ நல்லாயிருக்கியா.. என்று ஒரு வார்த்தை.. என்னமோ இவன் பாதுகாப்பில் இருப்பது போல என்ன சரளமான பேச்சு. இங்கு எப்படி வந்தே.. என்ற துடிப்புக் கூட இல்லையே.. இதயம் இல்லாதவன், கல் நெஞ்சுக்காரன்.

அன்று இரவு நிருபாவை, "வீட்டுக்கு நீ வாம்மா. நான் போய்ப் பார்த்துக்கிறேன்." என்றாள் சீமா.

நிருபாவுக்கும் முக்கியமான வேலை இருந்தது. ''சரிம்மா, நீங்க சீக்கிரம் வந்துடுங்க... நான் வெளியே போக வேண்டி யிருக்குது,'' என்றாள்.

சீமா வரக் கொஞ்சம் லேட்டானதால் ஃபோன் பண்ணி சீமாவிடம், ''சீக்கிரம் வாங்க. தூங்கிட்டு இருக்கான். நான் நர்சைப் பார்த்துக் கொள்ளச் சொல்லியிருக்கேன்... எனக்கு நேரமாகி விட்டதால் கிளம்புகிறேன்.. நான் நேரா வீட்டுக்குப் போய் விடுகிறேன்,'' என்றாள்.

''சரி. நான் வந்து விடுகிறேன். நீ கிளம்பு,'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பியவள் வழியில் டிராப்பிக்கில் மாட்டிக் கொண்டாள்.

லேட்டாகி விட்டதால் சீமா அவசரமாக வந்தாள். அறையில் போய்ப் பார்த்ததுக்கு அந்த அறையில் வேறு ஒருத்தர் இருந்தார். கீழே வந்து ரிசப்சனில் கேட்டதுக்கு, டிஸ்சார்ஜ் பண்ணிக் கூட்டிப் போய்விட்டார்கள் என்றாள்.

''இல்லேம்மா... நாங்க கூட்டிப் போகலை. நல்லா பார்த்துச் சொல்லுங்க.. வேறு அறை எதுவும் மாற்றி இருக்கீங்களா... என்று பாருங்கள்,'' என்றாள்.

''இல்லே. இதோ பில் கட்டிவிட்டு போய்விட்டார்கள்,'' என்று சொல்லிவிட்டு வேறு வேலையைப் பார்த்தாள்.

சீமாவுக்குத் தலையெல்லாம் சுற்றியது. நிருபாதான் கூட்டிப் போய்விட்டாளா...? இருக்காதே. டிஸ்சார்ஜ் பண்ணிக் கூட்டி வருகிறேன் என்றுதானே சொல்லியிருப்பாள். நீங்கள் சீக்கிரம் வந்து பார்த்துக் கொள்ளுங்கள்.. என்று சொல்ல மாட்டாளே.. இப்போ என்ன செய்வது. நிருபாவிடம் ஃபோன் போட்டுக் கேட்கலாமா? அவள் ஏதோ முக்கியமான மீட்டிங் இருக்கு என்றுதானே போயிருக்காள்... இதைக் கேட்டு அவள் குழம்ப வேண்டாம் என்று சர்மாவுக்கு ஃபோன் போட்டு விசயத்தைச்



சொன்னாள். அவர் இதோ உடனே வருகிறேன் என்று ஃபோனை வைத்து விட்டார்.

யோசனையோடு காரில் வந்தார். இறங்கி வேகமாக உள்ளே போனார். எதிரிலேயே சீமா நின்றிருந்தாள்.

சீமாவைப் பார்த்து, ''என்ன நடந்தது?'' என்றார்.

அவள் சொன்னதைக் கேட்டு, ''வா, டாக்டரைப் பார்க்கலாம்,'' என்று டாக்டர் அறை நோக்கி நடந்தார்.

டாக்டர் அவர்களை வரவேற்றார்.

சர்மா, ''வருணை யார் டிஸ்சார்ஜ் பண்ணினாங்க?'' என்றார்.

''திவாகர் தான் டிஸ்சார்ஜ் பண்ணிக் கூட்டிப் போனார். ஏன், என்ன பிரச்சனை? உங்களுக்குத் தெரியாதா?'' என்றார்.

சர்மாவுக்குச் சங்கடமாக இருந்தது. ''இல்லே, திவாகர் வருவார்னு நா.. நினைக்கலே... இப்போ குழந்தை நல்ல ஆரோக்கியமாகத்தானே இருக்கிறான்.. ஒண்ணும் பிரச்சனை யில்லையே.. ஸ்கூல் அனுப்பலாமா?'' என்றார்.

''ஓ.. தாரளமாக ஸ்கூல் அனுப்பலாம். ஒன்றும் பிரச்சனை யில்லை.''

''ரொம்ப தேங்க்ஸ் டாக்டர்.. நாங்க வர்றோம்,'' என்று இருவரும் வெளியில் வந்தனர்.

சீமா பயந்து போய், ''ஏங்க.. யார் இந்த திவாகர்? நம் குழந்தையை ஏன் அவர் கூட்டிப் போகணும்...? எனக்கு ரொம்பப் பயமா இருக்கு..'' என்றாள் நடுங்கும் குரலில்.

அவர், ''அவன்தான் அப்பா என்கிறான். இவளும் அதை மறுக்கவில்லை.''

''இல்லை என்று மறுத்தாளே..''

''அது ஏதோ கோபத்தில் சொல்கிறாள்.. உண்மையில் இல்லையென்றால் அவள் சும்மா விடுவாளா... இல்லை நம்மிடம் உண்மையைச் சொல்லி அவனை நொறுக்கச் சொல்லியிருக்க மாட்டாளா...? இதுவரை அவன் அவ்வளவு பேசியதற்கு இவள் ஒன்றுமே நம்மிடம் சொல்லவில்லை. இவர்களுக்குள் ஏதோ இருக்கு. தெரியாதவன் வந்து என் குழந்தை என்றால் சும்மா இருப்பாளா.. அதோட அன்று அவன் முதன் முதலில் பார்த்து அவன் சட்டையைப் பிடித்து உலுக்கிவிட்டு அவன் மார்பிலேயே சாய்ந்து அழுதாளே.. அவன் கை அவளை அணைத்ததே.. உனக்கு ஞாபகம் இருக்கா..?'' என்றார்.

''ஏங்க அவள் கோபத்துல என்னமோ பண்ணினா.. நீங்க என்னன்னமோ பேசுறீங்க... முதலில் இப்ப குழந்தை எங்கே.. திவாகர் தான் கூட்டிப் போனானா... இவன் கேட்டதும் டிஸ்சார்ஜ் பண்ணி அனுப்பியிருக்காங்களே.. இது என்ன ஹாஸ்பிடல் நிர்வாகம். இப்படியா பண்ணுவாங்க.. இப்போ நிருபா கேட்டால் என்ன பதில் சொல்றது..? இது அவளுக்கும் தெரியாது போல் இருக்கு,'' என்றாள் கோபமாக.

''அவன்தான் சொல்லியிருக்கானே.. நான்தான் அப்பா என்று. அதோட அவன்தான் அட்மிட் பண்ணினான். அதான் டிஸ்சார்ஜ் பண்ணிக் கூட்டிப் போயிருக்கான். என்ன தைரியம் இருக்கணும் அவனுக்கு. நமக்கெல்லாம் தெரியாமல், இப்படி கூட்டிப் போக..''

உடனே அவன் ஃபிரண்ட் சதீசுக்கு போன் போட்டார்.

அவன், 'சர்மா சார், சென்னை சென்று விட்டான்.. இன்னேரம் பிளைட் கிளம்பியிருக்கும்,'' என்றான்.

இவருக்கு ஆத்திரம் வந்தது. ''முட்டாள்.. என்ன காரியம் பண்ணியிருக்கான். எங்களுக்குத் தெரியாமலேயே கூட்டிப் போயிருக்கான். இவன் என்ன நினைச்சுருக்கான்.. மனசிலே.. இவன் யார் இப்படிக் கூட்டிப் போக.. யாருக்கும் தெரியாமல். குழந்தையை இப்படிக் கூட்டிப் போவது என்பது சாதாரண



விஷயமா? இவனைச் சும்மா விடப் போவதில்லை!'' என்று போனிலேயே கத்தினார்.

''சார்.. சார்.. எனக்கு இதெல்லாம் தெரியாது,'' என்றான்.

''அவன் அட்ரஸ் சொல்லு,'' என்றார் கோபமாக.

வீட்டுக்கு நிருபா வந்து விட்டாள். இவர்களும் போய்ச் சேர்ந்தார்கள். சீமாவைப் பார்த்து, ''என்னம்மா.. நீ..ங்..க.. இங்கே..அங்கே ஹாஸ்பிடலில் யார் இருக்கா..?'' என்றாள் திகைத்து.

சீமா கண் கலங்க, நடந்த விசயத்தைச் சொன்னாள். அதைக் கேட்ட அவள், ''நோ.. நோ..'' என்று கத்தினாள்.

''எவ்வளவு திமிர் இருக்கணும். என் பிள்ளையை எனக்குத் தெரியாமல் கூட்டிப் போக.. நாம் போகாமல் எப்படி டிஸ்சார்ஜ் பண்ணலாம் அவங்க. நான் அங்கு இருந்தவரை எதுவுமே சொல்லலையே என்னிடம். எப்படி நடந்தது இது. ஐயோ நான் போகாமல் இருந்திருந்தால் இப்படி நடக்காதே... அவன் இருக்கவும் தானே.. நான் அங்கேயே இருந்தேன். அவன் இனி வர மாட்டேன் என்று சொல்லிவிட்டுப் போனானே... அதனால்தானே நான் அம்மாவை வரச் சொல்லிவிட்டு நான் போனேன்.. இப்படிப் பண்ணுவான் என்று தெரியாதே.. பண்ணுவான் அவன். எதையும் பண்ணுவான். தனக்குத் தேவையென்றால் எந்த நிலைக்கும் போவான். நினைத்ததை நடத்தியும் முடிப்பான். அவனைப் பற்றித் தெரியும் எனக்கு. தெரிந்தும் நான் போனது தப்புத்தான்,'' என்று அழுதாள்.

சீமாவும், சர்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''அப்பா! உடனே இவன் குழந்தையைக் கடத்திக்கிட்டுப் போய்விட்டான் என்று கம்ப்ளெயின்ட் பண்ணணும்!'' என்றாள்.

''பண்ணலாம்மா.. முதலில் என்ன நடக்குது. என்ன விசயம் என்றே எனக்குத் தெரியலே.. அவன் இவ்வளவு தைரியமா

குழந்தையைக் கூட்டிக் கொண்டு சென்னைக்குச் சென்றிருக்கான் என்றால் பக்காவா ஏதோ காரணம் இருக்கும். போலீஸ் கம்ப்ளெயின்ட் பண்ணுவது பெரிய விசயமில்லை. அவர்கள் கேட்பார்கள், அவன் யார்.. என்ன.. எப்படி என்று.. இதையெல்லாம் நீ யோசித்துப் பார்,'' என்றார்.

''அப்பா! எனக்குத் தெரியாது. என் குழந்தை எனக்கு வேண்டும்...''

''சரி, வாங்க. நாம் சென்னைக்கு மூவரும் செல்வோம். நேரில் சென்று பேசிக் குழந்தையை வாங்கிக் கொண்டு வருவோம். இல்லை, முடியாது என்றால் பிறகு பார்த்துக் கொள்ளலாம்,'' என்றார்.

''நா.. அவன் வீட்டுக்கு வரமாட்டேன்,'' என்றாள்.

சீமாவும் சர்மாவும் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டனர்.

''நீ வரவில்லையென்றால் நாங்க மட்டும் எப்படிப் போக முடியும்? எங்களுக்கு என்ன தெரியும்?'' என்றார்.

'குழந்தை வேண்டுமா வேணாமா..?'' என்றார்.

''வேணும்..''

''அப்போ கிளம்பு..'' என்றார்.

அப்பவே கிளம்பினர் சென்னைக்கு மூவரும். காலையில் சென்னையில் இருந்தனர்.

திவாகர் வீட்டில் வருண் இன்னும் தூங்கிக் கொண்டு இருந்தான்.

காலிங் பெல் சத்தம் கேட்டு மரகதம் வந்து கதவைத் திறந்தார்.

இவர்களைப் பார்த்ததும் யார் என்பது போல் பார்த்தார். பின்னால் நின்ற நிருபாவைப் பார்த்ததும் கண்கள் வியப்பால்



விரிய.. 'நி..ரு..பா.. நீயா.. நீ.. உயிருடன்தான் இருக்கியா...? நான் வேண்டிய தெய்வம் கைவிடவில்லை.. நல்லா இருக்கியாம்மா..?'' என்றார் கண்களில் நீர் வடிய.

''ம்...ம்..'' என்று தயக்கத்துடன் தலையாட்டினாள்.

''ஏம்மா இன்னும் நீ வெளியே நிக்கிறே... உன் வீடு இது.. உள்ளே வா..'' என்றார்.

''இவங்க..'' என்றார்.

''என் அப்பா, அம்மா..''

''வாங்க சார்... வாங்கம்மா.. நான் போய் திவாகரிடம் சொல்கிறேன்,'' என்று வேகமாக உள்ளே சென்றார்.

நிருபாவிற்குக் காலை உள்ளே எடுத்து வைக்க முடிய வில்லை. தன்மானம் தடுத்தது..

''அப்பா! நான் உள்ளே வரமாட்டேன்!'' என்றாள்.

அவர், ''நிருபா, நாம் எதற்கு வந்திருக்கிறோம் என்று நினைத்துப் பார். உன் கோபத்தையெல்லாம் மூட்டை கட்டி வை... இப்போ நமக்குக் குழந்தை தான் முக்கியம்!'' என்றார்.

பேசாமல் உள்ளே வந்தாள். உள்ளம் குமுறியது. பாவி.. மறுபடியும் இந்த வீட்டுக்கு வரும்படி வைத்து விட்டானே... நீ நல்லா இருப்பியாடா... என்று மனதினுள் சபித்தாள். அதற்குள் திவாகர் கீழே வந்து விட்டான்.

தங்களைப் பார்த்து அதிர்வான் என்று நினைத்தாள்.

இவர்களைப் பார்த்து அவன் அதிரவில்லை. எதிர் பார்த்தது போல்தான் என்பது போல் நடந்து கொண்டான்.

''வாங்க சார், வாங்கம்மா... வா நிருபா!'' என்றான் சாதாரணமாக.

இவள் வேகமாக ஓடி அவன் சட்டையைப் பிடித்தாள். "ஏன்டா எனக்குத் தெரியாமே என் குழந்தையை ஏன்டா தூக்கிட்டு வந்தே.. திருட்டு நாயே..!"

## 44



"உனக்கு எவ்வளவு கொழுப்பு இருக்கணும். குழந்தையைத் திருட..நீ யார்டா.. உனக்கு என்ன உரிமை யிருக்கு... என் குழந்தை என்று கொண்டாட.. குழந்தையை உயிருடன் வைத் திருக்காயா.. இல்லை கொன்று விட்டாயா..? கொலைகாரப் பாவி... உனக்குத்தான் அடுத்தவங்களை உயிரோடு கொல்வது என்றால் அல்வா சாப்பிடுவது போலத்தானே..!" என்றாள் ஆவேசமாக.

ஏதோ தூசு தட்டுவது போல் அவள் கையைத் தட்டி விட்டான்.

"உன் விரல் நுனி என் மேல் பட்டால் எனக்கு அருவருப்பா இருக்கு. என்னைத் தொடாதே என்றே.. இப்போ எதுக்குடி நீ என்னைத் தொடுறே.. எடுடி கையை.. ஏ.. எனக்கு மட்டும் அப்படி இருக்காதோ.. எப்பப்பார். சட்டையைப் பிடித்துக் கொண்டு அடிக்க வர்றே.. ஏ.. நான் கொடுத்ததெல்லாம் இவ்வளவு சீக்கிரம் மறந்து போச்சா.. என்னடி நினைச்சுக்கிட்டு இருக்கிறே மனசிலே.. நீ யார்.. நீ யார்.. என்று நூறு தடவை கேட்கிறே... நான் யார் என்று நிருபிக்கட்டுமா.. இந்த வாயால்தானே இந்த நிலைமையில் இருக்கே.. நீ என்னவோ ஒழுங்கு மாதிரியும் நான் என்னவோ காட்டுமிராண்டி போலவும் பேசுறே..!" என்றான் கர்ஜனையாக.

"நீ இப்படியெல்லாம் பேசி என் மனசைத் திசை திருப்பலாம் என்று நினைத்தாயா...? என் மகளைக் குடு.. நான் போய் விடுகிறேன்," என்றாள்.



"தர முடியாது.. என்ன செய்வே..? உன்னால் முடிந்ததைச் செய்து கொள்," என்றான் அவனும் கடுப்பாக.

"நானும் பொறுத்துப் போகிறேன் என்பதற்காக நீ இந்த ஆட்டம் ஆடாதே.. என்ன உரிமையிருக்கு.. என்கிறே.. ஏன் என் குழந்தை மீது உரிமை யில்லையா.. எத்தனை தடவை கெஞ்சினேன். ஹாஸ்பிடலில் உன்னிடம்.. எத்தனை அலட்சிய மாகப் பேசினே.. கொலைகாரா.. கொலைகாரா.. என்கிறே.. எத்தனை பேத்தடி நான் கொன்னேன். நீ பார்த்தே.. சொல்லுடி!" என்று பிடித்து உலுக்கினான்.

"உயிரைக் கொன்னாத்தானா.. கொலை.. அதைவிட மேலா.. என் மனசைக் கொல்லலை..?"

"மனசை நான் மட்டுந்தான் கொன்னேனா.. எங்கே சொல்லு பார்ப்போம்.. உன் மனசு என்றவுடன் பெரிசாப் போச்சோ.. அப்போ நான். ஏன்.. எனக்கு மனசு இல்லையா.. ஏழை என்றால் மனசு இருக்காதா.. இல்லை இருக்கக் கூடாதா..? இல்லாதவன் என்றால் எதை வேணாலும் பொறுத்துப் போவான் என்று.. என்ன பொறுத்துப் போவணும்.. இது உங்கள் பணக்கார அகராதியில் எழுதாத சட்டம்.. உன் மனசை நான் கொன்றேன் என்று இத்தனை துடிக்கிறியே.. என் மனசை எப்படி நெருப்பிட்டுக் கொளுத்தினே... உயிரோட என்னை. அப்போ என் மனம் எப்படி துடித்திருக்கும். நீ உன்னைப் பற்றி மட்டுந்தானே.. இதுவரை நினைத்துப் பேசுறே.. இதுவரை என்னைப் பற்றி.. என் மனதைப் பற்றி.. நீ நினைத்திருந்தால் இப்படிப் பேச மாட்டாய்.. ஏழைக்கு இதயம் கூட சொந்தம் கிடையாது இல்லையா? உன்னை எத்தனை நம்பினேன். என் உயிரா நினைத்தேன்.. நம்பிக்கைங் கிறது எவ்வளவு பெரிய விசயம் தெரியுமா..! உலகிலேயே சிறந்தது எது.. பெரியது எது.. என்றால் நம்பிக்கைதான். காலங்காலமாய் நம்பிக்கைதான் நம்மளை வாழ வைக்குது. நம்பிக்கையில்லாமல் நாடு இல்லை.. நகரம் இல்லை.. வீடு இல்லை... நம்பிக்கையின் பேரில் தான் ராஜாக்கள் உலகையே

ஆண்டார்கள்.. மந்திரிமேல், ஒற்றர்கள்மேல் என்று.. அந்த நம்பிக்கையையே உடைத்துத் தூள்.. தூள் ஆக்கினவள் நீ.."

"........."

"இப்ப வந்து பேசுறே. நீ யார்.. என்று.. கேட்டுப் பார் உன் மனச்சாட்சியை. நான் யார் என்று சொல்லும். என் வாழ்க்கையையே... திசை திருப்பிவிட்டு... என்னைப் பைத்தியமாக்கி.. என்னைத் தனியாகப் புலம்பவிட்டு நீ.. வந்து பேசுறே.. நீ யார்டா.. என்று. நீ சொன்ன ஒரு வார்த்தைதானே.. இப்போ நம் இரண்டு பேரோட வாழ்க்கையையும் அடியோட புரட்டிப் போட்டது. எல்லாமே. நீயாக முடிவெடுக்கிறே.. யாரைக் கேட்கிற நீ.. இதுவரை நான் கேட்கவில்லை ஒரு வார்த்தை உன்னிடம். நான் வரும்வரை இருக்காமல் ஏன் வீட்டை விட்டுப் போனாய்? என்று."

"உனக்கு நல்லதுதானே நான் போனது. எல்லாம் திட்டம் போட்டுத்தானே செய்தீங்க. இப்போ வந்து நடிக்கிறீங்க..!"

"சத்தியமா எனக்குத் தெரியாது நிருபா. ஆனால் என் அம்மாவாலதான் நீ வீட்டை விட்டுப் போனே என்று எனக்குத் தெரியும். நீயா போயிருக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும். ஏன்னா நீ எனக்கு மறைச்சு செய்யணும் என்று நீ நினைக்க மாட்டே.. முகத்துக்கு நேரே சொல்லியிருப்பே... போகணும் என்றால், அதே மாதிரி உன்னை வீட்டை விட்டு அனுப்பணும் என்று நினைத்திருந்தால் நான் உன்னிடம் நேராகவே சொல்லிப்போகச் சொல்லியிருப்பேன். ஏன் என் அம்மாவிடம் சொல்லப் போறேன். யாருக்குப் பயந்து கொண்டு.. அதோட நான் உன்னைக் கல்யாணம் செய்யக் கேட்டேன்.. இது உனக்கே தெரியும்.."

"சரி. முடிந்ததைப் பற்றி எதுக்குப் பேசணும். நான் போய்விட்டேன். போனவள் போனதாகவே இருக்கட்டும். என்



குழந்தையை என்கிட்டே குடுங்க.. நான் போறேன்." மறுபடியும் மன்றாடினாள்.

"நா.. முடிவா சொல்லிட்டேன்.. நிருபா. முடியாது என்று. மறுபடியும் இந்தப் பேச்சைப் பேசாதே.."

"என்ன இந்தக் குழந்தை மீது ரொம்ப அக்கறையா..? இது வயிற்றில் இருக்கும் போதே அழிக்கணும் என்று சொன்னது யார்? இப்போ எங்கிருந்து வரும் பாசம்.. எதுக்காக இப்படி நடிக்கிறீங்க.. உங்களுக்குப் பணம் வேண்டுமா.?"

"சீ.. சீ. வாயை மூடு. பணம்.. பணம். எப்பப்பார் இதே பேச்சு. யாருக்கடி வேணும் உன் பணம். உனக்கு எவ்வளவு வேண்டும் கேள். நான் தருகிறேன். நீ வாங்கிக் கொண்டு குழந்தையை என்னிடம் கொடுத்துவிட்டுப் போடி.."

"இது உன் குழந்தையில்லை.."

"அப்படின்னா நிரூபிடி... என் குழந்தையில்லை என்று. ஏண்டி அறிவு கெட்டவளே.. உனக்குக் கொஞ்சமாவது மண்டையிலே ஏதாவது இருக்கா.. இல்லையா..? உனக்கெங்கே இருக்கப் போகுது.. உனக்குத்தான் அடுத்தவன் தொழிலைக் கெடுக்கவே நேரம் சரியா இருக்கே.. இப்படியே சொல்றியே. அசிங்கமாயில்லை உனக்கு. என் வாயை அடைக்க உன்னைக் கேவலப்படுத்திக்காதே.. இன்னொருவாட்டி இப்படிப் பேசினே.. பல்லு அத்தனையும் கொட்டிடும்.."

"ஏண்டி மும்பையில் இருந்துக்கிட்டு என்னைக் கெடுக்குறதுக்கு, இங்கு வந்து என் கூடவே இருந்துக்கிட்டு நேரடியாகவே என்னைக் கெடுக்கலாமே... உன்னை யார் வேண்டாமென்று சொன்னது.. ம்.." புருவத்தை உயர்த்தினான்.

இவன் இப்படிச் சொன்னதும் அவள் அதிர்ந்து பார்த்தாள்.

"என்னடா.. இவனுக்கு எப்படி தெரிந்தது என்றா..? என் பிளானைப் பத்தி உன்கிட்டே நிறையத் தடவை

சொல்லியிருக்கேன் என்ற நினைப்பு எனக்கு இருக்கு. அங்கெப்படி.. ம்..'' என்றான்.

''என் புள்ளை என்னை விட்டு இருக்க மாட்டான். குடுத்துடுங்க..''

''சீ.. வாயை மூடு.. வந்தவங்களைக் கவனிக்க விடாம சண்டை போட்டுக்கிட்டு.. இது உன் வீடுதானேடி.. நீ இவங்களைக் கவனிக்க வேண்டாம்? மரகதம்மா..! காபி கொண்டு வாங்க!'' என்றான்.

''என்னமோ இருபத்து நாலு மணி நேரமும் இவ பார்த்துக்கிட்டு இருந்த மாதிரி பேசுறா.. இத்தனை வருடம் என்னை விட்டு இருக்கலையா.. அதுமாதிரி இனி உன்னை விட்டு இருப்பான். எனக்குத் தெரியும் வளர்க்க.. நீ அதைப் பற்றிக் கவலைப்படாமல் உன் தொழிலைக் கவனி. நீ சாமர்த்தியம் என்று தெரியும். ஆனால் இவ்வளவு சாமர்த்தியம் என்று தெரியாது. மும்பையில் இருந்து சென்னை வரை தொழிலை விரிவுபடுத்த. என்.. மத்த ஊரெல்லாம் விட்டு வைக்கிறே.. போ.. போய்ப் பொழைப்பைப் பாருடி..''

சர்மாவிடம் திரும்பி; ''மன்னிக்கணும் சார். நான் செய்தது உங்கள் கோணத்தில் தப்பா இருக்கலாம்.. ஆனால் என் இடத்தில் இருந்து நீங்கள் பார்த்தால் நான் செய்தது சரிதான். நான் சொல்லாமல் கூட்டி வந்தது தவறுதான். ஆனால் சொல்லியிருந்தால் என் பிள்ளை எனக்குக் கிடைக்க மாட்டான். அதான் உங்க பொண்ணு பிருத்தியங்கரா.. தேவி பதினாறு கையுடன் என்னை சம்ஹாரமே பண்ணியிருப்பாள். நல்ல வளர்ப்பு. பொறுமையும் கிடையாது. சொல்வதைக் காது கொடுத்துக் கேட்பதில்லை. தானாகவே யோசிக்கவும் புத்தியில்லை. இந்த மரமண்டையை வைத்துக் கொண்டு என்ன செய்வது? இதுவரை அவள் செய்ததைத் தப்பு என்றே ஒத்துக் கொள்ளவில்லை. என்னைத்தான் குற்றவாளியாக்க



முயல்கிறாள்... தவிர, நான் இப்படிப் பண்ணலாமா.. என்ற நினைப்பேயில்லை..''

''உங்களுக்கு எப்படித் தெரியும் இவள் இங்கு பில்டிங் கட்டுவது..''

''இவளா கான்ட்ராக்ட் எடுத்துப் பண்ணியிருந்தால் எனக்குத் தெரியாது. இவ நான் எதை எடுத்து முடிவாகுதோ.. அதைத்தானே பிடுங்கினாள்..'' மெல்லச் சிரித்தான்.

''அப்போ இது உங்க தொழிலைப் பாதித்ததா..?''

''பாதித்ததா... என்ன சொல்ல. எனக்கே ஆச்சரியம். எப்படி கொட்டேசன் தயார் பண்ணினாலும் அது கை நழுவிவிடும். எதையுமே செய்ய முடியாமல் அல்லவா என் கையைக் கட்டிப் போட்டிருந்தா.. என் அருமைப் பொண்டாட்டி.. ஆனா எனக்கு வருத்தமேயில்லை. சந்தோசம்தான்..

''ஆனா இவ கட்டின ஹோட்டல் எல்லாத்தையும் போய்ப் பார்த்தேன். பக்காவான பிளான். ரொம்ப நல்லா இருந்தது. அப்பவே நினைத்தேன். இது ஒரு பொண்ணுதான் என்று. ஆனா இவளா இருப்பா என்று நினைக்கவில்லை..''

சீமாவைப் பார்த்து, ''காபி குடிங்கம்மா..'' என்றான்.

சர்மா, ''சரி. நீ என்ன முடிவெடுத்திருக்கே..?'' என்றார் திவாகரைப் பார்த்து.

''சார், நீங்களா இருந்து உங்களுக்கும் உங்க ஒய்ஃபுக்கும் பிரச்சனைனு வச்சுக்குவோம்.. ஆனா நீங்க அவங்க மேலே உயிரையே வச்சிருக்கீங்க.. ஆனா அவங்க உங்களை விரும்பிப் பின் வெறுக்குறாங்க.. உங்கள் பிள்ளையைச் சுமந்து கொண்டு உங்களுக்குத் தெரியாமல் வீட்டை விட்டுப் போனால் எப்படியிருக்கும்? சரி, போனதுதான் போனே.. குழந்தை பிறந்து நான்கு வருடம் ஆகிவிட்டது. உங்களுக்குச் சொல்லணுமா வேண்டாமா..? நீங்க மட்டும் வேண்டாம். உங்க குழந்தை

மட்டும் வேண்டுமா..? சரி, எதிர்பாராம சந்தித்து குழந்தையைப் பார்த்து விட்டு உங்களைப் போ.. என்றால் நீங்கள் போவீங்களா..? என் இடத்தில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீங்க என்பதைச் சொல்லுங்கள். அதன்படி நான் கேட்கிறேன். முடிவு உங்கள் கையில்..'' என்றான்.

சர்மா மனைவி முகத்தைப் பார்த்தார்.

## 45



''இங்கே பாருங்க. இந்த கதாகாலட்சேபம் எல்லாம் வேண்டாம். குழந்தையைக் குடுங்க நான் போறேன்,'' என்று மாடியை நோக்கிப் போனாள்.

அவளை அவன் பிடித்துக் கொண்டான். அவள் திரும்பி அவனை முறைத்தாள்.

''நீ மேலே போய் அவனைப் பார்க்கக் கூடாது. அதுக்கு உனக்கு அனுமதி இல்லை.''

சீமா, ''என்ன திவாகர் இது. குழந்தையை அவள் போய்ப் பார்க்கட்டும். எங்களாலேயே குழந்தையைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவ பெத்தவா. அவளாலே.. முடியுமா..?''

''நீங்கள் சொல்வது சரிதான். நான் ஒத்துக் கொள்கிறேன். அவள் இங்கேயே இருந்தால் பார்ப்பது முறை, ஒரு முறை பார்த்து விட்டு அவள் போய்விட்டால் குழந்தை ஏங்கிப் போகாதா..? இதுக்கு பார்க்காமலேயே இருந்து விட்டால் இரண்டு நாள் அழுது விட்டு பின் பேசாமல் இருப்பான். அதனால்தான் சொல்கிறேன்.'' என்றான்.

அவளுக்குச் சுரீர் என்றது. என்ன இது, குழந்தையைக் கண்ணில் கூட காட்ட மாட்டேன் என்கிறானே... அவளுக்குக் கண்ணீர் வந்தது.



''காபி குடி நிருபா.. பேசி.. பேசி.. தொண்டை வறண்டிருக்கும்..'' என்றான்.

காபியை எடுத்து அவன் மீது வீசினாள். அவன் லாவகமாக ஒதுங்கினான்.

''ஏன்டி உனக்குச் சொல் புத்தியாவது இருக்கணும்.. இல்லை சுய புத்தியாவது இருக்கணும். இரண்டும் இல்லாதவள் கிட்டே என்ன பேசி என்ன பயன்? ஏன்டி நீ இப்படி பத்ரகாளியா இருந்து கொண்டு எப்படி நீ புள்ளையை வளர்க்கப்போறே..?''

சீமா அதற்குள், ''குழந்தையை நாங்க வளர்க்கிறோம்.. அவள் இதுவரை இதுமாதிரி நடந்து கொண்டதில்லை.''

''என்னைப் பார்த்ததும்தான் இப்படி நடக்கிறாளா... உரிமை இருக்கும் இடத்தில்தானே.. எல்லாம் இருக்கும். தப்பா எடுத்துக்கக் கூடாது என்னை. என்னதான் நீங்கள் அவளைக் காப்பாற்றி அடைக்கலம் குடுத்துப் பாதுகாப்பாக வைத்திருந்தாலும் இதுமாதிரி உரிமையாய்க் கோபப்பட முடியுமா.. கோபம் வந்தாலும் யாருக்கும் தெரியாமல் அடக்க வேண்டும். இங்கு அப்படியில்லையே..!'' என்றான் நக்கலாக.

நிருபா பல்லைக் கடித்தாள்.

''சார், நான் சொல்வது உங்களுக்குத் தப்பா தோணலாம். என்னடா பெரிய இவனாட்டம் பேசுறான் என்று. நீங்க பெரியவங்க. எவ்வளவோ அனுபவம் இருக்கும். இத்தனை நாள் எங்கே போனான் என்று நினைப்பீங்க. என் மேலும் தவறு இருக்கு. நான் ஒத்துக் கொள்கிறேன். அம்மா சொல்றாங்க பிள்ளையை நான் வளர்க்கிறேன் என்று. வளர்ப்பாங்க. இல்லையென்று மறுப்பதற்கில்லை..'' நிறுத்தினான்.

அனைவரும் அவன் முகத்தையே பார்த்தனர்.

''எவ்வளவு நாளைக்கு நீங்கள் வளர்க்க முடியும்..? உங்க பொண்ணுக்கும் கல்யாணம் ஆகும்.. பையனுக்கும் ஆகும்..

பேரப் பிள்ளைகள் பிறப்பார்கள். நீங்கள் அவர்களைத்தான் கவனிப்பீங்க.. அதில் தப்பில்லை.. வருண் ஓரளவு பெரியவன் ஆகிவிடுவான். ஆனால் உங்க பேரப்பிள்ளைகளை அதன் அப்பாவும் தூக்கிக் கொஞ்சுவாரில்லையா.. அப்போ என் பிள்ளை என் அப்பா எங்கே என்று கேட்டால்.. என்ன பதில் சொல்வீங்க.. உங்களுக்கும் வயதாகி விடும்.. நீங்களே... ஒரு காலகட்டத்தில் உங்க பிள்ளையிடம்தான் இருக்கணும்.. இவள் எங்கே இருப்பாள்? என் பிள்ளை எப்படி வளரும்..? என்னா குழந்தை வளர்ப்பது ஒரு காலகட்டம் வரைதான். நீங்கள் கடைசிவரை உன் குழந்தையை அப்பா இல்லாத குறை தெரியாமல் வளர்ப்பேன் என்று எனக்கு உத்தரவாதம் தர முடியுமா.? இவள் எத்தனை காலம் உங்களுடன் இருக்க முடியும்? நீங்க, உங்க மகன் ஒத்துக்கலாம். உங்க மருமகள் ஒத்துக்கணுமே.. நாத்தனாரையே வீட்டில் வைத்துக் கொள்ளாத காலம் இது. இவள் யாரோ இவர்கள் இருவரையும் ஏற்றுக் கொள்ள. இதை யெல்லாம் நினைத்தீர்களா....? நான் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். என் மனைவி, குழந்தையைப் பார்த்துக்கிட்டதுக்கு. குழந்தைக்கு ஒரு அப்பாவோட அன்பும் தேவை. அதுக்காக நான் காலம் பூராம் என் குழந்தையை உங்களிடம் விட எனக்கு மனமில்லை. என் பிள்ளையை வளர்க்க முடியாத அளவிற்கு நான் கையாலாகாதவன் இல்லை..''

''யாரோ உங்ககிட்டே... மன்னிக்கணும். என் மகனை விட எனக்கு மனசில்லே.. இவ அடங்காதவள். நான் சொன்னா கேட்க மாட்டா.. இருந்தாலும் சொல்கிறேன். அவளுக்குக் குழந்தை வேண்டும் என்றால், அன்பு, பாசம் இருந்தால் இங்கேயே இருக்கட்டும்.. சும்மா இல்லை. என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு. இதுதான் என் முடிவு..

''இதையும் தெளிவா சொல்லிவிடுகிறேன்.. எங்களுக்கு இதுவரை கல்யாணம் ஆகலை. கல்யாணமாகாமல் அவள் இந்த வீட்டிற்கு வர எனக்குச் சம்மதமில்லை. அவள் முடிவுதான் இனி. என் முடிவைச் சொல்லிவிட்டேன்..''



''என்னால் முடியாது உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள.. நான் வேண்டாம் என்றுதானே.. அவளைக் கல்யாணம் பண்ணிக்கவும் சம்மதம் என்று உன் அம்மாவிடம் சொன்னே.. என்னிடம் வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன் என்று சொல்லிவிட்டு பிறகு ஏன் அப்படிச் சொன்னாய்..? என்னை ஏமாத்தத்தானே..?'' என்றாள்.

''நிச்சயமாக இல்லை நிருபா.. நான் அந்த மாதிரி என் அம்மாவிடம் சொல்லவில்லை. அந்தக் கல்யாணம் வேண்டாம் என்று எத்தனை சண்டை போட்டேன். என் அம்மாவிடம். நான் பொய் சொல்ல மாட்டேன் என்பது உனக்குத் தெரியும்..'' என்றான்.

''உன் அம்மாவே என்னிடம் சொன்னார்கள்.. நீ இங்கிருப்பதால்தான் அவன் தயங்குகிறான் என்று..''

''ஏ.. என் அம்மா சொன்னது, பேசியது எல்லாம் உண்மையா? உன்னைப் பற்றி, என் அம்மா, உன்னை ஏமாற்றி இருக்காங்க.. வீட்டை விட்டு அனுப்பணும் என்று. நீ லெட்டர் எழுதி வைத்து விட்டா போனே..?'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

''இல்லை. சைன் மட்டும் போடு என்று வாங்கிக் கொண்டார்கள்..''

''நினைத்தேன். அதில் அப்படி எழுதியிருந்தும் நான் நம்பவில்லை. அந்த லெட்டரை. என்னா நான் உன்னை அவ்வளவு நம்பினேன்!'' என்றான் குற்றம் சாட்டுவது போல்.

''நீங்களே.. அன்று ஊருக்குப் போகும்போது உங்க அம்மாவிடம் எனக்குச் சம்மதம் என்றுதானே சொன்னீங்க..''

''என்ன சம்மதம்னு சொன்னேன். நீ இங்கு வரும் வரை மாமா குடும்பம் இங்கு இருக்கச் சம்மதமா என்றார்கள். சம்மதம் என்றேன். இதுக்குத்தான் ஒட்டுக் கேட்கக் கூடாது என்பது அரைகுறையாகக் கேட்டுவிட்டுத் தப்பான முடிவெடுப்பது.

''சார், என் மனைவி சொல்லை நான் மதிக்கிறேன். அவளைக் காதலித்த நாள் முதலா மனைவி என்றுதான் என் மனதில் வரைந்திருக்கேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டாம்.. இனியும் நான் கட்டாயப்படுத்த மாட்டேன். ஆனால் என் குழந்தையையும் கண்ணில் காட்ட மாட்டேன். உயிரோடவே இருக்க மாட்டாங்க என்று தான் இத்தனை வருடம் நினைத்திருந்தேன். இப்போ உயிரோட மனைவி, மகன். எனக்கு எப்படியிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்.. இவள் இறந்திருப்பாள்.. என்று நான் துடித்த துடிப்பு.. நான் அழுத அழுகை.. குழந்தையைப் பற்றி நான் நினைக்கவேயில்லைதான். இவளைப் பற்றி மட்டுமே தான் என் சிந்தனை. இப்போ குழந்தை.. என் மகன் இருக்கிறான் என்று. இவளுக்கு இப்போ எப்படி துடிக்குதோ.. அது மாதிரிதானே எனக்கும் துடிக்கும். நீங்க ஏன் வளர்க்கணும் நான் உயிரோடு இருக்கும்போது..''

''குழந்தைக்கு நீங்கள் பழக்கமில்லை. உங்களிடம் அது எப்படி இருக்கும். ஸ்கூல் போக வேண்டாமா?''

''ஒரு வாரத்திற்கு அப்படித்தான் இருக்கும். பின் பழகி விடும். இப்ப என்ன, இவன் இங்கு ஸ்கூல் போகட்டும்.''

''இங்கு எப்படிச் சேர்க்க முடியும். டி.சி. எதுவுமில்லாமல்?''

''ஆமா. இவன் ஐ.ஏ.எஸ். படிக்கிறான். வேற ஸ்கூல் சேர்க்க முடியாது பாரு. யூ.கே.ஜி.தானே. அதெல்லாம் சேர்த்துக்கலாம்.''

நிருபாவுக்குக் கோபம் வந்தது. ''என்ன கேட்கிறதுக்கெல்லாம் பதில் சொல்லிக்கிட்டு. நீங்க ஆபீஸ் போனா இவனை யார் பார்த்துப்பா.. வீட்டுக்கு வந்தாலும் இவனைப் படிக்க வைத்து தேவையானதைச் செய்து பார்த்துக் கொள்ள வேண்டாமா..?''

''ரொம்ப அக்கறைதான். எனக்கும் அக்கறை இருக்கு. எல்லாம் தெரியும். குழந்தையைக் கூட்டி வந்தவனுக்கு இதுகூட தெரியாமலா..? தன் கூட குழந்தையை வைத்துக் கொள்வான்.. ஏன்.. நீ தான் இதெல்லாம் இத்தனை வருடம் கவனித்தாயா..?



மத்தவங்கதானே கவனித்தாங்க. அதுபோல இப்பவும் தொடரட்டுமே.. இதில் உனக்கென்ன வருத்தம். கேட்கிறதுக் கெல்லாம் பதில் சொல்லாமே.. பின்னே வேறு எதுக்கு சொல்வாங்களாம்.. கேட்காததுக்கா..?''

நிருபாவால் எதுவும் பேச முடியவில்லை. சர்மா முகத்தைப் பார்த்தாள்.

''இதுக்கு நான் என்னம்மா பண்ண முடியும். அவர் சொல்வதிலேயும் தப்பில்லை. அவர் குழந்தை. இதில் நான் தலையிட முடியாது. பிரச்சனையை நீங்கள் இருவரும்தான் பேசி முடிவெடுக்கணும். முழுசா என்னை பிரச்சனை என்று எனக்குத் தெரியாது. நீங்கள் பூடகமாகப் பேசுவதை வைத்து நான் யாரு பக்கமும் பேச முடியாது. அவர் தான் செய்தது தப்பு என்று சொல்கிறார். இதற்கு நீதான் முடிவெடுக்கணும்..''

''என்னால் என் வீட்டு வேலைக்காரனைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது.''

''அப்ப கிளம்புடி... என் வீட்டில் ஏன் நிக்கிறே... உன்னை வா என்று அழைத்தேனா?''

''என் குழந்தையைக் கண்ணிலாவது காட்டுங்க. நான் போறேன்..'' என்றாள்.

''ஒரு வேலைக்காரனோட குழந்தையை நீ எதுக்குப் பார்க்குறே.. காட்ட முடியாது. அது உன்னைப் பார்த்ததும் என்னிடம் வரும். இங்கு இருக்கும். நான் உன்னிடம் காட்டி அது வரமாட்டேன் என்றால் நான் இந்தப் பக்கம் பிடித்து இழுக்க, நீ அந்தப் பக்கம் பிடித்து இழுக்க குழந்தை மிரண்டு பயத்தில் அழ, அதன் முன் நாம் இருவரும் சண்டை போட... குழந்தை முன் சண்டை போடக் கூடாது என்று நான் நினைக்கிறேன்.. நீ என்னடி நினைக்கிறே..''

உதட்டைக் கடித்துக் கொண்டு சட்டென வெளியே போய்விட்டாள்.

சர்மாவும் சீமாவும் பேசாமல் கிளம்பினர்.

''சார்! சாப்பிட்டுவிட்டுப் போகலாமே?'' என்றான்.

''பரவாயில்லை. இருக்கட்டும்.'' சென்று விட்டனர்.

அன்றே மும்பை சென்று விட்டனர்.

நிருபா இரண்டு நாளாக அறையை விட்டு வெளியே வரவில்லை. இவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை என்ன செய்வதென்று.

## 46



நிருபாவின் மனதில் புயல் அடித்தது. எப்படி என்னை இடம் பார்த்து அடிக்கிறான்.. வருண் என்று அழுதாள்.

இங்கு இருக்கும்போது மடியில் தூக்கி வைத்துக் கொஞ்சலைதான்.. ஆனால் மகன் மீது இருந்த பாசத்தை வெளிக்காட்டவில்லை. நேரமுமில்லை.

இரண்டு நாள் சென்று அவள் வேலைகளைக் கவனித்தாள்.

ஷோபாவுக்குப் படிப்பு முடிந்தது. அவள் அப்பாவுடன் ஆபீஸ் போனாள். அவள் கண்களில் ரமேஷ் முகம் வந்தது. இவன் எப்படி நம் ஆபீசில்?

அப்பாவிடம் கேட்டாள். ''அப்பா ரமேஷ் எப்படி நம் ஆபீசில்?''

''அன்று ராகினிம்மா சொன்னாங்க. ரமேசுக்குப் படிப்பு முடிந்து விட்டது. உங்களுக்குத் தெரிந்த இடத்தில் வேலை ஏதாவது வாங்கிக் கொடுங்கள் என்றாள். நான் என் வெளியில்



பார்க்கணும் என்று நம் ஆபீசுக்கே வரச் சொன்னேன்,'' என்றார்.

ஷோபாவுக்கு வீட்டில் மாப்பிள்ளை பார்த்தனர். நிறைய இடம் வந்தது. ஒன்றும் பிடிக்கவில்லை.

ஒருநாள் எல்லோரும் சாப்பிடும்போது ஷோபா, ''அப்பா! எனக்கு ரமேசைப் பாருங்களேன். உடனே நீங்க எதுவும் தப்பா எடுத்துக்க வேண்டாம்.. காதல்.. கீதல் என்று. என் மனசுக்குப் பிடிக்குது..''

சர்மா யோசனையுடன் பார்த்தார். ''ஷோபா, மனசுக்குப் பிடிச்சிருக்கு என்கிறே.. எது பிடிச்சிருக்கு.. அவன் அழகா..? அன்று ஒருநாள் உனக்குச் சாப்பாடு செய்து கொடுத்தானே அதுவா..? நல்ல பையன்தான். படிப்பு இருக்கு. பண்பானவன்.. ஆனால் வசதி என்று பார்த்தால் ஒன்றுமில்லை. இன்னும் அவர்கள் வாடகை வீட்டில்தான் இருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியும். நம் வீட்டில் வேலை பார்ப்பவர் என்று மரியாதை காட்டுவது வேறு, வாழ்க்கை என்பது வேறு. நீ வசதியாக வாழ்ந்து பழக்கப்பட்டவள். கல்யாணத்துக்குப் பின் நீ அவனைக் குறை சொல்லி வருந்துவதில் பயனில்லை. நல்லா யோசி. வசதியில் வாழ்ந்துவிட்டு ஏழ்மையைச் சந்திப்பதென்பது ஒன்றும் சாதாரண விசயமில்லை. அவன் ஏழ்மை பிடித்திருக்கா.. உனக்கு?

''நீ நினைக்கலாம். நம் அப்பாவிடம் இல்லாத சொத்தா என்று. இதில் உனக்கும் பங்கு உண்டு. ஆனால் அவன் அதை விரும்பணுமே.. அவன் வருமானத்திற்குள் வாடகை கொடுத்து குடும்பம் நடத்த வேண்டும் என்று சொல்லிவிட்டால் நீ என்ன செய்வே.. நீ அவனை மட்டும் விரும்பினா பத்தாது. அவனோட சேர்ந்து இதையெல்லாம் நீ விரும்பணும். உன் அப்பாவிடம் வாங்காதே என்றால் நீ வாங்காமல்தான் இருக்கணும். மீறினால் பிரச்சனை வரும். கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு நீ சொல்லிக் காட்டக் கூடாது. நீ இல்லாதவன், என் வீட்டில் வேலை

பார்த்தவன்தானே.. என்று. ஆம்பளைங்களுக்கு இது தன்மானப் பிரச்சனை. இதையெல்லாம் நீ நல்லா யோசி. இரண்டு நாள் என்ன, வாரம் எடுத்துக் கொள். பின் மாறவில்லை என்றால் நான் பேசுகிறேன் ராகினிம்மாவிடம்.'' என்றார்.

''இதில் உங்களுக்கு ஒன்றும் வருத்தமில்லையேப்பா..?''

''நிச்சயமாக இல்லை. சொத்து வந்து நாம் பார்த்துச் சேர்ப்பது. அது எப்ப வேண்டுமானாலும் வரும், போகும். நான் ஏழைதான் ஒன்னும் பரம்பரைப் பணக்காரன் இல்லை. இதைப் பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.. எங்களுக்கு முழுச் சம்மதம்!'' என்றார்.

''இதில் கட்டாயம் ஒன்றுமில்லை. உனக்குப் பிடிக்கவில்லை என்றால் வேண்டாம் என்று தாராளமாக நீ முடிவெடுக்கலாம். பிடித்தது என்றால் ரமேசிடம் முதலில் உனக்கும் பிடிச்சிருக்கா என்று கேட்க வேண்டும். இதில் அவன் விருப்பமும் முக்கியம். அவன் வேண்டாம் என்றாலும் நீ சரி என்று ஒத்துக்கணும். சரியா?'' என்றார்.

''சரிங்கப்பா.. முதலில் ரமேசிடம் பேசுங்கள்... அவர் ஒத்துக் கொண்டால் எனக்கு முழுச் சம்மதம்!'' என்றாள்.

ரமேசிடம் ஒருநாள் லஞ்ச் டைமில் சர்மா கேட்டார். ''ரமேஷ்! உன்னிடம் பர்சனலா ஒன்று கேட்பேன். அதற்கு நீ முழுச் சம்மதம் என்றால் சரி சொல். பிடிக்கவில்லையென்றால் வேண்டாம் என்று தாராளமாகச் சொல்லலாம். நான் எதையும் தப்பா எடுத்துக்க மாட்டேன். இதில் உனக்கு முழுச் சுதந்திரம் உண்டு. உன் விருப்பம்தான் ரொம்ப முக்கியம்!'' என்றார்.

ரமேஷ் புன்னகையுடன், ''சொல்லுங்க சார். முதலில் விசயத்தை. எனக்குப் பிடித்தால் சரி என்று சொல்லப் போறேன். இதில் இவ்வளவு தயங்க என்ன இருக்கு?'' என்றான்.



''இல்லே. இந்த விசயம் மனசு சம்பந்தப்பட்டது. இதில் நன்றி விசுவாசத்திற்கு நீ இடம் கொடுக்கக் கூடாது. இவர் இல்லையென்றால் நாம் இந்த இடத்திற்கு வந்திருக்க முடியுமா.. என்றெல்லாம் நீ நினைக்கக் கூடாது. நான் எதையும் இனாமா செய்யலை. உங்கம்மாவும் வாங்கலை. அப்படியே வாங்கினாலும் கடனாகத்தான் வாங்கினாங்க. அதையும் குடுத்துடுவாங்க.. இந்த நினைப்பெல்லாம் இல்லாமல் முதலாளி சொன்னால் எப்படி தட்ட முடியும் என்று சங்கடப்படாமல் நீ உன் முடிவைச் சொல்லணும்.. இங்கு முதலாளி, தொழிலாளி என்ற பேச்சுக்கே இடமில்லை!'' என்றார்.

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் எனக்குப் பயமா இருக்கு... வாக்குக் கொடுக்கலாமா.. வேண்டாமா.. என்று. நல்ல விசயம்தானே..'' என்றான் புரியாமல்.

''நல்ல விசயந்தான்.. உன் எதிர்காலத்தைக் குறித்துத்தான் பேசுறேன்,'' என்றார்.

''அப்போ சொல்ல வேண்டியதுதானே.. நான் உங்களை எத்தனை உயர்வா மதிக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. நீங்கள் எதா இருந்தாலும் என்னிடம் உரிமையோடு கேட்கலாம்...''

''இது கட்டாயமில்லை. மரியாதை.. பிராயச்சித்தம் என்று எதையும் நீ நினைக்காமல் பதில் சொல். எனக்கு ஒரு விருப்பம். அது உனக்கும் இருந்தாகணும் என்றில்லை. நீ எந்த முடிவெடுத்தாலும் நான் தப்பா நினைக்க மாட்டேன்.''

ரமேஷ் சிரித்து விட்டான். அந்தச் சிரிப்பு அத்தனை கவர்ச்சியாக இருந்தது. ''நீங்கள் இப்படியே பேசி என்னை அனுப்பப் போறீங்க என்று நினைக்கிறேன்..''

''ரமேஷ்! உனக்கும் கல்யாண வயசு வந்திருச்சு. நான் என் பொண்ணை உனக்குக் கொடுக்க ஆசைப்படுறேன். உன்

விருப்பம் என்ன? நீ வேற யாரையாவது விரும்பினாலும் அதற்கும் தடையில்லை. நீ தாராளமாக உன் முடிவைச் சொல்லலாம். இன்றே சொல்லணும் என்று அவசியமில்லை. ஒரு மாதம் கூட டைம் எடுத்துக்க.. ஆபீஸ் வேற.. இது வேற.. இரண்டையும் போட்டு நீ குழப்பிக்கக் கூடாது. என்னைப் பார்க்கும் போதெல்லாம் முதலில் உன் அம்மாவிடம்தான் பேசணும். உன் விருப்பம் என்ன, நீ வேற யாரையாவது விரும்புறியா.. என்று எதுவும் தெரியாமல் அவர்களிடம் பேசி.. அவர்கள் உன்னைக் கட்டாயப்படுத்தி.. இது நல்லாயிருக்காது. அதனால் தான் முதலில் உன்னிடம் சொல்கிறேன். உன் பதில் என்னவோ அதுபற்றி மேற்கொண்டு முடிவெடுக்கலாம். வேண்டாம் என்றால் இத்துடன் இரண்டு பேரும் விட்டு விடலாம். வேண்டாம் என்று சொல்லிவிட்டு இங்கு எப்படி வேலை பார்ப்பது என்று நினைக்க வேண்டாம்.. அதான் நான் முதலிலேயே தெளிவா சொல்றேன்,'' என்றார்.

ரமேஷ் பிரமித்து நின்றான். சத்தியமா இவர் இப்படி கேட்பார் என்று எதிர்பார்க்கவில்லை. ஒன்றுமே புரியவில்லை. இதை அவன் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. அவன் உணர்வுகள் காற்றில் மிதப்பது போல் உணர்ந்தான்.

''முதலில் ஷோபாவுக்கு விருப்பமா என்று கேட்டீங்களா?'' என்றான்.

''அவளுக்கு விருப்பம். அவள் சொல்லித்தான் கேட்கிறேன்,'' என்றார்.

''சரிங்க சார். என் முடிவை ஒரு வாரத்தில் சொல்கிறேன். அதற்கு முன் நான் ஷோபாவிடம் பேச நீங்கள் அனுமதி தர வேண்டும்,'' என்றான்.

''தாராளமா நீ அவளுடன் பேசலாம். எப்போ பேசணும் என்று மட்டும் அவளிடம் சொல்லிவிடு,'' என்றார்.



''நான் ஞாயிறு அன்று ஃபோன் பண்ணுகிறேன். உங்களுக்கு. அதுவரை அம்மாவுக்கு இந்த விசயம் தெரிய வேண்டாம்,'' என்றான்.

''சரி, நீ போய்ச் சாப்பிடு,'' என்றார்.

ரமேசால் சாப்பிட முடியவில்லை.. ஏனோ.. ஒரே பரபரப்பாக இருந்தது மனசு. ஏதோ.. நிறைய வேலைகள் இருப்பது போலவும், அதைச் செய்ய முடியாமல் தவிப்பது போலவும்... ஆனால் செய்வதற்கு ஒன்றுமே இல்லாதது போலவும்.. அவனுக்கு என்ன செய்வதென்றே.. புரியவில்லை.

ஞாயிறு காலை ஃபோன் பண்ணினான் சர்மாவுக்கு. ''சார்.. நான் ஒரு ரெஸ்டாரண்டில் சந்திக்க விரும்புகிறேன். மதியம் லஞ்ச் அங்கே. நான் வந்து பிக்கப் பண்ணிக்கட்டுமா.. இல்லை அவளா வர்றாளா..?'' என்றான்.

''இதோ சொல்கிறேன்,'' என்று ஷோபாவிடம், ''ரமேஷ் உன்னைச் சந்தித்துப் பேசணும் என்கிறான். உன்னை ரெஸ்டாரண்டுக்கு வரச் சொல்கிறான். நீயா போறியா..? அவனை வரச் சொல்லட்டுமா..?'' என்றார்.

அவளுக்கும் தயக்கமாக இருந்தது. ''நானே.. போறேன்பா,'' என்றாள்.

அவர் அவனுக்கு ஃபோன் பண்ணிச் சொன்னார். ''அவளே வர்றாளாம்,'' என்று.

ஷோபா டூவீலரில் போனாள். இவளுக்காக வெளியேயே காத்து நின்றான். அவளும் சீக்கிரத்திலேயே வந்துவிட்டாள்.

அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். அவளும் பதிலுக்குப் புன்னகைத்தாள். வண்டியை பார்க் செய்து விட்டு இருவரும் உள்ளே சென்றனர்.

ஒரு டேபிளில் இருவரும் அமர்ந்தனர். "என்ன சாப்பிடுறே ஷோபா..? லஞ்சுக்கு இன்னும் டைம் இருக்கு.." என்றான்.

"ஐஸ்கிரீம்!" என்றாள்.

இருவருக்கும் சொல்லிவிட்டு, "மெதுவா கொண்டு வந்தா போதும்," என்றான்.

அவன் நேரடியாக விஷயத்திற்கு வந்தான். "என்ன ஷோபா, அப்பா என்னிடம் பேசினார். உன்னை எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும் என்று. நீதான் சொன்னாயாமே, என்னைப் பிடித்திருக்கு என்று."

"ஏ.. ன், என்னை உங்களுக்குப் பிடிக்கலையா..?"

"சொல்வேன்ல, ஏன் அவசரப்படுறே.. உன்னிடம் பேசத்தானே வரச் சொன்னேன்.."

## 47



"ஷோபா! என்னைப் பற்றி, என் குடும்பத்தைப் பற்றி எல்லாமே உனக்குத் தெரியும். அதேபோல் உன்னைப் பற்றி, உன் குடும்பத்தைப் பற்றியும் எனக்குத் தெரியும். எதனால் நீ இந்த முடிவுக்கு வந்தே.. என்று நான் தெரிந்து கொள்ளலாமா..? உன் அழகுக்கும், வசதிக்கும் எத்தனையோ.. கோடீஸ்வரர்கள் கியூவில் நிற்பாங்க.. பிறகு. ஏன். என்னை.." நிறுத்தினான்.

"நான் என் அழகையும், அந்தஸ்தையும் விரும்புகிறவனை விரும்பலே.. என் மனசை விரும்புகிறவனை.. என்னைப் புரிந்திருக்கிறவனைத்தான் நான் விரும்புறேன்.. அன்புக்கு நடுவில் பணம் வரக் கூடாது என்று நான் நினைக்கிறேன். ஏன் பணம் இருக்கிறவனுக்கு மனசு இருக்காதா..? உங்களிடம் என்ன குறை என்று இப்படி என்னிடம் கேள்வி கேட்கிறீங்க.."



"நான் உன்னைக் கேட்டா.. நீ என்னைக் கேள்வி கேட்கிறியா..?" சிரித்தான்.

"ஷோபா! இது சாதாரண விசயமில்லை. இது நம் இரண்டு பேரோட வாழ்க்கை. இந்த வாழ்க்கையை நாம கடைசி வரை வாழணும். ஒரு நாள் நாம் தப்பா முடிவெடுத்து விட்டோமோ.. என்று நீ நினைக்கக் கூடாது. என்னிடம் என் படிப்பைத் தவிர வேறு எந்த சொத்துமில்லை என்பது உனக்கே தெரியும்.. நீ விரும்பும் வாழ்க்கையை என்னால் தர முடியுமா என்று எனக்கே தெரியவில்லை."

"என் சோறு போட மாட்டீங்களா..?"

"சோறு மட்டும் போட்டா போதுமா உனக்கு..?" கண்ணைச் சிமிட்டினான்.

அவள் முகம் சிவந்தாள்.

"ஷோபா.." என்றான் மென்மையாக. என்ன என்பது போல் நிமிர்ந்து பார்த்தாள்.

"ஷோபா! உன் அப்பாவிடம் எது வேணாலும் நம் வாழ்க்கை வசதிக்கு வாங்கிக் கொள்ளலாம் என்று நீ நினைத்தால் இது சரி வராது. என் சம்பளத்தில் ஒரு பிளாட் வாங்குவேன். உன் வீட்டு அளவுக்கு வசதி இல்லையென்றாலும், ஓரளவு வசதி செய்து கொடுப்பேன். நீயும் வேலைக்குப் போகலாம். அதற்காக என் தன்மானத்தை விட்டு உன் வீட்டில் நான் வந்து இருக்க மாட்டேன். என் பொண்டாட்டியையும் விட்டுக் கொடுக்க மாட்டேன். என் வசதிக்குள் வாழ முடியுமா.. உன்னால். ஆனால் எப்பவும் இப்படியே இருந்துவிட மாட்டேன்.. நானும் உயருவேன்!" என்றான்.

"நீ நல்லா யோசி.. கல்யாணத்துக்குப் பின் நான் எப்படி வேணாலும் நடப்பேன் என்று நீ நினைக்கக் கூடாது இதையெல்லாம் நான் சொன்னாலும் எனக்குத் தயக்கமாகத்தான்

இருக்கு. இது.. ஏன் என்று. இதுக்கு நீ சரியான விளக்கம் கொடுக்க வேண்டும் எனக்கு.''

''இங்க பாருங்க. இதுக்கு எப்படி விளக்கம் சொல்றதுன்னு எனக்குத் தெரியலே.. உங்களைப் பிடிச்சிருக்கு.. அதனாலே. காதல்.. நீ.. இல்லையென்றால் நான் செத்து விடுவேன் என்றெல்லாம் இல்லை. உன் அணுகுமுறை, பெண்களை மட்டமாக நினைக்காமல் தனக்கு நிகராக நினைப்பது, ஆண் என்கிற திமிர் இல்லாமல் எல்லாவற்றையும் சரிசமமாக நினைப்பது. இன்னும் என்னவோ தோணுது.. அதை எனக்குச் சொல்லத் தெரியலை... காற்றை.. கடவுளை எப்படி நாம் கண்ணால் பார்க்காமல் உணர்கிறோமோ.. அதுபோலத்தான் இதுவும். இதுக்கு சரியான விளக்கம் சொல்லத் தெரியலே.. நான் [illegible] தலையானதுக்குக் குறுக்கே நிற்க மாட்டேன்.. ஒரே சொல்லில் சொல்ல வேண்டும் என்றால் நான் உங்களை ஏழை என்ற கண்ணோட்டத்தில் பார்த்ததில்லை. எனக்கு அந்த எண்ணமும் வந்ததில்லை..''

''நான் அதைச் சொல்லவில்லை ஷோபா. ஏழ்மை என்பது அவமானப்படக் கூடிய விசயமில்லை. ஏழ்மையிலும் உண்மையா, நேர்மையா.. இருக்கணும். நான் சொல்ல வந்ததை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. என் அம்மா உன் வீட்டு வேலைக்காரி. அதை நீ முதலில் புரிந்து கொள்ளணும். என்னை நீ கல்யாணம் செய்து கொண்டால், எத்தனையோ வி.ஐ.பி., வி.வி.ஐ.பி.களை யெல்லாம் சந்திக்க நேரிடும். இந்தக் கல்யாணத்தை ரகசியமாகப் பண்ண முடியாது. அப்போ மாப்பிள்ளை யார் என்றால் என் வீட்டு வேலைக்காரியின் மகன் என்று சொல்வீர்களா..? இது உங்களுக்கு அந்த நேரம் அவமானமாக இருக்காதா..? அந்த அவமானம் என் மீது வெறுப்பாக மாறாதா..? இதைத்தான் நான் சொல்ல வருகிறேன்..''

''நீங்கள் சொல்லித்தான் வேலைக்காரியின் மகன் என்று எங்களுக்குத் தெரியுமா? நாங்கள் இது நாள்வரை



ராகினியம்மாவை அப்படி நினைத்ததில்லை. அம்மா எப்படி எங்களுக்கோ... அதுமாதிரிதான் அவங்களும் எங்களுக்கு. இன்றுவரை வேறுபாடா நினைத்ததில்லை. குடும்பத்தில் ஒருவராகத்தான் நடத்துகிறோம்.. மதிக்கிறோம்..'' என்றாள் கோபமாக.

''என்ன இவ்வளவு கோபம்..! கோபத்துல வெட்கத்தில் சிவப்பதை விட அதிகமாக முகம் சிவக்குது. மூக்கு நுனி கூட. ஏன் இத்தனை கோபம். உனக்குக் கோபம் அதிகமா வருமோ.. என் அம்மா ஷோபா மாதிரிப் பெண்ணைப் பார்க்க முடியாது [illegible]'' என்றாள் [illegible].

இமைகளைத் தாழ்த்தி அவனைப் பார்த்தாள்.

''என்ன புதுசா இப்படி என்னைப் பார்க்கிறே.. என் மீது லவ் இல்லேங்குறே..'' புருவத்தை உயர்த்தினான்.

படக்கென முகத்தைத் திருப்பினாள்.

''எனக்குத் தெரியும் ஷோபா.. நான் அன்று அம்மாவுக்கு முடியவில்லையென்று உன் வீட்டுக்கு வேலைக்கு வந்ததும் நீ என் வீட்டுக்குப் போய் பார்த்து விட்டு கஞ்சியைச் சூடு பண்ணிக் குடுத்தியாம். மீதி இருந்த கஞ்சியை நீ குடிச்சியாம். இதில் இருந்தே தெரியுது, உன் அன்பு. சாதாரணமா பரிதாபத்தினால் வரும் அன்பு வேறு.. வாழ்க்கை முழுமைக்கும் வரும் அன்பு வேறு.. இதை நீ புரிந்து கொள்ளணும்..''

''இப்ப என்ன சொல்லணும்னு நீங்க எதிர்பார்க்கிறீங்க.. உங்களை வேண்டாம் என்றா..?''

பேசாமல் அவளையே பார்த்தான்.

அவள் பொரிந்தாள். ''ஒரு ஆண் மகன் எத்தனை உயர்வான இடத்தில் இருந்தாலும் சரி... ஏழ்மையான இடத்தில் இருந்தாலும் சரி.. தாயா இருந்தாலும்.. இப்படி வந்து கௌரவம் பார்க்காமல் ஒரு வீட்டில் வந்து சமைக்க மாட்டான். தான் ஒரு

வேலைக்காரியின் மகன் என்று வெளியே சொல்வதற்கே வெட்கப்படுவான்.. நீ.. நீ. அந்த மாதிரியில்லை. உன்னிடத்தில் அன்பு, பாசம் மீறிய ஒரு தாய்மையுணர்வு, இதை நான் உணர்ந்தேன். அது எப்படி என்று கேட்காதே.. அதை எனக்குச் சொல்லத் தெரியலே... அன்று ஒருநாள் காலேஜ் விட்டு வரும்போது ஏதோ பிரச்சனை. எல்லா வண்டி கார்களும் கல் எறிந்து உடைக்கப்பட்டன. டிரைவர் பயந்து கொண்டு வேறு எப்படி போக முடியும் என்று தவித்தபோது, நீ அப்பொழுது அங்கு வந்தாய். நீ டிரைவரை வேறு ரூட் சொல்லி சுத்திப் போகச் சொல்லிவிட்டு என்னை வண்டியில் கூட்டிக் கொண்டு போனாய். போகும்போதே.. என் வீட்டிற்கு ஃபோன் பண்ணி நான் பத்திரமாகக் கூட்டி வருகிறேன்.. என்று சொன்னாய். பயந்திருந்த நான் உன்னைப் பார்த்ததும் ஒரு பாதுகாப்பு உணர்வை அடைந்தேன். இதுக்கு மேலே நான் என்ன சொல்வதுன்னு எனக்குப் புரியலை."

"என்னைக் கல்யாணம் பண்ணிக்க இந்த ரீசன் மட்டும் போதாதே.. ஒரு உதவி பண்ணினதுக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா..?"

இதுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் உதடு துடிக்க, கண்களில் முத்துக்கள் சிதற, சிதறிய முத்துக்கள் கன்னத்தில் வழிந்தோட... மௌனமாக இருந்தாள்.

அவள் வலக்கையை எடுத்துத் தன் இடக்கையில் வைத்து வலக்கையால் மூடினான். அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"அப்புறம் ஏன்டா.. என் மீது லவ் இல்லை என்று சொல்றே..?" கண் சிமிட்டினான்.

"ம்.. இது.. வா.. லவ்.." என்று சிணுங்கினாள்.

"இதுதான் உணர்வுபூர்வமா உணர்கிற லவ்.. ஆத்மார்த்தமா நாம் நேசிக்கிற அன்பு.."



"இப்ப என்ன சொல்றீங்க நீங்க.. என்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியுமா.. முடியாதா.. நீங்கள்.."

"முடியாதுன்னா, என்ன பண்ணுவே.."

அவள் கோபமாக நிமிர்ந்தாள். "முடியாதுன்னா.. அப்பா கேட்டப்பவே.. ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டுப் போக வேண்டியதுதானே.. அப்புறம் எதுக்கு என்னை வரச் சொல்லி.." என்று அவள் படபடக்கும்போது.. அவன் பிடித்திருந்த அவள் கையை எடுத்து மென்மையாக முத்தமிட்டான்.

அவன் கலகலவென்று சிரித்தான்.

"ஐ லவ் யூடா செல்லம்!" என்றான் அவள் காதருகில்.

"அப்புறம் எதுக்கு இப்படிச் சொன்னீங்க?" என்றாள் கண் கலங்க.

"சே..சே.. இதுக்குப் போய் இப்படி கண் கலங்குறே.. அன்பு உன்னை இத்தனை பலவீனமாக்கும் என்று நான் நினைக்கவில்லை. எனக்கு முழுச் சம்மதம்.. உனக்கு சந்தோசம்தானே...?" என்றான்.

அவள் உதட்டைக் கடித்து, "ம்..ம்.." என்று தலையாட்டினாள்.

அவன் ஒற்றை விரலால் அவள் உதட்டைப் பிரித்துவிட்டான்.

"ம்.." என்று அவனை முறைத்தாள்.

அவன் புன்னகையுடன், "ஓகே.. நாம் சாப்பிடலாமா..? நாம் இரண்டு பேருக்கும் பிடித்ததை ஆர்டர் பண்றேன்," என்று பேரரிடம் கூப்பிட்டுச் சொன்னான்.

"ரமேஷ், ஒரு வார்த்தையில் உன்னைப் பிடிக்குது என்று சொல்வதற்குப் பதில் ஏன் என்னைப் போட்டு இப்படிப் படுத்தினீங்க.."

"உன்னைப் பிடிக்கலைன்னு சொல்ல முடியுமா ஷோபா..? நீங்க கேட்டதும் நான் பேராசைப்பட்டுச் சரின்னு சொல்லிவிட்டு,

பின்னாடி பல பணக்காரர்கள் போல் என் வீட்டு அடிமை நீ என்கிற மாதிரி நடத்தினா.. எனக்கு அது பிடிக்காது.. சுயமா.. தன்மானத்தோட வாழணும்.. நான் உன்னை வச்சு கண் கலங்காமே காப்பாத்தணும்.. அதில்தானே.. உண்மையான அன்பு இருக்கு.. உன் பணத்தில் நான் வாழ்ந்தால் சுயமரியாதையை நான் இழந்து விடுவேன்.. ஒரு கோடீஸ்வரரின் மருமகனா... இருப்பதை விட, ஒரு வேலைக்காரியின் மகனா இருப்பதைத்தான் நான் விரும்புறேன்... அப்புறம் உனக்கு மட்டும் கணவனாக..!'' கண் சிமிட்டினான்.

அவள் உதடு கலையாமல் சிரித்தாள்.

''நீ சிரிப்பதை விட கோபத்தில்தான் அழகா இருக்கேடா..!'' என்றான்.

''சரி. விடுங்க. கல்யாணத்துக்குப் பிறகு உங்களிடம் இருபத்து நான்கு மணி நேரமும் கோபமாகவே இருக்கேன்.''

''அது கெட்டுச்சு போ.. இப்படியே கோபமா இருந்தா எப்படிக் குடும்பம் நடத்துவது... கோபத்தோடவா.. அதுவும் நல்லாத்தான் இருக்கும்..''

முகம் சிவந்து செந்தாமரையானது.

''என்ன ஷோபா, கொஞ்சமா சாப்பிடுறே.. இன்னும் கொஞ்சம் வைத்துக் கொள்,'' என்றான்.

''போதும் ரமேஷ்.. இதுவே இன்று அதிகம்தான். மணியாச்சு. வீட்டுக்குப் போகணுமில்லே.. மறந்து விட்டதா..? அப்பா காத்திருப்பார்.

''சரி ரமேஷ், நான் என்ன சொல்லட்டும் அப்பாவிடம்..'?'

''நான் முத்தம் கொடுத்தேன்னு சொல்லு..''

பயந்து நிமிர்ந்தாள்.



## 48.



''என்ன இதுக்குப் போய் இப்படிப் பயப்படுறே.. சம்மதம்னு சொன்னாங்க என்று சொல்.''

''உங்க அம்மா சம்மதிப்பாங்களா.. ரமேஷ்..?''

''தெரியலை. நானே இவ்வளவு தயங்கினேன்.. இது ஒத்து வருமா என்று.. நான் பேசுகிறேன், அம்மா என்ன சொல்வாங்களோ.. தெரியலை.. பயமாத்தான் இருக்கு..''

''அம்மா.. வேண்டாம்னா.. என்னை விட்டுடுவீங்களா..''

''நீ கிளம்பு ஷோபா.. எனக்கே தெரியாத கேள்விக்கு உனக்கு நான் என்ன பதில் சொல்ல முடியும். நல்லதே நடக்கும். என்னை நீ நம்பலாம்.. சரியா..? எதையாவது போட்டுக் குழப்பிக் கொள்ளாதே...''

இருவரும் வெளியே வந்தனர்.

வண்டியில் ஷோபா கூடவே அவள் வீடு வரை வந்து விட்டு அவன் வீட்டுக்குப் போனான்.

ரமேஷ் மனதில் அம்மா எப்படி எடுத்துக் கொள்வார்களோ.. இதுவரை ஒரு எஜமானியா.. முதலாளியா பார்த்து இத்தனை வருடம் பழகி இன்று சம்பந்தி என்று ஆனால் அவர்களால் சாதாரணமாக இருக்க முடியாது.

அந்த ஞாயிறு சர்மா குடும்பம் தேங்காய் பழத் தட்டோடு வீட்டுக்கு வந்தது.

ராகினி புரியாமல் விழிக்க, சர்மா, ''நான் உங்கள் பையனுக்கு என் பொண்ணைக் கொடுக்கக் கேட்டு வந்திருக்கேன்... நீங்கள் யோசிச்சு நல்ல பதிலா சொல்லணும்..''

ராகினி அதிர்ந்து போய்விட்டாள். ''எ.. ன்.. பை.. ய.. னுக்கா.. உங்க.. க. பொண்ணை.. இது என்ன கேலிக் கூத்தா இருக்கு.

..ணி வச்சாலும் எட்டுமா..? உங்க அந்தஸ்து என்ன.. என் நிலைமை என்ன.. எனக்கு இதைக் கேட்கவே என்னவோ போல் இருக்கு..'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''ராகினிம்மா.. இந்த சாதி, அந்தஸ்து இதெல்லாம் விடுங்க.. எல்லாமே மனுசங்களாகத்தான் பிறந்தோம். இந்தப் பூமியில்.. இதெல்லாம் இடையில் வந்தது. நாமாகத் தேடிக்கிட்டோம். ஏன் நான் என்ன பரம்பரைப் பணக்காரனா.. எங்களைப் பற்றியும் உங்களுக்குத் தெரியும்தானே... இதையெல்லாம் விடுங்க... நீங்க இப்ப என்ன சொல்றீங்க.. எங்களுக்கெல்லாம் சம்மதம். உங்கள் பதில்தான் வேண்டும்,'' என்றார்.

''எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே.. என்னமோ என்னையறியாமல் எனக்குள் ஏதோ பயமா இருக்கு..' என்றாள்.

''நீங்க ஏன் பயப்படுறீங்க... என்று எனக்குத் தெரியும். இத்தனை நாள் இவங்க வீட்டில் வேலை பார்த்துவிட்டு இப்போ திடீர்னு சம்பந்தி ஆனா எப்படியிருக்கும் என்று தானே நினைக்கிறீங்க.. நீங்க அந்த மாதிரி எதுவும் நினைக்க வேண்டாம். உங்களுக்குச் சம்மதமில்லையென்றால் சரி, விட்டு விடுவோம். இதோட.. என்னா ஒரு மகன், அவனை வளர்த்து ஆளாக்க எத்தனை கஷ்டப்பட்டீங்க என்று எனக்குத் தெரியும். உங்களுக்குன்னு ஒரு விருப்பம் இருக்கும். மகனுக்கு எப்படிப் பெண் வர வேண்டும்.. என்று. உங்களுக்குத் திருப்தியாக இருந்தால் இதைப் பற்றி மேற்கொண்டு பேசலாம்,'' என்றார்.

''ஐயோ.. நான் அப்படியெல்லாம் நினைக்கலை.. ஏதோ ஒரு தயக்கம். அவ்வளவுதான்.. ஆனாலும் என்னை மீறிய படபடப்பு வருது,'' என்றாள்.

ஒரு அரை மணி நேரம் எல்லோரும் பேசினர். பின் ராகினிம்மா சம்மதம் சொன்னாள்.

இன்னும் இரண்டு மாதத்தில் கல்யாணம் என்று முடிவு பண்ணினர். இதற்கிடையில் பிப்ரவரி பதினான்கு காதலர் தினம்



வந்தது. கல்யாணம் பேசி முடித்தாலும் இருவரும் இதுவரை தனியாகச் சந்தித்துப் பேசவில்லை. நேரில் பார்த்தால் ஒரு ஹாய்.. புன்னகை. அவ்வளவுதான். ரமேசுக்கு ஆசை வந்தது. இந்தக் காதலர் தினத்தை ஷோபாவுடன் கழித்தான். அவளுக்கு அழகான கைக் கடிகாரம் ஒன்று வாங்கினான்.

மறுநாள் ஷோபா வீட்டுக்குப் போனான். அனைவரும் வரவேற்றனர். முன்னாடியே அம்மாவிடம் சொல்லிவிட்டான். நான் நாளை வீட்டுக்கு வருவேன் என்று.

பொதுவாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, ''நான் ஷோபாவைப் பார்க்கணும்,'' என்றான். இதுவரை அவள் கீழே வரவில்லை.

''மேலே அவள் அறையில் இருக்கா. போய்ப் பாருங்க ரமேஷ்,'' என்றனர்.

அவன் சிறிது தயங்கினான். ''இதுலே என்ன இருக்கு. போய்ப் பாருங்க.. நிருபா, நீ மேலே கூட்டிப் போய் ஷோபா அறையைக் காட்டு,'' என்றார் சர்மா.

''வா ரமேஷ்,'' என்று நிருபா கூட்டிப் போனாள்.

''என்ன ரமேஷ்.. பேசி முடிச்சு இத்தனை நாள் வராமல் ஒரு ஃபோன் கூட ஷோபாவுக்குப் பண்ணிப் பேசாதவன் இன்று ஷோபாவைப் பார்க்க வந்திருக்கே.. என்ன சமாச்சாரம்... இன்று அவ்வளவு முக்கியமான நாளோ.. ஷோபாவைப் பார்த்தே ஆகணும் என்று.'' கண் சிமிட்டினாள்.

''பின்னே.. இல்லையாக்கா... எங்களுக்கு முதல் வருடம் காதலர் தினம்.. நேரில் ஒரு வாழ்த்தாவது சொல்லணும்லே... அதான் வந்தேன்..''

நிருபா அவனை ஷோபா அறையில் விட்டுவிட்டுக் கிளம்பினாள்.

''அக்கா.. வாங்க. எங்கே போறீங்க... நாங்க என்ன அப்படி பேசப் போறோம்.. நீங்களும் எங்க கூட தாராளமாக இருக்கலாம்!'' என்றான்.

'இது உங்களின் முதல் சந்திப்பு. நீங்கள் பேச எவ்வளவோ இருக்கும்... நான் என்ன பண்ணப் போறேன்.. இங்கு உட்கார்ந்து.. எனக்கு வேலை இருக்கு.'' என்றாள்.

''உட்காருங்கக்கா. பேசலாம்..'' என்றான்.

இவர்களைப் பார்த்ததும் ஷோபா என்ன என்பதுபோல் எழுந்து நின்றாள். ரமேசை எதிர்பார்க்கவில்லை. ''வாங்..க..'' என்றாள் தடுமாற்றமாக.

''என்ன ஷோபா, எதுக்கு இந்தத் தடுமாற்றம்... நான் என்றைக்கும் உங்கள் ரமேஷ்தான்.. உன்னைப் பார்க்கலாம் என்று வந்தேன்..''

''என்ன உங்கள் ரமேஷா.. உன் ரமேஷ் என்று சொல்ல வேண்டியதுதானே..''

ரமேஷ் புன்னகையுடன் பாக்கெட்டில் கையைவிட்டு ஒரு சிவப்பு நிற ரோஜாவை எடுத்துக் 'காதலர் தின வாழ்த்துக்கள் ஷோபா' என்று நீட்டினான்.

ஷோபா வாங்கிக் கொண்டு நிருபாவைப் பார்த்து விழித்தாள்.

''என்ன நாம் கொடுப்பது என்று இந்த முழி முழிக்கிறாயா..? ஏன் உன் கையில் பென் வைத்திருக்காயே.. அதைக் குடேன்,'' என்றாள் நிருபா சிரித்துக் கொண்டே..

'ரமேஷ்.. நா.. குடுத்தா.. உடனே எதுவும் திருப்பித் தரணும் என்ற அவசியமில்லை ஷோபா.. திருப்பித் தந்தால்தான் அன்பை வெளிப்படுத்துவது என்றில்லை. நமக்குள் ஒரு புரிதல், பகிர்தல்தான். அதற்காக நீ ஒன்றும் சங்கடப்பட வேண்டாம்..''



''என்ன ரமேஷ் என்னமோ.. உன் பொண்டாட்டி வருந்தி.. கண்ணீரை ஆறாக ஓட விடுவது போல பேசுறே... அவனவன் லவ்வரைக் கூட்டிக்கிட்டு ஹோட்டல் ஹோட்டலா போறான்.. நீ என்னமோ.. வீட்டுக்கு வந்து இவளைப் பார்க்கிறே.. உன் கட்டுப்பாட்டுக்கும் ஒரு அளவு இருக்கு தெரியுமா..?'' என்றாள் கிண்டலாக.

''அக்கா! உங்களுக்குத் தெரியாததில்லை.. காதலர்கள் காதலர் தினத்தன்று மட்டும்தான் காதலர் தினத்தைக் கொண்டாடணும் என்று அவசியமில்லை. ஏன்.. தினம்.. தினம் கொண்டாட லாமே... யார் தடுக்கப் போறா?

''காதலர்கள் ஒவ்வொரு நாளும் காதலர் தினமா எடுத்துக்கணும்.. வருசம் பூரா... சண்டை போட்டுக்கிட்டு இந்த ஒரு நாளாவது என் கூட சண்டை போடாம இரு என்று ஹோட்டல் சென்று தண்ணியடித்துவிட்டு ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி தன் நிலையில்லாமல் யார் கூட ஆடுறோம் என்று கூடத் தெரியாமல் ஆடுவது காதலர் தினமா...? பார்க், பீச் என்று மறைவான இடத்தில் அமர்ந்து பார்க்கிறவர்கள் முகம் சுழிக்கும் அளவுக்கு அநாகரிகமாக நடப்பதுதான் காதலர் தினமா...? ஏன் அந்த ஒரு நாளை மட்டும் குறிப்பிட்டுக் கொண்டாடணும்? தினமும் பிப்ரவரி பதினான்காக நினைக்கலாமே... தினமும் லவ்வரைப் புகழ்ந்துக்கிட்டே இருக்க முடியாதுதான்.. பிரச்சனைகள் இல்லாமல் வாழ்க்கையில்லை. ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து ஏன் தினம் ஒரு ரோஸ் கொடுத்து ஐ லவ் யூனு சொல்லக் கூடாதா..? இந்தச் சொல், அன்பான பேச்சு பிரச்சனைகளை முடித்து வைக்காதா..? தினமும் லட்சக்கணக்கில் பொண்டாட்டிக்கு, லவ்வருக்கு வாங்கிக் கொடுத்தாத்தான் காதலர் தினமா..? இது ஒரு அன்புப் பரிமாற்றம்தான். ஃபோன்ல கூட இதைப் பரிமாறிக் கொள்ளலாம். இப்படி ஊர் சுற்றித்தான் அன்பை வெளிப் படுத்தணும் என்பதில்லை. முதலில் தனி மனித ஒழுக்கம் வேணும்.. அப்போதான் தப்புகள் நடக்காமல் இருக்கும்..''

''....''

''லவ்வரோட மணிக் கணக்கா வீட்டுக்குத் தெரியாமல் வண்டிக்கு பெட்ரோல் போட்டுக் கொண்டு ஊர் சுற்றி விட்டுப் பிரியும்போது சண்டையுடன் செல்வதா ஒரு காதலர்களுக்கு அழகு. எதுக்காக தனியாகச் சந்திக்கிறது. புரிந்து கொள்ளத்தான். அங்கே எங்கே புரிதல் இருக்கு? தேடல்தான் அதிகம் இருக்கு. மத்தியான நேரத்தில் நாம் சாப்பிடப் போகும்போது நீ சாப்பிட்டியானு ஒரு அன்பான வார்த்தை லவ்வருகிட்டேயோ.. மனைவிகிட்டேயோ.. கேட்டால் போதாதா..? இதைவிட வேறென்ன வேண்டும். பரிசுகள் குடுக்கலாம். குடுக்கக் கூடாது என்றில்லை. அதை ஏன் அன்று மட்டுந்தான் கொடுக்கணுமா..?

''ஏன் நம் முன்னோர், மூதாதையர் இப்படி காதலர் தினம் கொண்டாடித்தான் காதலை வெளிப்படுத்தினார்களாமா...? காதலைக் கட்டினவள்கிட்டே, காதலிகிட்டே வெளிப்படுத்த எதுக்கு காதலர் தினம்..

''இருட்டின் மறைவுக்குள் நடப்பதுதான் காதலர் தினமா.. வெளிச்சத்துக்கு வா.. இவதான் என் எதிர்கால மனைவி என்று வீட்டுக்குக் கூட்டிப் போய் அறிமுகப்படுத்து... காதலை ஐந்து ரூபாயிலும் வெளிப்படுத்தலாம், ஐந்து லட்சத்திலும் வெளிப்படுத்தலாம். நாம் எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பதுதான் காதலர் தினம். காதலர் தினத்தையே நான் தப்பு என்று சொல்லவில்லை. கொண்டாடும் விதத்தைத்தான் சொல்றேன்.. வெளியில் போறதைத் தப்புன்னு சொல்லலை. தப்பு நடந்திரக் கூடாதுன்னு சொல்றேன்.. நீங்க என்ன நினைக்கிறீங்கக்கா..?'' என்றான் ரமேஷ்.

''எல்லாம் சரிதான். இதை லவ்வர்ஸ் கேட்டாங்க, நம்மளைத் துரத்தி.. துரத்தி அடிப்பாங்க.. நீ இப்படிப் பேசி ஒரு ரோசோட முடிச்சுக் கொள்ளலாம் என்று நினைத்தாயா..?''

ரமேஷ் சிரித்தான்.



''அப்போ ஏதோ வெயிட்டா கொண்டு வந்திருக்கே.. நான் கீழே போய்க் குடிக்க ஏதாவது அனுப்புகிறேன். அப்புறம் ரமேஷ், உனக்கு மதியச் சாப்பாடு இங்குதான். சாப்பிட்டுவிட்டுத்தான் போகணும்,'' என்று கீழே சென்று விட்டாள்.

ரமேஷ் தான் வாங்கி வந்த வாட்சை அவள் கையில் கட்டி விட்டான். ''நீ இதை எதிர்பார்க்கலையா ஷோபா..?''

''இல்லை.''

இருவரும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு சாப்பிடக் கீழே சென்றனர். அங்கு பெரிய பொக்கே ஒன்று இருந்தது. அதை எடுத்து நிருபா ஷோபாவிடம் கொடுத்து ரமேஷிடம் கொடுக்கச் சொன்னாள். ஷோபா நீட்ட, 'தேங்க்யூ!' என்று வாங்கிக் கொண்டான்.

சென்னையில் வருணுக்கு ஜுரம் அதிகமாக இருந்தது. ஹாஸ்பிடல் போனதுக்கு டெஸ்ட் பண்ணிப் பார்த்துவிட்டு, மஞ்சள் காமாலை என்றனர். வாந்தி நிற்கவில்லை. குழந்தை துவண்டு போனான். 'அம்மா.. அம்மா..' என்று அழுதான்.

திவாகர் உடனே மும்பைக்குப் போன் போட்டு சர்மாவிடம் விசயத்தைச் சொன்னான். அவர், ''உடனே வருகிறோம்,'' என்றார்.

நிருபா சாப்பிட்டவுடன் திவாகர் ஃபோன் பண்ணினதைச் சொன்னார். அவள் அழுது விட்டாள். ''எப்படிப் பண்றாரு பாருங்கப்பா... அன்று எத்தனை கெஞ்சிக் கேட்டேன்... அவன் எப்படி இருப்பான்.. இப்போ.. ஹாஸ்பிடலில் நான் என்ன செய்வேன்?'' என்று அழுதாள்.

''சரிம்மா. நீ சீக்கிரம் கிளம்பு. சீமா, வர்றியா..'' என்றாள்.

''இல்லேங்க. என்னால் முடியாது.. எனக்கு முக்கியமான வேலை இருக்கு,'' என்றாள்.

"நிருபா, நான் வரட்டுமா..?" என்றார்.

"இல்லேப்பா.. உங்களுக்கு நாளை முக்கியமான மீட்டிங் இருக்கு. எப்படி நீங்கள் வர முடியும்? நான் மட்டும் போய்ட்டு வந்துர்றேன்..." என்று அவசரமாகக் கைக்குக் கிடைத்த துணியை பேக்கில் அடைத்துக் கொண்டு கிளம்பினாள்.

சர்மா அதற்குள் ஏர்போர்ட்டிற்கு ஃபோன் பண்ணி ஒரு டிக்கெட் வேண்டும் என்றார்.

## 49



ரமேஷ் கூட்டிப் போய் ஏர்போர்ட்டில் விட்டு வந்தான்.

நிருபாவுக்கு நெஞ்செல்லாம் பதைத்தது. குழந்தை எப்படி இருக்கோ என்று. அவள் கிளம்பியதும் சர்மா திவாகருக்குப் போன் பண்ணிச் சொன்னார். 'நிருபா மட்டும் வர்றா. நாங்கள் பிறகு வர்றோம்.. குழந்தையைப் பார்த்துக் கொள்ளுங்கள்," என்றார்.

நிருபா ஏர்போர்ட்டில் இறங்கியதும், திவாகர் காருடன் நின்றான். அவனைப் பார்த்ததும் இவன் எப்படி.. அப்பா சொல்லியிருப்பார் என்று நினைத்து, 'குழந்தைக்கு எப்படி இருக்கு?' என்றாள். கண்களில் கண்ணீர் வழிந்தது.

"ஜுரம் குறையவில்லை.. ட்ரிப் ஏறுது.. வாந்தி இன்னும் நிக்கலே.." என்றான் மெல்ல.

நிருபா எதுவும் பேசவில்லை. மௌனமாகக் கண்ணீர் உகுத்தாள்.

குழந்தையைப் பார்த்ததும் கதறி விட்டாள். குழந்தை மெலிந்து போய்ச் சோர்வாகக் கண் மூடிப் படுத்திருந்தான். திவாகர் கதவைச் சாத்தினான். அழுவது வெளியே கேட்கும் என்று.



"இப்ப உங்களுக்கு நிம்மதியா..? இந்தக் குழந்தையை எப்படியாவது அழிக்கணும் என்று என்ன வைராக்கியம் உனக்கு. நாங்கதான் உனக்குத் தொந்தரவு கொடுக்காமல் கண் காணாமல் தானே இருக்கோம்.. ஏன் இப்படி.. உன்னிடம் வந்து ஏதாவது கேட்டேனா.. என் குழந்தையைக் குடுத்து விடு.. என்று தானே கெஞ்சினேன்.. இப்போ இப்படிக் கிடக்கிறானே.. வருண்! அம்மா வந்திருக்கேன்டா... செல்லம். என்னைப் பாருடா.. என் கண்ணே.. எப்படி இருப்பான் புதுசா உன்கிட்டே.. என்னைப் பழிவாங்க இவனை இப்படிப் பயன்படுத்திக்கிட்டீங்களே... அப்படி என்னதாங்க மனசு உங்களுக்கு.." என்று அழுதாள்.

திவாகர் கீழே மண்டியிட்டு உட்கார்ந்து, கட்டிலில் உட்கார்ந்திருக்கும் நிருபா வயிற்றில் முகத்தை வைத்து, கைகளை இடுப்பைச் சுற்றிக் கொண்டு கதறிவிட்டான்.

"நிருபா! நீ குழந்தையைக் கூட்டிக் கொண்டு போய்விடு. எனக்கு யாருமே வேண்டாம்.. என்னை மன்னித்து விடு.. நான் யாரையும் பழிவாங்க இதைச் செய்யலை... நீ என்கூட இருக்கணும் என்றுதான் சொல்கிறேன். இனி நான் எதுவும் சொல்ல மாட்டேன்... நீயும் குழந்தையும் போய்விடுங்க.. நான் இனி உங்களைக் கூப்பிட மாட்டேன்!" என்று அழுதான்.

அவனின் கோபத்தை மட்டுமே பார்த்திருந்த அவளுக்கு இந்த அழுகை.. திகைக்க வைத்தது அவளை. பேசாமல் அமர்ந்திருந்தாள்.

இரண்டு நாளில் வீட்டுக்குக் கூட்டி வந்து விட்டனர். வருண் அம்மாவை விட்டுப் பிரியவேயில்லை.

"எங்கேம்மா போனீங்க.. நான் எத்தனை மிஸ் பண்ணினேன் தெரியுமா.. அப்பாவிடம் கேட்டால் நீங்கள் நாளை வருவீங்க.. என்றார். இப்போதான் வந்தீங்க.. அம்மா, என்னை விட்டுப் போகாதேம்மா... நீங்க எனக்கு வேணும்மா.. தாத்தா... பாட்டி..

எப்படி இருக்காங்க..?" குழந்தையாக இருந்தாலும் விபரமாகக் கேட்டது.

"இனி இருப்பீங்க இல்லேம்மா..' என்றது குழந்தை மீண்டும்.

"இருப்பேன்டா.. நீ பேசாமல் தூங்கு.." என்றாள்.

"ஏம்மா அழறீங்க... அழாதீங்கம்மா.. எனக்கும் அழுகை வருது.. அப்பாவும் இப்படித்தான் அழுதது!" என்றான்.

"சரி. நான் அழலை. இப்போ நீ ரெஸ்ட் எடு," என்று மகன் பக்கத்தில் உட்கார்ந்து தட்டிக் கொடுத்தாள். நிருபாவும், திவாகரும் தேவை என்றால் தவிரப் பேசிக் கொள்வதில்லை. நிருபா சாப்பிடத் தயங்கினாள்.

"உனக்கு இங்கு சாப்பிடப் பிரியமில்லையென்றால் நான் ஹோட்டலில் இருந்து வாங்கி வரட்டுமா?" என்றான்.

"இல்லை... நான் சாப்பிடுகிறேன்," என்றாள்.

திவாகர் இரண்டு நாள் கூடவே இருந்துவிட்டு, "இன்று நான் ஆபீஸ் போறேன். வேறெதுவும் வேண்டுமா?" என்றான்.

"இல்லை. ஒன்றும் வேண்டாம்.." என்றாள் எங்கோ பார்த்துக் கொண்டு.

சிறிதுநேரம் நின்று விட்டு மகனிடம் வந்து, "அப்பா ஆபீஸ் போகட்டுமா?" என்றான்.

"ம்.. போயிட்டு வாங்கப்பா," என்றான் பெரிய மனிதன் போல.

திவாகர் போய்விட்டான். நிருபா மகனுடன் விளையாடினாள். அவன் அப்பா வாங்கித் தந்த விளையாட்டுச் சாமான், டிரஸ், எல்லாத்தையும் காட்டினான். மதியம் சாப்பிட்டுவிட்டு, மகனுடன் தூங்கினாள். அவளுக்கு வந்ததில் இருந்து



தூக்கமேயில்லை. அசந்து தூங்கினாள்.

திவாகர் மதியம் வீட்டிற்கு வந்தான். மகனைப் பார்க்க. அம்மாவும் மகனும் தூங்குவதைப் பார்த்துவிட்டு உடனே சென்று விட்டான்.

ஒரு வாரம் சென்ற பின் ஒரு செக்கப்புக்குக் கூட்டிச் சென்றார்கள். 'மஞ்சள் காமாலை முற்றிலும் குணமாகி விட்டது. இனி பயமில்லை!' என்றார் டாக்டர்.

வீட்டுக்கு வந்ததும் வருண் அம்மாவிடம், "ஏம்மா, நீங்க அப்பா கூட சண்டையா... பேசவே மாட்டேங்கிறீங்க... அப்பா.. நீங்களும்!" என்றான். "அம்மா வந்த பிறகு என் கூடவே சரியாகப் பேசவில்லை. விளையாடவில்லை!" என்றான் வருண்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை வருண். உனக்கு உடம்புக்கு முடியவில்லையா, அதான் நீ ரெஸ்ட் எடுக்கணும் என்றுதான். வேறொன்றுமில்லை.."

தனியாக நிருபாவிடம், "குழந்தைக்கு நன்றாகி விட்டது. நீ குழந்தையுடன் ஊருக்குக் கிளம்பலாம். எப்போ என்று சொன்னால் நான் டிக்கெட் எடுக்க வசதியாக இருக்கும். ஏன்னா உனக்கும் வேலை இருக்கும்," என்றான்.

"உங்களுக்கு அந்த சிரமம் வேண்டாம். நான் என் ஆபீசுக்குப் போன் பண்ணிச் சொல்லி டிக்கெட் எடுத்து விட்டேன். எனக்கு இங்கு ஆபீசில் கொஞ்சம் வேலை இருக்கு. அதை முடித்துக் கொண்டு மறுநாள் காலை கிளம்புகிறேன்," என்றாள்.

சிறு மௌனத்துக்குப் பின், "சரி. அப்போ நான் நாளை வீட்டில் இருக்கிறேன். வருணைப் பார்த்துக் கொள்ள. நீ ஆபீஸ் போய்விட்டு வேலையை முடித்துக் கொண்டுவா.." என்றான்.

"எதுக்கு உங்களுக்கு வீண் சிரமம். என் குழந்தையை நான் கூட்டிக் கொண்டே போகிறேன் என்னுடன்," என்றாள் துடுக்காக.

"நீ வேலை பார்க்கும்போது குழந்தை என்ன பண்ணும்.. எத்தனை நேரம் பேசாமல் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கும். மழை வேறு வரும் போல் இருக்கு. நான் பார்த்துக் கொள்கிறேன். நாளை ஒருநாள் என்கூட இருக்கட்டுமே.. இனிமே.. நான் பார்க்க முடியாதில்லையா..?"

அவளுக்குச் சரீ என்றது.

மறுநாள் அவள் மட்டும் ஆபீஸ் போய்விட்டாள். திவாகர் குழந்தையுடன் பேசினான். மகன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான். மகனை வீடியோ.. போட்டோ எடுத்தான். 'வருண். நீ நாளை அம்மாவுடன் மும்பை போய்த் தாத்தா பாட்டியைப் பார். நல்லா படிக்கணும்!" என்றான்.

"சரிங்கப்பா." என்றான் குழந்தை சமத்தாக.

வெளியே கூட்டிப் போய்க் குழந்தைக்கு டிரஸ் எடுத்து வந்தான்.

மறுநாள் கிளம்பினர்.

திவாகர் டிரஸ்ஸைக் கொண்டு வந்து நிருபாவிடம் நீட்டினான். "இது குழந்தைக்கு.." என்று.

"எதுக்கு இதெல்லாம்? நான் வாங்கிக் கொடுப்பேன் என் குழந்தைக்கு.." என்றாள்.

"நான்... அப்படிச் சொல்லலையே.. நீ வாங்கிக் கொடுக்க மாட்டே என்று. வேண்டாம் என்றால் வைத்துவிடு. நிருபா! நீ பேசினவரைக்கும் போதும்.."

தனிக் காரில் மகனுடன் சென்றாள். திவாகரும், அவன் காரில் சென்றான். காரை விட்டு இறங்கியதும் மகனைக் கட்டிக் கன்னத்தில் முத்தமிட்டான். நான் வர்றேன்டா.. என்று மகனிடம் சொல்லிவிட்டு நிருபாவிடம் தலையசைத்து விடைபெற்றான். அவன் கண் கலங்கியதை நிருபா கவனித்தாள்.



"ஏன் மகனுடன் கொஞ்ச நேரம் இருந்துவிட்டுப் போவதுதானே.. நானா வேண்டாம் என்றேன். இல்லை, வேண்டாம் என்றால்தான் நீங்க கேட்பீங்களா..?" மனதுக்குள் நினைத்தாள்.

மும்பையில் வருணைப் பார்த்த அனைவரும் தூக்கிக் கொஞ்சினர். எதனால் இவள் வருணைக் கூட்டி வந்து விட்டாள் என்று மனதில் நினைத்தாலும் யாரும் ஏன் என்று கேட்கவில்லை.

மறுநாளில் இருந்து வருண் ஸ்கூல் போக ஆரம்பித்தான். இதோ ஆயிற்று ஒரு மாதம்.

வருண் தினம்.. தினம்... அப்பா எங்கே, எப்ப வருவார் என்று கேட்க ஆரம்பித்தான்.

அன்று காரில் வரும்போதே, "நீங்க எப்பப்பா வருவீங்க மும்பைக்கு.. ஏன் நான், அம்மா மட்டும் போகணும்? நீங்களும் வாங்க," என்றான்.

"இல்லை வருண். அப்பாவுக்கு இங்கு வேலை இருக்கு. அதை முடித்துக் கொண்டு நான் வந்துவிடுவேன்.. நீ இப்போ ஊருக்குப் போ... ஸ்கூல் இருக்குல்லே.." என்றான்.

மறுபடியும் - "அப்பா.. நீங்களும் வாங்களேன்.."

மகனை இறுக அணைத்துக் கொண்டான் பதிலேதும் கூறாமல்.

வருண் சர்மாவிடம் கேட்டான். "தாத்தா! எங்க அப்பா எப்ப வருவாரு? சீக்கிரம் வருவேன் என்று சொன்னார். ஏன் இதுவரை வரவில்லை. என் மேம்மிடம் என் அப்பா வருவார் என்று சொல்லியிருந்தேன். என் ஃபிரண்ட் கூட கேட்டா.. உனக்கு அப்பா இல்லையான்னு. முதலில் இல்லை என்று சொல்லியிருந்தேன்.. இப்போ தான் இருக்காரே... அதான்

அவளிடம் போய் எனக்கு அப்பா இருக்கார்.. நான் லீவு போட்டுவிட்டு என் அப்பாவிடம் தான் போய் இருந்தேன்.. என் அப்பா ரொம்ப நல்லவர். ஹேண்ட்சமா இருப்பாரு. நல்ல உயரம்.. என்று சொன்னேன்...

"தாத்தா! நான் பொய் சொல்றேனா.. அப்படிச் சொல்றா.. நான் கூட்டி வர்றேன் என்று பிராமிஸ் பண்ணியிருக்கேன். அப்பா வந்ததும் நான் கூட்டிப் போவேன் ஸ்கூலுக்கு!" என்றான். இதை எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தனர், நிருபா உள்பட.

"தாத்தா! ஏன் பேச மாட்டேங்கிறீங்க... நான் கேட்டது தப்பா? எனக்கு அப்பா வேணாமா? எல்லோருக்கும் அப்பா இருக்குதானே..? எனக்கு வேண்டும். எனக்கு அப்பா கூட தூங்க ரொம்பப் பிடிக்கும்.. நிறையக் கதை சொல்லுவார்.. அவர் நெஞ்சில்தான் நான் படுத்துத் தூங்குவேன்... எனக்கு அது ரொம்பப் பிடிக்கும்.. எனக்கு இப்போ அப்பா கூட தூங்கணும்..." என்று பேசிக் கொண்டிருந்த குழந்தை திடீரென அழ ஆரம்பித்தது.

எல்லோரும் திகைத்தனர். முதலில் சுதாரித்த சீமா, "இங்கே பார் வருண். நீ நல்ல ஸ்ட்ராங் பாய் தானே.. நீ பெரியவனாயிட்டேயில்ல.. இதுமாதிரி நீ அழலாமா? உன் பிரண்ட்ஸ் எல்லாம் தெரிந்தால் சிரிப்பாங்க... அப்பா வருவார். நீ சமத்தா அழாமே போய்த் தூங்கு!" என்றாள்.

"நான் பெரிய பையனா.. அப்பாவும் பெரியவங்கதானே... அவர் மட்டும் அழுதாங்க.. ஏப்பா அழறேன்னு கேட்டா... உன் அம்மாதான் என்னை அழவச்சுட்டா... என்று சொன்னாங்க.. பாட்டி! நீங்க பொய் சொல்றீங்க... என்னைப் பொய் சொல்லக் கூடாது என்று சொல்லிவிட்டு.." குழந்தை நிறுத்தியது.

சீமா அதிர்ந்தாள். "நான் பொய் சொன்னேனா..? நீ என்ன சொல்றே வருண், பாட்டி எப்போ பொய் சொன்னேன்.."



"நீங்க மட்டுமில்லே.. அம்மாவும்தான் பொய் சொல்றா..!" என்றான்.

இதற்கு யாரும் பதில் சொல்லாததால் வருணே பேசினான்.

"அம்மாவும் அப்பா வருவார் என்று சொல்றா.. நீங்களும் வருவார் என்று சொல்றீங்க.. எப்ப வருவார்.. எனக்கு இப்பவே அப்பா வேண்டும்!" என்று மீண்டும் அழுதது.

இதற்கு எல்லோரும் நிருபாவையே பார்த்தனர். அவளுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. எல்லாம் இவனாலே வந்தது. நாங்க பாட்டுக்குப் பேசாமே இருந்தோம். இங்கே வந்து இப்படி ஆர்ப்பாட்டம் பண்ணிக் குழந்தையைக் கூட்டிப் போய் இப்படி பண்ணிவிட்டானே... பேசாம இருந்த குழந்தை மனதில் இப்படி ஏக்கத்தை உண்டு பண்ணிக் கேள்வி கேட்க வைத்து விட்டானே..

## 50



"இத பார்.. இத்தனை வருடம் நான் வளர்த்து ஒரு மாசம் அப்பா கூட இருந்துவிட்டு வந்து என்னமோ அப்பாதான் எல்லாமே என்கிற மாதிரி அப்பாகிட்டே படுக்கணும், தூங்கணும், விளையாடணும் என்கிறான். எல்லோரும் என்னையே குற்றவாளி போல பார்க்கிறாங்க.. என்னால் அழறானாமா.. இவன்தான் அழ வைப்பவன். அதற்குத் தண்டனை வேண்டாமா..? நல்லா படட்டும்.. நான் எப்படி பிரிந்து இந்த ஒரு மாதம் வேதனைப்பட்டேன்.. நீயும் அனுபவி. இனி என் பிள்ளையை உன் கண்ணில் காட்ட மாட்டேன்.." மனதுக்குள் வெதும்பினாள்.

வருண் அழுகையை நிறுத்தவேயில்லை. கையில் இருந்த டம்ளரை எடுத்து வீசினான். நிருபாவிற்குக் கோபம் வந்தது. எழுந்து போய் அவன் கையைப் பிடித்து முதுகில் இரண்டு போட்டாள். இதுவரை மகனை அடிக்காத கை. "என்னடா

நினைச்சுக்கிட்டு இருக்கே மனசுல.. இனி சொல்வாயா.. அப்பா என்று கேட்பாயா...?'' என்று வாயில் ஒன்று போட்டாள். குழந்தை வீறிட்டுப் பயந்து அலறியது.

''வா.. வந்து தூங்கு!'' என்று தூக்கினாள்.

அது வராமல் தொங்கிக் கொண்டே... ''நான் அப்பாவிடம் தான் படுப்பேன்!'' என்று அழுதது.

நிருபாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இப்படித்தான் அழுதிருப்பானோ.. அம்மா வேண்டும் என்று. அதனால்தான் இவனுக்கு முடியாமல் போனதோ... இதனால்தான் என்கூட அனுப்பி விட்டானா..? தலையை வலித்தது அவளுக்கு.

பின் மெல்ல, ''சரி. வா. அப்பா வருவார்.. நீ தூங்கு. காலையில் வருவார்,'' என்றாள்.

''நீ பொய் சொல்றே.. நேத்து இதைத்தானே சொன்னே. அப்பா ஏன் வரலே.. இப்பவே ஃபோன் பண்ணு. நான் பேசணும்,'' என்றான்.

மீண்டும் அடித்தாள். ''அப்படியே அப்பன் புத்தி, பிடிவாதம், திமிர். பேச்சைப் பார். இந்த வயதில். ஒரு மாசம் கூட இருந்தியே, அந்த சகவாச தோசம்.. நீ அப்படித்தானே இருப்பே.. இத்தனை வருடம் வளர்த்த என்னை விட ஒரு மாதத்திற்கு முன் பார்த்த அப்பா உனக்குப் பெரிசாப் போச்சா..?'' நிருபா அழுதாள்.

நிருபா அழவும் சர்மா எழுந்து வந்து, ''நிருபா! என்ன இது.. நீயும் குழந்தை மாதிரி... குழந்தைக்கு என்ன தெரியும்.. அது யார்கிட்டே அதிக அன்பை அனுபவிக்குதோ.. அவங்களைத் தான் தேடும் மனசு. அவர் இந்த ஒரு மாதத்தில் எத்தனை அன்பைக் காட்டியிருந்தால் இத்தனை பேசுவான். அழுவான். அவன் கூட கிரிக்கெட் விளையாடியிருக்கார். ஸ்விம் பண்ணக் கூட்டிப் போயிருக்கார்.. இதெல்லாம் இந்தக் குழந்தைக்குப் பிடிக்குது. அப்பா இருந்தால்தான் செய்வார் என்ற ஏக்கம் வந்து விட்டது. நாம் நம் வேலைகளைத்தானே செய்கிறோம்...''



''நீங்களும் நானும் காட்டாத அன்பையா அவர் காட்டி விட்டார்..!''

''இதுதான் இரத்த பாசம் என்பது நிருபா. என்னதான் இருந்தாலும், பெத்த தகப்பன் இல்லையா..? நாங்க எப்படி ஊட்டி வளர்த்தாலும் அடுத்தவங்கதானே.. இதை நீ முதலில் புரிஞ்சுக்கணும்... குழந்தையை அடிக்காதே.. உன் ஆதங்கம் புரியுது.. இரண்டு பேரும் இந்தக் குழந்தை மீது பாசத்தை வைத்து அதற்கு வேதனையைக் கொடுக்குறிங்க.. அன்பு என்ற போர்வையில் ஆளுக்கொன்றை அதன் மீது போர்த்தி அதை ஆள நினைக்கிறீங்க.. அது மூச்சுத் திணறுது.. மூன்று பேரும் ஒரே போர்வைக்குள் வாங்களேன். எதுக்கு இந்தப் பிரச்னை. குழந்தை மனசு இப்போ யார் என்று தடுமாறுது. இந்த நேரத்தில் நீ சரியான முடிவு எடுக்கலைன்னா.. குழந்தையோட எதிர்காலம் திசைமாறிப் போய்விடும்.. குழந்தை மனசில் ஆழப் பதிந்தால் அது கடைசி வரை மாறாது..''

''.....''

''அவன் அங்கிருக்கும்போது உன்னைக் கேட்டு அழுதிருப்பான். இப்போ இங்கே வந்து அவரைக் கேட்டு அழுறான்.. உன்னைக் கேட்கவும் அனுப்பி விட்டார் உன்னிடம். இப்போ நீ என்ன செய்யப் போறே... அவரிடம் அனுப்பப் போறியா..? இந்த மனநிலையில் இந்தக் குழந்தையின் எதிர்காலம் என்ன? இது தகப்பனோட அன்புக்கு ஏங்கியிருக்கு என்று தெரியுது. இத்தனை நாள் அது தனக்கு அப்பா இல்லை என்று நினைத்திருக்குது. இப்போ அப்பா இருக்கார் என்று தெரிந்ததும் அந்த ஏக்கத்தை வெளிப்படுத்துது. இரண்டு அடி போட்டால் இது சரியாகிவிடுமா..? முடியாத குழந்தைக்கு மீண்டும் ஏதாவது வந்தால் என்ன செய்வே... குழந்தை போனால் போகட்டும் என்று நினைக்கிறாயா..? உன் பிடிவாதத்தால் நீ குழந்தையை இழக்கப் போறே.. நிருபா.. நான் இதுவரை இதைப் பற்றிப் பேசவில்லை. குழந்தைக்காக... குழந்தை மனசறிந்து

நடந்துக்கோ... அது எத்தனை உன் பேச்சில் நம்பிக்கை வைத்திருந்தால், ஸ்கூலில் எல்லோரிடமும் சொல்லிவிட்டு வரும். வரவில்லை என்றதும், நீ பொய் சொல்கிறாய் என்கிறான். அதற்குத் தெரியுமா, சரி - தப்பு. அதுக்குத் தெரிந்ததெல்லாம் அம்மா அப்பா தன் கூட இருக்கணும் என்று மட்டுந்தான்... சொன்னதைக் கேட்ட குழந்தை இன்று டம்ளரைத் தூக்கிப்போட்டு உடைக்குதுன்னா.. அந்தப் பிஞ்சு மனசிலே எத்தனை கோபம்.. ஆத்திரம், தான் ஏமாற்றப்பட்டோம் என்கிற ஆதங்கம். இதையெல்லாம் சொல்லத் தெரியாமல் டம்ளரை உடைத்தது. இதை இப்படியே வளர விட்டால்.. இவனோட எதிர்காலம் என்னாகும். இதுவரை நீ சொல்லியோ.. இல்லை நாங்கள் சொல்லியோ.. பேச்சைத் தட்டியிருக்கானா.. இன்று நீ இவ்வளவு சொல்லியும், அடித்தும் கேட்கவில்லை. இதை இப்படியே வளர்த்துவிட்டால், உன்னை மதிக்க மாட்டான். மனதில் மரியாதை இருக்காது. வெறுப்புத்தான் வளரும்..''

''....''

''நீ எதைச் சொன்னாலும் பொய் சொல்கிறாய் என்ற முடிவுக்கு வந்து விடுவான். இப்போ அம்மா சொல்றது சரி என்று நினைக்கத் தெரியாது. அப்பாவைக் காட்ட மாட்றாங்க என்ற நினைப்பு மட்டுந்தான் அதனிடம் இருக்கும். இதுவளர .. வளர.. தவறான பாதைக்கு வழி வகுக்கும். வீட்டில் அன்பு கிடைக்கவில்லையென்றால், அது என்ன செய்யும்? மற்ற குழந்தைகள் தந்தையுடனும், தாயுடனும் வரும்போது இந்தக் குழந்தைக்கு ஏக்கம் வரத்தானே செய்யும்.. இப்போ இருக்கிற குழந்தைகள் எல்லாம் விபரமா இருக்கு. அதிலும் உன் மகன் அதிபுத்திசாலி..''

நிருபா கண்களில் கண்ணீர் சரம் தொடுத்தது.

''உன் குழந்தையின் எதிர்காலத்தை மனதில் வைத்துக் கொண்டு இரண்டு பேரும் பேசி நல்ல முடிவுக்கு வாங்க.. அவன் முடிவைத் தெளிவா சொல்லிவிட்டான். இனி நீதான் முடிவெடுக்கணும். உன் எதிர்காலத்தைப் பற்றியும், உன் குழந்தை எதிர்காலத்தைப் பற்றியும். இந்த மனநிலையில் இருந்தால் அவனோட படிப்பு கெடும். மனநிலை பாதிக்கும். நீ படித்தவள். உனக்குச் சொல்ல வேண்டியதில்லை இனியும் என்று நினைக்கிறேன்..''



குழந்தையைத் தூக்கிக் கொண்டு அவள் அறைக்கு வந்தாள். குழந்தை அழுதழுது தூங்கி விட்டது. முகமும் மூக்கும் சிவந்து போயிருந்தன. நெற்றியின் மீது இருந்த முடியை விலக்கி விட்டாள். முதுகைத் தடவிக் கொடுத்தாள். தான் அடித்து விட்டோமே.. என்று மீண்டும் அழுதாள்.

குழந்தைக்கு ஜுரம் அடித்தது. அது அப்பா... அப்பா என்று முனகியது. விடிந்ததும் ஹாஸ்பிடல் கூட்டிப் போனாள். இப்படியே ஒரு மாதம் ஓடியது. கல்யாணமும் நெருங்கிவிட்டது.

குழந்தை சாப்பிடுவதில்லை சரியாக. யாருடனும் பேசுவதில்லை.. அது பாட்டுக்கு ஓரமாக உட்கார்ந்து நகத்தைக் கடித்தது. டாக்டரிடம் கூட்டிப் போய் ஆலோசனை கேட்டாள். அவரும் இதற்குத் தீர்வு அவன் அப்பா கூட இருப்பதுதான் என்றார்.

அன்று காலையில், ''வருண்... வருண்!'' என்று இரண்டு முறை கூப்பிட்டும் பேசாமல் நின்றான். மீண்டும் கூப்பிட்டு, ''வா. நான் டிபன் ஊட்டி விடுறேன்'' என்றாள்.

''வேண்டாம். எனக்குச் சாப்பிடத் தெரியும்!'' என்றான் பெரிய மனிதன் போல்.

அவளே பிரமித்தாள். எப்போ இப்படி பேசக் கத்துக்கிட்டான்.

''இதுநாள் வரை நானாகத்தானே சாப்பிட்டேன். ஆனா என் அப்பா எனக்கு ஊட்டி விட்டார்..'' என்றான்.

''என் அப்பா..'' இவளுக்குச் சுருக்கென்றது. அந்த அழுத்தமான வார்த்தை.

இவனை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் திணறினாள். அன்று இரவு, "உனக்கு அப்பாவைப் பிடிக்குமா?" என்றாள்.

"ம்..ம்.. நிறைய!" என்றான் கண்கள் மின்ன.

"நான் வேண்டுமா..? உனக்கு அப்பா வேண்டுமா?" என்றாள், அவனை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே...

"ஏம்மா நீங்கள் உங்க அப்பா அம்மா கூடத்தானே இருந்தீங்க.. இங்கும் ஷோபாக்கா.. மற்ற எல்லோரும்.. நான் மட்டும் ஏன்..? நீங்க ரெண்டு பேரும் வேணும்மா!" என்றான் ஏக்கமாக.

"நீ சென்னையில் அப்பா கூட இருக்கும்போது அம்மா வேணும் என்று கேட்டியா?" என்றாள்.

"ம்.. கேட்டேன்.. அப்பா இரண்டு வாரம் என் கூட இரு. நான் உன் அம்மா கூட அனுப்பி விடுகிறேன் என்றார். அது போல நீங்க வந்து என்னைக் கூட்டி வந்திட்டீங்க.. இப்போ நீங்கதான் என் அப்பாவிடம் அனுப்ப மாட்டேங்கிறீங்க!" என்றான் குற்றம் சாட்டுவது போல.

"ஏம்மா, அப்பாவை உனக்குப் பிடிக்கவில்லையா..? அப்பா உன் போட்டோ வைத்திருந்தார். அதற்கு முத்தம் கூட கொடுத்தார். நான் பார்த்தேன்," என்றான்.

அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"என் கூட கிரிக்கெட் விளையாடுவார்.. தோட்டத்தில் பால் விளையாடுவோம். எனக்கு எக்ஸர்சைஸ், ஸ்விம்மிங் எல்லாம் கத்துக் குடுத்தார். ஸ்கேட்டிங் கூட விளையாடணும்பா என்றேன். அவர் தோட்டத்தில் உனக்கு ஸ்கேட்டிங் பழக இடம் அமைத்துத் தர்றேன்னார்.."

ஒரு வாரமாக இதே யோசனையாக இருந்தாள். சர்மா சொன்னது காதில் ஒலித்தது மீண்டும். மகனை முன்னிட்டு நீ



எடுக்கப் போற முடிவுதான் அவன் எதிர்கால வாழ்வுக்கு அஸ்திவாரம். இப்போ விட்டு விட்டுப் பின்னாடி வருத்தப்பட்டு ஒன்றும் ஆகப்போறதில்லை. உன்னால் தப்பை மன்னிக்க முடியவில்லையென்றால் மகனுக்காகப் பொறுத்துப் போறதில் தப்பென்ன..? இனியும் இவன் முன்னால் சண்டை போட்டுக் கொண்டிருந்தால் அவன் மனநிலை பாதிக்கும். இனி திவாகர் வரமாட்டார். நீதான் பேசணும் அவரிடம்.. இல்லை, உனக்காக நான் பேசுறேன்," என்றார்.

அவளும் குழம்பினாள். ஷோபாவும் கல்யாணமாகிப் போய் விடுவாள். அஸ்வத்துக்கும் பேசி முடிக்கப் போறாங்க.. பின் நான் என் பிள்ளை மட்டும் இங்கே கொசுறாக... ஏதோ அடைக்கலம் கொடுத்தாங்க இத்தனை வருடம் மானத்தோட வாழ.. இதேபோல் குழந்தையை இனியும் இவர்களை நம்பி வளர்க்க முடியுமா..? எத்தனை யோசித்தாலும் அவனைக் கல்யாணம் செய்து கொள்ள மட்டும் விரும்பவில்லை. இல்லைன்னா கல்யாணம் செய்யாமல் சென்னை சென்று தான் ஒரு வீட்டில் இருந்து கொண்டால், பிள்ளை இருவரிடமும் இருந்த மாதிரி இருக்கும் என்று நினைத்து, திவாகரிடம் கேட்டாள்.

அவன் ஒரே பதிலாக, "இல்லை. அதெல்லாம் வேண்டாம். நான் தான் குழந்தையைக் கொடுத்து விட்டேனே... பிறகென்ன இந்த முடிவு.. கல்யாணம் செய்யாமல் எங்கே வந்து இருக்கிறே.. இப்போ இதற்கு அவசியமென்ன? இங்கபார், இந்தக் கல்யாணம் கூட குழந்தைக்காகத்தான். உன் கூட.. குடும்பம் நடத்திக் கூத்தடிக்க இல்லை. இதை முதலில் நீ புரிந்து கொள்ளணும்.."

பேசாமல் ஃபோனைக் கட் பண்ணினாள்.

கல்யாணத்திற்கு திவாகருக்குப் பத்திரிகை அனுப்பி ஃபோன் பண்ணிச் சொன்னார் சர்மா.

"வருகிறேன்," என்றான் திவாகர்.

இதற்குள் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த வருண் கேட்டைத் திறந்து கொண்டு வெளியே சென்று விட்டான். இதை யாரும் கவனிக்கவில்லை. ரோட்டில் அவன் அப்பா போல் உயரமா ஒருவர் சென்றதால் அப்பா தான் போகிறார் என்று போய்விட்டான். இவன் பின்னாடியே சென்று எந்தப் பக்கம் போனார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. மீண்டும் வீட்டுக்குப் போக வழி தெரியவில்லை. லைட் எல்லாம் எரியத் தொடங்கி விட்டது. இது மாதிரி நடந்து வெளியே வந்ததில்லை. இவன் அழுது கொண்டே வேறு தெருவுக்குச் சென்று விட்டான்.

வீட்டில் எங்கே வருணைக் காணவில்லை. தோட்டத்தில் தானே விளையாடிக் கொண்டிருந்தான் என்று எல்லோரும் தேடினர். எங்குமில்லை. நிருபா.. சர்மா.. என்று எல்லோரும் வந்து விட்டனர். வாட்ச்மேனிடம் கேட்டதுக்கு வெளியே போக வில்லை என்றான். வருண் பக்கவாட்டுக் கதவைத் திறந்து கொண்டுதான் வெளியே போவான்... அதனால் அவனுக்குத் தெரியவில்லை.

தெருவில் எல்லோரும் சென்று பார்த்தனர். கூட்டத்தில் எங்கும் காணவில்லை. எந்தப் பக்கம் போனான் என்று தெரியவில்லை. நிருபா சத்தமாக அழுதாள்.

சர்மா போலீசுக்கு ஃபோன் போட்டு விபரத்தைச் சொன்னார். அவர், 'கவலைப்படாதீங்க. நான் பார்க்கிறேன்,'' என்றார்.

அவர் ஃபோனிலேயே யார்.. யார்.. கூடவோ பேசினார்.

## 51



வருண் அழுது கொண்டே போனதை ஒரு ஆட்டோக்காரன் கவனித்தான். அவனிடம் போய், ''ஏன் அழறே..?'' என்றான்.

''எனக்கு.. வீடு.. தெரியலே..'' என்றான்.

''உன் பேர்... அம்மா பேர் என்ன?'' என்றான்.



அவன் சொல்லிவிட்டு, தாத்தா பேர் சர்மா என்றான்.

''சர்மா.. வா? ஃபோன் நம்பர் எதுவும் தெரியுமா உனக்கு..?''

''தெரியாது,'' என்றான்.

''சரி வா..'' என்று பக்கத்தில் இருந்த போலீஸ் ஸ்டேசனுக்குக் கூட்டிப் போய் விபரத்தைச் சொன்னான். அப்போதான் மேல் அதிகாரி பேசிவிட்டு ஃபோனை வைத்தார். இந்தப் பையனைப் பற்றி. உடனே ஆட்டோக்காரன் கூட்டி வரவும் மறுபடியும் அந்த அதிகாரிக்கே போன் பண்ணினார்.

அவரும், ''சரி. அவங்க வந்து கூட்டிப் போவாங்க. நான் சொல்றேன்,'' என்று சர்மாவுக்கு ஃபோன் பண்ணிச் சொன்னார். ''நீங்க போய்க் கூட்டி வாங்க,'' என்று.

சர்மா மட்டும் வந்து கூட்டிப் போனார். வருண் அழுதழுது முகமே வீங்கிவிட்டது. நிருபா அவனைப் பார்த்து, ''எங்கடா போனே... அம்மா எப்படித் துடித்துப் போனேன் தெரியுமா...? நீ இதுமாதிரி வெளியே போகமாட்டியே.. ஏன் போனே..?'' என்றாள்.

''நான் தோட்டத்தில் விளையாடிக்கிட்டு இருந்தேனா.. அப்பா மாதிரி ஒருத்தர் உயரமா ரோட்டில் நடந்து போவதைப் பார்த்தேன்.. அப்பாதான் என்று அந்த சின்னக் கதவைத் திறந்து கொண்டு அப்பா.. அப்பா.. என்று கத்திக் கொண்டே ஓடினேன். அவர் திரும்பவேயில்லை. காணாமல் போய்விட்டார்.. ஓடும் போது கீழே விழுந்து விட்டேன்,'' என்று கையைக் காண்பித்தான். கையில் இரத்தம் கசிந்தது.

அத்தனை பேரும் நடுங்கினர். நிருபாவைக் கேட்கவே வேண்டாம். அவள் இதயம் சுக்கு நூறாக உடைந்தது. அவன் சொன்னதைக் கேட்டு. சின்னப் பிள்ளை ஏதோ பேசி விட்டு கொஞ்ச நாளானால் மறந்து விடுவான் என்று நினைத்தாள். ஆனால் இவனோ.. வீட்டை விட்டுப் போகும் அளவுக்கு வந்துவிட்டான். எத்தனை ட்ராபிக்கான மெயின் ரோடு அது.

இவன் கீழே விழும்போது ஏதாவது வாகனம் எதுவும்.. எப்படி இவன் தப்பினான்.. ஐயோ. கடவுளே.. என்னை ஏன் சோதிக்கிறே... இவனுக்கு ஏதாவது ஆகியிருந்தால் என்னாவது. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அழுதாள். ஒரு மாதத்துக்கு முன் பார்த்த அப்பா மீது இத்தனை பாசமா...?

''அம்மா.. அப்பா.. என்னைப் பார்க்காமலேயே.. போயிட்டார். நீ தான் சண்டை போட்டியா.. அன்று ஹாஸ்பிடலில் மாதிரி,'' என்றான் குழந்தை.

அவள் தலையில் அடித்துக் கொண்டாள். ''ஆமாடா.. எனக்கு இதுதான் வேலை. உன் அப்பா கூட சண்டை போட. வேறு யாரோ போனதைப் பார்த்துட்டு நீ போனதுமில்லாமல் என்னைக் கேள்விக் கேட்கிறாயா..?'' என்றாள் கோபமாக.

அம்மா ஏதோ கோபமாகப் பேசுறா.. என்று பேசாமல் இருந்தான்.

சர்மா, ஷோபாவிடம், ''வருணைக் கூட்டிக் கொண்டு நீ மேலே போம்மா,'' என்றார்.

அவர்கள் போனதும் நிருபாவிடம் திரும்பி, ''நீ முடிவு எடுக்க வேண்டிய கடைசிக் கட்டத்திற்கு வந்துட்டே... எப்போ இவன் ரோட்ல போறவங்களைப் பார்த்து அப்பா என்று போனானோ... இனி எப்படி ஸ்கூல், வேறு இடம் என்று அனுப்ப முடியும். ஏதோ ஆட்டோ டிரைவர் நல்ல மனுசனா இருக்கப்போய் விசாரித்து ஸ்டேசனில் கொண்டு விட்டிருக்கான்.. வேறு எங்காவது கடத்திப் போய்க் குழந்தையை ஏதாவது பண்ணியிருந்தால் நீ என்ன செய்திருப்பே... நம் நல்ல நேரம் குழந்தை கிடச்சுட்டான். இது மாதிரி வேறு எதுவும் பண்ண மாட்டான் என்று என்ன நிச்சயம்.. குழந்தைக்குத் தெரியுமா.. இது தப்பு என்று சொன்னாலும் தான் புரியுமா? இத்தனை வாகனத்தில் ஏதாவது ஒன்றில் அடிபட்டிருந்தால் என்னாகியிருக்கும்? குழந்தை வருமா..? அவனை இனி மாற்ற முடியாது. நீதான் மாறணும். நான்



உன் அப்பா என்று நீ நினைத்தது உண்மை என்றால் நல்ல முடிவெடு. நான் உன் நன்மைக்குத்தான் சொல்றேன். திவாகர் தப்பு பண்ணியிருக்கலாம். ஆனால் இனியும் இப்படியே நடக்கும் என்று ஏன் நினைக்கிறே.. நாங்கள்லாம் இல்லே.. உன்னை அப்படியே விட்டுடுவோமா.. என்னதான் பிரச்சனை உனக்கு. அவர்தான் மனந் திறந்து மன்னிப்புக் கேட்டு விட்டார். மறக்கலைன்னாலும் மன்னிக்கக் கூடாதா..? உன் பிள்ளைக்காக.. நான் உன்னை இனியும் கட்டாயப்படுத்தப் போவதில்லை. நான் பேசி உன்னை ஒத்துக்க வைக்கலாம். அது சரிவராது. இது உன் வாழ்க்கைப் பிரச்சனை. இது நீதான் முடிவு பண்ணணும். உன் வாழ்வு உன் கட்டாயப்படுத்துவதில் அர்த்தமில்லை. உன் வாழ்வு உன் கையில். முடிவும் உன் கையில்!'' என்று உள்ளே போய்விட்டார்.

அவளுக்கு மகன் செய்தது, திவாகர் செய்தது எல்லா வற்றையும் நினைத்துப் பைத்தியம் பிடித்து விடும் நிலைக்குப் போனாள். வருணை நினைத்துப் பயந்தாள். இவனோட இப்படி பிரச்சனையா இருக்கே.. நிம்மதியாகவும் தொழிலைக் கவனிக்க முடியலை. இனியும் இவனை இப்படியே விட்டால், இவனை இழக்க நேரிடும். இந்த பிரச்சனைக்கெல்லாம் ஒரே வழி... கல்யாணம்.. இரவு முழுவதும் குமுறி.. குமுறி.. அழுதாள்.

எனக்குப் பிடிக்கவில்லை என்றாலும், நான் ஒத்துக் கொண்டுதான் ஆகணும். என்னை இந்த நிலையில் நிப்பாட்டி வைத்துவிட்டானே... என்று மீண்டும் அழுதாள்.

மறுநாள் காலையில் சர்மாவிடம், ''எனக்குத் திவாகரைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம்,'' என்றாள்.

அவள் இரவு முழுவதும் அழுதிருப்பது அவருக்குப் புரிந்தது. என்ன செய்வது? புண் ஆற வேண்டும் என்றால் அதைக் கிழித்துத்தானே ஆகணும்..''

''சரிம்மா நான் திவாகரிடம் பேசுகிறேன். அவர் கல்யாணத்துக்கு வர்றேன் என்றார். இந்த மேடையிலேயே

உங்கள் கல்யாணத்தையும் நடத்தி விடலாம். உன் விருப்பம் என்னம்மா?'' என்றார்.

''உங்கள் விருப்பம்பா..'' என்றாள்

அன்றே திவாகருக்கு ஃபோன் பண்ணி விசயத்தைச் சொன்னார். அவனும், ''சரி. நான் இன்றே கிளம்பி வருகிறேன். நான் நிருபாவிடம் பேச வேண்டும்,'' எனறான்.

''சரி. வாங்க,'' என்றார்.

திவாகர் அன்றே வருவான் என்று நிருபா நினைக்கவில்லை. அவன் ஒரு ஹோட்டலில் தங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

வருண் அவனைப் பார்த்ததும் ஓடி வந்து கட்டிக் கொண்டான். ஸ்கூல் கிளம்பி யூனிபார்மில் இருந்தான்.

''அப்பா! எனக்கு உங்க மேல் கோபம். நீங்க வேலை முடிந்து வருகிறேன் என்று சொன்னீங்க.. ஏன் வரவில்லை. தினமும் நான் தூங்கி விழித்ததும் இப்போ வருவீங்களா.. இல்லை, ஸ்கூல் விட்டு வந்ததும் வருவீங்களா.. என்று நினைப்பேன்.''

''அதான் அப்பா இப்போ வந்துட்டேன்ல.. நீ சாப்பிட்டியா?'' என்றான்.

''இனிமேல்தான்..''

''சரி வா.. நான் ஊட்டி விடுகிறேன்,'' என்று மகனை மடியில் வைத்துக் கொண்டு ஊட்டி விட்டான்.

''அப்பா, என்னை ஸ்கூலுக்குக் கூட்டிப் போங்கப்பா.. என் பிரண்ட்சுகளுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன்,'' என்றான்.

''சரி. நானே இன்று கூட்டிப் போகிறேன். யார் உன்னை இன்று கூட்டிப் போவா..?''

''இன்று அம்மா கூட்டிப் போறேன்னாங்க!'' என்றான்.



''சரி,'' என்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு கிளம்பும் போது, கார் சாவியை நீட்டினாள் நிருபா.

''நீயும் வா.. உன்னோடு நான் பேச வேண்டும்,'' என்றான்.

தயங்கி, பின், ''சரி...'' என்றாள்.

வருணுடன் பின்னால் ஏறப் போனாள். அவன் முறைத்தான். வருணைக் கொண்டு ஸ்கூலில் விட்டுவிட்டு நிருபாவுடன் ஒரு பார்க் சென்றான்.

''என்னை வான்னு கூப்பிடவும் அப்படித் தயங்குறே.. என்னைத் தெரியாதா உனக்கு? இல்லை, உன்னை ஏதும் பண்ணி விடுவேன் என்ற எண்ணமா..? அதுவும் குழந்தை முன்னாடி..''

பதில் சொல்லாமல் முகத்தைச் சுழித்தாள்.

''என்ன சுழிப்பு வேண்டிக் கிடக்கு. சரி நான் விசயத்துக்கு வர்றேன். சர்மா சார் ஃபோன் பண்ணிச் சொன்னார். நீ கல்யாணத்துக்குச் சம்மதிச்சுட்டே என்று. என்ன திடீர் முடிவு.. ஏன்? அதை நான் தெரிஞ்சுக்கலாமா?''

அவளுக்கு இதைப் பற்றி அவனிடம் பேச அவமானமாக இருந்தது. அவன் கேட்டபோது முடியாது என்று சொல்லிவிட்டு இப்பொழுது தானாகவே கல்யாணம் செய்துக்கிறேன் என்று சொல்வது எப்படி? இவன் சொல்லாமலும் விடமாட்டான்.

''என்ன, நான் கேட்டதுக்குப் பதில் வரலே?''

''உங்க மேலே கொண்ட ஆசையால் என்று நினைக்க வேண்டாம்..''

''சே..சே.. நான் அப்படியெல்லாம் தப்பா நினைக்க மாட்டேன். என் மேல் ஆசை கொண்டாய் என்று. அது மாதிரி வேணா நடிப்பாய்''

## 52

அவளுக்குக் கோபம் வந்தது. ''இதுக்குத்தான் கூட்டி வந்தீங்களா?''

அவன் தலை முடியை இடது கையால் கோதி விட்டான்.

''குழந்தைக்காகத்தான் இந்த முடிவு. அவன் தினம்.. தினம் அப்பா வேண்டும்.. என்று அழுகிறான். அதான்.''

''அப்போ.. நான் உனக்கு வேண்டாம். அப்படித்தானே..?''

''ஆமாம். குழந்தைக்காக மட்டும்தான் இந்தக் கல்யாணம். வேறொன்றுமில்லை.''

''அப்போது நீ எதையும் மறக்கவில்லை. மன்னிக்கவில்லை. அப்படித்தானே?''

பேசாமல் இருந்தாள்.

''சொல் நிருபா.. மன்னிக்காமல் இந்தக் கல்யாணம் எதுக்கு தினம் தினம் குழந்தை முன்னாடி சண்டை போடவா..? இன்னும் பிரச்சனைதான் அதிகமாகுமே தவிர குறையாது. மன்னிக்காமல் இந்தக் கல்யாணம் வேண்டாம்..''

''சரி. மறக்க முடியவில்லையென்றாலும் மன்னிக்கிறேன்,'' என்றாள் மெதுவாக. கண்கள் கலங்கின.

''ஆனால் எனக்கு ஒன்று செய்ய வேண்டும் நீங்கள்..''

''நிச்சயமாக.. என்ன அது?''

''இப்போ இல்லை. நேரம் வரும்போது கேட்பேன். நீங்கள் மறுக்கக் கூடாது. எனக்கு வாக்குக் குடுங்கள்!'' என்றாள்.

''சரி. நான் வாக்குத் தவற மாட்டேன்,'' என்றான்.



சர்மாவிடம் தன் முடிவைச் சொல்லிவிட்டு, ''நான் என் அப்பா, அம்மா மட்டுடன் வருகிறேன்,'' என்று சென்னை சென்று விட்டான்.

கல்யாணத்தன்று முதல் நாள் வந்தான். அன்றே சர்மாவிடம் சேலை, தாலி, செயின் என்று வாங்கப் பணத்தைக் கொடுத்து விட்டான். அவர் வாங்க மறுத்தார். ''நான் செய்கிறேன். அவளும் என் பெண்தான்,'' என்றார்.

''இல்லை. இதுமட்டும் என் செலவாக இருக்கட்டும். இது நிருபாவுக்குத் தெரிய வேண்டாம்,'' என்றான்.

அவள் அப்பாவையும், இவரையும் நினைத்துப் பார்த்தான். மனதுக்கு ரொம்பக் கஷ்டமாகவே இருந்தது. இப்பொழுது எத்தனை வேதனைப்படுவாள். என்னைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமேயில்லை. இப்போ குழந்தைக்காகத்தான் சம்மதிக்கிறாள். அவளுக்காக அவள் வாழவேயில்லை. முதலில் அப்பாவுக்காக.. இன்று மகனுக்காக.. தனக்காக அவள் என்று வாழ்வாள்.. மனம் கலங்கினான்.

அம்மா அப்பாவுடன் ஹோட்டலில் தங்கினான். இரவு மாப்பிள்ளை அழைப்பு. விடிந்தால் கல்யாணம்.

இரண்டு மாப்பிள்ளைகளும், மணமேடைக்கு வந்தனர். மந்திரம் முழங்க.. இருவரும் மணமகள் கழுத்தில் தாலி கட்டினர். திவாகர் முடிச்சுப் போட்டுக் கை எடுக்கு முன் அவன் கையில் கண்ணீர் பட்டுத் தெறித்தது.

மணமக்கள் வீட்டுக்கு வந்தனர். அன்று இரவு இருவருக்கும் அறையை அலங்காரம் பண்ணினர்.

திவாகர் சீமாவிடம், ''இன்றே எங்களுக்கு எந்தச் சடங்கும் வேண்டாம்,'' என்றான்.

நிருபா எப்பவும் போல் அவள் அறையில் படுத்துக் கொண்டாள். மகனுடன் திவாகர் படுத்துக் கொண்டான்.

மறுநாளே சென்னைக்குக் கிளம்பினான் திவாகர். ''சென்னையில் ஒரு ரிசப்சன் வைக்கிறேன். உங்களுக்கு அழைப்பு வரும். கட்டாயம் நீங்கள் அனைவரும் வரவேண்டும்.. ரமேஷ், சோபா! நீங்கள் ஒரு மாதம் தங்குமாறு வர வேண்டும். ஹனிமூனைச் சென்னையில் இருந்து கொண்டாடலாம்,'' என்றான் திவாகர்.

நிருபா, ''ரிசப்சன் எல்லாம் எதுக்கு? என்னைக் கேவலப் படுத்தவா... இங்கு என்றால் யாருக்கும் தெரியாது,'' என்றாள் கோபமாக.

''ரிசப்சன் வைத்தால்தான் நம் கல்யாணம் நாலு பேருக்குத் தெரியும். எதுவும் தெரியாம நாம இருந்தால் கேள்விகள் வரும் இல்லையா?''

''எப்படி ஐந்து வயதுக் குழந்தையோட ரிசப்சன்.. இது எப்படி என்று மட்டும் கேட்க மாட்டார்களா..? இது நாலு பேருக்குத் தெரிந்தால் அசிங்கமில்லையா..?''

''அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ கவலைப்படாதே,'' என்றான்.

''எப்படி நான் அசிங்கப்படப் போறேன் என்றா?''

''நிருபா, நான் பிசினஸ்சில் பல பேருடன் பழகுபவன். நான் இதைத் தெரியப்படுத்தித்தான் ஆகணும். எத்தனை நாள் பேசுவாங்க.. பேசட்டுமே.. இதற்கெல்லாம் பயந்து வாழ முடியுமா?''

''ஆமா உங்களுக்கென்ன அவமானம்...?''

''உனக்கொரு அவமானம் என்றால் அது எனக்கும்தான் நிருபா.. இதை முதலில் நீ புரிந்து கொள்ளணும். தொழில் ரீதியா நாம் வெளியில் போக வேண்டியிருக்கும்... அப்போ உன்னைக் கூட்டிக் கொண்டு திடீர்னு போய் நின்னா நல்லாவா இருக்கும்.. இது என்ன ரகசியக் கல்யாணமா.. எனக்கும் ஊரில் சொந்த



பந்தங்கள் இருக்கு.. அதைத் தவிர்க்கவும் முடியாது என்னால். புரிந்து கொள் நிருபா.. என்னை மீறி உன்னை யாரும் அவமானப்படுத்த முடியாது.''

''ஆமா.. நீங்களே அவமானப்படுத்தும்போது வேறு ஒருத்தர் எதுக்கு?''

சர்மா, ''சரிங்க மாப்பிள்ளை. நீங்கள் கிளம்புங்கள். என் பொண்ணு கொஞ்சம் கோபக்காரி.. நீங்கள்தான் பொறுத்துப் போகணும்.. கட்டாயம் நாங்கள் வருவோம். நிருபா, மாப்பிள்ளை சொல்வதும் சரிதான்.. ரிசப்சன் வைப்பதும் நல்லதுதான்,'' என்றார்.

''என்ன சார் இப்படிப் பொய் சொல்றீங்க.. என் பொண்ணுக்குக் கொஞ்சமாகக் கோபம் வரும் என்று. அப்போ இதுவே கொஞ்சம் என்றால் நிறைய வந்தால் எப்படி இருக்கும்... ஒரு அப்பாவியை உங்க பொண்ணுகிட்டே மாட்டி விட்டுட்டீங்க..'' என்றான் சிரித்துக் கொண்டே.

அனைவரும் சிரித்தனர்.

கிளம்பும்போது நிருபா, அழுது விட்டாள். எல்லோரும் அழுதனர். சர்மாவைக் கட்டிக் கொண்டு, ''அப்பா, நான் போகமாட்டேன்,'' என்று அழுதாள். ஷோபா கூட அழவில்லை.

அவரும் அழுது விட்டார். பின், ''அழாதே மகளே... எதுக்கும் நான் உனக்கு இருக்கிறேன் என்பதை மட்டும் நீ மறக்காதே.. நீயும் உன் குடும்பம், புருசன், புள்ளை என்று வாழம்மா..'' என்றார்.

வருணைத் தூக்கிக் கொண்டு அழுதனர். சீமா பிறந்ததில் இருந்து சீராட்டியவள். வருண் மேல் எல்லோருக்கும் பாசம் அதிகம். அவனும் அழுது விட்டான்.

நேரமாகி விட்டது என்று அஸ்வின் நினைவுபடுத்தினான். ''சரி, நாங்கள் கிளம்புகிறோம்,'' என்று அனைவரிடமும் சொல்லிவிட்டு விடை பெற்றனர்.

சென்னையில் திவாகர் அவன் அப்பா, அம்மாவை ஊருக்கு அனுப்பி விட்டான். மறுநாள் வருணை ஸ்கூல் சேர்த்தாள்.

நல்ல படியாக ரிசப்சனும் முடிந்தது. மறுநாள் நிருபா திவாகரிடம், ''நான் கல்யாணத்துக்கு முன் உங்களிடம் ஒரு வாக்குக் கேட்டேன். நீங்களும் குடுத்தீங்க.. இப்ப நான் கேட்டால் மறுக்க மாட்டீங்க என்று நினைக்கிறேன்,'' என்றாள்.

''நான் மறக்கவில்லை நிருபா...'' என்றான்.

''சந்தோசம். நான் இனி இங்கு உங்களுடன் இருக்க மாட்டேன். நான் தனியாக என் வீட்டிற்குப் போறேன்,'' என்றாள்.

மின்னாமல் முழங்காமல் அவன் தலையில் இடியைப் போட்டாள்.

''நீ என்னை மன்னித்தேன் என்றுதானே என்னைக் கல்யாணம் செய்துக்கிட்டே.. இல்லை, நான் உன்னைக் கட்டாயப்படுத்தினேனா...? நீ சொல்லவும்தானே.. இதற்கு நான் சம்மதித்தேன்..'' என்றான்.

''மன்னித்தேன்தான்... ஆனால் மறக்கவில்லை. மன்னித்தாலும் என்னை மாற்றிக்க அவகாசம் தேவை. அதில் இருந்து நான் வெளியே வர வேண்டும். நான் இங்கிருந்தால் எனக்கு அந்த நினைவுகள் அதிகமாகத்தான் வருது,'' என்றாள்.

''நிருபா, சமுதாயத்தில் நீயும் ஒரு அந்தஸ்தில் இருக்கிறே... நானும் இருக்கிறேன். கல்யாணம் ஆன மறுவாரமே நீ இப்படிப் பிரிந்து சென்றால் நமக்குத்தானே அசிங்கம். உன் கீழே வேலை பார்ப்பவர்கள் உன்னை மதிப்பார்களா..? வெளியில் மரியாதை தருவது போல நடிக்கலாம். ஆனால் மனதுக்குள்ளே ஏளனமாக நினைப்பார்கள். வாட்ச்மேன் முதற் கொண்டு உன்னை



அலட்சியமாகத்தான் பார்ப்பான். தப்பான கண்ணோட்டத்துடன் கூட.. உங்களுக்கு மட்டும் இல்லையா என்று கேட்கலாம்.. எனக்கும்தான். இல்லை என்று சொல்லவில்லை. என்னை விட இது உன்னை ரொம்ப பாதிக்கும். நீ வெளியில் நாலு இடங்களுக்குப் போறவ. மரியாதை கெடாமல் நடந்து கொள்..''

''எனக்கு வாக்குக் கொடுத்திருக்கீங்க.. என்பது நினைப்பிருக்கட்டும்.''

''அப்போ.. வருண் யார் கூட இருப்பான்?''

''இரண்டு நாள் இங்கே.. இரண்டு நாள் அங்கே.. என்று இருக்கட்டும்..''

''இது குழந்தையைப் பாதிக்காதா?''

''குழந்தைக்காகப் பேசுறீங்களா.. இல்லை உங்களுக்காகவா..?'' என்றாள் ஏளனமாக.

''நீ எங்கே வர்றேன்னு புரியுது.. எனக்கு உன் விருப்பம் இல்லாமல், அனுமதி இல்லாமல் என் நிழல் கூட உன் நிழல் மீது விழாது. நீ இதுக்காகத் தனியாகப் போக வேண்டாம்,'' என்றான் இறைஞ்சுவது போல.

''இல்லை. எனக்கு அதில்தான் சந்தோசம். நிம்மதி,'' என்றாள்.

''அப்ப சரி. நீ போகலாம்,'' என்றுவிட்டுப் போய்விட்டான்.

நிருபா இவளுக்கென ஒரு வீட்டைக் கட்டியிருந்தாள். வீட்டு வேலைக்கு, தோட்ட வேலைக்கு, வாட்ச்மேன் என்று எல்லாவற்றிற்கும் ஆள் போட்டாள். அன்றே கிளம்பி விட்டாள். குழந்தையை விட்டுவிட்டு, நாளை கூட்டிக் கொள்ளலாம். நமக்கே புது இடம் என்று நினைத்தாள்.

திவாகர் வீட்டுக்கு வரும்போது வருண் மட்டும் இருந்தான்.

திவாகருக்கு மனசெல்லாம் ரணமாக வலித்தது. எப்படிப் பேசுகிறாள். அவள் ஃபோன் போட்டாள். "வருண் என்ன பண்றான்?" என்று.

"சாப்பாடு ஊட்டித் தூங்க வைக்கிறேன்," என்றான்.

ஒரு நாள் சாப்பாடு ஊட்டி விடுகிறேன் வா என்று கூப்பிட்டபோது, நானா சாப்பிட்டுக்கிறேன் என்று அவன் சொன்னது ஏனோ நினைவு வந்தது.

"என்னைக் கேட்டானா..?"

"உன் மகனைப் பற்றி உனக்குத் தெரியாதா?"

"இல்லை. புது இடம். அதான் நாளைக்குக் கூட்டிக்கலாம் என்று தான் இன்று கூட்டி வரவில்லை."

"நீ ஆபீஸ் போயிட்டேன்னா.. ஸ்கூலில் இருந்து வந்தா யார் பார்த்துப்பா?"

"ஏன்.. அங்கே இருந்தாலும் அப்படித்தானே.. இருக்கும். அப்ப மட்டும் சீக்கிரம் வருவேனா?"

"ஏன்.. நிருபா இப்படிப் பண்றே..? என்னைப் பழிவாங்க உன்னைத் தாழ்த்திக்கிறே... கல்யாணம் ஆகாமல் தனியாக இருப்பது வேறு, கல்யாணம் ஆகித் தனியாக இருப்பது வேறு. மற்றவர்களின் பார்வையே உன் மேல் தவறாக விழும். இதை நீ புரிந்து கொள்ளவில்லையா?"

"இங்கே பாருங்க. நாம் இரண்டு பேரும் ஒரு பிசினஸ் பண்றோம். ஒரே வீட்டில் இருந்தால் எப்படி? நான் செய்வது உங்களுக்குப் பிடிக்காது. பொறாமைப்படுவீங்க.. பிரச்சனை வரும். அங்கு போகாதே.. இங்கு போகாதே.. என்று கண்டிசன் போடுவீங்க.. எனக்கு அது பிடிக்காது," என்று மூச்சு விடாமல் பொரிந்து கொட்டினாள்.



அந்தப் பக்கம் சிறு மௌனத்துக்குப்பின், "நிருபா.. நானா உன் வளர்ச்சியைப் பார்த்துப் பொறாமைப்படுவேன்?" நீ என் மனைவிடா.. நான் நீதான் என் பிசினசில் குறுக்கிடுறே என்று தெரிந்ததும் நான் எத்தனை சந்தோசப்பட்டேன் தெரியுமா.. ஆனந்தமா இருந்தது எனக்கு. நீ இப்படி சாதித்திருக்கே.. என்று. நான் ஏன் உன்னைச் சொல்லப் போறேன் எங்கும் போகாதே என்று. எனக்குத் தெரியாதா பிசினஸ்னா என்ன என்று. அதில் எத்தனை பிரச்சனை இருக்கும் என்று."

53



"நான் அதெல்லாம் சொல்ல மாட்டேன். நீ சொல்வது போல இங்கு இருந்தாலும் லேட்டாகத்தான் வருவோம். லேட்டாக வந்தாலும் ஒரே வீட்டில் இருப்போம் குழந்தையோட. நான் லேட்டா வந்தா நீ சீக்கிரம் வரலாம்.. நீ லேட்டா வந்தா நான் சீக்கிரம் வரலாம்.. படிப்பை இரண்டு பேரும் கவனிக்கலாம்.. இப்படி ஆளுக்கொரு பக்கமா இருந்து கொண்டு எப்படி படிப்பைக் கவனிக்க முடியும். இன்னை வரைக்கும் அம்மா வேண்டும் என்று அழுதபடியேதான் தூங்குறான்..

"பேசாமல், உன்னைச் சந்திக்காமல், குழந்தையைப் பார்க்காமல், கல்யாணமும் பண்ணிக்காமல் இருந்திருக்க லாமோ.. தப்பு பண்ணிவிட்டோமோ.. என்று தான் இப்போ நினைக்கிறேன். குழந்தைக்காக என்று கல்யாணம் செய்து கொண்டு நானும் பார்த்துக் கொள்ள முடியாமல், நீயும் பார்த்துக் கொள்ள முடியாமல் அது இரண்டுங்கெட்டானாக அலையப் போகுது. இது இப்படியே இருந்தால் படிப்பு கெடும். இங்கு வந்தால் அது என்ன படித்தது என்று எனக்குத் தெரியாது. அங்கு வந்தால் நான் என்ன கொடுத்திருக்கேன் என்று உனக்குத் தெரியாது. படிப்பில் கவனம் சிதறினால் மீட்டுக் கொண்டு வருவது ரொம்ப சிரமம். நாம் கட்டாயப்படுத்தினால் உன்னிடம்

ஒன்று சொல்லும், என்னிடம் ஒன்று சொல்லும். அதில் இருந்து தப்பிக்கப் பார்க்கும்,'' என்றான்.

''எல்லாம் உங்களை மாதிரியே இருக்கும் என்று ஏன் பிளான் பண்றீங்க.. அது மாதிரி எல்லாம் நடக்காது.. பேசாம படுங்க..'' என்று கட் பண்ணினாள்.

அவன் அதற்கு, ''பேசாம படுக்காமே.. உன்கிட்டே வந்து ஆடுறேனாடி..?'' என்று அவனும் வைத்தான்.

அவன் சொல்வதில் உண்மை இருந்தாலும் இவள் ஒத்துக் கொள்ளவில்லை.

புதுவீட்டில் தனியாக இருக்கப் பயமாக இருந்தது. கொஞ்சம் பழகினால் சரியாகிப் போகும்.

வருண் இங்கும் அங்குமாகப் பந்தாடப்பட்டான். திவாகர் கூட இருக்கும்போது.. திவாகருக்கு மெட்ராஸ் ஐ வந்து விட்டது. நிருபாவுக்கு ஃபோன் பண்ணி, ''நீ வந்து குழந்தையைக் கூட்டிப் போ. எனக்கு மெட்ராஸ் ஐ. குழந்தைக்கும் ஒட்டிக் கொள்ளும்,'' எனறான்.

அவளும் வந்து குழந்தையைக் கூட்டிச் சென்றாள். கண் ரொம்ப சிவந்திருந்தது. ''நா.. வேணா.. இருக்கட்டுமா..?'' என்றாள்.

''வேணாம்.. நான் பார்த்துப்பேன்.. நீ போ..'' என்றான்.

ஒருவாரம் சென்று கண் சரியானதும் நிருபா வீட்டுக்கு வந்தான் குழந்தையைப் பார்க்க. இன்றுதான் வருகிறான் இவள் வீட்டுக்கு.

குழந்தை ஓடி வந்து அப்பா என்று கட்டிக் கொண்டது. அவன் தூக்கித் தோளில் உட்கார வைத்துக் கொண்டு சுற்றிக் காட்டினான்.



இருவரும் தோட்டத்தில் போய்ப் பந்து விளையாடினர். குழந்தைக்குச் சமமாக இவனும் குனிந்து பந்தைப் போட்டான். பிடிக்க முடியாது போல் கீழே விழுந்து விட்டான். கை கொட்டிச் சிரித்தான் வருண்.

நிருபா இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கு மும்பையில் எல்லோரும் பிரியமாக இருந்தாலும் இந்த மாதிரி இவனுக்கு டைம் கொடுத்து விளையாடியதில்லை. ஓரமாக நின்று ரசித்தாள்.

பிறகு, ''வருண், வா.. விளையாடியது போதும். ஹோம் வொர்க் செய்ய வேண்டாமா?'' என்றாள். திவாகருக்கு ஒரு காபி கூட குடுக்கவில்லை இதுவரை.

அவனும் மகன் படிக்கட்டும் என்று போய்விட்டான். நிருபாவுக்கு மனசு கஷ்டமாக இருந்தது. காபியாவது குடுத்திருக்கலாம் என்று.

''நிருபா, நான் வேலை விஷயமா வெளியூர் போறேன். ஒரு வாரம் வர ஆகும்,'' என்றான்.

தலையை மட்டும் ஆட்டினாள்.

வருண், ''அப்பா, கண்ணாமூச்சி விளையாடலாம்பா.. நீங்க கண்ணைக் கட்டிக்குங்க.. நான் ஒளிஞ்சுக்கிறேன்,'' என்றான்.

சரி என்று நிருபாவின் தோளில் கிடந்த துப்பட்டாவை உருவித் தன் கண்ணைக் கட்டிக் கொண்டான். வருண் ஒளிந்து கொண்டான். வருணைத் தேடுகிறேன் என்று அந்தப் பக்கமாக வந்த நிருபாவைப் பிடித்துக் கொண்டால்: இறுக்கமாக.

''டேய்.. விடுடா... தடியா..'' என்றாள் அடிக் குரலில்.

வருண் வெளியே ஓடி வந்து கை தட்டினான். ''ஐய். அம்மாவை அப்பா பிடிச்சுட்டாங்க.. அம்மா! நீங்க தோத்துப்

போயிட்டீங்க.. நீங்கதான் அப்பாவை கிஸ் பண்ணணும்,'' என்றான்.

திவாகர் கண் கட்டை அவிழ்த்தான். நிருபா அவனைப் பார்த்து முறைத்தாள். ''நீங்க வேணும்னுதானே.. என்னைப் பிடிச்சீங்க..?'' என்றாள்.

''எப்படி குட்டிம்மா இவ்வளவு பெரிய ரகசியத்தைக் கண்டுபிடிச்சே.. எனக்கு ஆச்சரியமா இருக்கு.. வருண் சொன்னது புரியுதுல்லே... குடு!'' என்று கன்னத்தைக் காட்டினான்.

''ஓங்கி அறைஞ்சேன்னா.. கன்னம் பழுத்திடும். சரியா..?'' குழந்தைக்கு கேட்கா வண்ணம் மெதுவாகக் கடித்துத் துப்பினாள்.

''எதையாவது ஒன்னைக் குடுடி.. தங்கம்ஸ்..''

இது மாதிரி கேலி, கிண்டல் என்று இவனைப் பார்த்ததில்லை. இவள் குழந்தையுடன் புதுமாதிரியான திவாகரைக் கண்டாள்.

அன்று இரவு வருண் வற்புறுத்தவும் அங்கேயே தங்கினான். மகனை நெஞ்சில் போட்டுத் தூங்கப் பண்ணினான். அவனும் கழுத்தைக் கட்டிக் கொண்டு சுகமாகத் தூங்கினான்.

காலையில் சீக்கிரம் எழுந்து போய்விட்டான். மறுவாரம்தான் வந்தான். சீக்கிரமாகவே மகனைப் பார்க்க வந்தான். இன்னும் வருண் வரவில்லையென்றதும் சோபாவிலேயே தலைக்குக் கையை வைத்துத் தூங்கி விட்டான்.

என்ன இவன் இப்படிப் படுத்துத் தூங்கிவிட்டானா..? ரொம்ப அசதியா.. முகத்தை ஆராய்ந்தாள். அதில் சோர்வு தெரிந்தது.

வருண் வரும்போதே, ''அப்பா..'' என்று கத்திக் கொண்டே வந்தான்.



'உஸ்.. ஸ்.. சத்தம் போடாதே வருண். அப்பா தூங்குகிறார்... நீ இப்போ டிஸ்டர்ப் பண்ணாதே.. நீ சீக்கிரம் முகம் கழுவி விட்டு டிபன் சாப்பிடு. ஹோம் வொர்க்கெல்லாம் முடி. அப்பா அதுவரை தூங்கட்டும். நீ உன் வேலைகளை முடித்ததும் நீ அப்பா கூட விளையாடலாம்,'' என்றாள்.

அவனும் 'சரி' என்று தலையாட்டினான்.

வருண் ஹோம்வொர்க் முடிக்கவும், திவாகர் எழவும் சரியாக இருந்தது. அவனுக்குத் தலையை வலித்தது. சூடாகக் காபி சாப்பிட்டால் தேவலாம் போல் இருந்தது. எழுந்து முகம் கழுவி வந்தான்.

ஏனோ இன்று நிருபா டீ கொண்டு வந்து கொடுத்தாள்.

அவளைப் பார்வையில் விழுங்கிக் கொண்டே... டீயை வாங்கி, 'தேங்க்ஸ்' என்றான்.

முழியைப் பாரு.. என்று மனதினுள் திட்டினாள்.

''எனக்கும் டீ குடிக்கணும் போல் இருந்தது,'' என்றான்.

பின் வருணோடு அறையை இரண்டு பண்ணினான். மகனைக் கட்டிக் கொண்டு முத்தமழை பொழிந்தான். கண் அகலப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன நிருபா, அப்படிப் பார்க்கிறே.. என்னடா மகனுக்கு மட்டும் இப்படி முத்தம் கொடுக்கிறானே.. என்றா... மகனோட அம்மாவுக்கும் கிடைக்கும். நீ.. அனுமதித்தால்..''

''அது இந்த ஜென்மத்தில் நடக்காது.''

மரகதம், ''நான் கோயிலுக்குப் போயிட்டு வர்றேன் தம்பி. வர ஒரு வாரமாகும்,'' என்றார்.

''சரிங்கம்மா. பத்திரமா போயிட்டு வாங்க,'' என்று ட்ராவல்சில் டிக்கெட் எடுத்துச் செலவுக்குப் பணம் கொடுத்து

அனுப்பினான்.

அன்று காலையிலேயே மகனைப் பார்க்க வந்தான். சிறிது நேரம் இருந்துவிட்டு மகனை ஸ்கூலில் விட்டுவிட்டுச் சென்று விட்டான்.

மூன்று நாள் கழித்து மரகதத்திடம் இருந்து நிருபாவுக்கு ஃபோன் வந்தது. "நிருபா.. நான் மரகதம் பேசுறேன்... திவாகர் தம்பிக்கு ஃபோன் போட்டேன். கிடைக்கவில்லை.. இங்கு தானே இருக்கு.."

"இங்கு இல்லை. நீங்கள் எங்கே இருக்கீங்க?" என்றாள்.

"நான் கோயிலுக்குப் போயிருக்கேன்.. தம்பி தான் டிக்கெட் எடுத்து அனுப்பி வைத்தது. நான் நாளை காலை வந்து விடுவேன்," என்றார்.

நிருபாவுக்குத் திக்கென்றது. ஒரு வாரமா மரகதம்மா வீட்டில் இல்லையா? சாப்பாட்டுக்கு என்ன பண்றாங்க.. நானும் சாப்பிடச் சொல்லவில்லை. இங்கு வந்துவிட்டு வெளியில் சாப்பிடுவான் போல இருக்கு.. நேற்று இரவு ரொம்ப நேரம் இருந்தானே... அப்போ சாப்பிடாமல் தான் இருந்தானா..?

சாயந்திரம் வந்தவனைச் சாப்பிடச் சொன்னாள்.

என்ன என்பதுபோல் புருவத்தை உயர்த்திப் பார்த்தான்.

"நான் சாப்பிட்டுத்தான் வந்தேன். காலையில் இருந்து சாப்பிடவில்லை. நேரமுமில்லை. நல்ல பசி. அதான் வரும் வழியில் சாப்பிட்டேன்," என்றான்.

அவளுக்கு ஏனோ தவிப்பாய் இருந்தது. அதே நினைவில் ஆப்பிளைக் கையில் வைத்துக் கொண்டு நறுக்கினாள். வேகமாக அழுத்தவும் கத்தி பதமாக இருந்ததால் ஆப்பிளையும் நறுக்கி, அவள் உள்ளங்கையையும் ஆழமாக நறுக்கிவிட்டது. இரத்தம் கொட்டியது. "ஆ.." என்று கத்திவிட்டாள்.



திவாகர் வேகமாக ஓடி வந்தான், "என்ன?" என்று.

கையில் இரத்தம் ஒழுக நின்றிருந்தவளைப் பார்த்தான். "நிருபா.. என்ன இது?" பதறினான்.

"நான் ஆப்பிளைக் கட் பண்ணுகிறேன் என்று நறுக்கிக் கொண்டேன்."

துணியை நனைத்து இறுக்கமாகக் கட்டினான். அவளுக்கு வலி தாங்க முடியவில்லை. அழுது விட்டாள்.

"அழாதே!" என்று மார்போடு அணைத்துக் கொண்டான்.

"வருண், நீ பத்திரமாக இரு." சமையல்காரம்மாவிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு நிருபாவை ஹாஸ்பிடலுக்குக் கூட்டிப் போனான்.

கட்டுப் போட்ட துணியெல்லாம் நனைந்து விட்டது இரத்தத்தால்.

டாக்டர் பார்த்து மருந்து போட்டுக் கட்டுப் போட்டுவிட்டார். "தண்ணி படாமல் இருக்கணும்," என்றார்.

வலி தெரியாமல் இருக்க ஊசி போட்டு மாத்திரை கொடுத்தார். "நாளைக்கு மறுநாள் வாருங்கள்," என்றார்.

காரில் வரும்போது, "வலிக்குதாடா...?" என்றான்.

"ரொம்ப வலிக்குது." அழுதாள். தன் தோளில் சாய்த்துக் கொண்டான். "சீக்கிரம் சரியாகி விடும். வலி குறைய ஊசி போட்டிருக்கார். நீ தூங்கு," என்றான். வீட்டுக்குப் போனதும் இட்லி வைத்து ஊட்டப் போனான்.

அவள், "நானே.." என்றதுக்கு, "பேசாமல் சாப்பிடுடா. நிரு... ஏன் இப்படிப் பண்றே.." என்று ஊட்டி விட்டு வாய் துடைத்து, மாத்திரை போட உதவி பண்ணி சிறிது நேரம் உட்காரு என்று சோபாவில் உட்காரச் சொல்லிவிட்டு மகனைக் கவனித்தான்.

அவனையும் சாப்பிட வைத்துத் தூங்கப் பண்ணினான்.

நிருபாவைக் கூட்டிப் போனவன், டிரஸ் மாற்றிப் படுக்கச் சொன்னான். படுத்தவள் தலையை எடுத்து தன் மடி மீது வைத்து முடியைக் கோதிக் கொடுத்தான். அவளுக்குக் கண்ணீர் வடிந்தது. இவன் கண்ணீர் அவள் முகத்தில் பட்டுத் தெறித்தது.

கண்களை இறுக மூடிக் கொண்டாள். உடல் ஓசையின்றிக் குலுங்கியது.

அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான். அதில் காமம் இல்லை.

வலி தாங்க முடியாமல் அன்று இரவு ஜுரம் அடித்தது.

காலையில் பல் விளக்க உதவி பண்ணிட்டு, ''குளிக்கலையா.. நிரும்மா?'' என்றான்.

''குளிக்கணும்..'' என்றாள் தயக்கமாக.. ''நான் சமையல்காரம்மாகிட்டே வேணா குளிச்சுக்கிறேன்.''

## 54



''ஏன்.. அவகிட்டே அவுத்துப்போட்டுக் காட்டலாம்.. என்கிட்டே காட்டக் கூடாதா?'' என்றான் கோபமாக.

''எனக்குத் தெரியும். உங்க வேலையைப் பாருங்க..''

பேசாமல் குளித்தாள்.. அவளே மெல்ல...

இரண்டு நாள் ஆபீஸ் போகாமல் கூடவே இருந்து கவனித்தான். மறுநாள் ஹாஸ்பிடல் கூட்டிப் போனான். கட்டைப் பிரித்து மீண்டும் போட்டுவிட்டார்.

வலி குறைந்திருந்தது. அன்று ஞாயிறு.

''நிருபா, உனக்கும் வீட்டுக்குள்ளேயே இருக்க கஷ்டமா இருக்கும். பக்கத்தில் நமக்கு ஒரு பண்ணை இருக்கு. வருணுக்கும் லீவு தானே. போயிட்டு வரலாமா?'' என்றான்.

வருணும் ஆசைப்படவே, சரி என்றாள். மதியம் சாப்பிட சாப்பாடு என்று எல்லாமே தயாராக்கிக் கொண்டு சென்றனர்.

பெரிய தோட்டம். வீடு ஓட்டு வீடுதான். இருந்தாலும் அழகாக இருந்தது. சுற்றிலும் தென்னை மரங்கள். நடுவில் வீடு. தோட்டத்தில் பயிர்கள் போட்டிருந்தான். காற்று குளு..குளு.. என்று வீசியது.

வருண் குருவி, காக்கா, புறா இவைகளைப் பார்த்து விரட்டி விளையாண்டான். நிருபா தனியாக வாய்க்கால் ஓரமாக நடந்து சென்றாள். மனதுக்குள் ஏதோ.. அமைதி நிலவுவது போல் இருந்தது.

திவாகரின் தொடுகையும், அன்பான பேச்சும், ஆறுதலான அரவணைப்பும், நிருபா எதிர்பார்க்காதது அவனிடம். எப்படி இத்தனை மென்மை அவனிடம். மென்மை என்பதே மருந்துக்குக் கூடக் கிடையாதே அவனிடம்.. இது நிஜமான அன்பா என்னிடம்..? மனம் குழம்பினாள்.

மதியம் சாப்பிட்டனர். பின் மூவரும் ஒரு குட்டித் தூக்கம் போட்டனர். மாலை எழுந்து சிறிது நேரம் நடந்தனர். நிருபா வரவில்லை என்று சொல்லிவிட்டாள்.

மறுநாள் வருணை ஸ்கூல் கொண்டு விட்டு வந்தான். ''உனக்கு எதுவும் தேவையா நிருபா?'' என்றான்.

''தேவையில்லை.'' என்றாள்.

திவாகர் போய்விட்டான்.

அன்றிலிருந்து இருவருக்கும் ஒரு இறுக்கம் இருந்தது. இப்படியே ஓடின நாட்கள். திவாகர் இரண்டு நாளாக நிருபா வீட்டுக்கு வரவில்லை.

அன்று இரவு தோட்டத்தில் நிருபாவும், வருணும் நடந்து கொண்டிருந்தனர். வருண், "அம்மா, என்னை ஏதோ கடிச்சுருச்சு," என்று கத்தினான்.

சிறிது நேரத்திலேயே மயக்கம் போட்டு விழுந்தான். வாயில் நுரை தள்ளியது.

நிருபா கதறித் துடித்து விட்டாள். திவாகருக்கு ஃபோன் போட்டாள். திவாகர் நிருபாவின் நம்பரைப் பார்த்து விட்டு இவ எதுக்கு இந்த நேரத்தில் ஃபோன் பண்றா.. இதுவரை இப்படி பண்ணியதில்லையே என்று நினைத்து ஃபோனை ஆன் பண்ணி, "ஹலோ என்ன நிருபா?" என்றான்.

அவள் சத்தமாக அழுதாள். சீக்கிரம் வாங்க.. வருண். வருண்.. ஏதோ கடிச்சுருச்சு.. மீதியைக் கேட்கவில்லை. அதற்குள் காரை எடுத்துக் கொண்டு பிரதான சாலைக்கு வந்துவிட்டான். எப்படித்தான் இவ்வளவு சீக்கிரம் வந்தானோ.. அவனுக்கே தெரியவில்லை.

மகனைத் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு வேகமாகப் பறந்தான். முதலிலேயே டாக்டருக்கு ஃபோன் பண்ணிச் சொல்லி விட்டான். அதனால் ரெடியாக இருந்தனர்.

டாக்டர் எல்லா வழியிலும் முயன்றார். விஷம் நன்றாக ஏறிவிட்டது. இரண்டு நாள் போனால்தான் எங்களால் உறுதியாகச் சொல்ல முடியும் என்றார்.

திவாகர் துடித்து விட்டான். டாக்டர் சொன்னதைக் கேட்டு நிருபா மயக்கம் போட்டுக் கீழே விழுந்தாள். திவாகர் என்ன செய்ய முடியும்? நிலைதடுமாறிப் போனான்.

மயக்கம் தெளிந்து எழுந்த நிருபா திவாகரைக் கட்டிக் கொண்டு அழுதாள். அவளை மார்போடு அணைத்துக் கொண்டான். உதட்டை இறுகக் கடித்துக் கொண்டான். எந்த ஆறுதலும் சொல்ல முடியவில்லை அவனால்.



"ஏதாவது சாப்பிடு நிருபா.. உனக்கும் தெம்பு வேணாமா?"

"எனக்கு எதுவும் வேணாம்.. என் பிள்ளையை மட்டும் என்கிட்டே குடுத்திடுங்க.. என் பிள்ளை இல்லை என்றால்.. நான் உயிருடன் இருக்க மாட்டேன்... எனக்கு வேணும்.. எனக்கு என் பிள்ளை வேணும்.." பிதற்ற ஆரம்பித்தாள்.

டாக்டர் அவளுக்குத் தூக்க ஊசி போட்டுத் தூங்க வைத்தார்.

எந்த அசைவுமின்றிப் படுத்திருந்தாள். வருண் பற்றி மறுபடியும் டாக்டரிடம் கேட்டதுக்கு, 'நீங்கள் வீட்டுக்குத் தூக்கிட்டுப் போங்க," என்றார்.

திவாகரின் இதயம் சுக்கு நூறாக உடைந்தது. நிருபா டாக்டரின் காலில் விழுந்து விட்டாள். "என் பிள்ளையை எப்படியாவது காப்பாத்துங்க டாக்டர். அவன் இங்கேயே இருக்கட்டும்," என்று அழுதாள்.

திவாகரின் கண்ணீர் ஆறாக ஓடியது. மகன் கையை எடுத்துத் தன் கையில் வைத்துக் கொண்டு மௌனமாகக் கண்ணீர் வடித்தான்.

இரண்டு நாள் சென்று லேசான அசைவு தெரிந்தது. டாக்டரிடம் ஓடினான். டாக்டர் பார்த்து விட்டு, "ஒரு ஐம்பது பர்சன்ட் நம்பலாம்!" என்று விட்டுப் போய்விட்டார்.

திவாகர் வேண்டாத தெய்வம் இல்லை. வருண் மீண்டும் கண் விழித்தான். இனி பயப்பட ஒன்றுமில்லை என்றதும்தான் அவனுக்கு உயிரே திரும்பி வந்தது.

நிருபா மகனைப் பார்த்ததும் கட்டி அழுதாள். திவாகர், "நிருபா, அவன் பயப்படப் போறான். பேசாமல் இரு.." என்றான்.

ஒரு வாரம் கழித்து வீட்டுக்கு வந்தனர். திவாகர் நிருபாவை வீட்டில் விட்டுவிட்டு பேசாமல் வெளியேறினான்.

நிருபாவிடம் இந்த ஒரு வாரமாகத் திவாகர் பேசவில்லை. கோபமாக இருப்பது புரிந்தது. இனியும் இங்கு தனியாக இருப்பது சரியில்லை. அன்று ஏதாவது ஆகி இருந்தால் என்னாகும்? நாம் அவனுடனே.. இருக்கலாம். அவளாலும் சமாளிக்க முடியவில்லை. வேலை பார்க்குமிடம் போய், ஆபீஸ் போய் மற்றவைகளை நிர்வாகம் பண்ணி சீக்கிரம் மகன் வந்துவிடுவானோ.. என்று அதே மனநிலையில் இருக்க முடியாமல் அவசர அவசரமாக... வந்து.. அப்பப்பா.. மூச்சு விட முடியவில்லை அவளால். வீட்டு நிர்வாகம் வேறு. முழி பிதுங்கியது அவளுக்கு இதில் இவனுக்கு வேறு இப்படி ஆகிறது.

அங்கு மும்பையில் வருணைச் சீமா பார்த்துக் கொண்டாள். ராகினிம்மா இருந்தார்கள். இவள் எந்த டென்சனும் இல்லாமல் இருந்தாள். இப்போ சமையல்காரம்மாவிடம் சொன்னால், நான் சொல்வதைக் கேட்க மாட்டேன்கிறான் என்று சாப்பாடு ஊட்டுவதில்லை. இவளுக்கு நிம்மதியேயில்லை.

வருண், வந்து நாம் அப்பா கூடவே போகலாம் அம்மா.. இங்கு இருந்தால் எனக்குப் பயமாக இருக்கு என்று அன்று இரவு அழுதான். அப்பாவை வரச் சொல்லுங்க என்று. என்னமோ இவளுக்கும் பயமாகவே இருந்தது

நிருபா ஃபோன் பண்ணினாள்.

''என்ன?'' என்று யாரிடமோ பேசுவதுபோல்.. உள்ளே வலித்தது. எதையும் காட்டிக் கொள்ளாமல், ''வருண் அழறான். நீங்க வாங்க,'' என்றாள்.

''இந்த நாய்ப் பொழப்பு எத்தனை நாளைக்குடி..'' என்றான் சுள்ளென்று. ''என்.. நீயேதான் எல்லாமே பார்த்துக் கொள்வே.. முடிவெடுப்பே... இப்ப என்ன..? உன் அப்பான் செத்துட்டான் என்று சொல் உன் பிள்ளைகிட்டே... இரண்டு பேரும் என்னை இப்படி உயிரோடு சித்திரவதை செய்வதற்கு இதுவே மேல்.. ஒரு நிமிசமாவது நிம்மதியாக இருக்க முடியுதா உங்களால் எனக்கு



ஆணவம் புடிச்சு அலஞ்சா.. இப்படித்தான்டி இருக்கும்.. உன் பிடிவாதத்தால் பிள்ளையையும் கொன்று விடு.. பிறகு நானும் இருக்க மாட்டேன்.. நீ நிம்மதியா இரு. உனக்கு அதுதானே தேவை... அப்பா, அம்மா இரண்டு பேர் வளர்க்கும் பிள்ளைகளே... திசைமாறிப் போற இந்தக் காலத்துல... இப்படிப் போட்டு அலைக்கழிச்சா.. அவன் என்ன பண்ணுவான் சொல்லு.. சுயநலக்காரி.. என்ன சொல்றேன் நான்.. ஏ.. இப்படி அந்த வீட்டில் தனியா போய் இருந்துதான் உன் வெறுப்பை என்னிடம் காட்டணுமா.. இங்கே இருந்தா,. உன்னை நான் கடிச்சா குதறிடுவேன்... ஏன்டி புத்தி உனக்கு இப்படிப் போகுது.. ஒரு புள்ளையை ஒழுங்கா வளர்க்கத் துப்பில்லை.. இவ பிசினஸ் பண்றாளாம்.. சிறுக்கி. ஒரு நாளைக்கு நிம்மதியா தூங்க முடியுதா.. என்னால.. நான்.. செஞ்சேன்.. செஞ்சேன் என்கிறே... இப்போ நீ செய்வதற்குப் பேர் என்னடி.. பிடிக்குதோ பிடிக்கலையோ.. பிள்ளைங்களுக்காக எத்தனையோ பேர் வாழறாங்க.. நீ என்னமோ பெரிய இவ மாதிரி பண்றே..

''நான்.. இனிமே வரமாட்டேன்.. நீ என்னமோ பண்ணிக்க,'' என்று ஃபோனைக் கட் பண்ணினான்.

நிருபாவுக்கு அழுகை வந்தது. அழுது கொண்டே... இருந்தாள். அடுத்த நிமிடமே அவன் வந்து அறையில் நின்றான். அவள் வழியும் நீரோடு திகைத்து விழித்தாள். வரமாட்டேன் என்று சொன்னவன் இவ்வளவு சீக்கிரம் வந்து நிற்கிறானே என்று.

அவன் இவள் ஃபோன் வந்ததுமே, கிளம்பி விட்டான். காரில் வந்து கொண்டே தான் அவளைக் காய்ச்சினான்.

அவன் அவள் அறையிலேயே லுங்கிக்கு மாறித் தன் மகன் பக்கத்தில் அடுத்த பக்கம் படுத்தான். இதுவரை அவன் அறையை அவளுடன் பகிர்ந்ததில்லை. அவளுக்குக் கோபம் வந்தது. ''என்ன நினைச்சுக்கிட்டு..'' எனும் போதே.. கையை உயர்த்தித் தடுத்தான்.

''பேசாமே.. வாயை மூடு.. இவன் தூங்கட்டும். பிறகு விடிய.. விடிய.. பேசலாம் என் செல்லப் பொண்டாட்டியே..'' அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

தலையணையைத் தூக்கி அவன் மீது வீசினாள்.

மகன் தூங்கும் வரை அவளும் காத்திருந்தாள். பின் இருவரும் எழுந்து வெளியே ஹாலுக்கு வந்தனர்.

அவன் சோபாவில் அமரவும், இவள் எதிர் சோபாவில் அமர்ந்தாள்.

''நிருபா... நான் என் கிராமத்துக்கே போய்விடலாம் என்று இருக்கேன். போதும் எனக்கு இந்த இம்சை.. இனி உன் நிம்மதியில் நான் விளையாட விருப்பப்படலே... போதும் நான் சம்பாதிச்சது. இனி நான் யாருக்காகச் சம்பாதிக்கணும். இரவு பகல் என்று பாராமல் என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. நேற்று நான் இவனைப் பற்றி நினைத்துக் கொண்டு ஒன்பதாவது மாடியில் இருந்து விழுந்திருப்பேன் கால் தவறி. இருக்கிற வேலையெல்லாம் ஓரளவு முடிந்து விட்டது. அடுத்த வாரம் நான் போய்விடுவேன்,'' என்றான்.

அவளுக்கு வந்ததே கோபம். எழுந்து போய் அவன் இரண்டு தோள் பட்டையிலும் கையை வைத்துப் பிடித்து ஆட்டினாள்.

''ஏன்டா.. நானா இங்கு வர்றேன், உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன் என்று சொன்னேன். எங்கோ கண் காணாமல் இருந்தவளைத் தேடிப் பிடித்து இப்படி நிம்மதியில்லாமல் பண்ணி விட்டு... இப்போ சாதாரணமாக நான் போகிறேன் என்கிறாயே... இதற்கு என் கல்யாணம் பண்ணிக்கிட்டே... என்னைச் சாகவும் விடாமல், வாழவும் விடாமல் நீ சித்திரவதை பண்ணிவிட்டு இப்ப வந்து என்னைச் சொல்றியா..? உன் வீட்டில் எப்படி இருக்க முடியும் என்னால்.. உன் சோத்தை எப்படி நான் சாப்பிடுவேன்... நான். நீ பேசிய பேச்சை என்னால் மறக்க முடியுமா?''



அவளை அப்படியே.. இழுத்துத் தன் மடி மீது போட்டு இறுகக் கட்டி அணைத்தான். அவள் முகமெங்கும் மென்மையாக முத்திரையைப் பதித்தான். அவளும் அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

அவன் தழுவலும், தடவலும் எல்லை மீறவும், ''விடுடா.. பொறு..க்கி..'' என்றாள் அவன் காதுக்குள்.

அந்த மதுரமான இதழை அழுத்தமாகக் கடித்து.. ''பொறுக்கி இப்படித்தான் நடந்துப்பான்!'' என்று அவள் மார்பில் முகம் புதைத்தான்.

அவன் முடிக்குள் கையை விட்டு ஆட்டினாள். ''விடுடா.. என்னை. பேசணும் என்று சொல்லிவிட்டு இப்படிப் பண்றே..''

''ஏன்டி.. விடுடா.. விடுடா. என்று சொல்லிவிட்டு உன் கை மட்டும் என் மூடை அதிகமாக்குவது போல் இருக்கு செய்கை.. இப்போ பேசிக்கிட்டுத்தானே இருக்கேன்.. வாயில் பேசினால் தானா..'' என்று உயிர் உருகுவதுபோல் இறுக அணைத்து அவளை விட்டான்.

அவளால் அவன் மீது இருந்து சட்டென எழுந்திருக்க முடியவில்லை. அவன் மீது புரண்டு எழுந்தாள்.

''ஏன்டி.. பிடிக்காத மாதிரி பேசிட்டு இந்த புரளு.. புரளுறே..'' என்று அவள் மேனியைப் பார்வையால் அளந்தான்.

அவள் உடல் சிவந்தது.

''இங்கே பாருங்க.. இது மாதிரி பண்ணினா எனக்குப் பிடிக்காது..''

''அடி என் ரௌடிப் பொண்டாட்டியே.. இதை முன்னாடியே சொல்லக் கூடாதா.. இந்த மாதிரி கொஞ்சினால் எனக்குப்

பிடிக்கலே.. புதுப்.. புது.. மாதி..ரி..யாகத்தான்.. எனக்குப் பிடிக்கும் என்று. ஐயா எதுக்கும் ரெடியா இருக்கேன்டி..''

பக்கத்தில் டேபிள் மீது இருந்த பூ ஜாடியை எடுத்து அவன் தலையில் போட வந்தாள்.

அவளைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தான்.

''நிஜமா நீங்க உங்க ஊருக்குப் போகப் போறீங்களா..?''

''உண்மைதான் நிருபா..''

''அப்போ உங்க மகன்..?''

''எனக்கு வேண்டாம்.. நீயே வைத்துக் கொள். உன் விருப்பம் அதுதானே..''

''அப்படி நீங்க நினைச்சிருந்தா எதுக்கு எங்களைச் சந்திச்சு இப்படிப் பண்ணணும். இவன் உங்களைப் பார்க்காமல் இருந்தால் எப்பவும் போல் இருந்திருப்பானே... இப்போ எப்படி இருப்பான்? என்னமோ உன் விருப்பம் என்கிறே.. எல்லாமே என் விருப்பம் போல்தான் நடக்குதா..?''

''இனிமே அப்படி நடக்கும்..''

''எனக்குத் தெரியாதா.. உன்னைப் பற்றி. எப்படிக் காயை நகர்த்துவே என்று. எங்கே அடித்தால் எங்கே விழுவேன் என்று. இப்போ நல்லவன் மாதிரி இப்படிச் சொன்னால் உன்னை நான் நம்பி விடுவேன். ஏன்னா இவன் எப்படியும் உன்னை விட்டு இருக்க மாட்டான் என்கிற தைரியம்தானே... எப்படியாவது இவள் நம்மகிட்ட வந்து தான் ஆகணும் என்கிற திமிர்.. நாம் இப்படிச் சொல்லி இவளைப் பயமுறுத்தலாம் என்றுதானே... நான் பேசாமல் என் வேலையைப் பார்த்துக் கொண்டு இருந்தேன்..''



55



''என்ன பண்றது? என் பொண்டாட்டியும், பிள்ளையும் அனாதை ஆகிவிடக் கூடாதே என்றுதான் இத்தனையும் பண்ணினேன். நான் செய்த தப்புக்கு நீ மட்டும் ஏன் காலம் பூராம் தனியா தண்டனையை அனுபவிக்கணும் என்றுதான். ஏன்னா, நான் உன்னை மனதாரக் காதலித்தேன். எந்த ஒரு ஆதரவுமில்லாமல் எப்படி இருக்க முடியும் என்றுதான். சர்மா குடும்பம் நல்லவங்களா.. இருக்கப் போய்த்தான் உனக்குப் பிரச்சனையில்லை. இதே வேறு இடத்தில் மாட்டியிருந்தால் உன் நிலைமை என்ன..? என் பொண்டாட்டியை அடுத்தவன் கிட்டே விட்டு வைக்க நான் என்ன கையாலாகதவனா..?''

''இப்ப மட்டும் என்னவாம்..?'' அவள் துடுக்காகக் கேட்டாள்.

அவளை யோசனையோடு பார்த்தான். அந்தப் பார்வையில் வெறுமை இருந்தது.

''என் முடிவில் எந்த மாற்றமுமில்லை நிருபா..''

அவளுக்கும் தெரியும் இவனின் பிடிவாதம். ஒரு முடிவு எடுத்தால் அதில் இருந்து மாறவே மாட்டான். அழுத்தக்காரன்...

இனியும் நாம் மௌனமாக இருந்தால் இவன் போய்விடுவான் என்று, ''நீங்க போக வேண்டாம்.. நா.. நாங்..க.. அங்கே வருகிறோம்,'' என்றாள்.

''எதுக்கு இந்தத் தடுமாற்றம் நிருபா.. அது உன் இடம்... உன் உரிமை, உன் வீடு, நான் உன்னவன் அப்படி நினை..''

அவள் கண்களை உற்றுப் பார்த்தான். அது அவள் இதயத்தில் நுழைந்தது. பார்வையைத் தழைத்துக் கொண்டான்.

''நா.. அங்கு வந்த பிறகு இதுமாதிரி நடக்கக் கூடாது..'' என்றாள்.

''எது மாதிரி? இதுமாதிரியா..'' என்று நொண்டி.. நொண்டி.. நடந்து காண்பித்தான்.

''ஏன்டி நா.. பேசாமத்தான் இருக்கேன். நீதான் என்னை ஞாபகப்படுத்தி உசுப்பேத்துறே.. இது மாதிரி நடக்காதே. அது மாதிரி நடக்காதே என்று. உனக்கு இது பிடிக்காது என்கிற மாதிரி. இது எனக்கு ரொம்பப் பிடிக்கும் என்று நான் நடந்து கொள்ளவா..?''

அவள் திருதிருவென முழித்தாள்.

''என்னடி, அப்படிப் பார்த்து வைக்காதே... வா. வான்னு கூப்பிடுற மாதிரியே.. இருக்கு. அப்புறம் என்னைச் சொல்லி குத்தமில்லை. பிறகு அதன் பின் நடக்கும் செயலுக்கு நான் பொறுப்பில்லை. நல்ல பிள்ளையாய்ப் போய்ப் படுப்போம்..

''நீயா என்னைக் கட்டிப் பிடித்தால் ஒன்னுமில்லை.. நான் கட்டிப் பிடித்தால் அது தப்பு.. அப்படித்தானே..'' அவன் எதைச் சொல்கிறான் என்று புரிந்தது அவளுக்கு. அன்று வருணுக்கு விஷம் கடித்ததும் அவனைப் பார்த்துக் கட்டிப் பிடித்து அழுததைச் சொல்கிறான்.

''சரி. எதுக்கு இந்த முடிவுக்கு வந்தே திடீர்னு...?''

''குழந்தைக்காக..'' என்றாள் சிறிதும் யோசிக்காமல்.

''அப்போ.. உனக்காகவோ.. இல்லை நமக்காகவோயில்லை. குழந்தைக்காக மட்டும்தான் இது.. அப்போ டிரைவர் உன் கையைப் பிடித்து இழுத்தானே.. அதற்கென்ன பதில்..''

அவள் உடம்பே பதறியது.

''என்ன இந்த விசயம் இவனுக்கு எப்படித் தெரிந்தது என்றா..? எல்லாம் எனக்கும் தெரியும்டி..''

''அதுக்குத்தான் கடவுள் அவனுக்குத் தண்டனை கொடுத்து விட்டானே.. ஏதோ ஆக்சிடெண்டில் கை ஒடிந்து போச்சாம்..''



'ஆமா.. இவ பெரிய இவ பாரு. கடவுள் தண்டனை குடுக்க. நான் குடுத்தேன்டி தண்டனை. கூட்டிக் கொண்டு போய் அறைக்குள் விட்டு சாத்து சாத்துனு சாத்தினேன். அது தெரியுமா உனக்கு. அதெங்கே தெரியப் போகுது. என்னை எப்படி அவமானப்படுத்தணும் என்று யோசிக்கவே.. உனக்கு இருபத்து நாலு மணி நேரமும் பத்தலை. கடவுள் தண்டனை கொடுத்தாராம்... உன் வீட்டு வேலைக்காரன் பாரு. உடனே தண்டிக்க. அவனுக்கு என்ன வேலையா இருக்கு இந்தப் பூமியில். உன்னை எவன் கையைப் பிடித்து இழுக்கிறான் என்று பின்னாடியே வந்து பார்த்து அவன் கையை உடைக்க. உனக்கு இந்த நினைப்பெல்லாம் கூட இருக்கா..?

''அவன் கேட்டானாமே.. இராத்திரியில் வந்துவிட்டு காலையில் போறானே.. அவன் யாருன்னு. சொல்ல வேண்டியதுதானே.. யாருன்னு.. இப்போ உனக்கு அவமானமா இல்லையா..?''

''இங்க பாருங்க.. அவன் யாரோ ஒருத்தன். அவன் என்னைக் கேட்டாலும் என்னைப் பாதிக்காது. நீங்கள் அப்படியா.. நீங்களே.. என்னை அவமானப்படுத்தலாமா?'' என்று சொல்லி விட்டு நாக்கைக் கடித்தாள்.

திவாகர் கண்ணில் மின்னல் வெட்டியது.

''சரி, படுப்போம்.. மீதியை நாளை இரவு பேசுவோம்.'' என்று படுத்து விட்டான்.

இரவில் விழிப்பு வந்து பக்கத்தில் பார்த்தாள். குழந்தையையும், திவாகரையும் காணவில்லை. பயந்து விட்டாள். குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய்விட்டானா.. எழுந்து வெளியே வந்து பார்த்தாள்.

ஹாலில் சோபாவில் மகனை மார்பில் படுக்க வைத்து விட்டு இவன் ஓடும் ஃபேனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்ததும் தான் அவளுக்கு உயிரே வந்தது. வந்தது தெரியாமல் போய்ப் படுத்து விடலாம் என்று மெல்ல ஒரு எட்டு எடுத்து வைத்தாள்.

''நிருபா.. வா. ஏன் போறே.. எங்கடா இவனையும் பிள்ளையையும் காணவில்லையே.. இவன் குழந்தையை மட்டும் தூக்கிக் கொண்டு போய்விட்டானா.. என்றுதானே நினைத்தே.. உன் மீது தப்பில்லை. என் செயல் உன்னை அப்படி நினைக்க வைத்தது. இங்கே வா..'' என்று கூப்பிட்டுப் பக்கத்தில் உட்கார வைத்து வலக்கையால் அவள் தலையைக் கோதிவிட்டான்.

அவள் உணர்வினில் ஏதோ நுழைவது போல் உணர்ந்தாள்.

''இங்கே பாருடா செல்லம். நீ என் மனைவி. என் உயிர்டா.. நீ இங்கு வந்த பிறகுதான் என் வாழ்க்கைக்கு அர்த்தம் வந்தது. ஏழையா இருக்கிறவன் ஆம்பளையே யில்லை என்கிற மாதிரியல்லவா.. என்னைச் சீண்டினே.. அந்த நிமிடம் எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று நினைத்துப் பார்..''

அவளை அறியாமல் அவன் தோளில் சாய்ந்திருந்தாள். அவன் அப்படிச் சொல்லவும் உதட்டைச் சுழித்தாள். அந்த உதடு அவன் கன்னத்தில் உரசியது.

''சரி. எதுக்கு இங்கு வந்து உட்கார்ந்திருக்கீங்க?'' என்றாள்.

''தூக்கத்தில் எழுந்து அழுதான். நீ விழித்துவிடக் கூடாதே என்றுதான் இங்கு தூக்கி வந்தேன். நீயும் பகல் பூராம் வேலை பார்க்கிறேல்ல.. அதான்..''

மகனை வாங்கக் கையை நீட்டினாள். ''இல்லே நானே தூக்கி வரேன்,'' என்று கொண்டு வந்து படுக்க வைத்தான்.

அதற்குப் பிறகு இருவரும் தூங்கவில்லை.

காலையில் எழுந்து, ''சீக்கிரம் கிளம்பு நிருபா.. நான் வருணை ஸ்கூலில் விட்டு வருகிறேன். எப்படி நீ நினைக்கிறே.. இங்கு



இருக்கும் உன்னோட திங்ஸ் எல்லாம் எடுத்து வர்றே தானே..'' என்றான்.

''ஆமாங்க..'' என்றாள்.

''சரி. முக்கியமான திங்ஸ் எல்லாம் நீ எடுத்து வை. காரில் கொண்டு போய்விடலாம்.. மற்றவற்றை ஆள் அனுப்பி எடுத்துக்கலாம். வீட்டை என்ன பண்றது..?'' என்றான்.

''வாடகைக்கு விடலாம்,'' என்றாள்.

''அதுவும் சரிதான். எனக்குத் தெரிந்த தயாரிப்பாளர், சூட்டிங்குக்குத் தர்றீங்களா.. என்றார். விடுவோமா?'' என்றான்.

''சரிங்க.. உங்க இஷ்டம்..''

மரகதம்மாவிடம் போன் பண்ணிச் சொல்லிவிட்டான். 'காலை டிபனுக்கு வருகிறோம்,' என்று.

மனைவி கிளம்பி வரவும் கட்டி அணைத்து உச்சியில் முத்தமிட்டான்.

''கோயிலுக்குப் போய்ட்டுப் போலாமாடா..?'' என்றான்.

''ரொம்ப நடிக்காதேடா.. எல்லாம் திட்டமிட்டு விட்டு என்னைக் கேட்பது போல் கேட்கக் கூடாது. சரியா..?''

அவன் வெடிச் சிரிப்பு சிரித்தான். அவளும் புன்னகைத்தாள்.

''இன்று ஆபீஸ் போகணுமாடா..?'' என்றான்.

''ஆமா. சைட்டுக்குப் போகணும். வேலை நிறைய இருக்கு. லேட்டாத்தான் வருவேன் நான் இன்று.''

''சரி. நான் சீக்கிரம் வர்றேன்..''

''ஏன்.. உங்களுக்கு வேலையில்லையா?''

"வேலை இல்லாமல் தானே உன் பின்னாடி அலையறேன்.. என்ன பண்றது?" சிரித்தான். "ரொம்ப இருக்கு.. இருந்தாலும் நான் பார்த்து விடுவேன்," என்றான்.

இரவும் பகலும் யாருக்கும் காத்திராமல் நகர்ந்தன.

நிருபாவிற்கு வேலைகள் அதிகமாகின. மும்பை அடிக்கடி போக வேண்டியிருந்தது. வீட்டுக்கே.. பைலோடு வந்தாள். குழந்தையை மரகதம்மாள் பார்த்துக் கொண்டார். திவாகரும் உதவினான்.

அன்று இரவு ஒரு மணியானது.

நிருபா பைலை விட்டு இன்னும் எழவில்லை. திவாகர் வந்து பார்த்தான்.

## 56



"என்ன நிருபா, மணி ஒன்னாகுதே. இன்னும் முடியலையா.. வேலை? எதுக்கு தூக்கத்தைக் கெடுத்து உடம்பையும் கெடுத்துக்கிறே.." என்றான்.

"இதை நாளைக்கே முடிக்கணும்.. நான் மும்பை போகணும்.." என்றாள்.

"எதுக்குடா இந்த அலைச்சல். மும்பை வேலையை அஸ்வத்துக்கிட்டேயே கொடுத்துடு. இங்கே மட்டும் பார்," என்றான்.

அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"இந்தச் சிரிப்புக்கு என்னடா அர்த்தம்.. போடா லூசு என்கிற மாதிரி.."

காலையில் மரகதம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தான் திவாகர். நிருபா மாடியில் இருந்து இரண்டு, நான்கு படிகளாக ஓடி



வந்தாள். அவள் ஓடி வரும்போதே தெரிந்தது இவள் கீழே விழப் போகிறாள் என்று. திவாகர் அதை விட வேகமாக ஓடி அவளை இறுகப் பிடித்துக் கொண்டான்.

"என்னடி.. இப்படி ஆடிக்கிட்டு வர்றே.. படியிலே கீழே விழுந்தா என்னாகும்...?"

"ஐயோ.. மேலே வாங்களேன்.. என் பெட்டில் வந்து பாருங்களேன்," என்றாள் அவன் அணைப்பிலேயே...

"சரி வா. நான் பார்க்கிறேன்," என்றான்.

"நான் வரமாட்டேன்... நீங்கள் மட்டும் போங்கள். எனக்குப் பயமா இருக்கு.."

"ஹேய்.. என் பொண்டாட்டி பயப்படுற சமாச்சாரம் என்ன.. அதுவும் பெட்ரூம்ல.. நீ அதுக்கு மட்டுந்தானா.. பயப்படுவே.. நான் இங்கேதானே இருக்கேன்," என்று அவளையும் தூக்கிக் கொண்டு போனான்.

"என்னடி இந்தக் கனம் கனக்குறே.."

உள்ளே போய்ப் பார்த்தான். வருணும் அங்கிருந்தான். "என்னடி உன் பெட்டில் ஒன்னையும் காணோம். என்னத்தக் கண்டு பயந்தே.. அத்தான், நீங்க என்னைத் தூக்குன்னா இன்னைக்குப் பூராம் தூக்கி வச்சுருக்கப் போறேன்.."

"அங்கே பாருங்க, என்ன படுத்துருக்குதுன்னு.."

பார்த்தான். ஒரு கரப்பான் பூச்சி. அவன் கலகலவென்று சத்தமாகச் சிரித்தான்.

"ஏ.. கரப்பான் பூச்சியே.. உனக்கு என்ன தைரியம் இருக்கணும். என் பொண்டாட்டி படுக்கையில் படுக்க.. நானே.. பயந்து நடுங்குகிறேன்," என்று அதைக் கையால் பிடித்துக் கொண்டு அவளிடம் வந்தான்.

''குடுத்து வச்ச கரப்பான் பூச்சிடி.. என்னமா புரளுது உன் படுக்கையில். எனக்கே... பொறாமையாயிருக்கு,'' என்றான்.

'எங்க, கிட்ட வராதீங்க..'' என்று ஓடினாள்.

வருண், ''அம்மா மேலே போடுங்கப்பா..' என்று சிரித்தான்.

''என் மகனே.. பர்மிஷன் குடுத்துட்டான்... உன் மேலே போடுறேன்,'' என்று விரட்டினான்.

ஓடினவளை ஒரு கையால் பிடித்துக் கொண்டான். ''ஏ.. உன் பிளவுசுக்குள் போட்டு நானே.. எடுத்து விடுகிறேன்.. பிராமிஸ்!''

அவள் சுவரோடு ஒண்டினாள். இவனும் அவளை மொத்தமாக அழுத்தி அவள் இதழில் தன் இதழை வைத்து.. ''பயமா.. இருக்கா.. என்னைக் கட்டிப் பிடித்துக் கொள்.. பயமெல்லாம் போயிடும்..'' அவள் முகத்தோடு இழைத்தான்.

அவளுக்கு அவன் மீசை குறுகுறுத்தது.

''பொறு..க்..கி.. விடுடா.. என்னை. கரப்பான் பூச்சியை விட மோசமானவனே..''

''ஹேய். நீ பொறுக்கி என்று சொல்வது என்னை 'அந்த நேர' அழைப்பாவே இருக்கு..''

வருண், ''அப்பா!'' என்றான்.

திவாகர் படக்கெனத் திரும்பினான்.

''அப்பா, கரப்பான் பூச்சி எங்கே?''

நிஜமாகவே அது திவாகர் கையில் இல்லை. எங்கே என்று அவன் சுற்றும் முற்றும் தேடினான்.

''எங்கடி பூச்சி?'' என்றான் மெல்ல.

''ம்.. என்னைக் கேளுங்க.. புத்தி பூச்சியில் இருந்தால்தானே.. அது எங்கு பறந்து போச்சோ..?''



''வருண், அது பறந்து போச்சு!'' என்றான் திவாகர்.

''இல்லப்பா. அது பறந்து போகலே. நான் பார்த்துக்கிட்டுத் தான் இருந்தேன். நீங்கதான் அம்மா பிளவுசுக்குள்ளே போடுறேன்னு சொன்னீங்களே.. போட்டுட்டீங்களா.. அம்மா பாவம்பா. எடுங்க,'' என்றான்.

திவாகர் தன் தலையைக் கோதி விட்டான். 'எடுக்கட்டுமா?'

மனைவியைக் கடைக் கண்ணால் பார்த்தான்.

மும்பையில் இருந்து சீமா, சர்மா வந்திருந்தனர். வருணுடன் விளையாடினர். வெளியே போய் வந்தனர். இரண்டு நாள் இருந்து விட்டுக் கிளம்பினர். நிருபா ஆபீஸ் போகாமல் அவர்களுடன் இருந்தாள். நிறையப் பேசினாள். ஷோபா இப்போது கன்சீவ்வாகி இருக்காளாம்..

''நிருபா, நாங்கள் வருணைக் கூட்டிப் போறோம்.. இப்போ லீவுதானே?'' என்றாள் சீமா.

''இருப்பானாம்மா..?'' என்றாள் நிருபா.

வருணிடம் திரும்பி, ''நீ மும்பை வர்றியா.. பாட்டிகூட, ஷோபா அக்கா உன்னைப் பார்க்கணும்னா..'' என்றாள்.

''சரிங்க பாட்டி. நான் வருகிறேன்,'' என்றான்.

''அங்கு வந்து அப்பா வேணும், அம்மா வேணும் என்று கேட்கக் கூடாது. சரியா?''

''சரிங்க பாட்டி... நான் வர்றேன்,'' என்று கிளம்பி விட்டான்.

திவாகரும் 'சரி' என்றான்.

குழந்தை போனதும் வீடே வெறிச்சென்றிருந்தது. நிருபாவுக்குச் செய்யவே ஒன்றுமில்லாதது போல் இருந்தது. திவாகரும் அதை உணர்ந்தான்.

இரவு இருவரும் அந்த பெட்டில் தனியாகப் படுத்தனர். இருவருக்கும் நடுவில் குழந்தை படுத்திருப்பான். இப்போ இருவர் மட்டும். இந்த தயக்கம் இதுநாள் வரை இருந்ததில்லை.

இரவில் நிருபா விழித்தாள். அவள் மேல் கை, கால் போட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான் திவாகர்.

இவளுக்கு எரிச்சலாக வந்தது.

இவன் ஏன் தான் இப்படிப் பண்ணுகிறானோ.. குழந்தையை அனுப்பும் போது இதைப் பற்றி அவள் நினைக்கவில்லை.

அவள் அசைய முடியவில்லை. அவளும் அப்படியே தூங்கிப் போனாள். காலையில் இருவரும் நேரங் கழித்துதான் எழுந்தார்கள்.

திவாகர் எழுந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் எழுந்து குளிக்கப் போனாள்.

அவள் குளித்து வந்ததும், இவன் பின்னால் இருந்து கட்டியணைத்தான். அவள் திமிறினாள். ''எத்தனை அழகு...!'' என்று கிறக்கமாகச் சொன்னான்.

அவள் சுற்றியிருந்த துண்டை அவிழ்த்து தூக்கிப் போட்டான். அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்து, ''நிரும்மா.. என் கண்ணே..'' என்று முனகினான்.

அவளுக்கு ஆத்திரம் வந்தது. இவனுக்கு இதே பொழப்பா போச்சு.. சொல்வது ஒன்று, செய்வது ஒன்று.

''பிள்ளை இல்லாமல் பொழுது போகலே.. என்கிறே. அதுவரை பிள்ளையோட அப்பனைக் கவனிடி... செல்லம்ஸ்!'' என்றான்.

அவள், ''என் மனசு வேணுமா..? இல்லே, இந்த உடம்பு வேணுமா..?'' என்றாள்.



கொதி நீரை முகத்தில் ஊற்றுவதுபோல் துடித்து நிமிர்ந்தான். அவளை விட்டு, ''சாரி.. இனிமேல் இதுமாதிரி நடக்காது. நீ போய் டிரஸ் போடு,'' என்று வெளியே சென்று விட்டான்.

நிருபாவிற்கு அழுகை வந்தது காரணமில்லாமல். அழுதாள் - எதற்கு என்று தெரியாமல்.

அதில் இருந்து திவாகர் பேசவேயில்லை.

அன்று இரவு அவனுக்கு ஃபோன் வந்தது. உடனே வருகிறேன் என்று கிளம்பினான். ''நான் வெளியூர் போகிறேன். வர இரண்டு நாள் ஆகும்,'' என்று அவள் பதிலுக்குக் காத்திராமல் சென்று விட்டான்.

நிருபா யார் இந்த நேரத்தில் ஃபோன் பண்ணினார்கள்? இவன் ஏன் இப்படி ஓடுகிறான்? ஏதோ மனதை நெருடியது. நான் ஒத்துழைக்கவில்லை யென்றதும் இவன் வேறு இடம் தேடி.. நினைக்கவே பயமாக இருந்தது.

அவன் பேசாதது என்னவோ போல் இருந்தது. எப்பப்பார் ஏதாவது ஒரு சில்மிசம் பண்ணிக் கொண்டே இருப்பான். குழந்தை முன்னாடி என்னை மாட்டி வைப்பது.

ஒருநாள் திடீரென, ''நிருபா, உனக்குப் பொண்ணுன்னா பிடிக்குமா.. எனக்கு ரொம்பப் பிடிக்கும்!'' என்றான்.

என்ன சொல்கிறான் என்று புரியாமல் பார்த்தாள்.

''எனக்குப் பொண்ணுன்னா ரொம்பப் பிடிக்கும்னு சொன்னேன்,'' என்றான் மறுபடியும்.

''அதை ஏன்.. என்கிட்டே சொல்றீங்க.. நா.. கேட்கலையே..'' என்றாள்.

''ஏன்டி கட்டின பொண்டாட்டிகிட்டே சொல்லாமே.. வேறு எவகிட்டே போய்ச் சொல்ல முடியும்.. உன்கிட்டேதானே என் ஆசையைச் சொல்ல முடியும்..''

''ஏன்.. ரோட்ல போறவகிட்டே போய்ச் சொல்லுங்க.'' என்றாள்.

'சேச்சே.. அது ரொம்பத் தப்பு.. என் ரோசக்காரப் பொண்டாட்டி மாதிரி வருமா?'' என்று இடுப்பு இடைவெளியில் கை வைத்தான்.

''அங்கே வைக்காதீங்க.. கையை..''

''இங்கே வைக்கட்டுமா..'' என்று அவள் நெஞ்சில் வைத்தான்.

அவள் தட்டி விட்டாள்.

''என்னப்பா?'' என்று வருண் வந்தான்.

''இவன் வேற நேரங் காலம் தெரியாது. என்னப்பா செய்றீங்க அப்படினிட்டு.''

''அவனுக்கு நேரங்காலம் தெரியலையா இல்லை உங்களுக்கா?'' என்றாள்.

அவன் மீண்டும், ''என்னப்பா?'' என்றான்.

''ஐயய்யோ... எதையாவது சொல்லிச் சமாளிடி.. ப்ளீஸ்.''

''இத மட்டும் பண்ணத் தெரியுது.. அதைச் சொல்லத் தெரியாதா?''

''நீதான்டி பொய் நல்லா பொருத்தமா சொல்வே.. நான் உளறி உண்மையைச் சொல்லிப்புடுவேன்... எதைத் தொட்டேன் என்று.'' கண் சிமிட்டினான்.

வருணும் விட்ட பாடில்லை. அவர்கள் முகத்தையே பார்த்தான்.

''அம்மாவுக்கு ஜுரமா என்று தொட்டுப் பார்த்தேன்..''

''அது கழுத்தில் தானேப்பா தொட்டுப் பார்க்கணும்..''



''அடி அழகான ராட்சசியே.. காப்பாத்துடி.. என்னை. உன் புருசன் கேட்குறேன்.. ஏன்டி உன் பிள்ளை உன்னை விட மோசமா இருக்கான்..''

அவள் மெல்லப் புன்னகைத்தாள்.

''ஏன்டி.. என்.. பொழப்பு சிரிப்பா இருக்கா.. உனக்கு?''

## 57



''வருண், நீ போய் விளையாடு. அம்மாவுக்கு வேலை இருக்கு.''

அவன் ஓடியே விட்டான்.

மனசெல்லாம் அலை பாய்ந்தது. எங்கு போயிருப்பான். ஆபீஸ் விசயமாக இருக்கும். திவாகர் மேனேஜர் ஃபோன் பண்ணினார்.

''சார் எங்கே?'' என்று.

இவள் திகைத்தாள். ''சார் ஆபீஸ் விசயமாகத்தானே வெளியூர் போறேன் என்று போனார்.?''

''இல்லையே... அப்படியொன்றும்.. இல்.. லை..யே... இங்கே தான்..'' அப்படி இப்படி என்று உளறி ஃபோனை கட் பண்ணினார்.

இவளுக்குச் சந்தேகம் வலுத்தது. ஒரு மேனேஜருக்குத் தெரியாமல் இவன் எங்கே போயிருப்பான்? அப்போ ஆபீஸ் வேலையில்லை.

இரவு அவனுக்கு ஃபோன் போட்டாள். உடனே எடுத்தான்.

''எங்கே இருக்கீங்க?''

''ஏன்டி இந்த நேரத்தில் டிஸ்டர்ப் பண்றே. நான் ஒரு குட்டியோட இருக்கேன். இப்போ என் மார்பில் சாய்ந்து வலது தோளில் தலை வைத்து என் அணைப்பில் இருக்கிறாள்..

ல்லவேளை. தமிழ் தெரியாது. இல்லைன்னா மூட் அவுட் ஆகியிருப்பாள். நான்.. எனக்குக் கல்யாணம் வேற ஆகலை ன்று சொல்லியிருக்கேன்.."

"ஏன்டா தடிப் பயலே.. பொய் சொல்றதுக்கு ஒரு அளவில்லையா..? எங்கேடா போனே?"

சிறு மௌனத்துக்குப் பிறகு, "இப்ப நான் சொன்னதை நீ நம்பலைனாலும் உன் மனதில் சிறு சலனம் இருக்கத்தானே செய்யுது.."

"நான் கேட்ட கேள்விக்குப் பதில்.."

"நீ என்ன கேட்டே?"

"நீ எங்கே இருக்கே என்று?"

"இங்கேதான்.."

"இங்கேன்னா..?"

"இரு. வந்து சொல்றேன்.."

"எப்ப வருவே..?"

"யாருக்குத் தெரியும். எனக்கே தெரியாத கேள்வியைக் கேட்டா.. இவ என்ன எப்ப விடுறாளோ.. அப்ப.."

கோபமாக ஃபோனைக் கட் பண்ணினாள்.

மறுநாள் காலை திவாகர் வீட்டுக்கு அவன் அப்பா, அம்மா வந்தார்கள். இவள் அதிர்ந்து பின், 'வாங்க!' என்றாள் மெல்ல.

இவளுக்கு இருந்த பிரச்சனையில் இவர்களை இவள் மறந்தேயிருந்தாள். மகன் வீட்டுக்கு வராமலா இருப்பார்கள். இவளை இவர்களுக்குப் பிடிக்காது. திவாகர் வேறு வீட்டில் இல்லை. என்ன நடக்கப் போகுதோ.. கலங்கினாள்.

அவர்களை மீண்டும், "உட்காருங்கள்," என்றாள்.



"திவாகர் இல்லையா..?"

"இல்லை. அவர் வெளியூர் போயிருக்கார்."

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"நாங்க உன்கூட கொஞ்சம் தனியா பேசணும்," என்றனர்.

அவளுக்கு உள்ளே உதறியது. மறுபடியும் போகச் சொல்லி விடுவார்களோ.. என்று. இருந்தாலும் எதையும் வெளியில் காட்டாமல், "வாங்க..." என்று ஒரு அறைக்குக் கூட்டிப் போனாள்.

அவர்கள் முகத்தையே பார்த்தாள்.

அவர்களும் ஏதோ தயங்குவதுபோல் இருந்தது.

"சொல்லுங்கம்மா," என்றாள்.

"நிருபா, முதலில் என்னை மன்னிச்சிடு. நான் செய்தது தப்புத்தான். என் மகன் அன்றில் இருந்து எங்களுடன் பேசுவதே யில்லை. எங்கள் முகத்தை நிமிர்ந்து பார்ப்பதேயில்லை. எங்களை அவன் ஊரிலிருந்து வந்த மறு நிமிடமே நீ இல்லையென்றதும் வீட்டை விட்டுப் போகச் சொல்லிவிட்டான். இன்றுதான் வருகிறோம்... அவனும் கிராமத்துக்கு வருவதில்லை. நாங்கள் அவனைப் பார்த்தே பல வருடங்கள் ஆகிவிட்டன. உங்கள் கல்யாணத்துக்குத்தான் மேனேஜரை விட்டுக் கூட்டி வரச் சொன்னான். அன்றுதான் அவனைப் பார்த்தோம். அதுகூட இவதான் என் மனைவி என்று காட்டத்தான். நாங்களும் காலில் விழாத குறையாகக் கெஞ்சிவிட்டோம்.. என் முகத்தில் விழிக்காதீங்க என்று சொல்லிவிட்டான்.."

அவள் மலைத்துப் போய்க் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"ஒரு நிறைமாதக் கர்ப்பிணியை இப்படி நீ அனுப்பி விட்டாயே.. நீயெல்லாம் ஒரு பொம்பளையா என்றான். நான்

பொய் சொன்னேன். எனக்குத் தெரியாது என்று. அவதான் லட்டர் ழுதி வைத்திருக்காளே என்றேன்.''

''அவ ஒருநாளும் இந்த மாதிரி திருட்டுத்தனம் செய்ய மாட்டாள். வீட்டை விட்டுப் போகணும் என்றால் என் முகத்துக்கு நேரே சொல்லிவிட்டுப் போவா.. இப்படி எனக்குத் தெரியாமல் செய்ய மாட்டாள்.. நீ தான் அவளை அனுப்பியிருக்கணும் என்று சொல்லி விட்டான். அன்று அத்தனை கதறித் துடித்தான். நானே இதை எதிர்பார்க்கவில்லை. உன்மேல் இத்தனை அன்பு வைத்திருப்பான் என்று. 'என் உயிரை விட்டு விடுவேன் இப்போதே... என்றாவது என் கண்மணி விதிவசமா.. உயிரோட இருந்தா.. அனாதை ஆகிவிடுவாளே.. என்றுதான் இந்த உயிரை வச்சிருக்கேன்!' என்றான்.

''அப்போ தான் என் உயிரே துடித்தது. என் மகன் நல்லா இருக்கணும் என்று தான் நான் இப்படிப் பண்ணினேன். அதுவே அவன் சாவுக்குக் காரணமாக இருக்கப் போகுதே என்று கலங்கினேன். நான் உயிரோட இருக்கணும்னா நீங்க இனி இங்கு யாரும் வரக் கூடாது. நானும் வர மாட்டேன் என்று சொல்லிட்டான். அன்று போனவர்கள்தான். என்ன அவன் சொன்னாலும் கல்யாணம் ஆகிவிட்டது. பேரப் பிள்ளை இருக்கிறான். எங்களுக்கும் பேரப்பிள்ளையைக் கொஞ்சணும்.. என்று ஆசையா இருக்காதா.. நாங்களும் மனுசங்கதானே.. அடுத்த மாசம் ஊர் கோயில் திருவிழா வருது. எல்லார் வீட்டுக்கும் மகன், மகள், மருமகள் மருமகன், பேரப்பிள்ளைகள் என்று வரும்போது... நாங்க மட்டும் ஒத்தப் பிள்ளையைப் பெத்து இப்படி அனாதை மாதிரி இருக்கிறோம். ஊர் ஜனம் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்ல முடியல. இந்த வருடமாவது உன் மருமவ வருவாளா.. என்கிறாங்க. நீதாம்மா அவனுக்குச் சொல்லணும்.. எங்களுக்கும் வயசாச்சு. எத்தனை நாளைக்கு இருக்கப் போறோம். எங்க கூடப் பேசச் சொல்லும்மா.. பணத்தை மட்டும் அனுப்பி வைத்தால் போதுமா.. பாசம் வேண்டாமா..?



பணம் இல்லாதப்போ பாசமா.. நிம்மதியா இருந்தோம். இப்போ.. இந்தப் பணம், பிரச்சனையாகி விட்டது..''

அந்த அம்மா எழுந்து வந்து அவள் கையிரண்டையும் பிடித்துக் கொண்டு அழுதாள். ''என் பேரப்பிள்ளையைக் கண்ணில் காட்டும்மா!'' என்றாள்.

நிருபா வெளியே வந்து, ''வருண்...'' என்றாள்.

''என்னம்மா?'' என்று ஓடி வந்தான்.

மகனையே சின்ன வயதில் பார்த்த மாதிரி இருந்த பேரனைத் தூக்கிக் கண்ணீர் மல்கக் கொஞ்சினாள்.

'யாரும்மா?' என்று பார்வையாலேயே கேட்டான். இதிலெல்லாம் அப்பனைப் போல. மனதில் நினைத்து, ''இவங்க உனக்குத் தாத்தா, பாட்டி.. உன் அப்பாவோட அம்மா, அப்பா..'' என்றாள்.

''நான் இதுவரை பார்த்ததில்லையே..' என்றான்.

''இவங்க ஊரில் இருந்தாங்க. இப்பத்தான் வந்தாங்க.. இனிமே பார்ப்பே,'' என்றாள் மறைமுகமாக அவர்களுக்குப் பதில் சொல்வது போல்.

பேரனுடன் கொஞ்சி விளையாடினர்.

''சாப்பிட வாங்கம்மா, வாங்கப்பா,'' என்று கூப்பிட்டாள்.

''இல்லம்மா. வேண்டாம். நாங்க வர்றோம். நீ பேசும்மா.. இந்தத் தடவையாவது திருவிழாவிற்கு வாங்க,'' என்றாள்.

''முதலில் சாப்பிடுங்க.. இது உங்க வீடுதானே.. இதிலென்ன கோபம் உங்களுக்கு..''

''இல்லை, என் பிள்ளை எங்களிடம் பேசட்டும்,'' என்று சென்று விட்டார்கள்.

நிருபாவுக்கு நினைவெல்லாம் திவாகராகவே இருந்தது. அவளுக்கு அவனை உடனே பார்க்கணும் போல் இருந்தது. தனக்காக.. தன் தாயை இத்தனை வருடம் பார்க்காமல் பேசாமல் இருந்திருக்கானே.. அன்று அவன் சொன்னது உண்மைதானோ.. என்று ஏனோ மனம் சற்றுத் தெளிவானது.

மறுநாள் திவாகர் வந்து விட்டான்.

நிருபா மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தாள். திவாகரும் அதைக் கண்டுகொள்ளவில்லை.

இவனிடம் எப்படிப் பேசுவது. இவன் அம்மா, அப்பா வந்துட்டுப் போனாங்க என்று. இவன் ஒருநாள் சொன்னான்: "நிருபா, நீ வேணும்னா.. ஒரு தடவை உன் அப்பாவைப் போய்ப் பார்த்துட்டு வாயேன்," என்றான்.

"எங்கே.. சுடுகாட்டுலேயா.? அவர் செத்து எத்தனையோ வருடம் ஆகி விட்டது. அவரை என் அப்பா என்று இன்னொரு முறை சொல்லாதீங்க.. உங்களைக் கொலை பண்ணி விடுவேன்!" என்று அங்கு இருந்த சாமான் எல்லாம் போட்டு உடைத்தாள்.

அதில் இருந்து பேச வில்லை இந்தப் பேச்சை.

அவன் ஒரு புக் படித்துக் கொண்டிருந்தான். இவள் பக்கத்தில் போய், 'ஏங்க உங்க அம்மா, அப்பா எங்கே? இங்கு வரவே யில்லை..''

அவன் பதில் சொல்லாமல் படிப்பதில் கவனமாக இருந்தான்.

அவள் புக்கைப் பிடுங்கிக் கீழே வைத்தாள். "நான் கேட்பது காதில் விழவில்லையா?"

"கேட்குது. இப்போ என்ன புதுசா அக்கறை. அதை நீ தெரிந்து என்ன பண்ணப் போறே?"

"அவங்க கிராமத்தில் இருக்காங்களா..?"



"இங்க பாரு நிருபா.. அவங்களைப் பற்றித் தேவையில் லாமல் கேட்டு என் மூடைக் கெடுக்காதே.. அப்புறம் நான் மனுசனாகவே இருக்க மாட்டேன்.."

மறுபடியும் அவன் சொல்வதைக் காதில் வாங்காமல், "ஏங்க நாம கிராமத்துக்கு உங்க வீட்டுக்குப் போகலாமா? உங்க அப்பா, அம்மாவைப் பார்க்க.."

"இல்லே. அதெல்லாம் வேண்டாம்.."

"அப்ப நீங்க வரலைன்னா.. நானும் வருணும் போவோம்."

காது நொய்.. என்ற பிறகுதான் அவன் தன்னை அடித்திருக்கான் என்று தெரிந்தது.

கன்னத்தைப் பிடித்துக் கொண்டாள் 'ஆ..' என்ற சத்தத்துடன்.

"உன்கிட்டே நான் எந்தக் கேள்வியும் கேட்கக் கூடாது. நீ பாட்டுக்கு ஊர் சுற்றிவிட்டு வருவே.. அவகிட்டே போனேம்பே... இவகிட்டே போனேம்பே.."

"எதுக்கு தேவையில்லாமே இப்ப இதைப் பத்தி பேசுறே.. சம்பந்தமே இல்லாமல். குடுத்த அடியில் மறை எதுவும் கழண்டுடுச்சா...?"

"நீங்க மட்டும் போய் உன் அப்பாவைப் பார் என்கிறீங்க.. எங்கப்பாவை விடவா.. உங்கம்மா, அப்பா தப்பு பண்ணினாங்க.. என்று அப்படி அவங்ககிட்டே பேசாம, பார்க்காமே இருக்கீங்க?"

"தப்புல என்னடி பெரிய தப்பு சின்னத் தப்பு இருக்கு.. அவங்கவங்க பாதிக்கப்பட்ட மனசைப் பொறுத்தது. என் மனசை அவங்க உயிருடன் கொன்னுட்டாங்க.. நீ இல்லையென்றதும் நா... ன்.. எத்தனை துடிச்சேன் தெரியுமா? எத்தனை நாள் மாத்திரையைக் கையில் கொட்டிக் கொண்டு தண்ணீர் டம்ளருடன் இருந்தேன் தெரியுமா..? உன் அப்பா தப்பு

பண்ணினார் என்றால் உனக்கு நான் இருந்தேன். உன்னைக் கைவிட மாட்டேன் என்ற முடிவெடுத்த பிறகுதான் உன்னைத் தொட்டேன். பின் எதற்காக உன் அப்பாவிடம் சண்டை போட்டு உன்னை இங்கு நிரந்தரமாகக் கூட்டி வந்தேன். நீ ரோசக்காரி.. உயிருடன் இருக்க மாட்டாய் என்றுதான், என் கண்காணிப்பில் வைத்துக் கொள்ள..''

''....''

''உனக்குத் தெரிந்தது வீடு, கடை மட்டுந்தான்நான் குடுத்தது என்று. உனக்குத் தெரியாமல் எத்தனை கோடி கொடுத்தேன் என்று தெரியுமா..? எல்லாம் யாருக்காக? உனக்காகத்தான்.. உன்னை நான் எத்தனை கஷ்டப்படுத்தியிருந்தாலும் நீ தான் என் மனைவி என்ற முடிவுடன் தான் நான் இருந்தேன். அந்த நேரத்தில் இதை நான் சொன்னால் நீ நம்ப மாட்டே.. என்று தான் நினைத்தேன். உன்னை உடனே.. வா.. வா. என்பேனே.. எதற்கு.. உன்னைப் பார்க்காமல் இருக்க முடியாமல்தான். இதை நீ என்ன, யாருமே நம்ப மாட்டார்கள்.. நான் செய்த வேலைக்கு. அப்படியிருந்த என்னிடம் இருந்து, உன்னைப் பிரித்தவர்களிடம் பேச சொல்கிறாயா..? இனிமேல் இதுபற்றி பேசினே.. தொலைத்து விடுவேன்!'' என்று வெளியே சென்று படுத்தான்.

## 58



நிருபா எதுவும் பேசவில்லை. பேசவும் முடியவில்லை. நான் அவர்களுக்கு வாக்குக் குடுத்துவிட்டேனே.. இவனானால் இத்தனை கோபப்படுகிறானே.. என்று அப்படியே தூங்கிப் போனாள்.

ஏதோ அவள் கன்னத்தில் கை பட்டது போல் இருந்தது. கண் விழித்தாள். திவாகர் அவன் அடித்த கன்னத்தைத் தடவிக் கொடுத்தான். கண்களை இறுக



மூடிக் கொண்டாள். நெற்றியின் மீது இருந்த முடியை ஒதுக்கிவிட்டு மென்மையாக உதடு ஒற்றினான்.

அவள் இப்போ எல்லாம் முற்றிலும் மாறுபட்ட திவாகரைப் பார்த்தாள். அன்று அவனுக்குக் காபி கொண்டு வந்தாள். ''புருசன்னு இப்படி கடமையைச் செய்துவிட்டு மனசளவில் விலகி இருக்கிறதுக்கு செத்துரலாம் போல இருக்கு நிருபா உன் செய்கை.''

அன்று இரவு வெளியே போனவன் திடீரென்று விடிகாலையில் ஃபோன் போட்டு, ''நான் இரண்டு பேரை வீட்டுக்கு அனுப்பியிருக்கேன். நம் வீட்டு வெளி ஹாலில் உள்ள பொருட்களை எல்லாம் எடுத்து வேறு அறையில் வைக்க. நீ அவர்களுக்கு உதவு. நான் இன்னும் அரை மணி நேரத்தில் வந்து விடுவேன். சீக்கிரம்,'' என்று அவள் பதில் பேசுமுன் ஃபோனை வைத்தான்.

இவளுக்கு ஒன்றும் புரியவில்லை. இவன் பாட்டுக்குப் போறான்.. வர்றான்.. இவனுக்கு என்ன பைத்தியம் பிடிச்சிருக்கா.. திடீரென வீட்டில் இருக்கும் பொருளை ஏன் எடுத்து அறையில் போடச் சொல்றான்,.

இவளும் கீழே இறங்கி வந்து அவர்களிடம், ''இந்த அறையில் போடுங்கள்,'' என்றாள்.

எல்லாம் முடிந்ததும், வீட்டின் முன் ஒரு ஆம்புலன்சு வந்து நின்றது. ஒரு வேனில் இருந்து கண்ணாடிப் பெட்டியை இறக்கிக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போயினர்.. இது.. இறந்தவர்களை வைக்கும் பெட்டியல்லவா.. என்று நினைக்கும் போதே நான்கு பேர் ஸ்ட்ரெச்சரில் ஒருவரைக் கொண்டு வந்து அந்தப் பெட்டிக்குள் படுக்க வைத்து ஒரு மாலையைப் போட்டனர்.

இவள் பீதி நிறைந்த கண்களுடன் பார்த்தாள். திவாகர் வேகமாக அவளிடம் வந்து கை பிடித்துக் கூட்டிப் போனான் பெட்டியின் அருகே.. உள்ளே இருந்த முகத்தைப் பார்த்ததும் 'திவாகர்' என்று அவனைக் கட்டிக் கொண்டு கதறிவிட்டாள்.

இவள் இதுவரை இவன் பெயரைச் சொன்னதில்லை.

திவாகர் அவள் அழட்டும் என்று பேசாமல் இருந்தான். அவளின் கதறல் மயக்கம் போடும் அளவிற்குச் சென்றது. அப்படியே தூக்கிக் கொண்டு போய் அறையில் படுக்க வைத்தான்.

பின் கீழே வந்து எல்லோருக்கும் ஃபோன் பண்ணி விசயத்தைச் சொன்னான். அவர் மகனுக்கும். நேரம் ஆக ஆக கூட்டம் வந்தது. மகன் வரவில்லை.

எடுக்கப் போறதுக்கு முன்னால் நிருபாவை வந்து கூப்பிட்டான். "ஒரு தடவை வந்து அவர் முகத்தைப் பாருடா!" என்று.

"நான் பார்க்க மாட்டேன்.. என்னால் முடியாது.. நான் வரமாட்டேன்.." என்று அழுதாள். அவள் முகத்தை மார்போடு அணைத்துக் கொண்டான்.

"வந்துதான் ஆகணும் நிருபா. இது கஷ்டமான விசயம்தான். நீ வா," என்று கூட்டி வந்தான்.

"அ..ப்..பா.." என்று கதறி அழுதாள்.

முடிந்தது.. எல்லாம் முடிந்தது. திவாகரே... எல்லாம் முன்னின்று காரியத்தை முடித்தான். நிருபா எதுவும் பேசவில்லை.

அன்று இரவு அழுது கொண்டு படுத்திருந்த மனைவியைச் சேர்த்து அணைத்துக் கொண்டு படுத்தான்.



அவனின் அணைப்பும், ஆறுதலும் அவளின் அழுகையை அதிகமாக்கியதே தவிர குறைக்கவில்லை.

தூக்கி உட்கார வைத்தான். "நீ இப்படி அழுது கொண்டு எத்தனை நாள் சாப்பிடாமல் இருப்பே.. நிருபா... எனக்குக் கஷ்டமா இருக்கு."

முகத்தைக் கழுவி விட்டு வா.. என்று சொல்லி சாப்பாட்டை மேலே எடுத்து வந்து மறுத்தவளுக்கு ஊட்டி விட்டான். சுடா பாலைக் குடிக்க வைத்து தன் மடி மீது போட்டுத் தட்டிக் கொடுத்தான்.

"திவா... எப்படி.. அப்..பா.." கண்ணீர் வழிந்தது.

"நீ போய் ஆறு மாதம் இருக்கும். நான் ஒரு கோயிலுக்குப் போனேன்... அங்கு உன் அப்பா.. ரோட்டோரத்தில்..." நிறுத்தினான்.

அவளுக்குப் புரிந்தது. "பிச்சை எடுக்கும் அளவிற்கு என்ன வந்தது. கௌரவம், அந்தஸ்து என்பாரே.."

"ஆம் நிருபா.. நல்லாத்தான் எல்லாம் போயிட்டு இருந்திருக்கு. உன் அப்பாவுக்கு முடியாமல் வந்து ஒரு கையும், காலும் வராமல் போய்விட்டது. உன் அண்ணன் சொத்தையெல்லாம் எழுதி வாங்கிவிட்டான். உன் அண்ணி பார்ப்பாளா... வீட்டை விட்டுப் போகச் சொல்லிவிட்டார்கள். அதான் இப்படி..

"நான் பார்த்ததும் ஆடி விட்டேன். பின் விபரத்தைச் சொன்னார். என் பெண் எங்கே.. அவளிடம் நான் மன்னிப்புக் கேட்க வேண்டும்.. என்று அழுதார். நான் என்ன சொல்வேன்.. உன் பெண்ணைக் கூட்டி வந்து உயிருடன் தொலைத்து விட்டேன் என்றா.. நான் கூட்டிப் போய் ஹாஸ்பிடலில் சேர்த்தேன். இத்தனை வருடம் ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டுத் தான் இருந்தார்.."

"அன்று இரவு ஃபோன் வந்து போனேனே.. ஹாஸ்பிடல் தான் போனேன். முடியவில்லை என்று ஃபோன் வந்தது. கூடவே இருந்து இரண்டு நாள் கவனித்துக் கொண்டேன். இத்தனை வருடங்களில் எத்தனையோ பேசினார். உன்னைப் பார்க்கணும் என்று துடித்தார். என்னிடமும் மன்னிப்புக் கேட்டார். நேற்று இப்படி ஆகிவிட்டது," என்றான்.

"நான் என் பொண்ணுக்கும், பொண்டாட்டிக்கும் செய்த துரோகத்துக்குத்தான் கடவுள் இந்தத் தண்டனையைக் கொடுத்துவிட்டார்!" என்பார்.

அவள் மீண்டும் அழுதாள். பக்கத்தில் இருந்து கவனித்துக் கொண்டான். அவளின் தவிப்பு புரிந்தது அவனுக்கு. வீட்டில் இருக்க முடியவில்லை அவளால்.

"வெளியூர் எங்காவது ஒரு பத்து நாள் போய்ட்டு வரலாமா... நிருபா.. வருணுக்கும் இப்ப லீவுதானே?" அவளுக்கும் ஒரு மாற்றம் தேவை என்று கேட்டான்.

"உடனே போகலாங்க," என்றாள்.

"எங்கு போகலாம்... என்று முடிவு செய்.. உனக்குப் பிடித்த இடமா இருக்கணும்."

"நான் சொன்னா சரின்னு சொல்லணும்.. அப்புறம் மாத்திப் பேசக் கூடாது.."

"நீங்கள் மகாராணி என்ன ஆணையிடுகிறீர்களோ.. அதைச் செய்யச் சித்தமாக இருக்கிறேன். தலைகீழாகத் தொங்கணுமா.. இல்லை குட்டிக்கரணம் போடணுமா.. உன்னைத் தூக்கிக் கொண்டு இந்த வீட்டை வலம் வரணுமா.. என்ன என்று சொல்லுங்கள்," என்று இடைவரை குனிந்து பவ்வியம் காட்டுவது போல் காட்டினான்.



நிருபா சிரித்து விட்டாள். அவளின் சிரிப்பை ஆசையுடன் ரசித்தான். பக்கத்தில் போய் அவள் கன்னம் வருடி, "சொல்லுடா.. எங்கே போகலாம்.. வெளிநாடு என்றால் ரெடி பண்ண பத்து நாள் போதாது. அதனால் இங்கேயே சொல்.. முழு ஆண்டு லீவுக்கு இரண்டு மாதம் வெளிநாடு போகலாம்," என்றான்.

வருடிய கையைப் பிடித்துக் கன்னத்தில் வைத்து அழுத்தி, "நான் சொல்வேன். கோபப்படக் கூடாது.." என்றாள் செல்லமாக.

"அப்ப இது கோபப்படக் கூடிய விசயந்தான் சொல்லப் போறே.. நீ இது மாதிரி என் கையைப் பிடித்துக் கொண்டு கொஞ்சினால் நான் எப்படிடா.. கோபப்படுவேன்.. வரும் கோபம் கூட இரண்டு தெரு தள்ளி ஓடிவிடும்." குறும்பாகச் சிரித்தான்.

"ம்..ம்.. இதான் வேணாங்கிறது.." சிணுங்கினாள்.

"சொல்லு. நான் கோபப்பட மாட்டேன்.."

"நாம் நம்ம கிராமத்துக்கு, திருவிழாவுக்குப் போகலாமா..? எனக்கு ரொம்ப ஆசையா இருக்குடா.."

"உங்க ஊருக்கு என்று கேட்காமல் நம்ம ஊருக்கு என்று கேட்டதுக்கு ரொம்ப சந்தோசமடி.."

கோபப்படுவான் என்று நினைத்தாள். அவன் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. "இதை.. நான் எதிர்பார்க்கலே... உனக்கு அங்கு போனா சந்தோசமா?" என்றான்.

"ரொ..ம்..ப.. " என்றாள் கண்கள் மின்ன.

"உன் சந்தோசம்தான் எனக்கு ரொம்ப முக்கியமடா.. சரி போகலாம்.. டிரஸ் எல்லாம் எடுத்து வை... நாளை காலை கிளம்பலாம்.."

"உங்களுக்கும் விருப்பம்தானே?"

அவள் முடியைக் கோதி விட்டுக் கனிவுடன் பார்த்தான். பின், 'போ,' என்றான்.

''நான் சொல்வதைக் கேட்க மாட்டீங்களோன்னு நினைச்சேன்..''

''அது எப்படி கேட்காமே இருக்க முடியும்.. பெண்கள்னாலே பெரிய சக்தி. அதிலும் மனைவி என்பவள் மாபெரும் சக்தி. அவ சொல்லைக் கேட்காம இருக்க முடியுமா..? அப்படி இருந்தா என்ன அவதாரம் எடுப்பீங்க.. என்று எங்களுக்குத் தெரியாதா.? சாமியே சாந்தமா இருக்கு.. அதுக்கு கோபம் வந்தால் எப்படி காளி அவதாரம் எடுக்குது.. அது போலத்தான் இதுவும்.'' சிரித்தான்.

''என்னடா இப்படிச் சிரிக்கிறே.. உனக்குப் பிடிக்கலைன்னா வேணாம்.. நீ கேட்டதால நான் சொன்னேன்... எனக்கும் ஒரு சேஞ்சாக இருக்கும்..''

''சரி. உன் மாமியாருக்கு ஃபோன் பண்ணிச் சொல்லிவிடு.'' என்றான்.

''எனக்கு ஃபோன் நம்பர் தெரியாது,'' என்றாள்.

''உதைபடுவே... ஸ்வீட் ராஸ்கல்.. எனக்குத் தெரியாது என்றா நினைத்தாய். நீ உன் மாமியாருடன் பேசுவது, இல்லை அவர்கள் வீட்டுக்கு வந்து உன்னிடம் பேசியது..''

கண்களை அகல விரித்தாள். ''எப்படித் தெரியும்.. நான் சொல்லலையே..''

''எனக்கு எல்லாம் தெரியும்டி.. ஆசைப் பொண்டாட்டியே..''

மறுநாள் இவர்கள் காரில் கிளம்பினர்.

''நிருபா, அங்கு எந்த வசதியும் இருக்காது. நீ நினைப்பது போல..''



''ஏன்டா.. எனக்குத் தெரியாதா.. நான் எதிர்பார்க்க மாட்டேன்,'' என்றாள் கன்னங் குழிய.

திவாகரே காரை ஓட்டினான். மகனைச் சன்னல் ஓரத்தில் உட்கார வைத்துவிட்டு நிருபா திவாகர் பக்கத்தில் உட்கார்ந்தாள். திவாகர் கன்னக்குழியை இடது விரலால் நிமிண்டினான்.

''ஏங்க ஒழுங்கா டிரைவ் பண்ணுங்க. ஊர் போய்ச்சேரணும்..''

இடக் கையால் அவளை இழுத்து இன்னும் நெருக்கமாக உட்கார வைத்தான்.

பின்னாடியே ஒரு மினிவேன் வந்தது. அதில் மிக்ஸி, டேபிள் கிரைண்டர், கேஸ் ஸ்டவ், சிலிண்டர், எலக்டரிக் ஸ்டவ், ஏர் கூலர் இன்னும் தேவையான பொருட்கள் வந்தன.

இரவு வீடு வந்தனர். திருவிழா என்பதால் தெருவில் விளக்கு கட்டியிருந்தார்கள். இவன் ஒரு பெரிய வீட்டின் முன் காரை நிறுத்தினான்.

''இது யார் வீடுங்க?'' என்றாள்.

''நம்ம வீடுதான்.. ஏன் இந்தக் கேள்வி..?''

''நான் இத்தனை பெரிய வீட்டை எதிர்பார்க்கலே.. சின்ன வீடு தான் என்று நினைத்தேன். நீங்கள் திங்ஸ்செல்லாம் வேனில் எடுத்து வரவும் இதெல்லாம் எதுக்கு என்று கேட்டேன். நீங்கள் என்னிடம் சொல்லவே யில்லை. நான் வீடு இங்கு கட்டியிருக்கேன் என்று.?''

''நாம் இந்த மாதிரி பேசுற அளவுக்கு இன்னும் நெருங்கலையே.. மனசால... இதெல்லாம் எப்படிச் சொல்ல முடியும்?''

உடனே அவள் முகம் வாடியது.

"இதுக்குப்போய் எதுக்கு முகம் வாடுவானே.. இனிமே தான் நாம் பேசப் போறோமே.." என்றான் இயல்பான குரலில்.

"சின்ன வீடும் இருக்கு.. அதைக் காலையில் பார்க்கலாம்," என்றான்.

அவர்களை வரவேற்றனர். மகனை, "வாப்பா!" என்றார் லெட்சுமியம்மா. அப்பாவும் அழைத்தார். இருவருக்கும் பொதுவாக, "வர்றேன்," என்றான்.

பேரனைத் தூக்கிக் கொஞ்சினார். "சாப்பிட வாம்மா," என்றனர் மருமகளை.

"இதோ குளித்துவிட்டு வர்றோம் அம்மா," என்றாள்.

மூவரும் குளித்து உடை மாற்றி விட்டு வந்தனர்.

கிராமத்தில் என்றாலும் நவீனமாகக் கட்டியிருந்தான். எல்லா வசதிகளுடன். சாதம் வடித்துச் சாம்பார் வைத்திருந்தார். தயிர் இருந்தது. சாப்பாடு சூடாக இருந்தது. வருணுக்குத் தயிர் போட்டு ஊட்டி விட்டாள்.

கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, "போய் படுங்கள்," என்று, அவர்களும் படுக்கச் சென்றனர்.

பெரிய படுக்கையறை. பெரிய கட்டில். நிருபா படுத்ததும் தூங்கி விட்டாள். காலையில் லேட்டாகத்தான் எழுந்தாள். திவாகர் காபி கொண்டு வந்து நீட்டினான். "காபியைக் குடிச்சுட்டு தூங்கு நிருபா," என்றான்.

"ஏங்க, இவ்வளவு நேரம் தூங்கிட்டேன். என்னை எழுப்பி விடக் கூடாதா?"

"இப்ப எழுந்து என்ன பண்ணப் போறே.. அங்கேதான் அவசர அவசரமா எழணும், வேலைக்குப் போகணும். இப்ப இங்கு என்ன. தூங்கு," என்றான்.



கிராமத்தில் இருந்து அனைவரும் பார்க்க வந்தனர். நிருபாவை டவுன் பொண்ணு எப்படி இருக்கும் என்று காலையிலேயே சொல்லிவிட்டான். 'இன்று சேலை கட்டு,' என்று.

"ஏங்க, வீட்டில் இருக்கும் போது எதுக்கு?"

"உன் இடுப்பு சரிவைப் பார்த்துத்தான் எனக்குத் தண்ணியே இறங்குது. அதான்." அவள் அவனை முறைத்தாள்.

இப்போ தெரிந்தது எதற்கென்று. இப்படி பார்க்க வருவார்கள் என்று. திவாகர் அனைவரிடமும் பேசினான். சிரித்தான், கிண்டல் பண்ணினான். ஒரு பாட்டி, "தெவாகர் என்ன ஊர் பக்கமே ஆளைக் காணோம்.. ரொம்ப நாளா.."

"என்ன பாட்டி பண்ணட்டும்.. இந்த அழகான பொண்டாட்டியை விட்டுட்டு வர என்னால் முடியலை.. அதான்." அவள் இடுப்பைக் கிள்ளினான்.

"ஏங்க உங்க பேரை இந்தப் பாட்டி இப்படிக் கொலை பண்றாங்க.."

பழைய வீடு பக்கத்துலேயே இருந்தது. கூரை வீடு. ரொம்பச் சின்னது. சாணம் போட்டு மெழுகி பார்க்கவே வித்தியாசமா இருந்தது. உள்ளே ஒரு மூலையில் மண் அடுப்பு இருந்தது அந்த அறைக்குள். வெளியே இரு சிறு திண்ணைகள். அவ்வளவுதான். வெளியேயும் மண் அடுப்பு இருந்தது.

"இதுதான் ஐயாவோட வீடு. இங்குதான் நான் பிறந்து, வளர்ந்து தவழ்ந்து, தூங்கி வளர்ந்தேன்." ஆசையாக அந்த இடத்தைப் பார்த்தாள்.

"ஏங்க, இன்னிக்கு இங்கு நாம் படுக்கலாமா..? ஆசையா இருக்கு.. உங்க இடத்தில் படுக்க எனக்கு.."

"வருண் எப்படிப் படுப்பான் இங்கு..?"

"அவன் பாட்டிகிட்டேயே இருக்கட்டும்.."

அவள் கண்களை ஊன்றிப் பார்த்தான். அதில் காதல் வழிந்தது. "சரி" என்று எழுந்து போய் ஒரு பாய், தலையணை, போர்வை, டேபிள் ஃபேன் எடுத்துக் கொண்டு வந்தான்.

பாயை விரித்துப் போட்டு ஃபேனை ஓடவிட்டான். மகாராணி பள்ளி கொள்ளலாமே என்று சட்டையைக் கழட்டி அங்கிருந்த ஒரு குச்சியில் தொங்க விட்டான்.

இருவரும் படுத்தனர். திவாகர் கையைத் தலைக்குக் கொடுத்து விட்டத்தைப் பார்த்துப் படுத்திருந்தான்.

நிருபா அவனை நெருங்கி உதட்டில் முத்தமிட்டு காலைத் தூக்கி அவன் மீது போட்டுக் கட்டி அணைத்தாள். அவன் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

"இப்ப.. நீ எதைடி.. தர்றே.. உடம்பையா. மனசையா..?"

"மொத்தமா.. என்னையேடா.. தடிப்பயலே.."

அவன் ஆவேசமாகக் கட்டியணைத்தான். அவளும் அவன் எதிர்பாராததை யெல்லாம் செய்து அவனைத் திகைக்க வைத்தாள். காதலைத் திகட்ட.. திகட்ட.. வெளிப்படுத்தினாள். அவளின் அன்பை அவனால் தாங்க முடியவில்லை. திருப்பிக் கொடுத்தான்.

"முரட்டுப்பயலே.. மூச்சு வாங்குதடா.. விடுடா என்னை.. ம்.." என்று முனகினாள்.

"முதலில் நீ விடுடி.. என்னை, ராட்சசி... நீ மட்டும் என்னை எ..ப்..ப..டி.." அவன் வாயை இவள் இதழால் மூடினாள்.

திவாகரும் அவள் மேல் வைத்த காதலை மறைக்காமல் அப்படியே நிரூபித்தான். அதை அவளும் ஆவலுடன்



வரவேற்றாள் சளைக்காமல். இந்த சின்ன இடத்தில் அவர்களின் காதல் கரை புரண்டோடியது. காட்டாற்று வெள்ளமாக. அவர்களின் கோப தாபங்கள் அதில் அடித்துச் செல்லப்பட்டன.

"விடுடி... சிறுக்கி.. என்னை.."

"விடமாட்டேன்டா.. அதென்னடா... சிறுக்கி.. எனக்குப் புரியாது..." என்றாள் மயக்கும் குரலில்.

"ஓ.. நீ சென்னை பாதி மும்பை பாதி கலந்த கலவையல்லவா.. அதான் உனக்கு அழைப்பு விடுவது போல. உன் அணைப்பிலேயே இருந்தாலும் விடுடி.. என்னை என்று செல்லமா சொல்றேன்ல.. அதுபோல ஒரு பொண்டாட்டிக்குப் புருசன் விடும் அழைப்பு; சிக்னல். இங்கு நம்ம மாதிரியெல்லாம் கண்ணே, மணியே.. அன்பே.. டார்லிங் என்று எல்லாம் தன் காதலை வெளிப்படுத்தமாட்டாங்க.. இந்த மாதிரி திட்டுவது போல் அன்பைக் காட்டுவாங்க.. சிறுக்கினு திட்டினா.. அன்று இரவு.." என்று வாயில் சொல்லாமல் செய்கையில் காட்டினான்.

"அட பொறுக்கி.. போதும்டா.. இரவு இன்றோடு முடிந்துவிடும் என்று யாராவது உன்னிடம் சொன்னார்களா?"

"பாத்தியா.. போதும்டானு சொல்லி என் மூடை இன்னும் அதிகமாக்குறே.. நீ.. பொறுக்கினா.. எனக்கு அந்த மூடு வந்து விடுகிறது.. இதற்கு நானா பொறுப்பு.." அவளைத் தூங்கவே விடவில்லை இரவு முழுவதும்.

"அவங்கதான் சொல்றாங்கன்னா.. நீ ஏன்டா சொல்றே..?"

"நான் கிராமத்துக்காரன்டி.. ஐயாவோட வீரத்தைப் பத்தி தெரிஞ்சிருப்பியே.." முகத்தோடு முகம் வைத்துத் தேய்த்தான். பளீரென்று புன்னகைத்தான். அதில் மயங்கி அவன் உதட்டில் முத்தமிட்டாள்.

''நான் கூட உனக்கு ஒன்னுமே தெரியாதுன்னு நினைச்சேன்.. நீ என்னை மிஞ்சிட்டே.. இத்தனை ஆசையாடா.. என்மேல் உனக்கு.. என் செல்லம்ஸ்...'' என்று தன் மேல் தூக்கிப் போட்டுக் கொஞ்சினான்.

## 59



''பாவங்க... இங்கே இருக்கிறவங்கல்லாம்.. எப்படித்தான் இருக்காங்களோ...?''

''அவங்க உடம்பாலே அடிக்கடி ஒன்று சேர முடியலைன்னாலும் மனசால, பார்வையால, பேச்சாலே.. என்று அன்பு வெளிப்படும். பொழுதுக்கும் தோட்ட வேலை பார்த்துவிட்டு பொழுது போனதும் சோறாக்கிய அடுப்பில் சுடு தண்ணி போட்டு புருசன் வீட்டுக்கு வந்ததும் அதைக் கலந்து முதுகு தேய்த்துவிடு என்பான் புருசன். இவர்கள் அந்தக் காதலை முதுகு தேய்த்து விடுவதில் காண்பிப்பார்கள்... அந்தத் தொடுகை, உரசல் எல்லாம் காதலா வெளிப்படும். அப்படியே ஒரு இடத்தில் படுத்தாலும் தனியாத்தான் படுப்பாங்க..''

அவன் காதுக்குள் ஏதோ கிசுகிசுத்தாள்.

அவன் சத்தம் போட்டுப் பக..பக..ன்னு சிரித்தான்.

''ஏன்டா உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருச்சு. நான் என்ன ஜோக்கா சொன்னேன். நீ இந்த மாதிரி அர்த்த ராத்திரியில் சிரிக்கிறே..''

''நீ எதைச் சொல்றேனு புரியுது..''

அவள் புரியாமல் விழித்தாள்.

''நான் சொன்னது... என்று அவள் காதில் முணுமுணுத்து விட்டு, ''நீ இதே நினைப்புல இருக்கே.. எப்பப்பார்...'' என்றான்.



''ஏன்டா தடிப்பயலே.. நானா.. '' அதற்கு மேல் அவளைப் பேச விடவில்லை அவன்.

''ஏன்டி சின்னவளே.. எப்படி இருக்கு என் வசந்த மாளிகை. எத்தனையோ பங்களா இருக்கு. அங்கெல்லாம் வராத காதல் இங்கென்னடி.. இப்படி என்னை ஆழிப் பேரலையால் அடித்துச் செல்ல. இதை நான் இன்று எதிர்பார்க்கலே.. உன் வாய்தான் வேண்டாம் என்று பேசியதே தவிர உன் கண்களில் காதல் வழிந்ததைப் பார்த்தேன்டி.. எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு. இந்த இடத்தில் என் வீட்டில்.. நான் தவழ்ந்த இடத்தில் நம் சங்கமம் தொடர்ந்தது..''

''போடா.. பட்டிக்காடு..''

''பட்டிக்காடு இதுவரை என்ன பண்ணினான் என்று தெரியும்தானே..'' மீசையை முறுக்கினான்.

''அதுக்கு ஒன்.. னும்.. குறைச்சலில்லை.''

''ஏன்டி என் மீசைக்கு என்ன குறைச்சல். இந்த மீசையைப் பார்த்து எத்தனை பேர் மயங்கினாங்க.. ஏன்.. நீ மயங்கலே... என்று சொல்?'' புன்னகை பளீரென்று மின்னல் வெட்டியது போல் இருந்தது.

குனிந்து முத்திரையைப் பதித்தாள். குனிந்தவளை அவன் விடவில்லை.

''ரொம்ப அழகாத்தான்டா இருக்கு கரடிக் குட்டி மாதிரி!'' மார்பின் ரோமங்களைக் கையால் தேய்த்து விட்டாள்.

''ஏன்.. பிடிக்கலையா.. இந்த மாதிரி இருப்பது?''

''ம்..ம்.. ரொம்ப பிடிக்குது..'' முகத்தை அவன் நெஞ்சில் வைத்துத் தேய்த்தாள்.

திடீரென்று எதுவோ குதித்த மாதிரி இருந்தது. அவள் பயந்து அவனைக் கட்டிக் கொண்டாள்.

''என்னடா என்னமோ சத்தம் கேட்குது..''

''எலியா எதுவும் இருக்கும்.''

''எலியா..'' அவன் கழுத்தை மீண்டும் கட்டிக் கொண்டாள்.

''நீ இப்படி பயப்படுவே என்று தெரிந்திருந்தால் முன்னாடியே அங்கு நம் வீட்டில் நாலு எலிகளைக் கொண்டு வந்து விட்டிருப்பேனே.. நீ பயப்படாதே. இனி எலி தேவையில்லை எனக்கு. வந்தால் அடித்து விடுகிறேன்..''

''நீ இப்படி படுத்துக் கொண்டு எப்போ அடிப்பது?''

''திவா..'' என்றாள். குரல் குழைந்தது. இனிமையாக அதில் காதல் வழிந்தது.

''டேய்.. திவா..''

''ம்..ம்.. என்னடி?'' என்றான் கிறக்கமாக.

''எனக்கு ரொம்ப பிடிச்சுதடா..''

''எது..?'' என்றான் இனிமையாக.

''அதான்டா.. இந்த இடம்.. உன் அன்பு, மென்மை கலந்த வன்மையான ஆலிங்கனம்.. எனக்கு ரொம்ப பிடிக்குதுடா..''

''எனக்கும்தான்டி.. உன் காதலை முதன் முறையாக உணர்ந்தேன். நீ வெளிப்படுத்திய வேகம்தான், என்னால் தாங்க முடியவில்லை.''

அவனை அடித்தாள். அவன் சிரித்தான்.

விடிந்துதான் தூங்கினார்கள். எழ ஏழு மணிக்கு மேலானது. கிராமத்தில் விடிந்ததும் எந்தக் கதவும் சாத்தியிருக்காது. லெட்சுமி



வாசல் தெளித்துக் கூட்டிக் கோலம் போட்டுவிட்டுப் பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

கணவர் வந்து, 'என்னடி உட்கார்ந்திருக்கே..? காபி போடலையா..? புள்ளை எழுந்திருக்கப் போறான்..''

''இன்னும் நம்ம புள்ளையும் எழுந்திருக்கலைங்க.. அதான் இங்கு வந்து உட்கார்ந்திருக்கேன்..''

''ஓ.. அந்த வீட்டில் படுத்துருக்காங்களா... சரி. மெல்ல எழட்டும்,'' என்று அவரும் வெளியே போய்விட்டார்.

திவாகர் தான் முதலில் விழித்தான். எழுந்து மணியைப் பார்த்தான். மணி எட்டாகிப் போனது. நிருபா வியர்வையுடன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். மெல்ல முத்தமிட்டு எழுப்பினான்.

அவள் விழித்து, 'எனக்குத் தூக்கம் வருதுடா..'' என்று திரும்பிப் படுத்தாள்.

''எழுந்து அங்கே வந்து பாருடி.. இங்கதான் அம்மா வந்து காபி போடணும், டிபன் பண்ணணும். எழுந்து டிரஸ்சைப் போடு.. வருண் வந்தாலும் வந்து விடுவான்.''

வருண் என்றதும் தடக்கென்று எழுந்து தேடினாள்.

''இந்தா இதைத்தானே தேடினே.. அவசரத்துல எங்காவது கழட்டிப் போடுறது. விடிந்து எங்கேனு தேடுறது..'' என்றான் கண்களில் குறும்பு மின்ன.

அவனின் கேலியை ரசித்தவாறு டிரஸ்சைப் போட்டாள். ''கதவை திறங்க,'' என்றாள்.

''ஏன்டி இந்த படுக்கை அப்படியே இருக்கு. இப்படி சுருட்டி வைக்காமல் அப்படியே போவதா.. எடுத்து வைடி.. வெறும் பூவா கிடக்கு.''

"சீ.. போடா.. எனக்குத் தூக்கம் வருது," என்று கதவைத் றந்து கொண்டு போய்விட்டாள்.

இவள் இப்படிப் போவாள் என்று எதிர்பார்க்கவில்லை. பாயை டுக்கு முன் அம்மா வந்து விட்டார். "விடுப்பா. நான் எடுத்து வைக்கிறேன்," என்று தலையணையின் உறையைக் கழட்டிக விட்டு மேலே வைத்தார். பின் பாயை எடுத்து வெளியே கொண்டு போய்த் தண்ணீர் ஊற்றி அலசி படல் மீது வைத்து விட்டு வீட்டைச் சாணம் கொண்டு மெழுகினாள்.

"ஏங்க, எதுக்கு நாம் படுத்த பாயை அலசிப் போடுறாங்க.. வீட்டையும் மெழுகுறாங்க..?"

"அப்புறம் நீ இராத்திரி பண்ணினதுக்கு இதெல்லாம் பண்ணாமல் என்ன செய்யுறது.. இங்கு அப்படித்தான் படுக்கைகளை அலசிப் போடுவாங்க.."

"ஏன்டா இந்த விசயம் எல்லாம் உனக்கு எப்படித் தெரியும். வீடு வீடா இதைப் போய்ப் பார்ப்பியா?" முறைத்தாள்.

"ஆமாடி. எனக்கு வேறு என்ன வேலை இருக்கு, இதைத் தவிர. நான் போய் காபியை வாங்கிட்டு வர்றேன். நீ அதற்குள் குளி," என்று போனான். வருணுக்குக் காபியை ஆற்றிக் கொடுத்தாள் லெட்சுமி. "நீயும் குடிப்பா," என்றார்.

"அவ குளிக்கிறாம்மா... அவளும் வரட்டும். ஆறி இருக்குமே.. பின் சேர்த்துச் சூடு பண்ணிக்கலாம்.."

சீக்கிரமாகவே நிருபா வந்தாள்.

திவாகர், "ஏ.. இங்கே வா.. இந்தக் காபியைச் சூடு பண்ணு," என்றான்.

"சரி" என்று அடுப்புப் பக்கத்தில் தலை முடி விரித்து சேலை முந்தானையைப் பறக்கவிட்டு அடுப்பின் பக்கத்தில் உட்கார்ந்தாள்.



"அம்மா, இங்கே பாரும்மா. இவ காபி சூடு பண்ற லட்சணத்தை. எப்படி உட்கார்ந்திருக்கா பாரு. அடுப்பு எரியும் போது இதுமாதிரி இருந்தால் நெருப்பு சேலை, முடி என்று பட்டு விடும். எல்லாம் முடியைக் கட்டி, சேலையை இழுத்துச் செருகி இப்படி உட்காரணும்," என்று அவளுக்குச் செருகி விட்டான்.

"சே.. விடுங்கள்.. முழங்கால் தெரியற அளவுக்குத் தூக்குறீங்க.. இங்க பாருங்கம்மா.." இவள் கூப்பிட்டாள்.

"எதுக்குடி இப்ப எங்கம்மாவைக் கூப்பிடுறே.. தள்ளு. நான் பற்ற வைத்துச் சூடு பண்றேன். நீ சுட்டுக்காதே.. துணியைப் பிடித்து இதையெல்லாம் செய்யணும்," என்று அடுப்பைப் பற்ற வைத்துக் காபியைச் சூடு பண்ணினான்.

"அம்மா, அடுப்பில் எதுவும் வைக்கணுமா?" என்றான்.

"ஆமா. தோசை ஊத்தணும். நான் பாத்துக்கிறேன். நீங்க போங்க.. திவாகர், இன்று பக்கத்து ஊர்ல என் அக்கா பொண்ணுக்கு விசேசம். நான் இன்று போகணும். வருணைக் கூட்டிப் போகட்டுமா.. நீங்க நாளைக்கு முகூர்த்தத்துக்கு வர்றீங்களா... இப்போ மதியத்துக்கு நான் சமைத்து வைத்து விட்டுப் போகட்டுமா..?" என்றாள்.

"வருண் இருப்பானம்மா?"

"இருப்பான். நிருபா உனக்கு ஃபோன் பண்ணிச் சொல்றேன் வந்து கூட்டி வா.. பக்கம் தானே.. நானும் அப்பாவும் போறோம்.."

"சரிம்மா. சமைக்க வேண்டாம். நாங்க பார்த்துக்கிறோம்.. நீங்க கிளம்புங்க.."

"நிருபா, வருணுக்கு டிரஸ் எடுத்துக் கொடுத்து விடு," என்றான்.

காபியைத் திவாகர் மடியில் உட்கார்ந்து குடித்தாள்.

''என்னடி, கன்னம், கழுத்து, உதடு எல்லாம் ஏதோ கடிச்ச சிவந்தாப்புல இருக்கு.. எங்கே காட்டு. வேற இடத்துல இருக்கா என்று பார்ப்போம்,'' என்று சேலையில் கை வைத்தான்.

''சீ.. போடா.. இடியட்..'' என்று நகர்ந்தாள்.

மல்லிகாவையும் அந்த ஊரில்தான் கட்டிக் கொடுத்திருந் தார்கள். சாயந்திரமா தோட்டத்துக்கு நடந்து சென்றார்கள். அவர்களைப் பார்த்ததும் மல்லிகா கூப்பிட்டாள். இவர்களும் போனார்கள். சின்னக் குடிசை வீடு, நான்கு புறமும் ஓலைதான் சுவர். குழந்தையை வெளியில் ஒரு மரத்தில் தொட்டி கட்டிப் போட்டிருந்தாள். நிருபாவுக்கே என்னவோ போல் இருந்தது.

''ஏங்க, எனக்கு என்னவோ போல் இருக்கு. மல்லிகாவைப் பார்க்க.. படுக்கக் கூட இடமில்லை. அவ இடத்தை நான் பிடுங்கின மாதிரி இருக்கு எனக்கு.. உங்களை அவ கல்யாணம் பண்ணியிருந்தால் நல்லா இருப்பாளே..''

''அவ இடத்தை நீ பிடுங்கலே.. அவதான் உன் இடத்துக்கு வரணும்னு ஆசைப்பட்டாள். என்னைக் கல்யாணம் பண்ணி யிருந்தாத்தானே அவ நல்லா இருப்பா.. அதான் இல்லையே,'' என்றான் எரிச்சலாக.

''ஏங்க, நாம வீடு சும்மாதானே இருக்கு.. இங்கு வந்து இருக்காட்டியும் இரவு மட்டும் வந்து படுத்துக்கட்டுமே.. குழந்தைகள் வேறு இருக்கு. அதுவும் மூன்று. எத்தனை வருடம் ஆகிவிட்டது கல்யாணம் ஆகி.''

''எங்க வந்து படுக்கச் சொல்றே.. நம் பெட்ரூம்லயா..? இதை நான் சொல்லப் போய் ஊரே.. என்னை அவ புருசனே. அவளை நீ வச்சுருக்கியா.. பின் எதுக்காக வீட்டில் வந்து தங்கச் சொல்லணும் என்பான். இது எனக்குத் தேவையாடி. உன்னையே இரவு சமாளிக்க என்னால முடியல. இதில் இன்னொருத்தியா..?



இரவு, பகல் என்று எனக்கு வேறு வேலையே இல்லை. இந்த வேலைய்யை மட்டும் பார்த்தா போதுமா?'' என்றான் சிரியாமல்.

பில்லோவைத் தூக்கி அவன் மீது வீசினாள்.

''ஒழுங்கா ஒரு புருசனுக்குச் சோறாக்கிப் போடத் தெரியலே.. வந்துட்டா பெரிசா பேச.. மதியம் சமை,'' என்றான்.

''எனக்கு என்ன தெரியும்.. சமைக்கத் தெரியாது,'' என்றாள்.

''சரி, வா. நான் கத்துத் தருகிறேன். கேஸை இப்படித்தான் ஆன் பண்ணணும் தெரியுமா?''

''அதெல்லாம் தெரியும்டா..''

''சரி. இப்படி சாதம் வைக்கணும். சாம்பார் வைக்கணும். காய் பண்ணணும்,'' என்று எல்லாமே அவளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அவளிடம் வம்பு பண்ணியே சமைத்து முடித்தான். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''உங்களுக்குச் சமைக்கத் தெரியுமா?'' என்றாள்.

''சமைக்கிறது என்ன பெரிய விசயமா..? இல்லே பொம்பளைங்களுக்குத்தான் தெரியணும் என்ற சட்டமா..? நான் வீட்டில் இருக்கும் போதே சமைப்பேன். கிராமத்தில் எல்லாம் அந்த மூன்று நாள் ஒதுங்கித்தான் இருப்பார்கள். அப்போ எல்லாம் இப்படி சமைக்கிறது உண்டு. வா, சாப்பிடலாம்,'' என்று சாப்பிட்டனர்.

''ரொம்ப நல்லா இருக்குடா...'' என்றாள்.

''அவ்வளவுதானா? நான் உனக்குச் சாப்பாடு ஆக்கிப் போட்டதுக்கு.'' கண் சிமிட்டினான்.

''சாப்பிட்டு வாடா, பலமா கவனிக்கிறேன்,'' என்றாள் புன்னகையுடன். பலமாகவும் கவனித்தாள். இருவரும் தூங்கி ஐந்து மணிக்குத்தான் எழுந்தார்கள்.

மாலையில் ஊர்ப் பெரியவர்கள் இவனைப் பார்க்க வந்திருந்தனர். அதைப் பார்க்க ஒரு கூட்டமே வந்தது இவன் வீட்டுக்கு. வந்தவர்களை வரவேற்று உட்கார வைத்துவிட்டு உள்ளே போய், "நிருபா, ஊர்ப் பெரியவர்கள் எல்லாம் வந்திருக்காங்க. நீ வந்து வாங்க என்று கேள்."

அவள் நைட்டியில் இருந்தாள். நீ சேலையைக் கட்டிக் கொண்டு வா.. அவர்கள் முன்னாடி வாடா.. போடா என்று பேச வேண்டாம்.." என்றான் சிரித்துக் கொண்டே.

"என்.. கிட்டே செமையா வாங்கப் போறே.. என்னமோ பகலில் பெரிய மரியாதை.. பொண்டாட்டியை மிரட்டுறது.. இரவில் அவள் காலில் விழுவது.. இந்தப் பெரியவர்கள்.. இது என்ன போலியான மரியாதை. எனக்கு இதெல்லாம் பிடிக்காது. நான் எப்பவும் போல் தான் இயல்பா இருப்பேன்.. அடுத்தவங்களுக்காக என்னால் நடிக்க முடியாது."

"சரி, வாடி.. சீக்கிரம்," என்று போனான். இவள் பின்னாடியே போய், "வாங்க!" என்று வரவேற்றாள்.

வந்த பெரியவர்கள், "நம் ஊர் கோயிலைக் கட்டணும். சுவர் எல்லாம் இடிந்து விட்டது. நீங்கள் உதவி பண்ணணும். நாங்க எல்லாம் ஊரில் வசூல் பண்ணித் தருகிறோம். நீங்கள் கொஞ்சம் மனசு வைக்கணும்," என்றார்கள்.

"சரி. என்னால் முடிந்த சிறு தொகையை நான் தருகிறேன்," என்றான். மனைவியின் முகம் பார்த்து.

"அட கஞ்சப்பிசுனாரி! ஏதோ சிறு தொகை என்ன தர்றே.. உன்னிடம் பணமா இல்லை. ஆட்கள்தான் இல்லையா.. எதுக்கு இந்தக் கஞ்சத்தனம் கோயில் கட்ட?" என்றாள் ஆங்கிலத்தில் யாருக்கும் புரியா வண்ணம்.

அவன் புன்னகையுடன் உட்கார்ந்திருந்தான்.



"அம்மா என்ன சொல்றாங்க?" என்றார்கள்.

"இந்தக் கோயில் செலவை முழுவதும் அவங்களே ஏத்துக்குறாங்களாம்!" என்றான்.

அவள் நன்றாகத் திகைத்தாள். இவன் என்ன சொல்கிறான் என்று தெரிந்து தான் சொல்கிறானா.. நான் என்ன சொல்கிறேன்.. இவன் என்ன சொல்கிறான் என்று மீண்டும் பேசினாள் யாருக்கும் புரியாவண்ணம்.

"இவங்க எப்படிச் செய்வாங்க?" என்றார் ஒருவர்.

"இவங்க தனியா பிசினஸ் பண்றாங்க.. நான் தனியா பிசினஸ் பண்றேன். என்னை விட இவங்கதான் பெரிய ஆள்," என்றான்.

அவளும் தன்னை மறந்து, "என்னடா திவா சொல்றே.. உன்னைப் பத்தி எனக்கு என்ன தெரியும்?" என்றாள் ஆங்கிலத்தை மறந்து.

வந்த பெரியவர்கள் திகைத்தனர். இவள் பேசியதைக் கேட்டு. திவாகர் அவள் காதுக்குள் மெல்ல ஏதோ பேசுவது போல், 'ஏன்டி இப்படிப் பச்சைப் பொய் சொல்றே.. என்னைப் பத்தி உனக்கு ஒண்ணுமே தெரியாதா.. இராத்திரி நீ என்னை முழுசா பாக்கலே... ஏமாத்துக்காரி!" என்றான்.

"வாயை மூடுடா.. என்கிட்டே உதை வாங்கப் போறே.. எப்படி வசதி?" என்றாள் பல்லைக் கடித்துக் கொண்டு.

வந்த பெரியவர்களிடம், "நாங்களே கோயிலைக் கட்டித் தருகிறோம்," என்றான்.

"என்ன நிருபா நான் சொல்றது?" கண்ணைக் காட்டினான், சரி என்று சொல் என்று.

"சரிங்க," என்றாள் அவளும்.

மறுநாள் கல்யாணத்துக்கு காரில் இருவரும் சென்றனர். காரை நிருபா ஓட்டினாள். அதை அங்குள்ளவர்கள் அதிசயமாகப் பார்த்தனர்.

திருவிழாவிற்கு நிருபா பட்டுப்புடவை கட்டி, நகை போட்டு தலை நிறைய மல்லிகைப்பூ வைத்துத் தேவதை போல் வந்து நின்றாள்.

திவாகரே இப்படி பட்டுப் புடவையில் இப்பத்தான் பார்க்கிறான், கல்யாணத்தன்று பார்த்தது.

அவன் பார்வையில் முகம் சிவந்தாள். "போலாமா?" என்றாள்.

"போலாமே.." என்று அனைவரும் கோயிலுக்குப் போயினர். சின்னச் சின்னக் கடைகள் போடப்பட்டு இருந்தன. விளையாட்டுச் சாமான்கள், தின்பண்டங்கள், பஞ்சு மிட்டாய், சின்ன ராட்டினம், பாசி, வளையல், பொட்டு என்று இருந்தது. வருணை ராட்டினத்தில் ஏற்றிச் சுற்ற வைத்தனர்.

"நிருபா, உனக்கு என்ன வேணுமோ, வாங்கிக்கோ." என்றான்.

அவள் சிரித்தாள். பசங்களும், பெண்களும் சிரித்துப் பேசி.. சாமான் வாங்குவதை இவள் கண் கொட்டாமல் பார்த்தாள். வருண் கையில் மிட்டாய்கள் இருந்தன. வருணுக்குப் பொம்மைகள் வாங்கினர்.

பொங்கல் வைத்து, மாவிளக்குப் போட்டு இரவு முளைப்பாரி கொண்டு சென்றனர். நாடகம் நடந்தது. எல்லாரும் பாய் எடுத்துக் கொண்டு பாய் விரித்து அதில் குடும்பமாய் உட்கார்ந்து கொண்டு நாடகம் பார்த்தனர். இளசுகள் பெண்களைக் கேலி செய்து விளையாடினர்.

"நீ நாடகம் பார்க்கிறியா நிருபா?"



"ஒரு அரை மணி நேரம் பார்த்துவிட்டுப் போறேன்.. நீங்க வேணா இருந்து பார்த்துட்டு வாங்க," என்றாள்.

"ரொம்பத்தான் நா.. இருந்துப்பேன். நீ இருப்பேடி. என்னால் இருக்க முடியாது." பார்வையை அவள் மேல் மேயவிட்டான்.

"இது கோயில்.. அது நினைவிருக்கட்டும்.."

## 60



வீட்டுக்கு வந்ததும் கட்டி அணைத்தான். "நீ இந்தப் பட்டில் எத்தனை அழகு!"

"விடுங்க.. டிரஸ் மாத்தணும்," என்றாள்.

"நோ.. நீ இப்படியே படுக்கைக்கு வர்றே." என்று தூக்கிப் படுக்கையில் போட்டான்.

மறுநாள் காலையிலேயே லேப்டாப்பை எடுத்து வைத்துக் கொண்டு வேலை பார்த்தான். நிருபாவும் துணிகளை மடித்து வீட்டை ஒழுங்குபடுத்தினாள். வருணுக்கு மதியம் சாப்பாடு ஊட்டித் தூங்கப்பண்ணினாள்.

திவாகர், "அப்படியே அவன் அப்பனையும் கவனிக்கிறது.. எனக்குப் பசிக்காதா.. எனக்கும் அப்படியே ஊட்டி விடு.. என்னால் எழுந்திருக்க முடியாது.."

நிருபா சாதத்தைப் பிசைந்து எடுத்து வந்து ஊட்டி விட்டாள். அப்போது மல்லிகா வந்தாள். இவள் ஊட்டி விடுவதைப் பார்த்து வெட்கப்பட்டு வெளியே தயங்கி நின்றாள்.

"வா மல்லிகா. ஏன் வெளியே நிக்கிறே.." என்றாள் நிருபா.

அவள், "எங்கள் வீட்டுக்கு நாளை சாப்பிட வரணும்," என்றாள்.

"சரி. வர்றோம்," என்றாள்.

லெட்சுமி அன்று நாட்டுக் கோழி அடித்து சூப் வைத்து ல்லெண்ணெய் ஊற்றிக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''இது என்ன இப்படி சூடா இருக்கு. குடிக்கிறீங்க..?''

''இது கோழி சூப். அய்யாவுக்குத் தெம்பு வேணும்ல.. இது பெத்த அம்மாவுக்குத் தெரியுது.. மகனுக்கு வேலை ஜாஸ்தி ன்று. வேலை வாங்கும் உனக்கு எங்கே தெரியுது... புருசனுக்கு இது மாதிரி எல்லாம் குடுத்து உடம்பைத் தெம்பா வச்சுக்கணும் ன்று.''

உதட்டைப் பிதுக்கினாள் அழகாக.

மறுநாள் வேலை இருக்கு என்று வெளியே போய்விட்டான். நிருபா தனிமை கிடைத்ததும் பழைய நினைவுகள் வந்து அலைமோதின. இத்தனை நாள் அப்பா நினைப்பே இல்லாமல் பார்த்துக் கொண்டான். இன்று அவன் போனதும் நினைவு அதிகமாக வந்தது. நினைவுகள் கண்ணீரை வரவழைத்தன.

வீட்டுக்கு வந்தவன் மனைவியின் முகத்தைப் பார்த்து விட்டு அணைத்துக் கொண்டான். அவள் மீண்டும் விக்கினாள்.

''நான்.. உன்னைத் தனியா விட்டுப் போயிருக்கக் கூடாதுடா.. சாரிடா. உன் வேதனை தெரிந்தும் நான்.. இப்படிப் பண்ணி விட்டேன்.'' படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்து தன் மேல் சாய்த்துக் கொண்டு.. தலையைத் தடவிக் கொடுத்தான்.

அவன் அம்மா கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.

திடுக்கிட்டு, ''என்னம்மா?'' என்று எழுந்திருக்கப் போனான்.

''படுத்திரு திவாகர். இன்னைக்கு நிருபா அழுத மாதிரி இருந்தா.. அதான் பார்த்துட்டுப் போலாம்னு வந்தேன்.''

''இப்ப வேணாம்மா. காலையில் பேசலாம்,'' என்றான் ஜாடையில்.



ஊருக்கு வந்து விட்டனர். வழக்கம் போல் வேலைகள்.. இதில் கோயில் கட்டும் வேலையும். திவாகர் நிருபாவை வம்புக் கிழுத்தான்.

''நிருபா, கொஞ்சம் பணம் குடேன். கோயில் கட்ட.. என்னிடம் அவ்வளவு பணமில்லை,'' என்றான்.

''ஏங்கிட்டேயும் அவ்வளவு பணமில்லை,'' என்றாள் குறும்பாக.

''நிஜமா.. இல்லை.. இல்லை..'' என்று அவள் கதுப்புக் கன்னத்தைக் கடித்தான்.

நாட்கள் சிறு ஓடை போல நெளிவு சுழிவுடன் போய்க் கொண்டிருந்தன. இருவரும் பிரச்சனைகளின் வலியை மறந்து சேர்ந்து வாழ்ந்தாலும் இன்னும் மனம் விட்டுப் பேசி ஒரு முடிவுக்கு வரவில்லை. அவர்களறியாமல் மனதில் இறுக்கம் இருந்தது. எங்கோ இனி பழகியதைப் பேசினால் இந்த இனிமையான தருணம் நம்மை விட்டுப் போய்விடுமோ.. என்று தற்காலிகமாக ஒத்தி வைத்திருந்தனர்.

அன்று நிருபாவுக்கு ஃபோன் பண்ணி, ''சீக்கிரம் வா.. நானும் மூணு மணிக்கு வந்து விடுவேன்,'' என்றான்.

அவன் வெளியூர் போய் இரண்டு நாள் ஆகியது. அவனின் தாபம் புரிந்து அவளும் வழிவிட்டாள்.

அவள் வேண்டுமென்றே.. 'திவா, நான் ஐந்து மணிக்கு வர்றேனே.. நீங்க அதற்குள் வருணைக் கூட்டி வந்து விடுங்களேன்.' என்று சீண்டினாள்.

அவன் எரிச்சலானான். ''ஏன்டி உன் மரமண்டைக்கு நான் சொல்வது புரியலையா..? நான் உன்னை எதுக்கு வரச் சொல்றேன்.. வருண் வரட்டும் என்கிறே... கட்டுச் சோற்றில் பூனையை வைத்துக் கட்டியது போல.. உன்கிட்டே வந்தாலே..

ன்னப்பா.. என்னப்பா. என்கிறான். வாடி சீக்கிரம் என் மூடைக் கெடுக்காதே..''

அவள் கலகலவென்று சிரித்தாள். அதைக் கேட்ட அவன் ஃபோன்லேயே முத்தம் கொடுத்தான்.

காரை விட்டு இறங்கி வந்த மனைவியைத் தாபத்துடன் அணைத்தான். ''என்ன முரட்டுத்தனம். இந்த விசயத்தில் மென்மை என்பதே கிடையாதாடா.. ஹேய் நான் பிரஷ்சாயிட்டு வர்றேன்,'' என்றாள்.

அவன் விடவில்லை. அவளும் பேசாமல் அடங்கினாள். அவனை விட மனமில்லாமல் தன் கையணைப்பிலேயே வைத்திருந்தான்.

மகன் வந்த சத்தம் கீழே கேட்டது. இருவரும் எழுந்து கீழே வந்தனர். அப்பாவைப் பார்த்த மகன், ''என்னப்பா நீங்க இவ்வளவு சீக்கிரம் வந்துட்டீங்க.. அம்மாவும்,'' என்றான்.

மகனைத் தூக்கிக் கொஞ்சி முத்தமிட்டு, ''ஆமாடா கண்ணா. ஒரு அவசர முக்கியமான வேலை இருந்தது. அதான் இரண்டு நாள் வேலையை ஒன்றரை நாள்ல முடித்துவிட்டு ஓடி வந்தேன்,'' என்று மனைவியைப் பார்த்துக் கண்ணடித்தான்.

''என்ன..ப்பா.. அவசரமான வேலை?'' என்றான் பெரிய மனிதன் போல.

''இவங்கிட்டே பேசினா.. நாம எதிர்பாராத கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது.. இதெல்லாம் பெரியவங்க விசயம். உனக்குத் தெரியாது.. வேண்ணா அம்மாகிட்டே கேளு. என்ன நடந்தது என்று.'' உல்லாசமாகச் சிரித்தான்.

''என்னடா.. நீ குழந்தைகிட்டே போயி..'' முகம் சிவந்து தடுமாறியவளைக் கையைப் பிடித்து நிறுத்தி சிவந்து கிடந்த முகத்தை ரசனையுடன் ரசித்தான். அவள் தவிப்பதைப் பார்த்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.



இப்படித்தான் அன்று ஊரிலும் இதுமாதிரி மாட்டி விட்டான். என்னை இப்படிப் படுத்துறதே. இவனுக்கு வேலையாப் போச்சு. குளிக்கப் போனவன் குழாயில் தண்ணி வரலை நிருபா என்றான்.

இவள், ''நான் இப்பத்தானே குளித்துவிட்டு வந்தேன்.. ஏன் இப்ப...'' என்று கதவுப் பக்கத்தில் போய் எட்டிப் பார்த்தவளை டபக்கென்று உள்ளே பிடித்து இழுத்துக் கதவைச் சாத்திக் கொண்டான். ''எனக்கு முதுகு தேய்த்து விடு. அப்போ எல்லாம் நான் நினைப்பேன். எனக்குக் கல்யாணம் ஆனதும் இப்படித்தான் தினமும் முதுகு தேய்த்து விடச் சொல்லணும்,'' என்று.

முறைத்தவளிடம், ''இந்த முறைப்பும், திமிரும்தான்டி எனக்கு ரொம்பப் பிடித்தது.''

''இதுதானே.. பிடிக்கும்.. அப்புறம் ஏன் கை எங்கெங்கோ அலையுது?'' என்றவளை இறுக அணைத்து ஷவரைத் திறந்து விட்டு மெல்ல அவள் மீது படர்ந்தான்.

வருண் வந்து பார்த்துவிட்டு இருவரையும் காணவில்லை என்றவுடன் அழுது கொண்டே போய்ப் பாட்டியைக் கூட்டி வந்தான். அவளும் இங்கு தானே இருந்தாங்க என்று தேடிவிட்டு பாத்ரூமில் தண்ணீர் விழும் சத்தம் கேட்கவும் கதவைத் தட்டினாள்.

அப்படியிருந்தும் அவன் எழாமல் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான். அவள் பதறினாள்.

''ஏங்க, கதவைத் தட்டுறாங்க.. தெரிந்தால் நம்மைப் பற்றி என்ன நினைப்பாங்க.. கிராமத்துல இப்படியெல்லாம் கிடையாது. நான் ஒன்னுந் தெரியாத பிள்ளைனிங்க. இப்போ.. எப்படி இதெல்லாம் தெரியுது.''

அவன் எதற்கும் அலட்டிக் கொள்ளாமல், ''அம்மா, இதோ வர்றோம்,'' என்றான்.

''என்னடா வர்றோம்.. வர்றேன் என்று சொல். நானும் உன் கூட இருப்பதாகத்தானே நினைப்பாங்க.. அவங்க என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க?''

''என்ன வேணா நினைக்கட்டும். இதில் தப்பென்ன இருக்கு. வேணா சொல்லு, எனக்கு இதெல்லாம் கொஞ்சங்கூட விருப்பமில்லை என்று. நான் உன்னை இப்படியே விட்டு விடுகிறேன்,'' என்று அவளைக் குறுகுறுவென்று பார்த்தான்.

அவனின் பார்வையால் உடம்பெல்லாம் சிவந்தது. சிவக்க வைத்தான்.

''எங்கம்மாவுக்குப் பொறாமை.. அதான் இப்படி கதவைத் தட்டுறாங்க.'' பிறகு ஒரு வழியாக விட்டான். முதலில் கதவைத் திறந்து வந்த மகனை வேகமாகச் சமாதானப்படுத்தினாள்.

வெளியே வந்த அவளுக்கு மாமியாரைப் பார்க்கவே கூசியது.

அவன் இப்படியெல்லாம் சந்தோசப்படுத்தி அவளைக் கவலையை மறக்கச் செய்தான். அங்கிருந்தவரை அப்பாவின் நினைப்பே வரலை. ஏன் மகனைக் கூட மறந்து விட்டாள். அவனின் அன்பும், அரவணைப்பும், ஆறுதலான பேச்சும், எப்பவும் தன் கை வளைவிலேயே வைத்திருந்தான். அவள் தன்னையே மறந்திருந்தாள். ஆனால் இதயத்தில் ஆழமான வலி இருந்து கொண்டே இருந்தது. அந்த வலி எப்பவாவது வரும் முன் இவன் வந்து அணைத்து விடுவான். எட்டிப் பார்க்குமுன் அடங்கி விடும். இருந்தாலும் வலியையும், காயத்தையும் ரொம்ப நாள் விடக் கூடாதில்லையா..? அது சீழ் பிடித்தால்.. அதை எடுக்க வேண்டிய சூழ்நிலை வரும். அதுபோல் நாம் பேசிவிட வேண்டும் என்று நினைத்தாள்.

மனைவியின் முகத்தில் சிந்தனை, எங்கோ வெறித்துப் பார்ப்பது, தன்னை நோக்கிவிட்டு பின் பார்வையைத் தழைத்துக் கொள்வதுமாகத் தவித்தாள்.



அவளின் அந்தத் தவிப்பைக் காணப் பொறுக்க முடியவில்லை அவனால்.

அவளிடம் சிறு ஒதுக்கம் தெரிந்தது. இவனுக்கும் புரிந்தது. அவள் வேதனை. அவளின் பக்கத்தில் உட்கார்ந்து, ''என்னடா.. நிரும்மா.. ஏன் ஒரு மாதிரி இருக்கே.. என்ன பிரச்சனை உனக்கு. என்னிடம் சொல்லலாமே.. என்னிடம் பேச வேண்டும் என்று நினைக்கிறே.. நீ தாராளமாகப் பேசலாம்... நான் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கேன்.. பேசினால் எங்கே நமக்குள் இருக்கும் இந்த சுகமான வாழ்க்கையில் பிரச்சனை வந்து விடுமோ என்று நினைக்க வேண்டாம். தாம்பத்தியத்தில் புரிதல் வேண்டும். அது இல்லாமல் உடல் பரிமாற்றம் மட்டும் வாழ்க்கையல்ல... இது எந்த நேரத்திலும் பிரிந்து போக வாய்ப்புண்டு. நாம் நடந்தவைகளை ஒரு தடவை மட்டும் பேசி முடித்து விடுவோம்.'' 'மட்டும்' என்பதை மட்டும் அழுத்திச் சொன்னான்.

''இனிமேல் புதுசா வாழ்க்கையை வாழ்வோம்!'' என்றான்.

அவன் தோளில் சாய்ந்து கண்ணீர் வடித்தாள்.

அவன் லேசாக அணைத்துக் கொண்டான்.

திவாகரே முதலில் கேட்டான். ''நீ ஏன்டா சாகணும்.. என்ற முடிவுக்கு வந்தே...'' அதைக் கேட்கும் போதே அவன் உடம்பு நடுங்கியது. அதை அவள் உணர்ந்தாள்.

''அத்தை தான் சொன்னார்கள.. என்னால்தான் நீங்கள் மல்லிகாவை மறுக்கிறீர்கள்... எனக்கும் என் மகனுக்கும் பிரச்சனை. என்னை வீட்டை விட்டுப் போ என்று சொல்லி விட்டான். ஒரு பிள்ளை வைத்திருப்பவள், நான் எங்கே போவேன். நீ இங்கு இருந்தால் நான் தற்கொலை பண்ணிக் கொள்வேன்.. நான் உயிரோடு இருக்க வேண்டும் என்றால்.. என்

மகன் நல்லா இருக்க வேண்டும் என்றால் நீ இந்த வீட்டை விட்டு அவன் வருமுன் போய்விடு என்றார்கள்.

"நானும் யோசித்தேன். என்னால் உங்களுக்கு எதற்கு பிரச்சனை. என்னாலும் அப்போ இருந்த மனநிலையில் சேர்ந்து வாழ முடியும் என்ற நம்பிக்கையில்லை. நீங்களும் உங்கம்மா சம்மதம் என்று கேட்கவும் சம்மதம் என்று சொன்னீங்களா.. அதை நீங்கள் கல்யாணத்திற்குத்தான் சொன்னீர்கள் என்று அவர்களே சொன்னார்கள். பிறகு ஏன் இங்கு இருக்கணும்.. என்றுதான் நான் அந்த முடிவுக்குப் போனேன். அம்மா கேட்டாங்க, நீ என்ன தாலி கட்டி வந்தவளா... என்று கேட்டாங்க." குலுங்கி அழுதாள்.

இறுக அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டான்.

"நான் ஒருநாளும் அப்படி நினைத்ததில்லைடா.. நீதான் எப்பவும் என் மனதில்.. என்று நீ என் கையைப் பிடித்து எனக்கு முத்தம் கொடுத்தாயோ.. அந்த நிமிடத்தில் இருந்து என் அன்பு முழுசா அப்படியேதான்டா இருக்கு..

"நீ போனதும் நானும் என்னால் முடிந்த அளவுக்குத் தேடினேன். எனக்கு எந்தத் தகவலுமே கிடைக்கவில்லை. நான் ஒரு நடை பிணமானேன். சில மாதங்கள் தொழிலையும் கவனிக்க முடியவில்லை. மேனேஜர் தான் பார்த்துக் கொண்டார். பிறகு நான் என்னையே தேற்றிக் கொண்டு வேலைகளை இரவு, பகல் என்று பாராமல் பார்த்தேன். அப்புறம் என் வேலையில் யாரோ குறுக்கிடுவது தெரிந்தது. அது யார் என்று கண்டுபிடிக்க டிடெக்டிவ் மூலம் முயன்றேன். மும்பை என்று தெரிந்தது. இங்குள்ளவர்களின் விபரம் தெரிந்தது. ஆனால் பின்னால் இருந்து இயக்குபவர்கள் யார் என்று தெரியவில்லை. நீ கட்டிய ஹோட்டல், டிபார்ட்மெண்ட் எல்லாம் போய்ப் பார்த்தேன். அத்தனை அழகு. சிலது நான் யோசித்த மாதிரி பிளான் இருந்தது. அதைப் பார்த்து நான் மலைத்தேன்.



"எனக்கு ஏனோ.. அப்பொழுது இது ஒரு பெண்ணாகத்தான் இருக்கணும்.. இதைக்கட்ட பிளான் பண்ணியது என்று என் மனம் நினைத்தது. நான் இந்த மாதிரி பிளான்களை எல்லாம் சில நேரம் உன்னிடம் பேசியிருக்கேன். இருந்தாலும் நீ.. என்று எனக்குத் தோணவில்லை.

"பின் மும்பை டிடெக்டிவ்விடம் முயற்சி செய்தேன். அவர்கள் கண்டுபிடித்து என்னை வாங்க என்றார்கள். அதன் பிறகுதான் நான் மும்பை வந்தது. பின் நடந்தது தான் எல்லாம் உனக்குத் தெரியுமே..

"நான் ஹாஸ்பிடலில் வருணுடன் இருக்கும் போதுதான் மீண்டும் டிடெக்டிவிடம் இருந்து ஃபோன் வந்தது. போனேன். அப்போ தான் உன் அட்ரஸ், போட்டோ எல்லாம் காண்பித்தார்கள். நான் உன் போட்டோவைப் பார்த்து அதிர்ந்தாலும், மிகவும் ஆனந்தப்பட்டேன். உன்னைப் பார்த்து சந்தோசம்... நீ உயிரோடு தான் இருக்கிறாய் என்பதே பேரானந்தம். இப்ப தொழிலிலும்..." குனிந்து முத்திரை பதித்தான்.

"...."

"பின் நான் தனியாக உன்னைச் சந்தித்த மறுநாள் சர்மா சாரைப் போய்ப் பார்த்தேன். அவரிடம் நடந்த உண்மைகளை எல்லாம் சொன்னேன். நீ என் மனைவி, இவன் என் பிள்ளை என்று. எங்களை நீங்கள் தான் சேர்த்து வைக்கணும் என்று அவர் காலில் விழுந்தேன்."

"..."

"அவர் நான் நிருபாவின் மனநிலை தெரியாமல் எதுவும் பேச முடியாது. அவள் ரோசக்காரி என்று அன்று ஷோபாவைக் காப்பாற்றியதைப் பற்றிச் சொன்னார். நான் அவ்வளவு பிடிவாதமாக அவளைக் கூட்டி வர வில்லையென்றால், அவள்

அன்றே உயிரை விட்டிருப்பாள். அதனால் நான் எதுவும் சொல்ல முடியாது. அவளா எந்த முடிவா இருந்தாலும் எடுக்கணும்.. அதற்கு உறுதுணையாய் நிற்பேன் என்றார்.''

''எனக்குத் தெரியாமல் இதெல்லாம் நடந்ததா..?'' சிணுங்கினாள்.

''சரி. நான் எந்த நடவடிக்கை எடுத்தாலும் நீங்களும் எனக்கு ஒத்துழைப்பு கொடுக்கணும் என்றேன்.

'என் பெண்ணைக் கஷ்டப்பட விட மாட்டேன்!' என்றார் கோபமாக.

''எனக்குக் கோபம் வந்தது. என் பொண்டாட்டி இனியும் கஷ்டப்படக் கூடாது என்றுதான் இந்த அதிரடி நடவடிக்கை. அவள் என்னை மன்னிக்க மாட்டாள்.. அதனால் நான் எது செய்தாலும் அவள் நன்மை கருதித்தான்..''

''அப்போ இதுவரை செய்ததெல்லாம் தப்பே இல்லையா?'' என்றாள்.

''தப்புத்தான். அவள் காலில் விழுந்து நான் மன்னிப்புக் கேட்கிறேன். எனக்கு என் பொண்டாட்டி பிள்ளை வேணும். என்னால் இனியும் அவர்களைப் பிரிந்து இருக்க முடியாது!'' என்றேன்.

''பிறகு தான் கொஞ்சம் மனம் இரங்கினார். ''கல்யாணம் பண்ணிக்கிறேன் என்று கூட்டிப் போய் ஏதாவது பண்ணினே.. உன்னைத் தொலைத்து விடுவேன்.. என்னைப் பற்றி உனக்குத் தெரியாது,'' என்றார்.

''ஒரு மருமகனைப் பற்றி மாமனார் பேசும் பேச்சா இது என்றேன் சிரித்துக் கொண்டே.. அவரும் சிரித்து விட்டார்..''

''நிருபா கல்யாணத்துக்குச் சம்மதிப்பாளா?'' என்றார்.



''நிச்சயமாகச் சம்மதிக்க மாட்டாள்.. அவளைச் சம்மதிக்க வைப்பது என் பொறுப்பு. கொஞ்சம் கடுமையாக இருந்தாலும் நீங்கள் பொறுத்துக்கணும். உங்கள் மகள் வாழ்வை முன்னிட்டு என்றேன். அவரும் சரி என்றார். பிறகுதான் எல்லாம் நடந்தது.'' புன்னகையுடன் அவள் பவளச் செவ்வாயில் தன் உதட்டை மெல்ல ஒற்றி எடுத்தான்.

''அப்போ அப்பாவுக்கு எல்லாமே முன்னாடியே தெரியும். அப்படித்தானே..?''

''இல்லை. நான் செய்வேன் என்று சொன்னேனே தவிர.. என்ன செய்வேன் என்று அவருக்குத் தெரியாது.. அவரும் கேட்கவில்லை. நானும் சொல்லவில்லை.

''சரிடி.. நீ எப்படி.. மனசு மாறி.. ஊரில் அந்தச் சின்ன வீட்டுக்குள் உன்னை மனதார எனக்குத் தந்தே..?'' விரலால் அவள் கன்னத்தில் கோலம் போட்டான்.

''நீங்கள் செய்ததை என்னால் மறக்க முடியவில்லைதான். இருந்தாலும் என் அப்பா செய்ததுக்கு நீங்கள் அவரை வைத்து இத்தனை வருடம் காப்பாற்றி.. பின் ஒரு மகனைப் போல் எல்லா சடங்குகளும் செய்து.. என் மனம் நெகிழ்ந்து விட்டது. முன்னாடியே நான் உங்களைப் பிடிக்காத மாதிரி நான் நடந்தாலும் என் மனம் உங்களை நாடியது உண்மையே.. எங்கே இங்கேயே இருந்தால் நான் உங்கள் பேச்சில் மயங்கி விடுவேனோ.. என்றுதான் நான் தனியாகப் போனது. அங்கு போனாலும் நீங்கள் தினம் வரமாட்டீங்களா.. என்று மனம் எதிர்பார்க்கும். அந்த நேரத்தில்தான் வருணுக்கு அப்படி நடந்தது. நீங்களா என்னை வா, தனியாக இருக்க வேண்டாம்.. என்று கூப்பிடுவீங்க என்று நினைத்தேன். கூப்பிடவில்லை. சரி நானே வருகிறேன் என்று வந்தேன். பிறகு அப்பா.. கார் டிரைவரைப் பத்தி நீங்கள் அப்படிச் சொன்னதும் என் மனம் என் வசமில்லை. எனக்காக நீங்கள் இவ்வளவு செய்திருக்கீங்க என்று நினைத்து

என்னை மறந்து உங்களிடம்.. நான்..'' அவன் உதட்டைத் தன் இதழால் மூடினாள்.

''எப்படி இந்தத் தொழிலுக்கு நீ வந்தே.. என்னை இது மாதிரி கஷ்டப்படுத்தணும்னுதானே..'' சிரித்தான்.

''ஆமாம். எனக்குள் ஒரு வெறி. என்னாலும் இது மாதிரி உயர முடியும்.. என்று. உன்னிடம் நிரூபிக்க வேண்டும் என்ற உத்வேகம்.. முதலில் மும்பையில் பார்த்துவிட்டு பின் சென்னை வந்தேன். அப்பா கூட சிறிது யோசித்தார். சென்னை எதற்கும்மா.. அங்கே நிறையப் புகழ் வாய்ந்த கட்டுமான நிறுவனம் இருக்கு.. நாம் எதற்கு அங்கு. இங்கிருந்து கொண்டு அங்கு பார்க்க முடியுமா? இல்லை, நீ சென்னைக்குப் போகலாம் என்று நினைக்கிறாயா?'' என்றார்.

''இல்லப்பா. நான் சென்னை போகலை. இங்கிருந்தே நம்பிக்கையான ஆட்களை வைத்துப் பார்க்கிறேன்.. என்னால் முடியும்பா.. சென்னையில் வேலை பார்க்கணும் என்று எனக்கு ஆசை என்றேன்.. உங்களை எப்படியாவது காயப்படுத்தியே ஆக வேண்டும் என்று. அதான் இந்த அதிரடி நடவடிக்கை.. நான்தான் என்று தெரிந்ததும் என்ன நினைத்தீங்க?''

''என்னடா.. நினைக்க முடியும்.. எனக்கு ரொம்ப சந்தோசமா இருந்தது. இந்த வேலையைத் தேர்ந்தெடுத்துப் பெண்கள் வரத் தயங்கும் இதில் நீ இந்த அளவிற்கு முன்னேறி இருக்காய் என்று. இதே வேலை யாராக இருந்தாலும் நான் என்ன செய்ய முடியும். தொழிலில் இதெல்லாம் சகஜம்தான்.. நீ என்பதால் எனக்குப் பிரச்சனையில்லை.. யார் பார்த்தால் என்ன?''

''கடைசி வரை நான் யாரென்று தெரியக் கூடாது என்று நினைத்தேன். உங்க தொழிலை எல்லா வழியிலும் முடக்கணும்.. எந்த வழியும் விடக் கூடாது. இனிமேல் நீங்கள் இந்தத் தொழிலே செய்யக் கூடாது.. உங்களைத் தரைமட்டம் ஆக்கணும் என்று தான் நான் உழைத்தேன் உண்மையில்..



''உங்க தொழிலைத் தீவிரமாகக் கவனித்தேன். நீங்கள் என்ன செய்யப் போறீங்க என்று கண்டுபிடித்தேன். அதை வைத்துத் தான் நான் செயல்பட்டேன். உங்களுக்குப் பிரச்சனை கொடுக்கணும்.. டென்சன் ஆக்கணும், நீங்க பெருமை பேசிய தொழில் உங்க கண் முன்னாடியே அழியணும்.. நீங்கள் எதனால் என்று தெரியாமல் குழம்பித் தவிக்கணும் என்று நினைத்தேன்..''

''சரி. இதை உடனே கண்டுபிடிக்க முடியவில்லையென்றாலும் பிறகு கண்டுபிடிக்காமலா போய்விடுவேன்.. இல்லை நீ அப்படிச் செய்வதால், பயந்து கொண்டு தொழிலை விட்டுப் போய்விடுவேனா.. நான்? இந்தத் தொழிலே உனக்காகச் செய்தவன் நான்..''

''சாரி. அப்போ இருந்த மனநிலையில் நான் இப்படிப் பண்ணி விட்டேன்.''

''நானும் இதே மாதிரி சூழ்நிலையில் தான் அன்று உன்னிடம் அந்தத் தப்பைப் பண்ணினேன். புரியுதாடா... என் மனநிலை..''

''ம்..ம்..'' என்று தலை குனிந்தாள்.

''நிருபா, நீ பயந்து உன் அப்பா பார்த்து விட்டார் என்று பொய் சொன்னது தப்பில்லை. இது எல்லோரும் செய்வதுதான்.. தான் தப்பிக்க.. நீ பொய் சொன்னதுமில்லாமல் நீ பேசினாய் பார்..'' கண்களை இறுக மூடிக் கொண்டான்.

''அந்த வார்த்தை அதை என்னால் தாங்கவே முடியவில்லை. ஈட்டி கொண்டு என் இதயத்தைத் துளைத்தது. நான் எத்தனை நாள் யாருமில்லாத தனியிடத்தில் வாய்விட்டுக் கதறியழுதேன்.. என்று உனக்குத் தெரியாது.. நான் இப்படி கையாலாகாதவனாகப் போய்விட்டேனே.. என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே.. என்று துடித்திருக்கேன்.. அதன் விளைவுதான் இப்படி நடந்தது.''

''அப்புறம் ஏங்க குழந்தையைத் தூக்கிக்கிட்டு வந்தீங்க.. எனக்குத் தெரியாமல். எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று தெரியாதா?''

"நிச்சயமா தெரியும்.. நீ எவ்வளவு வேதனைப்படுவாய் என்று. பெத்த பிள்ளையைப் பிரிந்திருப்பது என்பது சாதாரண விசயமில்லை. ஏன்னா.. ஒரு மாதம் என் கூட இருந்துவிட்டுப் போனதற்கே... என்னால் தாங்க முடியவில்லை.. வீட்டிற்கே வரப்பிடிக்காது. அவனின் சிரிப்பும், பேச்சும், விளையாட்டும் என் மனதை அடைக்கும். ஒரு மாதம் வைத்திருந்த எனக்கே இப்படி இருக்கும்போது பெத்து வளர்த்த உனக்கு எப்படி இருக்கும் என்று தெரியாத அளவிற்கு நான் கல் நெஞ்சுக்காரன் இல்லை.

"ஆனால் எனக்கு வேறு வழியில்லை. உன்னை வரவழைக்க.. குழந்தைக்காக நீ வருவாய் என்று நினைத்தேன். முதலில் நீ போனதும் உண்மையாகவே திகைத்துப்போனேன்.."

"..."

"நீயும் இந்தக் குழந்தையை ஆசையாக வரவேற்றுப் பெத்துக்கலை என்று எனக்குத் தெரியும். நானும் அப்படித்தான் நினைத்தேன். ஏன்னா நாம் இரண்டு பேரும் மனம் ஒத்தா வாழ்ந்து பெத்துக்கிட்டோம்.. அது இல்லையே.. நீ கூட கேட்டாய், இந்தக் குழந்தையைக் கருவிலேயே அழித்து விடு என்று சொன்னவன்தானே.. இப்போ என்ன குழந்தை மேல் பாசம் என்று. நான் எதுக்குச் சொன்னேன். இந்த மாதிரி நான் நினைத்துப் பார்க்கலே.. அதோட கல்யாணம் ஆகாமல் குழந்தையைப் பெத்துக்கிட்டா.. என்ன மரியாதை இருக்கும்.. உனக்கு என்று நினைத்தேன்."

அவள் அவனை முறைத்தாள்.

விலகியவளை மீண்டும் தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்து. "இல்லேடா. அப்போ அந்த மனநிலையில் நீ எப்படிப் பெத்துப்பே.. நான் எப்படியும் உன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்ற முடிவுடன்தான் இருந்தேன். அதில் எந்த மாற்றமும் கிடையாது. நீ என்னை முழுமையாக வெறுத்த நேரத்தில் இது தேவையா.. என்றுதான் நினைத்தேன். எனக்குக்



குழந்தை மீது வெறுப்பில்லை. நான் உன்னை மட்டுந்தான் நினைத்தேன். நீ முறையோடு என் குழந்தையைச் சுமக்கணும்.. என்று. பிறகுதான் என்னென்னமோ நடந்து விட்டது..."

"..."

"உனக்குக் குழந்தை மேல் வெறுப்போ என்று நினைத்தேன். பிடிக்காமல் பெத்துக்கிட்டாலும் பாசம் இருக்கும் என்று நினைத்தேன். நீ போனதும் நான் ரொம்ப நொறுங்கி விட்டேன். நீ அதனிடம் வெறுப்பாகத்தான் நடந்து கொண்டாயோ.. என் குழந்தையை என்று நினைத்தேன்."

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.. முதலில் வெறுப்பாக இருந்தது உண்மைதான். பிறகு வளர.. வளர.. எனக்கு எல்லாம் மறந்து விட்டது. ஆனா ரொம்பத் தூக்கி கொஞ்சி சீராட்ட மாட்டேன். ஆனால் பாசம் எனக்கு அதிகமாக இருந்தது. அவன் செய்யும் குறும்பை மறைமுகமாகவே ரசிப்பேன்."

"சரிடி. எதுக்கு நான் அன்று ஊருக்குப் போயிருந்தபோது ஃபோன் பண்ணி என்றுமில்லாமல் அத்தான் என்று ஹஸ்கி குரலில் குழைந்தாய். அந்த அழைப்பு என் உணர்வினுள் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. ஏன்டி என்னை ஊருக்கு அனுப்பி விட்டு ஃபோன்ல அப்படிக் கொஞ்சுறே.. அதான் சீக்கிரம் வேலையை முடித்துவிட்டு ஓடி வந்தேன்.."

கலகலவெனச் சிரித்தாள்.

"எனக்குத் தெரியுமே... நீங்க வருவீங்க என்று..."

அவளின் சிரிப்பை ரசித்துப் பார்த்தான். "என் ஸ்வீட்டி.." என்று கட்டி இறுக்கினான்.

"ஏன், நீங்க மட்டும் அன்று ஒரு நாள் என்னிடம் சொல்லாமல் ஆபீஸ் போய்விட்டு... பிறகு வந்து.. என்னை.." என்றாள்.

"ஆமாடி நான் அன்று அவசரமா போகணும் என்று கிளம்பி கீழே வந்தேன். நீ கீழே இல்லை. எப்போ மேலே வருவது. மணி வேறு ஆகிவிட்டது என்று சொல்லாமல் சென்று விட்டேன். காரில் போகும்போது ஃபோன் போட்டேன். நீ எடுக்கவில்லை. அதான் வேலையை முடித்துக் கொண்டு நேரா உன் ஆபீசுக்கு வந்தேன். உன்னைப் பார்க்க.."

திவாகர் இதுவரை நிருபா ஆபீசுக்குச் சென்றதில்லை. அன்றுதான் முதன் முதலா சென்றான். காலையில் சொல்லாமல் சென்றது அவனுக்கு என்னவோ போல் இருந்தது. உடனே அவளைப் பார்க்கணும் என்று மனது துடித்தது. மீட்டிங் முடிந்ததும் நேரா நிருபா ஆபீஸ் வந்து விட்டான்.

வந்த வேளை வெளியில் ரிசப்சனில், "யாரைப் பார்க்கணும் நீங்க?" என்றாள்.

"நிருபாவைப் பார்க்கணும்," என்றேன்.

பேர் சொல்லவும் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு, "அப்பாயிண்ட்மெண்ட் இருக்கா சார்..?" என்றாள்.

"இல்லையே. நான் எப்ப கேட்டாலும் குடுக்க மாட்டேங்கிறாங்க.. உங்க மேடம்," என்றான்.

"நீங்க உட்காருங்க.. நான் கேட்டுச் சொல்கிறேன்," என்றாள்.

அதற்குள் திவாகர் நிருபாவுக்கு ஃபோன் பண்ணினான். "நான் உன் ஆபீசில் வெளியில் தான் இருக்கேன்," என்று.

அவள் உடனே எழுந்து வெளியே ஓடி வந்தாள். வந்தவளைப் பார்த்துக் கண்களால் சிரித்தான்.

"என்ன நீங்க எதுக்கு வெளியே உட்கார்ந்து இருக்கீங்க... நேரா உள்ளே வர வேண்டியதுதானே," என்று கூட்டிச் சென்றாள்.

பக்கத்தில் இருந்தவர், "என்ன நீ உள்ளே அனுப்பலையா? அவர் மேடத்தோட ஹஸ்பெண்ட்," என்றார்.



"ஐயோ.. எனக்குத் தெரியாதே," என்றாள் பயந்து கொண்டே.

அவள் ஆபீசைச் சுற்றிப் பார்த்துவிட்டு, "அழகா இருக்குடா!" என்று அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

"எங்கிட்டே பேசாதீங்க... நான் ரொம்ப கோபமா இருக்கேன்," என்று வாய் சொன்னாலும் அவன் கையைப் பிடித்துக் கன்னத்தில் வைத்து அழுத்தினாள்.

"சாரிடா. அதான் இப்போ நேரிலே வந்தேன்.. உன்னைச் சமாதானப்படுத்த.. ரொம்ப அவசரம். அதான் போயிட்டேன்.. ஏன்டா இங்கு உனக்குத் தனி ரூம் எதுவும் இல்லையா..?" என்றான். அவளைக் கண்களால் விழுங்கிக் கொண்டே...

"இருக்குடா.. வேண்டாம். லஞ்சுக்கு வீட்டுக்குப் போகலாமா?" என்றாள் உதடு கலையாமல் சிரித்து.

"அடி என் திருட்டுப் பொண்டாட்டியே.." என்று நெருங்கினான்.

"சரி, வாங்க," என்று கிளம்பினாள்.

நேராக தங்கள் அறைக்குள் சென்றனர்.

"என்ன என்னைச் சமாதானப்படுத்தப் போறீங்க.. நீங்க என்ன சமாதானப்படுத்தினாலும் நான் சமாதானம் ஆக மாட்டேன்!" என்றாள் திரும்பி நின்று.

"அதையும் நான் பார்க்கிறேன்டி...." என்று பின்புறமாகக் கட்டி அணைத்து காதோரம் சில்மிசம் செய்தான். அவள் அவஸ்தை தாங்க முடியாமல் திரும்பி அவன் உதட்டில் தன் இதழைப் பதித்தாள். அப்புறம் அவனுக்குக் கேட்க வேண்டுமா.. தன் இஷ்டத்திற்குக் கொடி போல் வளைத்தான். அவளும் இழைந்து கொடுத்தாள். அந்தச் சங்கமத்தில் காதல் சுனாமியாகப் பிரவாகமெடுத்தது. அதை அணை போட்டுத் தடுக்க இரண்டு பேரும் நினைக்கவில்லை. அது பள்ளம் கிடைக்கும்

இடமெல்லாம் பெருகி சீறிப் பாய்வது போல் இருவரும் சங்கமத்தில் ஆழ்ந்து போயினர்.

அவனின் கிறக்கப் பார்வை... அவளை வேறு உலகத்திற்கு இழுத்துச் சென்றது.

''படுக்கையில் ஏன்டா.. இப்படி.. தீவிரவாதம் பண்றே..?'' என்றாள் முறைப்பாக.

''என்னடி.. செய்யட்டும். மூளை மென்மை... மென்மை என்று கட்டளையிட்டாலும்.. மனசு.. கை.. கால்.. எல்லாம் வன்மையில்தான் இறங்குது. எனக்கு இந்த விசயத்தில் பொறுமையில்லை. நான் என்னை மாத்திக்க முடியாது.. நீ உன்னை மாத்திக்க.. நீ மட்டும் என்னை விட எந்த விதத்தில் குறைந்து போயிட்டே.. எனக்குப் பொண்ணு வேணும்டி!'' என்று கடகடவென்று சிரித்தான்.

''சரிடா. அதற்கு நான் ரெடி,'' என்று அவன் முகம் நோக்கிக் குனிந்தாள். அவன் அள்ளி அணைத்தான். நிலவு வெட்கத்தால் தன் முகத்தை மேகத்துக்குள் மறைத்தது.

★